# தமிழ் இலக்கியம்
# உள்ளடக்கம்



| தலைப்புகள் | பக்கம் |
|---|---|
| 1. திருக்குறள் தொடர்பான செய்திகள் | 3 |
| 2. அறநூல்கள் | 46 |
| 3. கம்பராமாயணம் | 62 |
| 4. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு, கலித்தொகை | 71 |
| 5. ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை | 96 |
| 6. பக்தி இலக்கியம் | 112 |
| 7. சிற்றிலக்கியங்கள் | 130 |
| 8. மனோன்மணீயம் மற்றும் பிற | 157 |
| 9. நாட்டுப்புறபாடல் | 167 |
| 10. சமயமுன்னோடிகள் | 172 |



 PH: 24339436, 42867555, 9840226187

# இலக்கியம்

## இயல் - 1
## திருக்குறள் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள்

### ❖ ஆசிரியர் குறிப்பு

- ஆசிரியர் : **திருவள்ளுவர்**
- காலம் : கி.மு. **31ம் நூற்றாண்டு**
- மனைவி : **வாசுகி**,
- **திருவள்ளுவரின் வேறுபெயர்கள்** : செந்நாப்போதார், தெய்வப்புலவர், நாயனார், முதற்பாவலர், நான்முகனார், மாதானுபங்கி, பெருநாவலர், பொய்யில் புலவர்,

### ❖ திருக்குறள் அமைப்பு

- **பதினெண் கீழ்க்கணக்கு** நூல்களுள் ஒன்று. **அறநூல் (அ) நீதி நூல்** எனப்படும்.
- திருக்குறள் **133 அதிகாரங்களாக** ஒரு அதிகாரத்திற்கு **10 பாடலாக** உள்ளது. **1330** பாடல்களைக் கொண்டது.
- திருக்குறள் **9 இயல், 3 பிரிவுகளைக்** கொண்டது

| பிரிவு | இயல் | அதிகாரங்கள் | |
|---|---|---|---|
| **அறத்துப்பால்** | பாயிரவியல்<br>இல்லறவியல்<br>துறவியல்<br>ஊழியியல் | 4<br>20<br>13<br>1 | 38 |
| **பொருட்பால்** | அரசியல்<br>அங்கவியல்<br>ஒழிபியல் | 25<br>32<br>13 | 70 |
| **காமத்துப்பால்** | களவியல்<br>கற்பியல் | 7<br>18 | 25 |

- குறள்: என்பது குறுகிய அடி உடையது. (**ஏழு சீர்களை** கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது)
- குறள் என்பது **இரண்டடி வெண்பாக்களால் ஆனது.**
- திரு என்பது நூலின் அடைமொழியைக் குறிக்கும். (**அடையெடுத்த கருவியாகுபெயர்**)

### ❖ திருக்குறளின் சிறப்புகள்

- **மனிதன் மனிதனாக வாழ** மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரை **திருக்குறள்.**
- திருக்குறள் 107 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.
- **விக்டோரியா மகாராணியர்** நாள்தோறும் கண் விழித்ததும் முதலில் படிக்கும் நூல் திருக்குறள்.
- திருக்குறளுக்கும் **ஏழு**என்னும் எண்ணிற்கும் பெரிதும் தொடர்புள்ளது.
- திருக்குறள் **ஏழு** சீர்களால் அமைந்த வெண்பாக்களைக் கொண்டது
- அதிகாரங்கள், **133** அதன் கூட்டுத்தொகை 7. மொத்த குறட்பாக்கள் **1330.** இதன் கூட்டுத் தொகை **7.**
- உருசிய நாட்டில் அணுதுளைக்காத **கிரெம்ளின் மாளிகையில்** உள்ள சுரங்க பாதுகாப்பு பெட்டகத்தில் **திருக்குறள்** உள்ளது.
- இங்கிலாந்து நாட்டு காட்சி சாலையில் திருக்குறள் **விவிலியத்துடன்** வைக்கப்பட்டுள்ளது.

## ❖ திருவள்ளுவர் சிறப்புகள்

- மயிலாப்பூரில் திருவள்ளுவருக்கு கோவில் உள்ளது.
- வள்ளுவர் கோட்டம் நுங்கம் பாக்கத்தில் உள்ளது
- திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரியில் உள்ளது. உயரம் **133 அடி**, தமிழகத்தில் மிக உயர்ந்த சிலை.
- கி.மு 31ஐக் கொண்டு திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.

  **கணக்கிடும் முறை:** கி.மு. **31 + 2014 = 2045**
- தைத்திங்கள் 2-ம் நாள், **திருவள்ளுவர் தினம்**.
- முதல் இரண்டு பால்களிலும் ஒரு தெளிந்த **அறநூற் சான்றோராகக்** காட்சியளிக்கும் திருவள்ளுவர் காமத்துப் பாலில் ஒரு **கவிஞராக; நாடக ஆசிரியராக; படைப்பாளியாக** காட்சித் தருகிறார்.

## ❖ திருக்குறளின் சிறப்புப் பெயர்கள்

- **திருக்குறளின் வேறுபெயர்கள்: முப்பால், பொதுமறை, தமிழ்மறை, பொருநரை, உலகப்பொதுமறை, உத்திரவேதம், தெய்வநூல், வாயுறை வாழ்த்து, திருவள்ளுவம், திருவள்ளுவப் பயன், பொய்யா மொழி, இயற்கை வாழ்வில்லம், முதுமொழி**.
- **தமிழுக்குக்கதி** (கம்பராமாயணமும், திருக்குறளும்), **நாலும் இரண்டும்** (நாலடியார், திருக்குறள்)
- **தமிழ் மாதின் இனிய உயிர்நிலை** என்று அனைவராலும் பாராட்டப்பெறும் நூல் **திருக்குறள்**.
- திருக்குறளில் பத்து அதிகாரப் பெயர்கள் உடைமை என்னும் சொல்லில் அமைந்துள்ளன.

  1. அன்புடைமை 2. அடக்கமுடைமை 3. ஒழுக்கமுடைமை
  4. பொறையுடைமை 5. அருளுடைமை 6. அறிவுடைமை
  7. ஊக்கமுடைமை 8. ஆள்வினையுடைமை 9. பண்புடைமை
  10. நாணுடைமை

- திருக்குறள் **அ கரத்தில் தொடங்கி ன கரத்தில்** முடிகிறது.
- திருக்குறளில் இடம்பெறாத தமிழ்சொற்கள் **கடவுள், தமிழ்**
- திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரத் தலைப்பு **குறிப்பறிதல்**
- 12000 சொற்களை பெய்து பாடப்பட்ட குறளில் **50க்கும் குறைவான** வடசொற்களே விரவி வந்துள்ளன.
- சமணர், சைவர், வைணவர், பௌத்தர் அனைவரும் எங்கள் ஒரே நூல் எனப் போற்றும் பெருமைக்குரிய பொதுமை நூல் இதுவாகும்.
- திருக்குறள் இலக்கியமே என்றாலும், **கவிதை நூலா? நீதி நூலா?** என்ற ஐயப்பாடுள்ளது.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் **செய்யுளால் பெயர்** பெற்ற ஒரே நூல் திருக்குறள்.
- தமிழில் தோன்றிய **நீதி நூல்களுக்கெல்லாம்** முன் மாதிரியானது.
- பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் **அதிக அறங்களைச்** சொல்லும் நூல் திருக்குறள்.
- திருவள்ளுவரின் உருவத்தை முதன்முதலாக ஓவியமாக வரைந்தவர் **வேணுகோபால சர்மா**.

## ❖ திருக்குறளின் உரையும், பதிப்பும்

- **மலையத்துவம்சன் மகன் ஞானப்பிரகாசம்** : 1812ல் திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்து தஞ்சையில் வெளியிட்டவர்.
- **அம்பலவானத்தம்பிரான்** : 1812ல் திருக்குறளை முதன் முறையாக பதிப்பித்தவர்.
- **இராமானுஜ கவிராயர்** : 1840ல் முதன் முதலாக பரிமேலழகர் உரையுடன் திருக்குறளைப் பதிப்பித்தவர்.

- **மணக்குடவர்** : திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்.
- திருக்குறளுக்கு உரை எழுதிய **பதின்மர்**.
    - **தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர்**
- திருக்குறளுக்கு உரை எழுதியவர்களில் மிகச் சிறந்த உரை **பரிமேலழகர் உரை**.
- வள்ளுவம் - **வ.சு.ப. மாணிக்கம்**
- வாழும் வள்ளுவம் - **வ.செ. குழந்தைசாமி**

## ❖ மேற்கோள்

- **கல்லாடனார்** : "எப்பாவலரும் இயைபவே வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி".
- **மாங்குடி மருதனார்** : "ஓதற்கு எளிதாய் உணர்வதற்கு அரியதாகி, வேதப் பொருளாய் மிக விளக்கி".
- **செங்கண்ணனார்**: "வேதப் பொருளை விரால் விதித்தும்".
- **வண்ணகஞ்சாத்தனார்** : "ஆரியம் வேதம் உடைத்து, தமிழ் திருவள்ளுவனார் ஓது குறட்பா உடைத்து".
- **நத்தத்தனார்** : "இந்நூலை முற்றிலும் ஓதிய பின் வேறு நூல் பயிற்சி வேண்டா, மன்னு தமிழ்ப் புலவராய் வீற்றிருக்கலாம்".
- **கல்லாடர்** : "சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்"(திருவள்ளுவரை கூறியது).
- **ஆல்பர்ட் சுவிட்சர்** : "உலக இலக்கியங்களில் திருக்குறளைப் போல சிறந்த அறம் உரைக்கும் நூல் வேறு இல்லை".
- **திரு. சுந்தரம்பிள்ளை** : "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொடு நீதி".
- **சீத்தலைச் சாத்தனார்** :"மூன்று மன்னவருக்குஞ் சென்னியில் அணியத்தக்க மாலை".
- **நக்கீரனார்** : "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
  ஆனா அறமுதலா நான்கினையும் - ஏனோர்க்கு
  ஊழின் உரைத்தார்".

## மொழி பெயர்ப்பு

- திருக்குறளை **வீரமாமுனிவர் இலத்தீன் மொழியிலும்**, **ஜி.யு.போப் கி.பி. 1886 ல் ஆங்கிலத்திலும் மொழி** பெயர்த்துள்ளார்.
- திருக்குறள் ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன், போன்ற உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- **பைபிளுக்கு அடுத்தபடியாக** அதிக மொழிகளில் **(107)** மொழிபெயர்க்கப்பட்டது.
- ஜெர்மன் மொழியில் **கார்ல் கிராவின்** மொழிபெயர்ப்பும், இலத்தீன் மொழியில் **வீரமாமுனிவர்** மொழிப்பெயர்ப்பும், ஆங்கிலத்தில் டாக்டர் **ஜி.யு. போப்**, வ.வே.சு. ஐயர், இராஜாஜி போன்றோரின் மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்கது.
- **மேலும் சில மொழிபெயர்ப்புகள்**:
    - பிரெஞ்சு : ஏரியல்
    - இலத்தீன் : டாக்டர் கிரௌல்
    - உருசிய மொழி : யூரிய்கில்ஸோவ்
    - பீஜி மொழி : எஸ்.எல். பெர்வி
    - சிங்களத்தில் : மிசிகாமி அம்மையார்
    - இந்தியில் : பி.டி.ஜைன், டாக்டர். சங்கராஜி நாயுடு
    - வடமொழியில் : ஸ்ரீ அப்பா தீட்சிதர், ஸ்ரீ கோவிந்தராய் ஜைன்

சாஸ்திரி

○தெலுங்கில் : வைத்திய நாதர்

○மலையாளத்தில் : திவான் பகதூர் கோவிந்த பிள்ளை

❖ **திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றிய கருத்துக்கள்**

➢ **பாரதியார்** : வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்றவர்.

➢ **பாரதிதாசன்** :

○வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே என்றவர்

○தெள்ளு தமிழ்நடை சின்னஞ்சிறிய இரண்டடிகள் அள்ளு தொறுஞ்சுவை உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம் - எனத் திருக்குறளை புகழ்பவர்.

○இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர்.

➢ நாடு, மொழி, இனம், சமயம் கடந்து எக்காலத்திற்கும் பொருந்துவனவாய் அமைந்ததால் திருக்குறள் **உலப் பொதுமறை** என அழைக்கப்பட்டது.

➢ **திரு.வி.க.** : திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று, அது மன்பதைக்கு உலகப்பொது என்றவர்.

➢ **கி.ஆ.பெ. விஸ்வநாதம்** : திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிறாவிட்டால் தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்கு தெரிந்திருக்காது என்றவர்.

➢ **திருவள்ளுவர்** : பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர்

➢ **ஔவையார்** : அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

➢ **இடைக்காடனார்** : கடுகைத் துளைத்து.

➢ ஆல்பர்ட் சுவிட்சர், சார்ஸ், இ.கோவர், ஏரியல், சிரால் போப் ஐயர், பெஸ்கி, கால்டுவேலர், ஃபிரட்ரிக்பின் சாட்வின்டர்நிச், ட்ரூ, லாசரஸ், எல்விஸ் போன்ற மேலை நாட்டறிஞர்களும் எண்ணற்ற தமிழ் பெரியோர்களும் திருக்குறளை புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

➢ **கலித்தொகை** முதலிய சங்க நூல்களிலும் திருக்குறள் சொற்றொடர்களும், கருத்துக்களும் வந்துள்ளன.

❖ **திருக்குறளின் சிறப்பு பற்றி கூறும் நூல்கள்**

- **திருவள்ளுவ மாலை** : திருக்குறளையும் திருவள்ளுவரையும் பழந்தமிழ்ப் புலவர்கள் பாராட்டிப் பாடிய நூல்.
- ஜெர்மன் நாட்டுப் பேரறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர் திருக்குறளின் பெருமையினைத் தம் **"இந்திய வளர்ச்சி சிந்தனை"** என்ற நூலில் சிறப்பாக எடுத்து ஆராய்ந்து விளக்கியுள்ளார்.
- பேராசிரியர் சுந்தரம் பிள்ளை,"**வள்ளுவர் செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி**" என்று பாராட்டுகிறார்.
- **மதுரைத் தமிழ் நாகனர்**, எல்லாப் பொருளும் இதன்பால் "உள இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்று பாராட்டுகிறார்.
- மணிமேகலையில் "**தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
  **பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்**
  **பொய்யில் புலவன் பொருளுரை தேராய்**" என வெளிப்படையாகக் கூறியுள்ளது. இவற்றால் திருக்குறள் மணிமேகலை, சிலப்பதிகாரம் சங்க நூல்களுக்கு முற்பட்டதென்பதும், தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டதென்பதும் தெரிய வருகிறது.
- சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா, குமரேசவெண்பா போன்றனவும் குறளின் சிறப்பை உணர்த்துகின்றன.

## அன்புடைமை

## அறத்துப்பால் - அதிகாரம் 8

1. **அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
   **புன்கணீர் பூசல் தரும்.**
   **பொருள்:**
   அன்பை அடைத்து வைக்க தாழ்ப்பாள் இல்லை; அன்புக்குரியவர்களின் துன்பத்தைப் பார்த்ததுமே நம் அன்பு, கண்ணீராக வெளிப்பட்டு நிற்கும்.

2. **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
   **என்பும் உரியர் பிறர்க்கு.**
   **பொருள்:**
   அன்பில்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கு மட்டும் உரியது என்று எண்ணுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

3. **அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு**
   **என்போடு இயைந்த தொடர்பு**
   **பொருள்:**
   உடம்போடு உயிர் இணைந்து இருப்பதைப் போல வாழ்க்கை நெறியோடு அன்பு இணைந்து இருக்கிறது.

4. **அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
   **நண்புஎன்னும் நாடாச் சிறப்பு**
   **பொருள்:**
   அன்பு விருப்பத்தைத் தரும், விருப்பம் அனைவரிடமும் நட்புக் கொள்ளும் பெருஞ்சிறப்பைத் தரும்.

5. **அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து**
   **இன்புற்றார் எய்தும் சிறப்பு**
   **பொருள்:**
   அன்போடு பொருந்திய வாழ்க்கை நெறியைக் கடைப்பிடித்தவர் உலகத்தில் மகிழ்ச்சி உடையவர்

6. **அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
   **மறத்திற்கும் அ∴தே துணை.**
   **பொருள்:**
   அன்பு அறத்தை மட்டும் சார்ந்தது என்று கூறுவோர் அறியாதவர்; அறிவுடையார் வீரத்திற்கும் அன்புதான் துணை என்று கூறுவர்.

7. **என்பி லதனை வெயில்போலக் காயுமே**
   **அன்பி லதனை அறம்**
   **பொருள் அணி: உவமை அணி:**
   எலும்பில்லாத உயிர்களை வெயில் வருத்தி அழிப்பது போல; அன்பில்லாதவர்களை அறம் வருத்தி அழிக்கும்.

8. **அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
   **வற்றல் மரம்தளிர்த் தற்று**
   **பொருள்: அணி: இல்பொருள் உவமையணி**

பாலை நிலத்தில் உள்ள வாடிப்போன மரம் தளிர்க்காது, அதுபோல, நெஞ்சில் அன்பு இல்லாத மனிதர் வாழ்க்கை தளிர்க்காது.

**9. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு**

**பொருள்:**

நெஞ்சில் அன்பு இல்லாதவர்க்கு, கை, கால் போன்ற உடல் உறுப்புகளால் என்ன பயன்?

**10. அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

**பொருள்:**

அன்பு செய்வதுதான் உடம்பில் உயிர் இருப்பதற்கு அடையாளம். அன்பில்லாதவர் உடம்பு வெறும்தோலால் மூடப்பட்ட எலும்புதான். அங்கு உயிர் இல்லை.

APPOLO STUDY CENTRE

# பண்புடைமை

## பொருட்பால் - அதிகாரம் 100

1. **எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
   **பண்புடைமை என்னும் வழக்கு.**
   **பொருள்:**
   யாரிடத்தும் எளிமையாகப் பழகினால் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைதல் எளிது.

2. **அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
   **பண்புடைமை என்னும் வழக்கு**
   **பொருள்:**
   அன்புடையவராகத் திகழ்தல், உயர்ந்த குடிப் பிறப்பு ஆகிய இவ்விரண்டும் பண்பாளரின் இயல்பு.

3. **உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**
   **பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**
   **பொருள்:**
   உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று, பொருந்தத்தக்க பண்பால் ஒத்திருத்தலே மக்களாகக் கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

4. **நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
   **பண்புபா ராட்டும் உலகு.**
   **பொருள்:**
   நேர்மையையும் அறத்தையும் கொண்டு பிறருக்கு உதவ வேண்டும். அத்தகைய பண்பாளரையே உலகம் போற்றும்.

5. **நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
   **பண்புள பாடறிவார் மாட்டு.**
   **பொருள்:**
   விளையாட்டாக ஒருவரை இகழ்ந்து பேசுதலும் துன்பத்தைத் தரும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிருப்பினும் நல்ல பண்புகள் இருக்கும்.

6. **பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**
   **மண்புக்கு மாய்வது மன்.**
   **பொருள்:**
   உலகம் பண்புடையவர்களாலே நிலைபெற்று இருக்கிறது. இல்லையெனில் இவ்வுலகம் மண்ணோடு மண்ணாகிப் போய்விடும்.

7. **அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
   **மக்கட்பண்(பு) இல்லா தவர்.**
   **பொருள்:**
   அரம்போன்ற கூர்மையான அறிவுடையாராக இருப்பினும், மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் ஓரறிவுடைய மரமாகவே கருதப்படுவார்.

8. **நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்**
   **பண்பற்றா ராதல் கடை.**

   **பொருள்:**
   நட்புக் கொள்ள இயலாதவராய்த் தீமை செய்பவரிடத்திலும் பண்புடையவராய்ப் பழக இயலாதது இழிவான செயலாகும்.

9. **நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
   **பகலும்பாற் பட்டன் றிருள்.**

 PH: 24339436, 42867555, 9840226187

**பொருள்:**
பிறரோடு பழகிப்பேசி மகிழ இயலாதவருக்கு மிகப்பெரிய இவ்வுலகம் பகலிலும் இருளாகவே தோன்றும்.

10. **பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
    **கலந்தீமை யாலதிரிந் தற்று.**
    **பொருள்:**
    பண்பிலாதவன் பெற்ற பெருஞ்செல்வம், பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவது போன்றது.

APPOLO STUDY CENTRE

# கல்வி

## பொருட்பால் - அதிகாரம் 40

1. **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
   **நிற்க அதற்குத் தக.**
   **பொருள்:**
   நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். கற்றபடி நடக்க வேண்டும்.

2. **எண்எண்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
   **கண்என்ப வாழும் உயிர்க்கு**
   **பொருள்:**
   எண்ணும் எழுத்தும் ஆகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு இரு கண்கள் எனக் கூறுவர்.

3. **கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
   **புண்உடையர் கல்லா தவர்.**
   **பொருள்:**
   கல்வி கற்றவர் கண் உடையவர்; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் ஆவர்.

4. **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
   **அனைத்தே புலவர் தொழில்**
   **பொருள்:**
   அறிவில் சிறந்த புலவர்களுடன் பேசிப் பழகும் போது மகிழ்ச்சியாக இருப்பதும். அவர்களை விட்டுப் பிரியும் போது, இனி இவரை எப்பொழுது காண்போம் என எண்ணிப் பிரிவதும் புலவரின் இயல்பாகும்.

5. **உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றர்**
   **கடையரே கல்லா தவர்.**
   **பொருள்:**
   செல்வர்முன் ஏழை இரந்து நிற்பது போலக் கற்றவர்முன் பணிந்து கற்பவரே உயர்ந்தவர்; பணிந்து கல்லாதவர் தாழ்ந்தவர்.

6. **தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
   **கற்றனைத்து ஊறும் அறிவு.**
   **பொருள்:**
   மணற்பாங்கான இடத்தில் தோண்ட தோண்ட நீர் சுரக்கும். அதுபோல மக்கள் நூல்களைக் கற்கக்கற்க அவர்தம் அறிவு வளரும்.

7. **யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
   **சாந்துணையும் கல்லாத வாறு.**
   **பொருள்:**
   கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடாகும்; எந்த ஊரும் தன் ஊராகும். இதனை அறிந்தும் சிலர் சாகும் வரை கற்காமல் இருப்பது ஏன்?

8. **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
   **எழுமையும் ஏமாப்பு உடைத்து**

   **பொருள்:**
   ஒரு பிறப்பில், தான் கற்றுக் கொள்ளும் நல்லறிவு, இனி எழும் பிறவிகளுக்கும் பாதுகாப்பைத் தரும்.

9. **தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**

**காமுறுவர் கற்றறிந் தார்.**

**பொருள்:**
தாங்கள் இன்பம் அடையும் கல்வியால் உலகம் இன்பம் அடைவதைக் கண்டு, கற்றவர் மேன்மேலும் கற்க விரும்புவர்.

10. **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.**
**பொருள்:**
ஒருவனுக்கு அழியாத செல்வம் கல்வியாகும். கல்வி தவிர, மற்றச் செல்வங்கள் எல்லாம் செல்வங்கள் ஆகமாட்டா.

APPOLO STUDY CENTRE

# கேள்வி

## பொருட்பால் - அதிகாரம் 42

1. **செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்**
   **செல்வத்துள் எல்லாம் தலை.**
   **பொருள்:**
   செல்வங்களுள் சிறப்புடைய செல்வமானது கேள்விச் செல்வமாகும். அக்கேள்விச் செல்வமானது செல்வங்களுக்கெல்லாம் முதன்மையானது ஆகும்.

2. **செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது**
   **வயிற்றுக்கும் ஈயப் படும்.**
   **பொருள்:**
   செவிக்கு உணவாகிய நல்லறிவு கிடைக்காதபோது வயிற்றுக்கும் சிறிது உணவு ஈயப்படும்.

3. **செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்**
   **ஆன்றாரோ டொப்பர் நிலத்து.**
   **பொருள்:**
   செவி உணவாகிய கேள்வியினை உடையவர் இந்நிலத்தில் வாழ்வராயினும், அவி உணவை உட்கொள்ளும் தேவரோடு ஒப்பாவார்.

4. **கற்றிலன் ஆயினும் கேட்க, அ∴தொருவற்(கு)**
   **ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**
   **பொருள்:**
   நூல்களை கற்கவில்லை யாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும். அது வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல் போல் துணையாகும்.

5. **இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
   **ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்**
   **பொருள்:**
   ஒழுக்கம் உடைய சான்றோரின் வாய்ச் சொற்கள் வழுக்குகின்ற நிலத்தில் உதவும் ஊன்றுகோல் போல வாழ்க்கைக்கு உதவும்.

6. **எனைத்தானும் நல்லவை கேட்க, அனைத்தானும்**
   **ஆன்ற பெருமை தரும்**
   **பொருள்:**
   எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவர்களின் அறிவுரைகளை கேட்டறிய வேண்டும்; கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

7. **பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்(து)**
   **தீண்டிய கேள்வி யவர்**
   **பொருள்:**
   நுட்பமாக உணர்ந்து, நிறைந்த கேள்வியறிவை உடையவர், தவறாக உணர்ந்திருந்தாலும் பேதைமையானவற்றைச் சொல்லார்.

8. **கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
   **தோட்கப் படாத செவி.**

   **பொருள்:**
   கேள்வியால் துளைக்கப்படாத செவிகள் கேட்டறிந்தாலும், கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே

9. **நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.**
**பொருள்:**
நுட்பமான கேள்வியறிவில்லாதவர் பணிவான சொற்களை பேசுவதில்லை.

10. **செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என.**
**பொருள்:**
செவியால் கேள்விச்சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள் இறந்தாலும் என்ன? உயிரோடு வாழ்ந்தாலும் என்ன?

APPOLO STUDY CENTRE

# அறிவுடைமை

## பொருட்பால் - அதிகாரம் : 43

1. **அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
   **உள்ளழிக்கல் ஆகா அரண்.**
   **பொருள்:**
   அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும், அது பகை கொண்டு எதிர்ப்பவர் அழிக்க முடியாத பாதுகாப்பு.

2. **சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
   **நன்றின்பால் உய்ப்பது அறிவு.**
   **பொருள்:**
   மனதை சென்ற இடத்தில் செல்லவிடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்ல விடுவதே அறிவாகும்.

3. **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
   **மெய்ப்பொருள் காண்பது அறிவு.**
   **பொருள்:**
   எப்பொருள் யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறு கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யான பொருளை காண்பதே அறிவாகும்.

4. **எண்பொருள வாகச் சொலச்சொல்லித் தான்பிறர்வாய்**
   **நுண்பொருள் காண்பது அறிவு.**
   **பொருள்:**
   தான்சொல்லுவன எளிய பொருளை யுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம், கேட்பவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்.

5. **உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்**
   **கூம்பலும் இல்லது அறிவு.**
   **பொருள்:**
   உலகத்து உயர்ந்தவரை நட்பாக்கிக் கொள்வது சிறந்த அறிவு, முன்னே மகிழ்ந்து விரிதலும், பின்னே வருந்திக் குவிதலும் இல்லாதது அறிவு.

6. **எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
   **அவ்வது உறைவது அறிவு**
   **பொருள்:**
   உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

7. **அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
   **அஃதறி கல்லா தவர்.**
   **பொருள்:**
   அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழப் போவதை முன்னே எண்ணி அறியவல்லார். அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.

8. **அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
   **அஞ்சல் அறிவார் தொழில்.**

   **பொருள்:**
   அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும். அஞ்சதக்ககதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும்.

9. **எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்.**
**பொருள்:**
வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

10. **அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.**
**பொருள்:**
அறிவுடையவர் எல்லாம் உடையவர் ஆவர். அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்

APPOLO STUDY CENTRE

# அடக்கமுடைமை

## அறத்துப்பால் - அதிகாரம் 13

1. **அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
   **ஆரிருள் உய்த்து விடும்.**
   **பொருள்:**
   அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும், அடக்கம் இல்லாதிருத்தல் பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்திவிடும்.

2. **காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
   **அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு**
   **பொருள்:**
   அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை.

3. **செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து**
   **ஆற்றின் அடங்கப்பெறின்.**
   **பொருள்:**
   அறிய வேண்டியவற்றை அறிந்து நல்வழியில் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிட மிகவும் பெரியதாகும்.

4. **நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
   **மலையினும் மாணப் பெரிது**
   **பொருள்:**
   தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு மலையின் உயர்வை விட மிகவும் பெரியதாகும்.

5. **எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
   **செல்வர்க்கே செல்வம் தகைத்து**
   **பொருள்:**
   பணிவுடையராக ஒழுகுதல் பொதுவாகஎல்லோர்க்கும் நல்லதாகும். அது செல்வர்க்கு மற்றொரு செல்வம் போன்றதாகும்.

6. **ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
   **எழுமையும் ஏமாப்பு உடைத்து**
   **பொருள் : அணி: உவமை அணி**
   ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாண்டால் அ∴து அவனுக்கு பல பிறப்பிலும் காக்கும் சிறப்புடையது.

7. **யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
   **சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**
   **பொருள்:**
   காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். காக்க தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

8. **ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
   **நன்றாகா தாகி விடும்**

   **பொருள்:**
   தீய சொற்களின் பொருளால் விளையும் தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால் அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமல் போய்விடும்.

9. **தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**
**பொருள் :அணி: வேற்றுமை அணி**
தீயினால் சுட்ட புண் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் சுடும் தீயசொல் வடு என்றும் ஆறாது.

10. **கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து**
**பொருள்:**
சினம் தோன்றாமல் காத்து கல்வி கற்று, அடக்கமுடையவானாக இருக்க வல்லவனுடைய செவ்வியை அவனுடைய வழியில் சென்று அறம் பார்த்திருக்கும்.

APPOLO STUDY CENTRE

# ஒழுக்கமுடைமை

## அறத்துப்பால் - அதிகாரம் 14

1. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
   **உயிரினும் ஓம்பப் படும்.**
   **பொருள்:**
   ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே. ஆதலால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்துக்கொள்ள வேண்டும்.

2. **பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
   **தேரினும் அஃதே துணை.**
   **பொருள்:**
   எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை ஆகும். ஒழுக்கத்தை காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது அதனை விரும்பிக்காத்தல் வேண்டும்.

3. **ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
   **இழிந்த பிறப்பாய் விடும்.**
   **பொருள்:**
   ஒழுக்கம் உள்ளவரே உயர்குடியினர், அவ்வொழுக்கம் இல்லாதவர் இழிகுடியினர் ஆவார்.

4. **மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்**
   **பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்**
   **பொருள்:**
   ஒருவன், தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக் கொள்ள இயலும். ஆனால் ஒழுக்கம் குறைந்தால் அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்து போகும்.

5. **அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்றில்லை**
   **ஒழுக்கம் இலான்கண் உயர்வு**
   **பொருள்:**
   பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது. அதுபோல ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.

6. **ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
   **ஏதம் படுபாக் கறிந்து.**
   **பொருள்:**
   ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை நன்குணர்ந்த மனவலிமை மிக்கோர், அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலக மாட்டார்.

7. **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
   **எய்துவர் எய்தாப் பழி.**
   **பொருள்:**
   ஒழுக்கமுடையோர் மேன்மை அடைவர் ஒழுக்கம் இல்லாதவர் அடையக் கூடாத பழியை அடைவர்.

8. **நன்றிக்கும் வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
   **என்றும் இடும்பை தரும்.**
   **பொருள்:**
   நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவுகளைப் பெறுவதற்கான விதையாகும் தீயொழுக்கமோ எப்பொழுதும் துன்பத்தையே விளைவாகத் தரும்.

**9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.**

**பொருள்:**
நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமை தரும் சொற்களைச் சொல்ல இயலாது.

**10. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.**
**பொருள்:**
உயர்ந்தாரோடு பொருந்தி வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

APPOLO STUDY CENTRE

# பொறையுடைமை

## அறத்துப்பால் - அதிகாரம் 16

1. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
   **இகழ்வார்ப் பொறுத்தல் தலை**
   **பொருள்:**
   நிலமானது, தன்னைத் தோண்டுபவரையும் தாங்குவதுபோல நம்மை இழிவுபடுத்துவோரை நாம் பொறுத்துக் கொள்வதே சிறந்த பண்பு.

2. **பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
   **மறத்தல் அதனினும் நன்று.**
   **பொருள்:**
   பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல் சிறந்தது அத்துன்பத்தை மறந்துவிடுதல் அதைவிடச் சிறந்தது.

3. **இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
   **வன்மை மடவார்ப் பொறை.**
   **பொருள் : அணி: எடுத்துக்காட்டு: உவமையணி**
   விருந்தினரை வரவேற்க இயலாது தவிர்க்கும் நிலை, வறுமையுள் கொடிய வறுமையாகும். அதுபோல, அறிவற்றார் செய்யும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்ளுதல் வலிமையுள் சிறந்த வலிமையாகும்.

4. **நிறையுடைமை நீங்காமை வேண்டின், பொறையுடைமை**
   **போற்றி ஒழுகப் படும்.**
   **பொருள்:**
   நற்குணங்கள் நம்மைவிட்டு நீங்காதிருக்க வேண்டுமானால், பொறுமையை நாம் போற்றிக் காத்தல் வேண்டும்.

5. **ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்**
   **பொறுத்தாரைப் பொன்போற் பொதித்து.**
   **பொருள்:**
   பிறர் செய்யும் தீங்கினைப் பொறுத்துக் கொள்ளாமல் தண்டிப்பவரைச் சான்றோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார். ஆனால், அத்தீங்கினைப் பொறுத்துக் கொள்பவரைப் பொன்போல் மதித்து மனத்துள் வைத்துப் போற்றுவர்.

6. **ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
   **பொன்றும் துணையும் புகழ்.**
   **பொருள்:**
   தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவர்க்கு ஒரு நாள் இன்பம். பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

7. **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)**
   **அறனல்ல செய்யாமை நன்று.**
   **பொருள்:**
   தகுதி அல்லாதவர்கள் தனக்கு, தீமை செய்த போதிலும். அதனால் அவர்க்கு வரும் துன்பத்திற்காக நொந்து அறம் அல்லாதவைகளைச் செய்யாதிருத்தல் நல்லது.

8. **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
   **தகுதியான் வென்று விடல்.**
   **பொருள்**
   செருக்கினால் தீமை செய்தாரையும் தமது பொறுமையினால் அவரை வெற்றிகொள்ளல் வேண்டும்.

9. **துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**
**பொருள்:**
வரம்புகடந்து பேசுவோரின் கொடிய சொற்களையும் பொறுத்துக்கொள்பவர் பற்றற்ற துறவியரினும் மேலானவர்.

10. **உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**
**பொருள்:**
உண்ணாநோன்பு இருக்கும் பெரியவர்களை விடத் தம்மை இகழ்வோரின் தீயசொற்களைப் பொறுத்துக் கொள்பவரே மேலானவர் ஆவார்.

# நட்பு

## பொருட்பால் - அதிகாரம் - 79

1. **செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
   **வினைக்கரிய யாவுள காப்பு.**
   **பொருள்:**
   நட்பைப் போலச் செய்து கொள்வதற்கு அரிய உறவுகள் எவையும் இல்லை. அந்த நட்பைப் போலச் செய்கின்ற செயலுக்குச் சிறந்த பாதுகாப்பு வேறு எவையும் இல்லை.

2. **நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
   **பின்நீர பேதையார் நட்பு:**
   **பொருள்:**
   அறிவுடையவர்களின் நட்பு வளர்பிறைபோல நாளும் வளரும். அறிவிலார் நட்பு தேய் பிறைபோல நாளும்தேயும்.

3. **நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
   **பண்புடை யாளர் தொடர்பு**
   **பொருள்:**
   நல்ல நூல்களின் பொருள் கற்கக்கற்க இன்பந்தரும். அதுபோல பண்புடையாரின் நட்பு பழகப்பழக இன்பம் தரும்.

4. **நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
   **மேற்சென்று இடித்தற் பொருட்டு**
   **பொருள்:**
   நட்பு என்பது சிரித்துப் பேசி மகிழ்வது மட்டுமன்று: நண்பரிடத்துத் தவறு காணும் போது அவரைக் கடிந்துரைத்துத் திருத்தி நல்வழிப்படுத்தலும் ஆகும்.

5. **புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
   **நட்பாங் கிழமை தரும்**
   **பொருள்:**
   இருவர் சேர்ந்திருந்தலும், நெருங்கிப் பழகுதலும் நட்பாகாது. ஒத்த உணர்வே நட்புரிமை தரும்.

6. **முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
   **அகநக நட்பது நட்பு.**
   **பொருள்:**
   முகம் மட்டும் மலரும்படி நட்புக் கொள்வது நட்பாகாது; உள்ளம் மகிழும்படி அன்பாக நட்புக் கொள்வதே நட்பு.

7. **அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**
   **அல்லல் உழப்பதாம் நட்பு.**
   **பொருள்:**
   அழிவை தரும் துன்பங்களிலிருந்து நண்பனை விலக்கி, நல்வழியில் செலுத்த வேண்டும் அவனுக்கு அழிவு நேரும்போது உடனிருந்து தானும் அதில் பங்கேற்று, அழிவிலிருந்து மீட்டல் வேண்டும்.

8. **உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
   **இடுக்கண் களைவதாம் நட்பு**
   **பொருள்:**
   உடுத்திய உடை நழுவும்போது கை, உடனே உதவிக் காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு

**9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**
**பொருள்:**
நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால் எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

**10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**
**பொருள்:**
இவர் எமக்கு இத்தன்மையானவர், யாம் இவர்க்கு இத்தன்மையுடையோம் என்று புனைந்துரைத்தாலும் நட்புச் சிறப்பிழந்து விடும்.

APPOLO STUDY CENTRE

# வாய்மை

## அறத்துப்பால் - அதிகாரம் 30

1. **வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
   **தீமை இலாத சொலல்.**
   **பொருள்:**
   வாய்மை எனப் போற்றப்படும் பண்பு எதுவெனில், அது மற்றவருக்கு எவ்வகையிலும் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்.

2. **பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
   **நன்மை பயக்கும் மெனின்.**
   **பொருள்:**
   பிறர்க்குக் குற்றமற்ற நன்மையைத் தருமாயின், பொய்யும் உண்மையாகக் கருதப்படும்.

3. **தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தயின்**
   **தன் நெஞ்சே தன்னைச் சுடும்.**
   தன் நெஞ்சம் அறிந்து பொய் கூறக்கூடாது. கூறின், தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

4. **உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
   **உள்ளத்துள் எல்லாம் உளன்.**
   **பொருள்:**
   ஒருவன் தன் உள்ளம் அறிய பொய்யில்லாமல் நடப்பான் எனில், அத்தகையவன் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவான்.

5. **மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
   **தானம்செய் வாரின் தலை.**
   **பொருள்:**
   மனத்தொடு பொருந்திய வாய்மை பேசுபவன், தானம் தவம் செய்கிறவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனாக் கருதப்படுவான்.

6. **பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை**
   **எல்லா அறமும் தரும்.**
   **பொருள்:**
   பொய் பேசாமை ஒருவனுக்கு எல்லாப் புகழையும் தரும்; அது அவன் வருந்தாமலேயே அவனுக்கு எல்லா நலன்களையும் தரும்.

7. **பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
   **செய்யாமை செய்யாமை நன்று.**
   **பொருள்:**
   பொய் சொல்லாமை என்னும் அறத்தை இடை விடாமல் கடைப்பிடித்தால், வேறு எந்த அறங்களையும் செய்ய வேண்டியது இல்லை.

8. **புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
   **வாய்மையால் காணப் படும்.**
   **பொருள்:**
   உடல் தூய்மை நீரால் உண்டாகும், உள்ளத் தூய்மை வாய்மையால் வெளிப்படும்.

9. **எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
   **பொய்யா விளக்கே விளக்கு.**
   **பொருள்:**
   சான்றோர்க்குப் புறஇருளை நீக்கும் விளக்குகளை விட, அகத்தின் இருளை நீக்கும் பொய் பேசாமையே உண்மையான விளக்காகும்

10. **யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.**

**பொருள்:**

யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள். எவ்வகையிலும் உண்மையைவிடச் சிறந்தவையாகச் சொல்லத்தக்கவை வேறில்லை.

APPOLO STUDY CENTRE

# காலமறிதல்

**பொருட்பால் - அதிகாரம் 49**

1. **பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
   **வேந்தர்க்கு வேண்டும் பொழுது**
   **பொருள்:**
   பகற்பொழுதில் தன்னிலும் வலிய கோட்டானைக் காக்கை வென்றுவிடும். அதுபோலப் பகையை வெல்லக் கருதும் வேந்தர், காலம் அறிந்து செயல்பட வேண்டும்.

2. **பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்**
   **தீராமை யார்க்குங் கயிறு.**
   **பொருள்:**
   காலத்திற்குப் பொருந்திய செயலை மேற்கொள்வதே செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு கட்டும் கயிறாகும்.

3. **அருவினை என்ப உளவோ கருவியாற்**
   **காலம் அறிந்து செயின்.**
   **பொருள்:**
   தகுந்த கருவிகளோடு ஏற்ற காலமறிந்து செயல்பட்டால் செய்தற்கரிய செயல்கள் எவையுமில்லை.

4. **ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்**
   **கருதி இடத்தாற் செயின்.**
   **பொருள்:**
   காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செயல்பட்டால் உலகத்தையே அடைய விரும்பினும் கைகூடும்.

5. **காலம் கருதி இருப்பர் கலங்காது**
   **ஞாலம் கருது பவர்.**
   **பொருள்:**
   உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர், அதற்குரிய காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர்

6. **ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
   **தாக்கற்குப் பேருந் தகைத்து**
   **பொருள் : அணி : உவமை அணி**
   ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கி இருப்பதானது, ஆட்டுக்கடா பகைவரைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.

7. **பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்**
   **துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்**
   **பொருள்:**
   அறிவுடையார், பகைவர் தீங்கு செய்த உடனே சினத்தை வெளிப்படுத்த மாட்டார் அவரை வெல்வதற்கான காலம் வரும்வரை, அச்சினத்தை மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்.

8. **செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**
   **காணின் கிழக்காம் தலை.**
   **பொருள்:**
   பகைவரைக் காணும் போது பணிவாக இருத்தல் வேண்டும். அப்பகைவர்க்கு முடிவுகாலம் வரும்போது, அவர்தம் நிலைமை தலைகீழாய் மாறும்.

**9. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்**
**பொருள்**
கிடைத்தற்கு அரிய வாய்ப்புக் கிடைத்த பொழுது அவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும்.

**10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து.**
**பொருள்: அணி: தொழில் உவமை அணி**
வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப் போல் அமைதியாகக் காத்திருக்க வேண்டும்; உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப் போல் விரைந்து செயலைச் செய்து முடித்தல் வேண்டும்.

# வலியறிதல்

## பொருட்பால் - அதிகாரம் 48

1. **வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
   **துணைவலியும் தூக்கிச் செயல்**
   **பொருள்:**
   செயலின் வலிமையையும், தன் வலிமையையும், பகைவனுடைய வலிமையையும் இருவர்க்கும் துணையானவான வலிமையையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

2. **ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
   **செல்வார்க்குச் செல்லாதது இல்**
   **பொருள்:**
   தனக்கு பொருந்தும் செயலையும் அதற்கு அறிய வேண்டியதையும் அறிந்து அதனிடம் நிலைத்து முயல்கின்றவனுக்கு முடியாதது ஒன்றும் இல்லை.

3. **உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
   **இடைக்கண் முரிந்தார் பலர்.**
   **பொருள்:**
   தம்முடைய வலிமை எவ்வளவு என்று அறியாமல் ஊக்கத்தால் முனைந்து தொடங்கி இடையில் அதை முடிக்க வகையில்லாமல் அழிந்தவர் பலர்.

4. **அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை**
   **வியந்தான் விரைந்து கெடும்.**
   **பொருள்:**
   மற்றவர்களோடு ஒத்து நடக்காமல் தன் வலிமையின் அளவையும் அறியாமல் தன்னை வியந்து மதித்துக் கொண்டிருப்பவன் விரைவில் கெடுவான்.

5. **பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
   **சால மிகுத்துப் பெயின்**
   **பொருள் : அணி: பிறிதுமொழிதல் அணி (அ)**
   **நுவலா நுவற்சியணி (அ) ஒட்டணி**
   மயில் இறகு ஏற்றிய வண்டியே ஆனாலும் அந்த பண்டமும் அளவுக் கடந்து மிகுதியாக ஏற்றினால் அச்சு முறியும். அதுபோல் வலிமையுடையவர்க்கும் பகை, அளவு மிகுந்தால் அழிவர்.

6. **நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து தூக்கின்**
   **உயிர்க்கு இறுதியாகி விடும்.**
   **பொருள்: அணி: பிறிதுமொழிதல் அணி**
   ஒரு மரத்தின் நுனிக்கொம்பில் ஏறியவர் அதையும் கடந்து மேலும் ஏற முனைந்தால் அவருடைய உயிர்க்கு முடிவாக நேர்ந்துவிடும். எல்லை மீறிய முயற்சி அழிவுண்டாக்கும்.

7. **ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்**
   **போற்றி வழங்கும் நெறி.**
   **பொருள்:**
   தக்க வழியில் பிறர்க்குக் கொடுக்கும் அளவு அறிந்து கொடுக்க வேண்டும்; அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும்.

8. **ஆகாறு அளவிட்டிது ஆயினும் கேடில்லை**
   **போகாறு அகலாக் கடை.**
   **பொருள்:**
   பொருளின் வரும் வழி (வருவாய்) சிறியதாக இருந்தாலும் போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை.

**9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல்**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.**
**பொருள்:**
பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை (பல வளமும்) இருப்பதுபோல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்.

**10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.**
**பொருள்:**
தனக்கு உள்ளப் பொருள் அளவை ஆராயாமல் மேற்கொள்ளும் ஒப்புரவினால் ஒருவனுடைய செல்வத்தின் அளவு விரைவில் கெடும்.

# ஒப்புரவறிதல்

## அறத்துப்பபால் - அதிகாரம் 22

1. **கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
   **எனஆற்றும் கொல்லோ உலகு.**
   **பொருள்:**
   இந்த உலகத்தார் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கின்றனர், மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவை.

2. **தாள்ஆற்றித் தந்த பொருளெல்லாம் தக்கர்க்கு**
   **வேளாண்மை செய்தற் பொருட்டு**
   **பொருள்:**
   ஒப்புரவாளன் தன்னால் இயன்ற முயற்சி செய்து சேர்த்த பொருள் எல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும்.

3. **புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே**
   **ஒப்புரவின் நல்ல பிற.**
   **பொருள்:**
   பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போல நல்லவனாகிய வேறு அறப் பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது.

4. **ஒத்து அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
   **செத்தாருள் வைக்கப் படும்.**
   **பொருள்:**
   ஒப்புரவை அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன், உயிர் வாழ்கின்றவன் ஆவான். மற்றவன் செத்தவருள் சேர்த்துக் கருதப்படுவான்.

5. **ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
   **பேரறி வாளன் திரு.**
   **பொருள்: அணி : உவமை அணி**
   ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளனின் செல்வம் ஊரார் நீருண்ணும் குளம் நீரால் நிறைந்தாற் போன்றது.

6. **பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
   **நயன்உடை யான்கண் படின்.**
   **பொருள்: அணி : உவமை அணி**
   ஒப்புரவாகிய நற்பண்பு, உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அ∴து ஊரின் நடுவே உள்ள பயன்மிகுந்த மரம் பழங்கள் பழுத்தார் போன்றது.

7. **மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
   **பெருந்தகை யான்கண் படின்.**
   **பொருள்: அணி: உவமை அணி**
   ஒப்புரவாகிய பெருந்தகைமை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால், அ∴து எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன்படத் தவறாத மரம் போன்றது.

8. **இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்**
   **கடனறி காட்சி யவர்.**

   **பொருள்:**
   ஒப்புரவு அறிந்து ஒழுகுதலாகிய தம் கடமை அறிந்து அறிவை உடையவர், செல்வவளம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்கு தளர மாட்டார்.

9. **நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர்**
**செய்யாது அமைகலா ஆறு**
**பொருள்**
ஒப்புரவாகிய நற்பண்பு உடையவன் வறுமை உடையவனாதல்; செய்யத்தக்க உதவிகளைச் செய்யாமல் வருந்துகின்ற தன்மையாகும்.

10. **ஒப்புரவினால் வரும் கேடெனின் அ∴தொருவன்**
**விற்றுக்கோள் தக்கது உடைத்து**
**பொருள்:**
ஒப்புரவால் கேடு வரும் என்றால் அக்கேடு ஒருவன் தன்னை விற்றாலும் வாங்கிக் கொள்ளும் தகுதி உடையதாகும்.

# செய்நன்றியறிதல்

## அறத்துப்பால் - அதிகாரம் 11

1. **செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
   **வானகமும் ஆற்றல் அரிது.**
   **பொருள்:**
   தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்க, பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

2. **காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்**
   **ஞாலத்தின் மாணப் பெரிது.**
   **பொருள்:**
   உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரியதாகும்.

3. **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
   **நன்மை கடலின் பெரிது.**
   **பொருள்:**
   இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியில் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிட பெரியதாகும்.

4. **தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
   **கொள்வர் பயன்தெரி வார்.**
   **பொருள்:**
   ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை அடைகின்றவர் அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்

5. **உதவி வரைத்தன்று உதவி உதவி**
   **செய்யப்பட்டார் சால்பின் வரைத்து**
   **பொருள் : அணி: சொற்பொருள் பின்வருநிலையணி**
   **பொருள்:**
   கைம்மாறாகச் செய்யும் உதவி முன் செய்த உதவியின் அளவை உடையது அன்று, உதவி செய்யப்பட்டவரின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

6. **மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
   **துன்பத்துள் துப்பாயர் நட்பு**
   **பொருள்:**
   குற்றமற்றவரின் உறவை எப்போது மறத்தலாகாது. துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.

7. **எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
   **விழுமம் துடைத்தவர் நட்பு.**
   **பொருள்:**
   தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியரின் நட்பை பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.

8. **நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
   **அன்றே மறப்பது நன்று.**
   **பொருள்:**
   ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது, அறம் அன்று. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது அறம்.

9. **கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
   **ஒன்றுநன்று உள்ளக் கெடும்.**
   **பொருள்:**
   முன் உதவி செய்தவர் பின்பு கொன்றவர் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும் அவர் முன்பு செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்த துன்பம் கெடும்.

10. **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
    **செய்ந்நன்றி கொன்ற மகற்கு**
    **பொருள்:**
    எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும். ஒருவர் செய்த உதவியை மறந்து அழிந்தவனுக்கு உயர்வு இல்லை.

# சான்றாண்மை

## பொருட்பால் - அதிகாரம் 99

1. **கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**
   **சான்றாண்மை மேற்கோள் பவர்க்கு**
   **பொருள்**
   நல்ல குணங்களால் நிறைந்து வாழும் சான்றோர்கள் நல்லவற்றையெல்லாம் தம் கடமையென மேற்கொண்டு வாழ்வர்.

2. **குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
   **எந்நலத் துள்ளதூஉ மன்று.**
   **பொருள்:**
   நற்குணங்களால் சிறந்திருத்தலே சான்றோரின் பெருமை. அதனை விடுத்து பிற நலன்கள் எவ்வகையிலும் பெருமை சேர்க்காது.

3. **அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
   **ஐந்துசால்(பு) ஊன்றிய தூண்.**
   **பொருள்:**
   அன்புடைமை, நாணம், பிறர்க்கு உதவுதல், உயிர்களிடத்து இரக்கம், உண்மை பேசுதல் ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்.

4. **கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
   **சொல்லா நலத்தது சால்பு.**
   **பொருள்:**
   தவமென்பது பிற உயிர்களைக் கொல்லாமையே; சால்பு என்பது பிறர் குறைகளைச் சொல்லாமையே.

5. **ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
   **மாற்றாரை மாற்றும் படை**
   **பொருள்:**
   ஒரு செயலைச் செய்பவர்க்கு வலிமை தருவது பணிவுடன் நடத்தலே. அதுவே சான்றோர்க்குத் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றி நட்பாக்குவதற்கு ஏற்ற கருவி

6. **சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
   **துலையல்லார் கண்ணும் கொளல்.**
   **பொருள்:**
   தம்மைவிட ஆற்றல் குறைந்தவரிடத்து ஏற்பட்ட தோல்வியையும் ஒப்புக் கொள்ள வேண்டும். அப்பண்பே ஒருவரின் சான்றாண்மையே அளந்தறிவதற்கான உரைகல் ஆகும்.

7. **இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
   **என்ன பயத்ததோ சால்பு.**
   **பொருள்:**
   தீங்கு இழைத்தவர்க்கும் நன்மையே செய்தல் வேண்டும், அவ்வாறு செய்யாமற் போனால் சால்பென்னும் தகுதியால் எப்பயனும் இல்லை.

8. **இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**
   **திண்மையுண் டாகப் பெறின்.**
   **பொருள்:**
   சால்பென்னும் மனஉறுதி உண்டாகப் பெறுமானால் ஒருவனுக்குப் பொருள் இல்லாததால் ஏற்படும் வறுமை ஒரு குறையாகாது.

9. **ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

**பொருள்:**

சான்றாண்மை என்னும் பண்பிற்குக் கடலென்று புகழப்படுவர் உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும் தம் நிலையில் வேறுபடாமல் இருப்பர்.

10. **சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

**பொருள்:**

சான்றோர்களின் சான்றாண்மைக் குணத்தில் குறைவு ஏற்படுமானால், இவ்வுலகமும் பொறுமை என்னும் தன்பாரத்தை தாங்காது.

APPOLO STUDY CENTRE

# பெரியாரைத் துணைக்கோடல்

## பொருட்பால் - அதிகாரம் 45

1. **அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
   **திறனறிந்து தேர்ந்து கொளல்**
   **பொருள்:**
   அறிநெறியை அறிந்து அறிவில் தெளிந்த முதிர்ச்சியுடையோர் நட்பினை ஆராய்ந்தறிந்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. **உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
   **பெற்றியார்ப் பேணிக் கொளல்**
   **பொருள்**
   தமக்கு வந்துள்ள துன்பத்தைப் போக்கி, இனிமேலும் துன்பம் வராதவாறு முன்னதாகவெ காக்கும் தன்மையுடையாரைப் போற்றி நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

3. **அரியவற்றுள் எல்லா அரிதே பெரியாரைப்**
   **பேணித் தமராக் கொளல்**
   **பொருள்:**
   அறிவறிந்த பெரியோரைப் போற்றி உறவாகக் கொள்ளுதலே, ஒருவர் பெறவேண்டிய அரிய பேறுகளுள் எல்லாம் அரிய பேறாகும்.

4. **தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
   **வன்மையுள் எல்லாம் தலை.**
   **பொருள்:**
   தம்மைக் காட்டிலும் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தலே வலிமைகளுளெல்லாம் சிறந்ததாம்.

5. **சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன்**
   **சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.**
   **பொருள்:**
   தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞர்களையே உலகம் கண்ணாக கொண்டு நடத்தலால் மன்னனும் அத்தகையோரை ஆராய்ந்து நட்பாக்கி கொள்ள வேண்டும்.

6. **தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்**
   **செற்றார் செயக்கிடந்த தில்.**
   **பொருள்:**
   அறிவிற் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடக்க வல்லாருக்குப் பகைவர் செய்யக்கூடிய தீங்கு யாதென்றும் இல்லை.

7. **இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே**
   **கெடுக்குந் தகைமை யவர்.**
   **பொருள்:**
   தீயனவற்றைக் கண்டால் இடித்துத் திருத்தும் பெரியோரைத் துணையாகக் கொண்டு வாழ்பவரைக் கெடுக்கும் வலிமையுடையவர் எவருமிலர்.

8. **இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
   **கெடுப்பார் இலானுங் கெடும்.**
   **பொருள்:**
   குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடித் கொள்ளாத அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் இல்லை எனினும் தானே கெட்டழிவான்.

9. **முதலிலார்க்கு ஊதிய மில்லை மதலையாம்**
**சார்பிலார்க் கில்லை நிலை.**
**பொருள்: அணி: எடுத்துக்காட்டு உவமை அணி**
முதலீடு இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் ஒன்றுமில்லை. அதுபோல் தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் பெரியோர் துணையில்லாதவர்க்கு நிலைத்த தன்மை இல்லை.

10. **பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்**
**பொருள்:**
நல்லவர் ஒருவரின் நட்பைக் கைவிடுவது பலரைப் பகைத்துக் கொள்வதை விடப் பன்மடங்கு தீமை உடையதாகும்.

# பொருள் செயல்வகை

**பொருட்பால் - அதிகாரம் 76**

1. **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
   **பொருளல்ல தில்லை பொருள்**
   **பொருள்: அணி : சொற்பொருள் பின்வருநிலையணி**
   ஒரு பொருட்டாக மதிக்கத் தகாதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வதில் பொருளுக்கு இணையானது வேறொன்றுமில்லை.

2. **இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
   **எல்லாரும் செய்வர் சிறப்பு.**
   **பொருள்:**
   செல்வம் அற்றவரை எல்லாரும் இகழ்வார்; செல்வரை எல்லாரும் சிறப்பிப்பர்.

3. **பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
   **எண்ணிய தேயத்துச் சென்று.**
   **பொருள் : அணி : ஏகதேச உருவக அணி**
   செல்வம் என்னும் அணையா விளக்கு அதனை உடையவர் நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று பகைமை என்னும் இருளை போக்கும்.

4. **அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
   **தீதின்றி வந்த பொருள்.**
   **பொருள் : அணி : ஏகதேச உருவக அணி**
   பிறருக்குத் தீங்கின்றி நல்வழியில் ஈட்டியபொருள் அறத்தினையும் கொடுக்கும். இன்பத்தினையும் கொடுக்கும்.

5. **அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
   **புல்லார் புரள விடல்.**
   **பொருள்**
   அருளும் அன்பும் பொருந்தாமல் பிறவழியில் வரும் செல்வத்தை பற்றாமல் நீக்குதல் வேண்டும்.

6. **உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்**
   **தெறுபொருளும் வேந்தன் பொருள்.**
   **பொருள்:**
   அரசுரிமையால் வந்த பொருளும், மக்கள் வரியாகத் தரும் பொருளும், பகைவரை வென்று கொண்ட திறைப் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாம்.

7. **அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்**
   **செல்வச் செவிலியால் உண்டு.**
   **பொருள்:**
   அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும்.

8. **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
   **றுண்டாகச் செய்வான் வினை.**

   **பொருள்: அணி: உவமை அணி**
   தன் கைப்பொருள் கொண்டு ஒருவன் செய்யும் செயலானது குன்றின்மேல் இருந்து கொண்டு யானைப் போரைக் காண்பதற்கு ஒப்பானது.

9. **செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
   **எஃகதனிற் கூரிய தில்.**

**பொருள்:**
பொருளைத் தேடிச் சேர்த்தல் வேண்டும். அது பகைவரின் செருக்கை அறுக்கும் உறுதியான படைக்கலம். அதனைவிடக் கூர்மையான கருவி வேறோன்றுமில்லை.

10. **ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்**
**ஏணை யிரண்டும் ஒருங்கு.**
**பொருள்:**
சிறந்த பொருளை நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு மற்றைய அறனும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒருசேரக் கைக்கூடும் எளிய பொருள்களே.

# வினைத்திட்பம்

**பொருட்பால் - அதிகாரம் 67**

1. **வினைதிட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
   **மற்றைய எல்லாம் பிற.**
   **பொருள்:**
   ஒரு தொழிலின் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் திட்பமே ஆகும். மற்றவை எல்லாம் வேறானவை.

2. **ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
   **ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.**
   **பொருள்:**
   இடையூறு வருவதற்கு முன்பே நீங்குதல், வந்தபின் தளராமை ஆகிய இந்த இரண்டினது வழியே வினைதிட்பம் பற்றி ஆராய்ந்தவரின் கொள்கையாம்.

3. **கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்**
   **எற்றா விழும் தரும்**
   **பொருள்:**
   செய்யும் செயலை முடிவில் வெளிப்படும்படியாகச் செய்யும் தகுதியே ஆண்மையாகும் இடையில் வெளிப்பட்டால் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

4. **சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
   **சொல்லிய வண்ணம் செயல்**
   **பொருள்:**
   இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம். சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.

5. **வீறெய்தி மாண்டார் வினைதிட்பம் வேந்தன்கண்**
   **ஊறெய்தி உள்ளப் படும்.**
   **பொருள்:**
   செயல்திறனால் பெருமை பெற்று உயர்ந்தவரின் வினைத்திட்பமானது. நாட்டை ஆளும் அரசனிடத்திலும் எட்டி மதிக்கப்பட்டு விளங்கும்.

6. **எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
   **திண்ணியர் ஆகப் பெறின்.**
   **பொருள்:**
   எண்ணியவர் எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதியுடையவராக இருக்கப் பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

7. **உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பேருந்தேர்க்கு**
   **அச்சாணி அன்னார் உடைத்து.**
   **பொருள்:**
   உருளும் பெரிய தேருக்கு அச்சில் இருந்து தாங்கும் சிறிய ஆணி போன்றவர்கள் உலகத்தில் உள்ளனர். அவர்களுடைய உருவின் சிறுமையைக் கண்டு இகழக்கூடாது.

8. **கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
   **தூக்கம் கடிந்து செயல்**

   **பொருள்:**
   மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலந் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

9. **துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**
**பொருள்:**
முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும்போது துன்பம் மிக வந்த போதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்கவேண்டும்.

10. **எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத திட்பம்**
**வேண்டாரை வேண்டாது உலகு.**
**பொருள்:**
வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும் செய்யும் தொழிலில் உறுதி இல்லாதவரை உலகம் விரும்பிப் போற்றாது.

# இனியவை கூறல்

## அறத்துப்பால் - அதிகாரம் 10

1. **இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
   செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**
   **பொருள்:**
   அன்பு கலந்து வஞ்சம் அற்றவையாகிய சொற்கள். மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.

2. **அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
   இன்சொலன் ஆகப் பெறின்.**
   **பொருள்:**
   உள்ளம் விரும்பி ஒருவருக்குக் கொடுத்து உதவுவது நல்லது: முகம் மலர்ந்து ஒருவரைப் பார்த்து இனிய சொற்களைக் கூறுதல். அதைவிடவும் நல்லது.

3. **முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
   இன்சொ லினதே அறம்.**
   **பொருள்:**
   முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்த இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

4. **துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மட்டும்
   இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**
   **பொருள்:**
   எல்லாரிடமும் இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசுவோரிடம், துன்பம் தரும் வறுமை அணுகாது.

5. **பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
   அணியல்ல மற்றுப் பிற.**
   **பொருள்:**
   பணிவுடையவனாகவும் இனியசொல் பேசுபவனாகவும் விளங்குவதே ஒருவனுக்கு உண்மையான அணிகலனாகும். உடல் அழகுக்காக அணியும் பிற எல்லாம் உண்மையான அணிகலன் ஆகா.

6. **அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
   நாடி இனிய சொலின்**
   **பொருள்:**
   பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடைய சொற்களைச் சொல்லின் பாவங்கள் தேய்ந்து குறைய, அறம் வளர்ந்து பெருகும்.

7. **நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
   பண்பின் தலைப்பிரியாச் சொல்.**
   **பொருள்:**
   பிறர்க்கு நன்மையான பயனைத் தந்து நல்ல பண்பிலிருந்து நீங்காத சொற்கள். வழங்குவோனுக்கும் இன்பம் தந்த நன்மை பயக்கும்

8. **சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
   இம்மையும் இன்பந் தரும்.**
   **பொருள்:**
   பிறர்க்குத் துன்பம் விளைக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழங்குவோனுக்கும் இன்பம் தரும்.

**9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.**
**பொருள்:**
இனிய சொற்கள் இன்பம் உண்டாக்குவதைக் கண்டபின்னும் ஒருவன் கடுஞ்சொற்களைப் பேசுவது ஏனோ?

**10. இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனி இருப்பக் காய்கவர்ந் தற்று.**
**பொருள்:**
இன்பம் தரும் இனிய சொற்கள் இருக்கும் போது துன்பம் தரும் கடுஞ்சொற்களைப் பேசுவது கனிகள் இருக்கும் போது காய்களை விரும்பி உண்பதைப் போன்றது.

# இயல் - 2 அறநூல்கள்

**செம்மொழி இலக்கியங்கள்**

சங்க இலக்கியங்கள் → பதினெண் மேல்க்கணக்கு

சங்கம் மருவிய இலக்கியங்கள் → பதினெண் கீழ்க்கணக்கு

**எட்டுத்தொகை**

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

**பத்துப்பாட்டு**

1. திருமுருகாற்றுப் படை
2. பொருநராற்றுப் படை
3. சிறுபாணாற்றுப் படை
4. பெரும்பாணாற்றுப் படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக் காஞ்சி
7. நெடுநெல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைப்படுகடாம்

**பதினெண் கீழ்க்கணக்கு**

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னா நாற்பது
5. இனியவை நாற்பது
6. கார் நாற்பது
7. களவழி நாற்பது
8. ஐந்திணை ஐம்பது
9. ஐந்திணை எழுபது
10. திணைமொழி ஐம்பது
11. திணைமாலை நூற்றைம்பது
12. திரிகடுகம்
13. ஏலாதி
14. சிறுபஞ்சமூலம்
15. ஆசாராக்கோவை
16. முதுமொழிக் காஞ்சி
17. கைந்நிலை
18. பழமொழி நானூறு

❖ **<u>பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்</u>**

- பதினெண் - 18, கீழ் - சிறிய, கணக்கு – நூல், இலக்கியம்
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை **அற நூல்கள்**.
- சங்க மருவிய கால இலக்கியங்கள் **பதினெண்கீழக்கணக்கு நூல்கள், நீதி நூல்கள்**, **அறநூல்கள்**.
- இவை **களப்பிரர்கள் காலத்தில்** இயற்றப்பட்டவை

| வ.எ | நூல் பெயர் | பாடல் | பொருள் | சமயம் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | நாலடியார் | 400 | அறம் | சமணம் | சமணத்துறவிகள் |
| 2. | நான்மணிக்கடிகை | 104 | அறம் | வைணவம் | விளம்பிநாகனார் |
| 3. | இன்னா நாற்பது | 40 | அறம் | சைவம் | கபிலர் |
| 4. | இனியவை நாற்பது | 40 | அறம் | சைவம் | பூதஞ்சேந்தனார் |
| 5. | கார் நாற்பது | 40 | அகம் | | கண்ணன் கூத்தனார் |
| 6. | களவழி நாற்பது | 40 | புறம் | | பொய்கையார் |
| 7. | ஐந்திணை ஐம்பது | 50 | அகம் | | மாறன்பொறையனார் |
| 8. | ஐந்திணை எழுபது | 70 | அகம் | சைவம் | மூவாதியார் |
| 9 | திணைமொழி ஐம்பது | 50 | அகம் | | கண்ணன் சேந்தனார் |
| 10. | திணைமாலை நூற்றைம்பது | 150 | அகம் | சமணம் | கணிமேதாவியார் |
| 11. | திருக்குறள் (முப்பால்) | 1330 | அறம் | | திருவள்ளுவர் |
| 12. | திரிகடும் | 100 | அறம் | வைணவம் | நல்லாதனார் |
| 13. | ஆசாரக்கோவை | 100 | அறம் | சைவம் | பெருவாயின் முள்ளியார் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | பழமொழி நானூறு | 400 | அறம் | சமணம் | முன்றுறைஅரையனார் |
| 15. | சிறுபஞ்சமூலம் | 97 | அறம் | சமணம் | காரியாசன் |
| 16. | முதுமொழிக் காஞ்சி | 100 | அறம் | | கூடலூர் கிழார் |
| 17. | ஏலாதி | 81 | அறம் | சமணம் | கணிமேதாவியார் |
| 18. | கைந்நிலை | 60 | அகம் | | புல்லாங்கடனார் |

அறநூல்கள் - 11
அகநூல்கள் - 6
புறநூல் - 1

APPOLO STUDY CENTRE

# நாலடியார்

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும் ·
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு
**-சமணமுனிவர்கள்**

❖ **பொருள்**

- **நாயின் கால்விரல்கள் நெருங்கி இருக்கும்**. அதைப் போலச் சிலர் நம்மோடு நெருக்கமாக இருப்பார்கள். ஆனால், அவர்கள் **ஈயின் கால் அளவுக்கு கூட** நமக்கு உதவமாட்டார்கள். அப்படிப்பட்டவர் நட்பால் நமக்கு என்ன பயன்? வாய்க்கால், தூரத்திலிருந்து நீரை கொண்டுவரும். கொண்டுவந்து வயலுக்குப் பாய்ச்சி வயல் விளைய உதவும். வாய்க்காலைப்போல உதவும் மனிதர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அவர்கள் நட்பை நாம் தேடிக்கொள்ள வேண்டும்.

❖ **நூற்குறிப்பு**

- **துறவறவியல்** முதலில் உள்ளது.
- பதிணென்கீழ்கணக்கில் உள்ள **ஒரே தொகை நூல் நாலடியார்**.
- பாண்டிநாட்டு **சமணமுனிவர்கள்** இயற்றியது.
- நாலடியாரை தொகுத்தவர் **பதுமனார்.**
- **வேளாண்வேதம், குட்டித்திருக்குறள், நாலடி நானூறு,** நாலடியார் என்றும் வழங்கப்படும் நூல்.
- **“ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி”.**
- இதில் நால் என்பது **நாலடியாரையும்** இரண்டு என்பது **திருக்குறளையும்** குறிக்கும்.
- முப்பாலாகப் பகுத்து உரைக்கண்டவர் **தருமர்**. **பதுமனார்** உரை எழுதியுள்ளார்.
- ‘‘கல்வி கரையில, கற்பவர் நாள்சில’’, பெரியவர் கேண்மை பிறைபோல நாளும் - **நாலடியார்**.
- நாலடியாரை **ஜி.யு.போப் ஆங்கிலத்தில்** மொழிபெயர்த்துள்ளார்.

| | | |
|---|---|---|
| ○ **அறத்துப்பால்** | : | **13 அதிகாரம்** |
| ○ **பொருட்பால்** | : | **24 அதிகாரம்** |
| ○ **காமத்துப்பால்** | : | **3 அதிகாரம்** |

- நாலடியாரில் மொத்தம் **40 அதிகாரங்களும், 12 இயல்களும்** உள்ளன. **(400 பாடல்கள்).**
- கீழ்கணக்கில் **திருக்குறளுக்கு அடுத்தப்புகழ் பெற்ற நூல்** நாலடியார்.
- ‘நாவின் கிழத்தி’ (கலைமகள்) உரைத்தலால், சேராளே பூவின் கிழத்தி (திருமகள்) புலந்து, என அறிவும், திருவும் இணையாமையைக் கூறுகிறது.
- **பிணத்தைச் சுடுதல், நாரினால் கட்டி இழுத்தால், தூய்மை செய்து புதைத்தல், கண்டவிடத்து எறிதல்** போன்ற முறைகளும் பழக்க வழக்கங்களும் தெரியவருகின்றன.

# நான்மணிக்கடிகை

> மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்
> தனக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய
> காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
> ஓதின் புகழ்சால் உணர்வு
> - **விளம்பிநாகனார்**

❖ <u>பொருள்</u>

- **<u>குடும்பத்தின் விளக்குப் பெண்ணாவாள்</u>**. அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள் அவள் பெற்ற **<u>பண்பில் சிறந்த பிள்ளைகள்</u>**. மனத்திற்கினிய அன்புமிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் **<u>போன்றது கல்வி</u>**. அக்கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால், அவர்களிடமுள்ள **<u>நல்லெண்ணங்களே</u>**.

❖ <u>நூற்குறிப்பு</u>

- **ஆசிரியர்** : <u>விளம்பிநாகனார்.</u>
- **காலம்** : கடைச்சங்க காலம் (4ம் நூற்றாண்டு).
- **சமயம்** : **<u>வைணவம்</u>**
- கடிகை என்றால் **<u>துண்டு</u>** (பகுதி) என்று பொருள்.
- **<u>கட்டுவடம்</u>** என்ற பொருளும் **<u>ஆபரணம்</u>** என்ற பொருளும் உண்டு.
- **<u>ஜி.யு.போப்</u>** இரண்டு பாடல்களை **<u>ஆங்கிலத்தில்</u>** மொழி பெயர்த்துள்ளார்.
- ஒவ்வொரு பாடலிலும் **<u>நான்கு மணியான கருத்துகள்</u>** கூறப்பட்டுள்ளன. மொத்தம் **<u>104 பாடல்கள்</u>**.
- இந்நூல் **<u>அம்மை</u>** என்ற வனப்பின் பாற்படும் என்பார் **<u>நச்சினார்கினியார்</u>**.

❖ **<u>இந்நூலில் காணப்படும் அரிய சிறப்புகள்</u>**

- அல்லலை செய்வோர்க்கு அறங்கூற்றம்
- வெல்வது வேண்டின் வெகுளி விடல்
- தன்னொடு செல்வது வேண்டின் அறஞ்செய்.
- கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் மான் வயிற்றில் ஒள்ளரி தாரம் பிறக்கும்

# பழமொழி நானூறு (முதுமொழி, உலகவசனம்)

> ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அ∴துடையார்
> நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
> வேற்றுநாடு ஆகா; தமவேயாம்; ஆயினால்
> ஆற்றுணா வேண்டுவது இல்,
> **- <u>முன்றுறை அரையனார்</u>**

❖ <u>பொருள்</u>

- கற்க வேண்டிய நூல்களை நிறைவாக் கற்றவர் **<u>அறிவுடையார்</u>** ஆவார். அவருடைய புகழ் நான்கு திசைகளிலும் பரவும். அவருடைய புகழ் பரவாத நாடு இல்லை. அந்த நாடுகள் எல்லாம் வேறு நாடுகள் இல்லை, அறிவுடையார் நாடுகளே. எனவே, அந்நாடுகளுக்குச் செல்லும்போது **<u>வழிநடை உணவை அவர் எடுத்துச் செல்ல வேண்டிய தேவை</u>** இல்லை.

❖ <u>ஆசிரியர் குறிப்பு</u>

- **ஆசிரியர்** : <u>மூன்றுறையனார்</u>
- **காலம்** : கி.பி. 8-ம் நூற்றாண்டு
- **சமயம்** : சமணம்
- அரையன் என்ற சொல் **<u>அரசனை</u>** குறிக்கும். **<u>மூன்றுறை ஊர் பெயர்</u>**
- இவர் கி.பி.5ம் நூற்றாண்டில் **<u>வச்சிரநந்தி மதுரையில்</u>** நிறுவியிருந்த **<u>திரமிள சங்கத்தில்</u>** இவர் பயின்றார் என கூறப்படுகிறது.

- **நூற்குறிப்பு**
  - இந்நூல் **பழமொழி நானூறு, முதுமொழி, உலக வசனம்** எனப்படுகிறது.
  - தொல்காப்பியர் பழமொழியை **முதுமொழி** என்று கூறுகிறார்.
  - 4 அடிகளால் ஆன பாடல்கள் **34 அதிகாரங்களில் 400 பாடல்களைக்** கொண்டது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு **இலக்கிய பழமொழி** உள்ளது.
  - கல்வியின் சிறப்புப் பற்றிக் கூறும் பழமொழி **"ஆற்றுணா வேண்டுவது இல்"**.
  - சங்ககால **மன்னர்கள், புலவர்கள், மூவேந்தர்கள்** பற்றிய குறிப்புகள் கொண்ட நூல்.
  - நீதிநூல்களுள் திருக்குறள் **நாலடியாருக்குப்பின் அடுத்தபுகழ் பெற்றது இந்நூல்**.
  - இந்நூல் **அருகதேவனை வணங்கும் வாழ்த்துப் பாடல்** உட்பட நானூறு வெண்பாக்களைக் கொண்டது.
  - சங்ககாலப்புலவர், புரவலர் பற்றிய செய்திகளும், **சேரசோழ பாண்டிய மன்னர்களைப்** பற்றிய குறிப்புகளும் புராண இதிகாசக் கதை நிகழ்ச்சிகளும் இந்நூலின் பண்டைத் தமிழரின் பண்பாடு காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது.
  - **கரிகால சோழன், கொற்கைப் பாண்டியன், பாரி, பேகன்** போன்றோரின் வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டுள்ளதால் **வரலாற்று ஆராய்ச்சிக்கு** உற்றத் துணையாக விளங்குகிறது.

- **பாடல் வரிகள்**
  - **நுணலுந்தன் வாயார் கெடும்** **நிறைகுடம் நீர் தளும்பல் இல்**

# முதுமொழிக் காஞ்சி
# (அறவுரைக்கோவை)

**<u>சிறந்த பாடல்கள்</u>**

- ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
  ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.

  கடல்சூழ்ந்த இவ்வுலக மக்கள் அனைவர்க்கும் கற்றலைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது.

- காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்

  பிறர்க்கு அன்பு காட்டுவதிலும் செயல்களால் அவர் போற்றும்படி நடத்தலே மேலானது.

- மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.

  அறிவுநுட்பத்தினும் கற்ற பொருளை மறவாமை மேன்மையானது.

- வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.

  வளமான வாழ்க்கையைக் காட்டிலும் வாய்மை உடையவராக வாழ்வது உயர்ந்தது.

- இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை

  இளமையைக் காட்டிலும் நோயற்ற வாழ்வே சிறந்தது.

- நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.

  அழகுடையவராக இருப்பதினும் நாணமுடையவரான இருப்பதே மேலானது.

- குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.

  குலப்பெருமையைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது.

- கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.

  சிறந்த நூல்களைக் கற்றலைவிடவும் கற்றறிந்த பெரியாரைப் பின்பற்றி யொழுகுதல் சிறப்பானது.

- செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.

  பகைவரைத் தண்டிப்பதைவிட அவருக்கு நன்மை செய்தல் சிறந்தது.

- முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று.

  முற்காலத்துப் பெருகிய செல்வதைப் பின்னர்க் குறைவுபடாமல் காத்தலே சிறந்தது.

❖ **<u>ஆசிரியர் குறிப்பு</u>**
  ➢ ஆசிரியர் - **<u>கூடலூர்க்கிழார்</u>**

- **ஐங்குறுநூற்றைத்** தொகுத்தவரும் கூடலூர்க் கிழாரே ஆவார். மொத்தம் **100 பாடல்கள்** உள்ளன.
- இவர் வச்சிர நந்தியின் தமிழ்ச் சங்க காலத்தைச் சேர்ந்தவராதலால், இந்நூலிற் காணும் சில நயங்கள்: இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம் வளம் இல்லாத பொழுது வள்ளன்மை செய்வது குற்றம்: சுற்றத்தார் இல்லையென்றால் சினம் கொள்வது குற்றம் என்கிறார். இந்நூலில் வரும் சில வரிகள்.
- மதுரை கூடலூர்க் கிழாரின் பாடல்களை மேற்கோள் காட்டிய நல்லுரையாசிரியர் **நச்சினார்க்கினியார்**.
- **இளமையைக் காட்டிலும் நோயற்ற வாழ்வே சிறந்தது** என்றவர் கூடலூர்க் கிழார்.

❖ **சிறப்பு**
- இவர்தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் கையாண்டுள்ளார்கள்.

❖ **காலம்**
- **சங்க காலத்திற்குப்பின்** வாழ்ந்தவர்.

❖ **நூற்குறிப்பு**

- முதுமொழிக் காஞ்சி என்பது **காஞ்சி திணையின்** துறைகளுள் ஒன்று.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இந்நூல், **உலகியல் உண்மைகளைத்** தெளிவாக எடுத்து இயம்புகிறது.
- இந்நூல், **அறவுரைக்கோவை** எனவும் வழங்கப்படுகிறது.
- ஒரு பிரிவுக்கு **10 பாடல்களாக 10 பிரிவுகளாக** உள்ளது.
- ஒவ்வொரு பாடலிலும் சிறந்த முதுமொழி கூறப்பட்டுள்ளது.
- பாவகை : **குறள்தாழிசை.**
- இந்நூல் **சிறந்த பத்து, அறிவுப்பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லப்பத்து, இல்லைப்பத்து, பொய்ப்பத்து, எளிய பத்து, நல்கூர்ந்தபத்து, தண்டாப்பத்து** ஆகிய அதிகாரங்களை உடையது.
- **நிலையாமையைப் பாடும் நூல்**.
- **காஞ்சி என்ற புறத்திணையால் பெயர்பெற்ற நூல்**.

❖ **நூல் பயன்**
- முதுமொழிக்காஞ்சி கற்போரின் குற்றங்களை நீக்கி, **அறம், பொருள், இன்பங்களை அடைவதற்கான** வழிமுறைகளை அறிவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும்.

## திரிகடுகம்

❖ **நூற்குறிப்பு**
- இந்நூல் **100 வெண்பாக்களால் ஆனது**. மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல்.
- **சுக்கு, மிளகு, திப்பிலி** ஆகிய மூன்று பொருள்களும் திரிகடுகம் என்று வழங்கப்படுகிறது.
- **திரி என்றால் மூன்று**. **கடுகம் என்றால் காரம் உள்ளது** என்று பொருள்.
- **மூன்று அரிய உண்மைகளை** உணர்த்துகிறது.
- வனப்பு என்ற சொல்லின் பொருள் **அழகு**.
- கடவுள் வாழ்த்து உள்ளிட்ட அனைத்துப் பாடல்களிலும் மூன்றாம் அடியில் **இம்மூன்றும்** அல்லது **இம்மூவர்** என வருகிறது.

❖ **ஆசிரியர் குறிப்பு**

- திரிகடுகத்தின் ஆசிரியர் **நல்லாதனார்**, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த **திருத்து** என்னும் ஊரினர் என்பர். இவரைச், **செரு அடுதோள் நல்லாதன்** எனப் பாயிரம் குறிப்பிடுவதால், இவர் **போர்வீரராய் இருந்திருக்கலாம்** எனக் கருதப்படுகிறது.

❖ **பாடல்வரிகள்**

- வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
  தாளாளன் என்பான் கடன்பட வாழாதான் நெஞ்சம் அடங்குதல் வீடாகும்
  - உண்பொழுது நீராடி உண்டலும்
  - என்பெறினும் பால்பற்றிச் சொல்லா விடுதலும்
  - தோல்வற்றிச்சாயினும் சான்றாண்மை குன்றாமை
  - முறைசெய்யான் பெற்ற தலைமையும்
  - நெஞ்சில் நிறையிலான் கொண்ட தவமும்
  - நிறை ஒழுக்கம் தேற்றாதான் பெற்ற வனப்பும்

**தூயவர் செயல்கள்**

உண்பொழுது நீராடி உண்டாலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் - தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

**அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை**

இல்லார்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள.

**புதரில் விதைத்த விதை**

முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும் - நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

❖ **நூல் பயன்**

- திரிகடுகம் பாடல்களிலுள்ள மூன்று அறக்கருத்துகள் கற்பாரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின்மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் திகழச்செய்யும்.

## இன்னா நாற்பது

❖ **ஆசிரியர் குறிப்பு**

- ஆசிரியர் : **கபிலர்.** இவர் சங்ககால கபிலர் இல்லை
- காலம் : கி.பி. **4ம் நூற்றாண்டு**
- பாவகை : **இன்னிசை வெண்பா**

❖ **நூற்குறிப்பு**

- **துன்பம் கொடுக்கும் செயல்களைத் தொகுத்துக் கூறும் நூல்**
- மொத்தம் **164 இன்னாச்செயல்கள்** கூறப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடலும் இன்னது இன்னது துன்பம் தரும் என அறிவுறுத்தும் படியாக **40 பாடல்களைக்** கொண்டது.

- இந்நூலின் கடவுள் வாழ்த்தில், இவர் **<u>சிவன் பலராமன், மாயோன், முருகன் என</u>** நால்வரையும் குறிப்பிடுகிறார்.
- இந்நூலில் **<u>கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை</u>** ஆகிய கருத்துக்கள் வற்புறுத்தப்படுகிறது.
- இந்நூலின் **<u>திருக்குறளின் கருத்துக்கள் பெருவாரியாக</u>** எடுத்தாளப்படுகிறது.

- கீழ்க்கணக்குத் தொகுதியில் நாற்பது என்னும் பெயர் கொண்ட நூல்கள் நான்கு உள்ளன. அவை **<u>இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது</u>** என்பன.

# இனியவை நாற்பது

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே
மயரிக எல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந்தீர் வின்றேல் இனிது.
**பூதஞ்சேந்தனார்**

❖ **பொருள்**

➢ குழந்தை **நோயின்றி வாழ்தல் இனியது.** அவைக்கு அஞ்சாதவனின் **கல்வி இனியது**. மயக்கமற்ற பெருமைமிக்கவரிடம் சேரும் **செல்வம் அவரைவிட்டு நீங்காது** நிலைத்திருப்பின் இனியது.

❖ **நூற்குறிப்பு**

➢ ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் **மகனார் பூதஞ்சேந்தனார்**. காலம் கி.பி. 5 **ம் நூற்றாண்டு**.
➢ இன்னது இனியவை என உரைக்கும் - **40 பாடல்கள்**.
➢ இதன் கடவுள் வாழ்த்து **சிவன், திருமால், பிரம்மன் என்ற மூவரையும்** வணங்குகிறது.
➢ மொத்தம் **124 இனிய செயல்கள்** கூறப்பட்டுள்ளன.
➢ இந்நூலில் **நட்பைப் பற்றியும், கல்வியைப் பற்றியும்**, அதிக அளவில் கூறப்படுகின்றது. மன்னர் பற்றியும், ஈகை பற்றியும், மகளிர் பற்றியும் சில கருத்துகள் கூறப்படுகின்றன. கடன்படாவாழ்வு, வருவாய்க் கேற்ற செலவு போன்றன நன்கு உணர்த்தப்பட்டுள்ளன.
➢ இந்நூல் பொருளமைப்பில் திரிகடுகத்தை ஒத்துள்ளது எனலாம்.

# சிறுபஞ்சமூலம்

கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை,
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல், - பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல், கிளர்வேந்தன் தன்னாடு‘
வாட்டான்நன் றென்றல் வனப்பு - **காரியாசன்**

❖ **பொருள்**

➢ கண்ணுக்கு அழகு **இரக்கம் கொள்ளல்**; காலுக்கு அழகு பிறரிடம் **இரந்து செல்லாமை**: ஆராய்ச்சிக்கு அழகு தமது முடிவைத் **துணிந்துரைத்தல்**; இசைக்கு அழகு அதனைக் **கேட்டோர் நன்றெனப் புகழ்தல்**; அரசனுக்கு அழகு, **குடிமக்களை வருத்தாமல் காப்பவன்** என்று, பிறர் அவனைப் புகழ்ந்து உரைத்தல்.

❖ **ஆசிரியர் குறிப்பு**

➢ **ஆசிரியர்** : காரியாசன்
➢ **சமயம்** : சமணம்
➢ **காலம்** : 5ஆம் நூற்றாண்டு
➢ இவரும் **ஏலாதி இயற்றிய கணிமேதாவியாரும் ஒருசாலை** மாணாக்கராவர்.
➢ காரியாசன் **மதுரை மாக்காயனாரின் மாணவர்** என சிறப்புபாயிரம் கூறுகிறது.
➢ காரியாசன் **வச்சிரதந்தி நிறுவிய திரமிள சங்கத்தில் கல்வி கற்றவர்**.

❖ **நூற்குறிப்பு**

➢ சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
➢ இது **102 பாடல் மற்றும் 97 வெண்பாக்களை** உடையது.
➢ பஞ்சம் என்றால் **ஐந்து** என்று பொருள்.

- மூலம் என்றால் **<u>வேர்</u>** என்று பொருள்.
- **<u>வேரால் பெயர் பெற்ற நூல்.</u>**
- **<u>மருந்தால் பெயர் பெற்ற நூல்.</u>**
- ஐவகை வேர்கள் : **<u>கண்டங்கத்திரி வேர், சிறு வழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லிவேர், சிறுநெருஞ்சி வேர்.</u>**
- பெரும்பான்மை **<u>பொது அறக்கருத்துக்களும்</u>** சிறுபாண்மை **<u>சமண அறக்கருத்துக்களும்</u>** இந்நூலில் இடம் பெற்றுள்ளன.
- சிறந்த கவிஞனுக்குரிய இலக்கணம் இந்நூலில் பேசப்படுகிறது.
- **<u>தோல் கன்றைக் காட்டி பசுவைக்கறக்கும் பழக்கம் கொடியது</u>** என்று இந்நூல் கூறுகிறது.
- பிறர் **<u>'சாக'</u>** என பழிக்கும் படி வாழாமல் **<u>'வாழ்க'</u>** எனப் போற்றும்படி வாழ வேண்டும்.
- குழந்தைக்கு ஊட்டும் சோற்றைப் **<u>'பலி'</u>** என்ற சொல்லால் இவர் குறிக்கின்றார்.
- சிறுபஞ்சமூலம் என்பதைப் போலவே, பெரும்பஞ்சமூலம் என்பது ஒன்றுண்டு. இதனை பதார்த்தகுண சிந்தாமணியும், பொருள் தொகை நிகண்டும் குறிக்கின்றன. **<u>பெருபஞ்ச மூலமாவன</u>**.

  1) வில்வம் 2) பெருங்குமிழ் 3) தழுதாழை 4) பாதிரி 5) வாகை

# ஏலாதி

> வணங்கி வழியொழிகி மாண்டார்சொல் கொண்டு
> நுணங்கிநூல் நோக்கி நுழையா - இணங்கிய
> பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
> நூல்நோக்கி வாழ்வான் நுனித்து.
> - **கணிமேதாவியார்**

❖ **<u>பொருள்</u>**

- பிறர்க்குப் பணிந்தும், நல்வழியில் நடந்தும், மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றியும், நுண்ணறிவு நூல்களை ஆராய்ந்தும், அவை நவிலும் வண்ணம் வாழும் பழியிலா மன்னன் நூல்களெல்லாம் போற்றும்படி வாழ்வான்.

❖ **<u>ஆசிரியர் குறிப்பு</u>**

- ஆசிரியர் : **<u>கணிமேதாவியார்</u>**.
- சமயம் : **<u>சமணம்</u>**
- காலம் : கடைச்சங்க காலம் **<u>5-ம் நூற்றாண்டு.</u>**
- சமண சமயத்திற்கே உரிய அறக்கருத்தாவது **<u>கொல்லாமை</u>**.
- கணிதமேதாவியர் வடமொழிப்புலமை மிக்கவர், ஆதலால் **<u>வடசொல் மிகுதி</u>**
- கணி என்பது கொண்டு இவர் **<u>கணிதத்திலும், சோதிடத்திலும்</u>** சிறந்த புலமை பெற்றவர் என்பர். இது இவரது சிறப்புப் பெயர்.
- கணிதமேதாவியர் **<u>ஒன்பது</u>** என்ற எண்ணைக் குறிக்கப் பயன்படுத்தும் சொல் **<u>தொண்டு</u>**.

❖ **<u>நூற்குறிப்பு</u>**

- மருந்துப் பொருட்களின் பெயரில் அமைந்த இருநூல்கள்: **<u>திரிகடுகம், ஏலாதி</u>**
- இந்நூல் **<u>சிறப்பாயிரம், தற்சிறப்பாயிரம் உட்பட 81</u>** வெண்பாக்களைக் கொண்டது.
- **<u>4 அடிகளில் 6 அறக் கருத்துகளைக்</u>** கூறுவது ஏலாதி.
- மருந்தால் பெயர் பெற்ற நூல். ஏலாதி என்பதற்கு ஏலத்தை முதலாக உடையது என்று பொருள்.
- ஏலம், இலவங்கம், நாககேசரம் அல்லது சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருட்களுக்கு ஏலாதி என்று பெயர்.

➢ உணவு கொடுப்பதே **உயர்வான அறம்** என்கிறது.
➢ தமிழுக்கு அறுமருந்து போன்றது. கற்போரின் அறியாமையை அகற்றும் நூல்.

## திணைமொழி ஐம்பது

❖ **ஆசிரியர் குறிப்பு**

➢ ஆசிரியர் : **கண்ணன் சேந்தனார்.**
➢ காலம் : 5-ம் நூற்றாண்டு

❖ **நூற்குறிப்பு**

➢ திணை : அகம்
➢ **பாடல்கள்** : **50**
➢ பா : வெண்பா
➢ **திணை வைப்பு முறை** : குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்
➢ 46 பாடல்கள் இன்னிசை வெண்பா.

## திணைமாலை நூற்றைம்பது

❖ **ஆசிரியர் குறிப்பு**

➢ ஆசிரியர் - **கணிமேதாவியார் (ஏலாதி இயற்றிவர்)**
➢ சமயம் : சமணர்

❖ **நூற்குறிப்பு**

➢ திணை : **அகம்**
➢ பாடல்கள் : 153, திணைக்கு 30 (குறிஞ்சி, நெய்தல், முல்லை, 31 பாடல்கள்)
➢ பா : **வெண்பா**
➢ திணைக்கு **30 பாடலாக 150 பாடல்கள்** உள்ளன.
➢ **குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற வரிசையை** உடையது.
➢ பதினெண்கீழ்க்கணக்கில் அதிகமாக **அகப்பாடல்களை கொண்ட நூல்**.
➢ கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்த **ஐந்திணை நூல்களில் மிகப்பெரியது**.
➢ **களவியல்** குறித்த கோட்பாடுகள் அதிகமாக காணப்படுகிறது.
➢ இந்நூலின் கருத்துக்கள் **சுந்தரர் தேவாரத்திலும், மாணிக்கவாசகர் திருக்கோவையிலும்** கூறியுள்ளனர்.

# ஐந்திணை எழுபது

❖ **ஆசிரியர் குறிப்பு**

➢ ஆசிரியர் - **மூவாதியார்.**

➢ காலம் கி.பி 5-**ம் நூற்றாண்டு. அகநூல்**.

❖ **நூற்குறிப்பு**

➢ திணைக்குப் 14 பாடலாக ஐந்து திணைகளுக்குமாக மொத்தம் **எழுபது பாடல்கள்** உள்ளன.

➢ **66 பாடல்கள்** கிடைத்துள்ளன. நான்கு பாடல்கள் (25, 26, 69, 70) மறைந்து விட்டன.

➢ **குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற வரிசையை உடையது**.

➢ பழமையான வழக்கங்களை **அதிகமாக கூறும் நூல்**.

➢ மணமகன் கூறும் உறுதிமொழிகளை மணமகள் ஓர் ஏட்டில் எழுதிப்பெறும் வழக்கம் இருந்ததையும் இந்நூலின் மூலம் அறிய முடிகின்றது.

''வெஞ்சுடர் அன்னானையான்கண்டேன் கண்டாளாம்
தண்சுடர் அன்னாளைத் தான்''

# கார்நாற்பது

❖ **ஆசிரியர் குறிப்பு**

➢ **ஆசிரியர்** : மதுரைக்கண்ணன் கூத்தனார்.

➢ **காலம்** : கி.பி. 4-ம் நூற்றாண்டு.

➢ **சமயம்** : வைணவம்

❖ **நூற்குறிப்பு**

➢ **40 வெண்பாக்களால்** ஆன அகநூல் ஒருதிணையை **(முல்லை) மட்டும் பாடிய நூல்**.

➢ **தலைவன், தலைவி, தோழன் (தேர்ப்பாகன்), தோழி நான்கு** பாத்திரங்கள் மட்டுமே வருகின்றன.

➢ பாத்திரங்கள் நாடக பாங்கில் பேசுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

➢ **கார்நாற்பது நாடகப் பாங்கு** கொண்டுத் திகழ்கின்றது.

➢ ஒவ்வொரு பாடலிலும் **கார்கால வருணனை** வருகிறது.

''செல்வர் மனம்போல் கவின் ஈன்ற, நல்கூர்ந்தார்
மேனிபோல் புல்என்ற காடு''

# களவழிநாற்பது

❖ **ஆசிரியர் குறிப்பு**

- ஆசிரியர் - **பொய்கையார்**.
- காலம் - 5ஆம் நூற்றாண்டு
- திணை - புறம், வாகை

❖ **நூற்குறிப்பு**

- மொத்தம் **40 பாடல்கள்**.
- களம் - **போர்க்களம்**
- போர் நடந்த இடம் - **கழுமலம்**
- களம்பாடுவதில் **போர்க்களம் பாடுதல்**, **ஏர்க்களம் பாடுதல்** என இருவகை உண்டு. இது போர்க்களம் பாடியது.
- களவழிநாற்பது பாடலில் **யானைப்போர்** மிகுதியாகப் பாடப்பட்டுள்ளது
- பிற்காலத்து **பரணி இலக்கியத்தின் முன்னோடி** களவழி நாற்பது.
- களவழி நாற்பதில் நாற்பது பாடல்களும் **அட்ட களத்து** என முடிவடைகிறது.
- களவழி நாற்பது **வாகைத்திணையில்** ஒரு துறை ஆகும்.
- **சோழன் செங்கணானுக்கும், சேரன் இரும்பொறைக்கும் இடையே** நடக்கும் போர் பற்றியது. இறுதியில் இரும்பாறை சிறையிலிடப்பட்டான். பொய்கையார் என்ற புலவர் இக்களவழியைப் பாடி அவனை சிறையிலிருந்து விடுவித்தார்.
- பதினெண்கீழ்க் கணக்கில் **புறப்பொருள் பற்றிக் கூறும் ஒரே நூல்**.
- இந்நூல் **சோழனைச்** சிறப்பிக்கிறது.
- சேரன் சிறையில் அடைக்கப்பட்ட இடம் **குடவாயிற் கோட்டம்.**
- இச் சேரன்தான் நீர்கேட்டுத் தாமதமாகப் பெற்று மானம் கருதி உயிர்விட்டவன்.
- **கார்த்திகைத் திருவிழா** குறித்து இந்நூல் கூறுகிறது.

# ஐந்திணை ஐம்பது

❖ **<u>ஆசிரியர் குறிப்பு</u>**

- ஆசிரியர் - **<u>மாறன் பொறையனார்</u>**.
- காலம் - **கி.பி 4-ம் நூற்றாண்டு.**
- பாவகை - வெண்பா

❖ **<u>நூற்குறிப்பு</u>**

- திணைக்குப் 10 பாடலாக மொத்தம் **<u>50 பாடல்கள் உள்ளன</u>**.
- **திணை வைப்புறை : <u>முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல்</u>**
- முல்லைத்திணையை முதலாகக் கொண்ட கீழ்க்கணக்கு நூல் இந்நூல் ஆகும்.
- இந்நூலின் சிறப்பினையுணர்ந்த பாயிரப்பாடல் **<u>"ஐந்திணை ஐம்பது ஆர்வத்தின் ஓதாதார் செந்தமிழ் சேராதவர்"</u>** எனக் குறிப்பிடுகிறது.

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாது என்று எண்ணிப்
பிணைமான் இனிது உண்ண வேண்டிக்- கலைமான்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"

# கைந்நிலை

❖ <u>**ஆசிரியர் குறிப்பு**</u>

- ஆசிரியர் : **<u>புல்லாங்காடனார்.</u>**
- காலம் : **<u>கி.பி. 5-ம் நூற்றாண்டு</u>**

<u>**நூற்குறிப்பு**</u>

- பா : **<u>வெண்பா</u>**
- ஒரு திணைக்கு 12 பாடல்கள் வீதம் மொத்தம் **<u>60 பாடல்கள் உள்ளன</u>**.
- இதில் குறிஞ்சித்திணை பாடல்கள் சுவையாக உள்ளன.
- **<u>ஐந்திணை அறுபது</u>** என்ற வேறு பெயரும் உண்டு.
- **<u>ஐந்திணை ஒழுக்கம்</u>** பற்றிக் குறிப்பிடும் நூல்
- **<u>கை என்றால் ஒழுக்கம்</u>** என பொருள்படும்

ஆந்தை குறுங்கலி கொள்ள நம் ஆடவர்
காய்ந்து கதிர்தெறூஉம் கானம் கடந்தார் பின்
ஏந்தல் இளமுலை ஈர்எயிற்றாய்! என்நெஞ்சு
நீந்து நெடுவிடைச் சென்று''

# ஆசாரக்கோவை

❖ **<u>ஆசிரியர் குறிப்பு</u>**

- ஆசிரியர் - **<u>பெருவாயின் முள்ளியார்</u>**.
- காலம் - 5ஆம் நூற்றாண்டு
- சைவர் குறள்
- ஒழுக்கங்களை **<u>அடுக்கிக்கூறும் நூல்</u>**.
- **<u>100 பாடல்கள் உள்ளன</u>**.
- அன்றாட வாழ்கையில் செய்யும் **<u>சிறுசிறு செயல்களையும்</u>** எந்தமுறையில் செய்யவேண்டும் என்று விரிவாகக் கூறும் நூல்.
- **<u>வடமொழி நூலின் பலவற்றின் கருத்துக்கள் கோவையாக</u>** அமைந்துள்ளது.
- **<u>குறள்வெண்பா சிந்தியல் வெண்பா</u>**, **<u>நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா</u>** எனப் பலவும் கலந்த நூல்.

''பகல் தெற்கு நோக்கார் இராவடக்கு நோக்கார்
பகற்பொய்யார் தீயுனுள் நீர்''
''உமிழ்வும் உயர்ந்துழி ஏறலும் பாக்கும்
வகையில் உரையும் வளர்ச்சியும் ஐந்தும்
புணரார் பெரியார் அகத்து''

- சங்க காலத்தும் அதற்குப் பிறகும் வாழ்ந்த ஔவையார் பலரென்பர் ஆராய்ச்சியாளர்.
- அவர்களுள் நீதி நூல்களைப் பாடிய **சோழர் கால ஔவை கி.பி.12 ஆம் நூற்றாண்டினார்** என்பார் அறிஞர் **மு. அருணாசலம்**.
- **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை (வாக்குண்டாம்), நல்வழி நான்கும்** ஔவையாரால் பாடப்பட்டவையாகும்.

❖ **ஆத்திசூடி**

- ஆசிரியர் : **ஔவையார்**
- காலம் : **12 ஆம் நூற்றாண்டு**
- ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
  ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே
  என்று இந்நூல் **சிவபெருமான்** வணக்கத்துடன் தொடங்குகிறது
- அத்திமாலை அணிந்த இறைவன் **சிவபெருமான்**.
- 'ஆத்திசூடி' என்ற நூலின் தொடக்கத்தால் இந்நூல் பெயர் பெற்றது.
- **அகர வரிசையில்** பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- ஓர் எழுத்துக்கு ஒரு பாடலாக மொத்தம் **108 பாடல்கள்** உள்ளன.
- ஓர் அடியால் மட்டுமே ஒரு பாடல் அமைந்துள்ளது. இதற்கு "ஒரோவடி யானும் ஒரேவிடத்து இயலும்" என்ற யாப்பருங்கலம் விருத்திஉரை மேற்கோள் நூற்பா இலக்கணம்.
- ஓர் அடியில் **இருசீர்கள்** மட்டுமே உள்ளன.
- சிறுவர்கள் மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற வடிவில் உள்ளது.
- ஓரடியால் **நாற்பொருளைக் கூறும் நூல்**.
- இதே அமைப்பில் பிற்காலத்தில் பல ஆத்திசூடி நூல்கள் பல தோன்றின.
  - **பிற்கால ஆத்திசூடிகள்**

    அறம் செய விரும்பு
    இளமையில் கல்
    சேரிடம் அறிந்துசேர்
    தையல்சொல் கேளேல்

- ஔவையார் இயற்றிய பிற நீதிநூல்கள்: **கொன்றை வேந்தன் மூதுரை, நல்வழி**
- ஔவையார் மொத்தம் **4 நீதிநூல்கள் பாடியுள்ளார்**.

❖ **கொன்றை வேந்தன்**

- ஆசிரியர் **ஔவையார்**
- "கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
- என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே"
- என இந்நூல் **சிவபெருமான்** வணக்கத்துடன் தொடங்குகிறது.
- கொன்றை மாலை அணிந்தவன் **சிவபெருமான்**
- கொன்றைவேந்தன் - சிவபெருமான், அவன் செல்வன் விநாயகன், எனவே இது விநாயகர் வணக்கத்துடன் தொடங்குகிறது என்பார் நா. மு. வேங்கடசாமி நாட்டார்.
- **'கொன்றைவேந்தன்'** என்ற நூலின் தொடக்கத்தால் இந்நூல் பெயர் பெற்றது.
- **அகர வரிசையில்** பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- ஓர் எழுத்திற்கு ஒரு பாடலாக மொத்தம் **91 பாடல்கள்** உள்ளன.
- ஓர் அடியால் மட்டுமே ஒரு பாடல் அமைந்துள்ளது. இதற்கு **"ஒரேஅடி யானும் ஒரேவிடத்து** இயலும்" என்பது இலக்கணம்.
- ஓர் அடியில் **நாற்சீர்கள்** உள்ளன.
- எளிமை, ஓசைநயம், பொருள் ஆழம் உடையநூல்
  **"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"**

**"இல்லறம் அல்லது நல்லறம் அன்று"**
"கற்பெனப் படுவது சொல்திறம் பாமை"
"குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை"
**"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு"**

❖ **மூதுரை**

- ஆசிரியர் **ஔவையார்**
- '**வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்**' என்று இந்நூல் **விநாயகர் வாழ்த்துடன்** தொடங்குகிறது. ("தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சேர்வர் தமக்கு" எனப் பாடல் முடிகிறது")
- மொத்தம் **30 வெண்பாக்கள்** உள்ளன.
- அனைத்தும் **நேரிசை வெண்பாக்கள்**.
- எளிமையான உவமைகளை எடுத்துக்காட்டி உயர்ந்த நீதியினைச் சொல்லும் நூல்.

"நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால்வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்-தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லாருக்கும் பெய்யும் மழை
உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி-உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு."

❖ **நல்வழி**

- ஆசிரியர் **ஔவையார்**

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
**சங்கத் தமிழ் மூன்றும் தா",** என விநாயகர் வாழ்த்துடன் தொடங்குகிறது.

- மொத்தம் **40 வெண்பாக்கள்** உள்ளன.
- அனைத்தும் **நேரிசை வெண்பாக்கள்**.
- நூல் தோன்றிய காலத்து உலக நட்பினைப் படம் பிடித்துக் காட்டும் நூல்.

**"சாதி இரண்டொழிய வேறில்லை, சாற்றுங்கால்**
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி"

# இயல் - 3
# கம்பராமாயணம்

**குகனின் வருகை**

ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு
நாய கன்போர்க் குகன்எனும் நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்
காயும் வில்லினன் கல்திரள் தோளினான்.

❖ **பொருள்**

➢ போர்க்குணம் மிக்க குகனானவன் **ஆயிரம் படகுகளுக்குத் தலைவன்** : **கங்கையாற்றுத் தோணித்துறைக்குத்** தொன்று தொட்டு **உரிமையுடையவன்** பகைவர்களை அழிக்கும் **வில்லாற்றல் பெற்றவன்** : மலைபோன்ற **திரண்ட தோள்களை உடையவன்**.

**குகனின் தோற்றம்**

துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்தபேர்
அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான்,
நெடிய தானை நெருங்கலின் நீர்முகில்
இடியி னோடுஎழுந் தாலன்ன ஈட்டினான்.

❖ **பொருள்**

➢ **குகன் துடியென்னும் பறை உடையவன்: வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்: தோல் செருப்பணிந்த பெருங்கால்களை** உடையவன் : இருள் போன்ற **கரிய நிறத்தையுடையவன்** : கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தாற்போன்ற மிகுதியான **படைபலம் உடையவன்.**

**குகன் இராமனைக் காண வருதல்**

சிருங்கி பேரம் எனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகருறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீன்உப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்.

❖ **பொருள்**

➢ அலைகளையுடைய **கங்கைக்கரையின்** பக்கத்திலுள்ள **சிருங்கிபேரம்** என்னும் நகரில் வாழும் **தலைவன் குகன்**. இவன், முனிவர்தம் தவச்சாலையிலுள்ள வள்ளல் இராமனைக் காணத் **தேனும்மீனும்** கொண்டுசென்றான். (**அரசன், குரு, தெய்வம் ஆகியோரைக்** காணச் செல்லும்போது வெறுங்கையோடு செல்லலாகாது என்பது தமிழ் மரபு).

கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
ஆவான் யார்என அன்பின் இறைஞ்சினான்
தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாய்அடியேன் என்றான்

❖ **பொருள்**

➢ இராமன், குகனை அழைக்கும் முன்னர், இளையவனாகிய இலக்குவன் அவனை நெருங்கி, யார் நீ? என வினவினான். குகன், இராமனை அன்போடு வணங்கி,"**தேவா, கங்கையாற்றில் நாவாய்களை இயக்குகின்றவனும் நாயினும் அடியவனாகிய வேட்டுவன் யான்,** தங்களின் திருவடிகளை வணங்க வந்துள்ளேன்" என்று கூறினான்.

**குகனைக்குறித்து இராமனிடம் இலக்குவன் கூறியது**

நிற்றிஈண்டு என்றுபுக்கு நெடியவன் தொழுது தம்பி
கொற்றவ! நின்னைக் காண்க குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும்: உள்ளம் தூயவன்: தாயின் நல்லான்:
ஏற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை:குகன் ஒருவன் என்றான்.

❖ <u>பொருள்</u>

➢ இலக்குவன் இராமனைத் தொழுது, '**<u>வெற்றி பொருந்திய தலைவனே! தூய உள்ளம் உடையவன்: தாயினும் சிறந்த அன்பினன்: கங்கை யாற்றில் செல்லும் நாவாய்களுக்குத்</u>** தலைவன்: **<u>குகன் என்னும் பெயரினன்: தன் உறவினருடன் நின்னைக் காண வந்துள்ளான்'</u>**என்றான்.

**இராமன் இலக்குவனிடம் குகனை அழைத்துவரப் பணித்தலும், வந்த குகன் பணிதலும்**

அண்ணலும் விரும்பி என்பால் அழைத்திநீ அவனை என்றான்
பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவில் புக்கான்
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன் இருண்ட குஞ்சி
மண்ணுறப் பனிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்

❖ <u>பொருள்</u>

➢ இராமன் விருப்பத்துடன்,''**<u>அன்னவனை என்னிடம் அழைத்து வருவாய்</u>**'' என்றான். இலக்குவன் குகனை,'வருக' என்றவுடன், குகன் விரைந்து வந்து இராமனைத் தன் கண்களால் கண்டு களித்தான்: இருள்போன்ற நீண்டமுடியுடைய தலை, மண்ணில் படியக் கீழே விழுந்து வணங்கினான். பின் எழுந்து,**<u>வாயைக் கையால் பொத்தி, உடலை வளைத்து அடக்கமாக நின்றான்</u>**.

**தேனும் மீனும் விருப்பத்தடன் கொண்டு வந்ததாகக் குகன் கூறுதல்**

இருத்திஈண்டு என்னலோடும் இருத்திலன், எல்லை நீத்த
அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்.

❖ <u>பொருள்</u>

➢ இராமன், 'இங்கே உட்கார்' எனச் சொன்னதும், இராமனின் பெருமை கருதிய குகன் உட்காரவில்லை. அளவில்லாத பேரன்பினனாகிய குகன், தேவரீர்க்கு நல்லுணவாக அமையும்படி ''தேனையும் **<u>மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டு வந்துள்ளேன்</u>**. இதனை ஏற்றுக்கொள்வது குறித்து தங்கள் கருத்து யாதோ'' என்றான் இராமன் அருகிலிருந்த முனிவர்களை நோக்கி, மெல்லப் புன்முறுவல் பூத்துச் சொல்லத் தொடங்கினான்.

**இராமன் குகனைப் பாராட்டல்**

அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய என்னில் பவித்தரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான்.

❖ <u>பொருள்</u>

➢ உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பிரிவின் காரணமாகக் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைத்தற்கரியன: அமுதத்தைவிடச் சிறந்தன. இவை எத்தகையனவாய் இருப்பினும், அன்பு கலந்ததெனில் தூய்மையானவையே! எம்போன்றோர்க்கும் உரியன: ஆகையால் இனிமையான இவை, நாங்கள் விரும்பி உண்டதற்கும் சமம்.

**குகன் வேண்டுகோள்**

கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்ந்து வான்இப்
பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன தைய செய்குவென் அடிமை என்றான்.

❖ <u>பொருள்</u>

➢ கருமுகில் வண்ணாகிய இராமன் கூறியதைக் கேட்ட குகன்,<u>**'இவ்வுலகு அனைத்திற்கும் செல்வம் போன்றவனே! தங்களை இத்தவக் கோலத்தில் பார்த்த என்னிரு கண்களை எடுக்க முடியாத நிலையில் உள்ள கள்வன் நான்**</u>: இம் மனத்துயரோடு என்னிருப்பிடம் செல்லத் துணியன். ஐயனே, தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன்' என்றான்.

**குகனைத் தன்னுடன் இருக்க இராமன் அனுமதியளித்தல்**

கோதைவில் குரிசில் அன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப இருத்திஈண்டு எம்மொ டென்றான்.

❖ <u>பொருள்</u>

➢ <u>**கோதண்டம் என்னும் வில்லேந்திய, ஆடவரில் நல்லவனாகிய இராமபிரான்,**</u> குகன் கூறிய கருத்துக் கேட்டான். சீதையின் திருமுகத்தைப் பார்த்தும், தம்பி இலக்குவன் திருமுகத்தைப் பார்த்தும்,<u>**'இவன் நம்மிடத்து நீங்காத அன்பு உடையவன்'**</u> என்றுரைத்தான். அருள் நிறைந்த பார்வையுடைய இராமன் குகனை நோக்கி, '<u>**எல்லாவற்றினும் இனிய நண்பனே**</u> ! இவ்விடத்தில் எம்மோடு இருப்பாயாக!'என்றான்.

**குகன் கொண்டுவந்த படகில் மூவரும் புறப்படல்**

சிந்தனை உணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லாம் அருளுதிர் விடைஎன்னா
இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா.

❖ <u>பொருள்</u>

➢ இராமனின் மனக்குறிப்பை அறிந்த குகன் மிகவிரைவாகச் சென்றான்: பெரியதோர் படகைக் கொண்டுவந்தான். <u>**தாமரைமலர் போன்ற கண்களை உடைய இராமன்**</u> அந்தணர்களிடம் விடைபெற்று, <u>**பிறைநிலவு போன்ற நெற்றியை உடைய சீதையுடனும்**</u> தம்பி இலக்குவனுடனும் படகில் இனிதாக ஏறினான்.

**குகன் படகைச் செலுத்துதல்**

விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

❖ <u>பொருள்</u>

➢ விரைந்து படகினைச் செலுத்துமாறு குகனுக்கு இராமன் கட்டளையிட்டான். உயிரின் ஏவலுக்கு மெய் செயல்படுவதுபோலக் குகனும் படகினை விரைவாகச் செலுத்தினான். மடங்கிவிழும் அலைகளையுடைய கங்கையாற்றில் இளம் அன்னம் விரைந்து செல்வதனைப் போலப் படகு சென்றது. அவர்களின் பிரிவால் அனல்பட்ட மெழுகுபோல் துன்பமுற்று அந்தணர்கள் மனமுருகி நின்றார்கள்.

**குகனும் உடன்வருவதாக நவின்ற போது இராமன் கூற்று**

அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ, இளவல்உன் இளையான், இந்
நன்னுத லவள்நின்கேள், நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யது, நான்உன் தொழில்உரி மையின்உள்ளேன்.

❖ **பொருள்**

➢ குகன் கூறியதைக் கேட்ட குற்றமற்றவனாகிய இராமன், **என் உயிர்போன்றவன் நீ; இலக்குவன் உன்தம்பி; சீதை உன் கொழுந்தி; நீர் சூழ்ந்த இந்நிலவுலகம் முழுதும்** உன்னுடையது. நான் உனது ஆளுகைக்குரியவன்.

**இராமனோடு குகன் ஐந்தாவது சகோதரன்**

துன்புள தெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புன திடைமின்னும் பிரிவுளதென உன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம்

❖ **பொருள்**

➢ துன்பம் உண்டாயின் அதனையடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை, இப்பிரிவு இடைக்காலத்ததே: அதனை நினைத்து வருந்த வேண்டா. முன்னர், நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராய் இருந்தோம்: **விரிந்த அன்பினால் இனி உன்னொடு ஐவரானோம்**.

❖ **குகப்படலம்**

➢ அயோத்தி காண்டத்திலுள்ள **7-வது படலம்** குகப்படலம்.
➢ **மறுபெயர் : கங்கைப் படலம்**.
➢ வேட்டுவத் தலைவன் பெயர் **குகன்**.
➢ ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு நாயகன் **குகன்**.
➢ துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்த பேர் அடியன் **குகன்**.
➢ சிருங்கி பேரம் என்னும் நகரில் வாழும் தலைவன் **குகன்**.
➢ ஒருங்கு தேனோடு மீன்உப காரத்தன் இராமனைக் காணச் சென்றவன் **குகன்**.

❖ **ஆசிரியர் குறிப்பு**

➢ கம்பர் பிறந்த இடம் : **சோழநாட்டு தேரெழுந்தூர்**.
➢ காலம் : **கி.பி. 12ம் நூற்றாண்டு**
➢ தந்தை : **ஆதித்தர்**
➢ கம்பரின் மகன் : **அம்பிகாபதி, மகள் காவேரி.**
➢ மரபு : **உவச்சர் மரபு.**
➢ நெறி : **தொல்காப்பிய நெறி**
➢ இவரின் சமகாலத்தவர் : **செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி**
➢ கம்பர் **2-ம் குலோத்துங்கச் சோழனின்** அவைப்புலவராக விளங்கினார்.
➢ ஆதரித்தவர் - திருவெண்ணெய் நல்லூர்ச் **சடையப்ப வள்ளல்.**
➢ **1000 பாடல்களுக்கு** ஒரு பாடல் வீதம் சடையப்ப வள்ளலை பாடியுள்ளார்
➢ கம்பர் இராமயணத்தை அரங்கேற்றிய இடம் **ஸ்ரீரங்கம் (திருவரங்கம்)**
➢ **"கவிச்சக்கரவர்த்தி"** பட்டம் கொடுத்தவர் - **நாதமுனிகள்**.
➢ கம்பர் **"ஏரெழுபதை" சடையப்ப வள்ளல்** முன் அரங்கேற்றினார்.
➢ கம்பரின் கோட்டம் **திருவழுந்தூரில்** உள்ளது.
➢ கம்பர் சமாதி **நாட்டரசன் கோட்டையில்** உள்ளது.

❖ **சிறப்புப் பெயர்கள்**

➢ கவிச்சக்கரவர்த்தி, கல்வியில் பெரியவன், கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தம் என்னும் வெண்பாவுக்கு உயர் கம்பன், செய்நன்றி மறவா இயல்பினர்.

❖ **இயற்றிய நூல்கள்**

- ஏர் எழுபது,
- சிலை எழுபது,
- சரஸ்வதி அந்தாதி,
- சடகோபர் அந்தாதி (நம்மாழ்வார் பற்றியது)
- திருக்கை வழக்கம்
- இலக்குமி அந்தாதி

- செம்பொற்சிலை எழுபது
- காஞ்சி புராணம்
- காஞ்சி பிள்ளைத்தமிழ்
- காஞ்சி குறவஞ்சி
- சோழர் குறவஞ்சி
- ராமாயண உரைநடை

❖ **நூற்குறிப்பு**

- **காண்டம் 6, படலம் 118, பாடல்கள் 10569**
- கம்பராமயணத்தின் பெரும்பிரிவு **காண்டம், உட்பிரிவு படலம்**.
- இராமயணம், இதிகாசம் இரண்டனுள் முதலானது **கம்பராமயணம்**
- **வழிநூல்** என அழைக்கப்படுவது இராமாயணம்.
- தமிழ் இலக்கியத்திலேயே **பெரிய நூல்**.
- சோழர் காலத்தில் இயற்றப்பட்ட **வைணவ சமய நூல்**.

❖ **சிறப்புப்பெயர்கள்**

- கம்பராமயணத்திலுள்ள காண்டங்கள் ஆறு : **பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்**.
- வடமொழியில் வால்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தைத் தழுவி தமிழில் கவிப்பேரரசர் **கம்பர் இயற்றியது கம்பராமயணமாகும்**.
- கம்பர் நூலுக்கு இட்ட பெயர் **இராமாவதாரம்**.
- **கம்பராமாயணத்தின்** சிறப்பு கருதியும், **திருக்குறளின்** பெருமை கருதியும் இதனை **தமிழுக்கு கதி** என்று கூறியவர் செல்வக் **கேசவராய முதலியார்**.
- பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணத்தை முழுமையாகப் பெற்றது **இராமாயணம்**.
- கம்பநாடாகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு **96.**
- வால்மீகி முனிவர் இயற்றிய இராமகாதைக்கு **ஆதிகாவியம் என்று பெயர்.**
- வடமொழியில் இயற்றிய **வால்மீகிக்கு ஆதிகவி** என்று பெயர்.
- கம்பராமயணம் மேலைநாட்டு காவியங்களான **இலியட், ஒடிசி** ஆகியவற்றிற்கு இணையாகக் கருதப்படுகிறது.
- ஏழாவது காண்டமாகிய **உத்திர காண்டத்தைப் பாடியவர் ஒட்டக்கூத்தர்**.
- கம்பர் இயற்றிய இராமகாதையை மூல நூலாகக் கொண்டு **அருணாச்சலக் கவிராயர் இராமநாடகக் கீர்த்தனையை** இயற்றினார்.

**கம்பராமயணத்தின் காண்டங்கள், படலங்கள்**

| | | |
|---|---|---|
| ➢ பாலகாண்டம் | - 23 படலங்கள் | |
| ➢ அயோத்தியா காண்டம் | - 13 படலங்கள் | |
| ➢ ஆரண்ய காண்டம் | - 13 படலங்கள் | |
| ➢ கிட்கிந்தா காண்டம் | - 16 படலங்கள் | |
| ➢ சுந்தர காண்டம் | - 14 படலங்கள் | |
| ➢ யுத்த காண்டம் | - 39 படலங்கள் (பெரிய படலம்) | |
| ➢ உத்திர காண்டம் | - 11 படலங்கள் (ஒட்டக்கூத்தர் இயற்றியது) | |

❖ <u>**முக்கிய கதாப்பாத்திரங்கள்**</u>

| | |
|---|---|
| • தீராக்காதலன் - குகன்<br>• யாதினும் இனிய நண்பன் - குகன்<br>• நாவாய் வேட்டுவன் - குகன்<br>• நாய் அடியேன் - குகன்<br>• ஆயிரம் அம்பிக்கு நாயகன் - குகன்<br>• ஐந்தாவது சகோதரன் - குகன்<br>• தாயினும் நல்லான் - குகன்<br>• வேடர் தலைவன் - குகன்<br>• கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான் - குகன்<br>• ஒழுங்கு தேனொடு மீன் உபகாரத்தான் - குகன்<br>• தள்ளிரிய பெருநீதியோன் - பரதன்<br>• சொல்லின் செல்வன் - அனுமன் | • சிறியன சிந்தியாதான் - வாலி<br>• பொய்யுரையாப் புண்ணியன் - வாலி<br>• இடைபேரா இளையோன் - கும்பகர்ணன்<br>• எண்ணினும் பெரியவன் - கும்பகர்ணன்<br>• மூரிய தேர்வலன் - சுமத்திரன்<br>• கதிரோன் மைந்தன் - சுக்ரீவன்<br>• மறனிழுக்கா மானமுடையான் - அதிகாயன்<br>• பழி வளர்க்கும் செல்வி - கைகேயி<br>• படரெல்லாம் படைத்தவள் - கைகேயி<br>• தீண்டளும் தெய்வக்கற்பினாள் - கைகேயி<br>• தனிச் சுமத்திரைச்சிங்கம் - இலட்சுமணன் |

❖ <u>**சுந்தர காண்டம்**</u>

➢ <u>**ஐந்தாம் காண்டம்**</u> : சுந்தர காண்டம்

➢ <u>**அனுமன்**</u> :

○வாயுவின் மைந்தன்.

○சுக்ரீவனுக்கு அமைச்சனாக விளங்கினான்.

○<u>**சுந்தரர்**</u> என்ற பெயருண்டு.

○<u>**சுந்தர காண்டம்**</u> : அனுமனைப் பற்றி அதிகம் கூறும் காண்டம்

○சிறிய திருவடி என்றழைக்கப்படுவர்

.

- அனுமன் இராமனை முதலில் **கிட்கிந்தையில்** சந்தித்தார்.
- கம்பராமாயணத்தில் **அனுமன்** வீரத்தில் சிறந்தவன்.
- **சொல்லின் செல்வன்**, **அறத்தின் நாயகனாகவும்**, படைக்கப்பட்டுள்ளார்.
- இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் காட்டியது **கணையாழி**.
- சீதாபிராட்டி தன்னை மீட்டுச்செல்ல வேண்டி விதித்த காலம் **ஒரு திங்கள்**.
- **பாரதியார்**:
  - ○யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் எங்கும் காணோம் என்றவர்
  - ○"கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்தும்"
  - ○கல்வியில் சிறந்த தமிழ்நாடு புகழ்க்கம்பன் பிறந்த தமிழ்நாடு

- **கால்டுவெல்** : உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்து விட்டாலும், திருக்குறளும் கம்பன் காவியமும் இருந்தால் போதும் அதனை மீண்டும் புதுப்பித்துவிடலாம் என்றவர்.
- **இரகுவம்சம்** : "கற்றர் கலீயில் பெரிதாம் தமிழ்க் கம்ப நாடன்".
- **வீரசோழிய உரை** : "கம்பனுரிடைப் பெருமை யுளது"
- **சோழமண்டல சதகம்** : "பூணிலாவும் கம்பனலம் பொலியும் தமிழால்"
- **வைரமுத்து** : "தமிழ் என்னும் அமிழ் கடலின் தரை வரைக்கும் போனவனே"
- **பாகவதம்** : கம்பன்மொழி, செந்தமிழின் கவித்திறத்தின் காட்சி
- **கம்பராமயணம்** : "தமிழரது கவித்துவத்தின் பேரெல்லை".
- **கம்பர் கூற்று** : சிந்தாமணிக் கடலில் சிறிது மொண்டு கொண்டேன்.
- **சோழனைப் பாத்து கம்பர் கூறியது**:
  - ○"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
    உன்னை அறிந்தோ தமிழை ஒதீனேன்"
- **நாமக்கல் கவிஞர்:**
  - ○"எண்ணி எண்ணித் திட்டம் போட்டு எழுதினானோ
    எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டினானோ

- **கண்ணதாசன்** :
  - ○"பத்தாயிரம் கவிதையை முத்தாக அள்ளித்தந்த
    சத்தான கம்பனுக்கு ஈடு இன்னும் வித்தாகவில்லை என்று பாடு"

- **மு. ராகவையங்கார் கூற்று** :
  - ○வடமொழி தென்மொழிக் காப்பிய நயங்களாகிய பொன் மையில் தம் சித்திர கோலைத் தோய்த்துத் தம் காப்பிய ஒவியத்தைக் கம்பநாடார் வரைந்தார்.

- **வ.வே.சு. ஐயர் கூற்று** :
  - ○கம்பராமயணம் இலியாது, ஏனீது, துறக்க, நீக்கம், மகாபாரதம் முதலானவற்றை வெல்லும் சிறப்புடையது என்பது மட்டுமின்றி வடமொழியில் வால்மீகி எழுதிய இராமணயத்தையே மிஞ்சும் சுவையுடைய காப்பியமாகும்.

- **வ.வே.சு.ஐயர் கூற்று** :
  - ○"கம்பநாடன் கவிதையைப் போல்
    கற்றோர்க்கு இதயம் கனியாதே"

❖ <u>மேற்கோள்</u>

- ''உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்''
- ''தோள்கண்டார் தோளே கண்டார்''
- ''ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ?''- **பரதனை பற்றி குகன் கூறியது**
- ''வெல்லுமோ தீவினை அறத்தை தீமையால்''
- ''இன்று போய் நாளை வா'' **- இராமன் இராவணனை பார்த்துக் கூறியது**
- ''நன்றி என்பவோ வஞ்சித்த நாய்அவன்
  நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ?''- **அனுமனிடம் சீதை கூறியது.**
- ''இன்று வீழ்ந்தனன் என்னவும் என்அயல்
  நிற்றி யோஇளை யோய்ஒரு நீஎன்றாள்'' - **இலக்குவனிடம் சீதை கூறியது**
- ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினான்''
  ''இருவரும் மாறிபுக்கு இதயம் எய்தினர்''**இராமன், -சீதா சந்திப்பு பற்றி கம்பர் கூறியது.**

- தேவ - அசுரப் போர் **<u>18 வருடம்</u>** நடந்தது. இராமாயணப் போர் **<u>18 மாதம் நடந்தது</u>**.
- ராமாயணத்தைக் கேலியாகச் சித்தரித்துக் **<u>"கீமாயணம்"</u>** என்னும் பெயரில் **<u>M.R. ராதா</u>** நடத்தினார்.
- சடையப்ப வள்ளலுக்குச் **<u>சாராமன்</u>** என்ற பெயரும் உண்டு.

❖ **<u>வால்மீகி ராமாயணத்திற்கும் கம்பராமயணத்திற்கும் உள்ள ஒப்பீடு:</u>**

- வால்மீகி எழுதாத **<u>இரணியன் வதைப் படலமும்</u>** கம்பராமயணத்தின் மிகச்சிறந்த பகுதியாகக் கருதப்படுகிறது. மாயாசனகப் படலமும் வான்மீகியில் இல்லாதது.
- தமிழ் மரபிற்கு ஏற்ப கம்பர் தாரை வாலியின் இறப்பிற்கு பின் விதவையாகவே வாழ்வதாக குரங்கினத்திலும் **<u>"ஒருத்தனுக்கு ஒருத்தி"</u>** என்னும் தமிழ்ப் பண்பாடு மாறாமல் தாரை ஒழுகுவதாகக் கம்பர் சித்தரித்துள்ளார்.

<u>உழவின் சிறப்பு பற்றி கம்பர்</u>

மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை
ஆழி தரித்தே அருளும்கை - சூழ்வினையை
நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடுழி
காக்கும்கை காராளர் கை - **<u>கம்பர்</u>**

❖ <u>பொருள்</u>

- உழவ! நின் கைகள், ஏர் பிடித்து உழவு செய்கின்ற கைகளாம்: வேற்படையைக் கையிலே பிடித்துள்ள மன்னர்களும் ஆர்வத்தோடு நோக்குகின்ற கைகளாம்: மோதிரம் அணிந்துள்ள உன் கைகள், வருபவர்க்கு எல்லாம் வரையாது வழங்கும் கைகளாம். ஏழை மக்களின் வறுமைத் துன்பமாகிய பசிப்பிணியைப் போக்கும் கைகளாம்: என்றும் **<u>உழும் தொழிலே உலகில் நிலையானது:</u>** வேளாண் செய்வோரின் கைகளே என்றென்றும் உயிர்களுக்கு அடைக்கலம் அளிக்கின்ற கைகளாம்.

**அயோத்தியில் பாயும் சரயூ நதி பற்றி கம்பர்**

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தோறும் வயல்கள் தோறும்

ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே - கம்பர்

- **சரயு ஆறு** மகரந்தப்பொடிகளைச் சிந்தும் சோலைகளை வளப்படுத்தியும்: சண்பக வளங்களைக் கடந்தும், அரும்புகள் விரிந்திருக்கின்ற குளங்களை நிரப்பியும், புதுமனைமிக்க நீர்நிலைகள் வழியாகவும், குருக்கத்தி வேலியிட்ட கமுகந்தோட்டங்களில் பாய்ந்தும், வயல்களைச் செழிக்கச் செய்தும் பாய்ந்து செல்வது, உடலினுள் உயிர் புகுந்து பரவுவதனைப் போன்று விளங்குகிறது.

# இயல் - 4
# எட்டுத்தொகை

| வ.எண் | நூல் | பாடல் எண்ணிக்கை | எல்லை | பொருள் | தொகுத்தவர் | தொகுப்பித்தவர் | கடவுள் வாழ்த்து பாடியவர் | தெய்வம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நற்றிணை | 400 | 9 – 12 | அகம் | தெரிய வில்லை | பன்னாடு தந்த பாணடியன் மாறன் வழுதி | பாரதம் பாடிய பெருந் தேவனார் | திருமா ல் |
| 2 | குறுந்தொை<br>க | 400 | 4 – 8 | அகம் | பூரிக்கோ | தெரியவில்லை | பாரதம் பாடிய பெருந் தேவனார் | முருக ன் |
| 3 | ஐங்குறு நூறு | 500 | 3 – 6 | அகம் | புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் | யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை | பாரதம் பாடிய பெருந் தேவனார் | சிவன் |
| 4 | பதிற்றுப்பத்<br>து | 80 | - | புறம் | தெரிய வில்லை | தெரியவில்லை | கிடைக்க வில்லை | - |
| 5 | பரிபாடல் | 22 | 25 – 400 | அகம் - புறம் | தெரிய வில்லை | தெரியவில்லை | - | - |
| 6 | கலித்தொை<br>க | 150 | - | அகம் | நல்லந் துவனார் | தெரியவில்லை | நல்லந் துவனார் | சிவன் |
| 7 | அகநானூறு | 400 | 13 – 31 | அகம் | உருத்திர சன்மனார் | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி | பாரதம் பாடிய பெருந் தேவனார் | சிவன் |
| 8 | புறநானூறு | 400 | - | புறம் | தெரிய வில்லை | தெரியவில்லை | பாரதம் பாடிய பெருந் தேவனார் | சிவன் |

## எட்டுத்தொகை

நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூ(று),
ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல்,
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம், புறம் என்(று)
இத்திறத்த எட்டுத்தொகை

- மேற்கணக்கு நூலில் முதன் முதலாக தொகுக்கப்பட்டது **எட்டுத்தொகை**.
- **எண்பெருந்தொகை** என்ற பெயரும் உண்டு.
- எட்டுத்தொகை நூல்களுள் **நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு** ஐந்தும் அகப்பொருள் பற்றியவை.
- எட்டுத்தொகையுள் புறநூல்கள் இரண்டு: **பதிற்றுப்பத்து, புறநானூறு**.
- எட்டுத்தொகையில் அகமும் புறமும் கலந்த நூல் ஒன்று **பரிபாடல்**
- எட்டுத்தொகையுள் பாடலால் பெயர் பெற்ற நூல் இரண்டு **கலித்தொகை (கலிப்பா), பரிபாடல் (பரிபாட்டு)**
- கலித்தொகையின் வேறுபெயர்கள் கலி, குறுங்கலி
- எட்டுத்தொகையுள் காலத்தால் முந்தியது **புறநானூறு**
- எட்டுத்தொகையுள் காலத்தால் பிந்திய நூல்கள் **கலித்தொகையும், பரிபாடலும் ஆகும்**.

- சங்க காலப்புலவர்கள் **உள்ளுறை உவமை, இறைச்சி** என்னும் இலக்கிய உத்திகளை மிகச்சிறப்பாகக் கையாண்டுள்ளனர்.
- இவை இரண்டையும் குறிப்புபொருள் உத்தி என அழைக்கலாம்.
- **வேறு பெயர்கள் :** அகநானூறு - அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை,
- புறநானூறு - புறம், புறப்பாட்டு, புறம்புநானூறு.
- இந்நூல் பழங்கால மக்களின் வாழ்க்கை முறை, மன்னர்களின் வீரம், ஆட்சிமுறை, புராணச்செய்தி, போர்முறை பற்றிக் கூறுகிறது
- எட்டுத் தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு **- ஆசிரியப்பாவால் ஆனது**
- கலிப்பாவால் ஆனது **- கலித்தொகை**
- பரிபாட்டு வகையால் ஆனது **- பரிபாடல்**

| வ.எண். | நூல் | பாடல் அடி அளவு | பொருள் | பாடியவர் | பாட்டுடைத் தலைவன் | சிறப்புப் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருமுருகாற்றுப் படை | 317 | புறம் | நக்கீரர் | முருகன் | புலவராற்றுப் படை, முருகு |
| 2 | பொருநராற்றுப் படை | 248 | புறம் | முடத்தாமக் கண்ணியார் | கரிகால் பெருவளத்தான் | - |
| 3 | சிறுபாணாற்றுப் படை | 269 | புறம் | இடை கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் | ஒய்மா நாட்டு நல்லிக்கோடன் | - |
| 4 | பெரும்பாணாற்று ப் படை | 500 | புறம் | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | தொண்டைமான் இளந்திரையன் | பாணாற்றுப்படை சமுதாயப் பாட்டு |
| 5 | முல்லைப்பாட்டு | 103 | அகம் | காவரிப்பூம்பட்டின த்து பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் | இல்லை | நெஞ்சாற்றுப் படை |
| 6 | மதுரைக்காஞ்சி | 782 | புறம் | மாங்குடி மருதனார் | தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் | மாநகர் பாட்டு |
| 7 | நெடுநல்வாடை | 188 | அகம் (அ) புறம் | நக்கீரர் | தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டிய் நெடுஞ்செழியன் | முல்லை திரிந்த பாலைப் பாடல் |
| 8 | குறிஞ்சிப்பாட்டு | 261 | அகம் | கபிலர் | இல்லை | பெருங் குறிஞ்சி |
| 9 | பட்டினப்பாலை | 301 | அகம் | கடியலூர் உருத்திரங் கண்ணனார் | இல்லை | வஞ்சி நெடும்பாட்டு |
| 10 | மலைபடுகடாம் | 583 | புறம் | இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிக னார் | செங்கன் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் | கூத்தராற்றுப் படை |

## பத்துப்பாட்டு

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வள மதுரைக்காஞ்சி – மருவினிய
கோல நெடுநெல்வாடை கோல் குறிஞ்சி
பட்டினப்பாலை கடாத்தொடும் பத்து

முருகாறு செவ்வேள்: பொருநாறு பாலை
கரிகால்: நெடுஞ்செழியன் காஞ்சி - இருபாணும்
நல்லியக் கோடன் இளந்திரையன் நன்னன்கடாம்
கல்வித் தலைவர் கருது

முருகு நல்நாடையும் கீரன்: முடத்தாமக் கண்ணி பொருந்
மருவு பாண்: பாலை உருத்திரங் கண்ணன் மகிழ்சிறு பான்
புரியுநத் தத்தன்: மருதம் நன் காஞ்சி: நப்பூதன் முல்லை
வருமெங் கபிலன் குறிஞ்சி; மலைகடாம் கௌசிகனே

- இ∴து **<u>அகவற்பாக்களால்</u>** அமைந்த பத்துப்பாடல்களின் கோவையாகும்.
- பத்துப்பாட்டில் அகநூல்கள் - <u>3 (முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை)</u>
- பத்துப்பாட்டில் புற நூல்கள் - <u>6 (திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம்)</u>
- பத்துப்பாட்டில் **<u>அகம்புறம்</u>** கொண்ட நூல் <u>நெடுநெல்வாடை</u>.
- பத்துப்பாட்டை எழுதிய புலவர்கள் **<u>8 பேர்</u>**
- இரண்டு பாடல்களைப் பாடியவர்கள் - **<u>2 பேர்</u>**
- காலத்தால் (அ) பருவத்தால் பெயர் பெற்ற நூல் **<u>நெடுநெல்வாடை</u>**
- பத்துப்பாட்டில் காலத்தால் பிந்திய நூல் - **<u>திருமுருகாற்றுப்படை.</u>**
- **<u>ஆற்றுப்படை நூல்கள் - 5</u>**: ஆற்றுப்படை நூல்களில் சிறியது – <u>பொருநராற்றுப்படை (248</u> அடி), ஆற்றுப்படை நூல்களில் **<u>பெரியது – மலைபடுகடாம் (583 அடி)</u>**.
- பத்துப்பாட்டில் சிறிய நூல் **<u>முல்லைப்பாட்டு (103 அடி)</u>**, பத்துப்பாட்டில் பெரிய நூல் **<u>மதுரைக்காஞ்சி (782 அடி)</u>**
- பத்துப்பாட்டு முழுவதற்கும் உரை எழுதியவர் - **<u>நச்சினார்க்கினியர்</u>**
- நச்சினார்க்கினியர் உரையுடன் முதன் முதலாகப் பதிப்பித்தவர் **<u>உ.வே. சாமிநாத ஐயர் - 1889</u>**.
- நக்கீரர் - **<u>திருமுருகாற்றுப்படை, நெடுநெல்வாடை</u>** போன்ற பத்துப்பாட்டு நூல்களைப் பாடியுள்ளார்.
- கடியலூர் உருத்திரங்கண்ணனர் - **<u>பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை</u>** போன்ற பத்துப்பாட்டு நூல்களைப் பாடியுள்ளார்.
- பத்துப்பாட்டு என்ற தொடரை முதன்முதலில் பயன்படுத்தியவர் - நன்னூலின் உரையாசிரியர் **<u>மயிலைநாதர்</u>**
- பட்டினப்பாலைக்கும், முல்லைப்பாட்டுக்கும் **<u>மறைமலையடிகள்</u>** சிறந்த ஆராய்ச்சி உரை எழுதியுள்ளார்

ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து
சான்றோர் உரைத்த தண்தமிழ் தெரியல்
ஒருபத்து பாட்டும் - **நச்சினார்க்கினியர்**

பத்துப்பாட்டு ஆதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கு இசையாக இலக்கிணமில்
கற்பனையே - **மனோன்மணியம் சுந்தரனார்**

❖ **ஆற்றுப்படை நூல்கள் - 5**

- **திருமுருகாற்றுப்படை**
- **பொருநராற்றுப்படை**
- **சிறுபாணாற்றுப்படை**
- **பெரும்பாணாற்றுப்படை**
- **மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)**

- பத்துப்பாட்டில் செம்பாதி இடத்தைப் பெறுவது ஆற்றுப்படை நூல்கள்
- ஆற்றுப்படை நூல்களில் பயின்று வரும் திணை பாடாண் திணை

❖ **புறப்பொருள் நூல் - 1**
- **மதுரைக்காஞ்சி**

❖ **அகப்பொருள் நூல்கள்**

- **முல்லைப்பாட்டு (நெஞ்சாற்றுப்படை)**
- **குறிஞ்சிப்பாட்டு**
- **பட்டினப்பாலை**

❖ **அகப்புறம் சேர்ந்த நூல் - 1**
- **நெடுநெல்வாடை**.

- பத்துப்பாட்டுள் ஐந்திணைகளும் அமைந்துள்ளது.
  - முல்லைப்பாட்டு : **முல்லை நிலம்** : மதுரைக் காஞ்சி : **மருத நிலம்** : நெடுநல்வாடை : **பாலை ஒழுக்கம்**
  - குறிஞ்சிப்பாட்டு : **குறிஞ்சி நிலம்** : மலைபடுகடாம் : **குறிஞ்சி நிலம்**
  - பட்டினப்பாலை : **நெய்தல் நிலமும் பாலைநிலமும்**.

❖ **கடையேழு வள்ளல்கள்**

- பேகன் - **மயிலுக்குப் போர்வை அளித்தவன்**
- பாரி - **முல்லைக்குத் தேர் தந்தவன்**
- காரி - **இரவலர்க்குக் குதிரைகள் நல்கியவன்**
- ஆய் - **நீலமணியையும், நாகம் தந்த கலிங்கத்தையும் சிவனுக்கு அளித்தவன்**
- அதியமான் - **ஔவைக்கு நெல்லிக்கனி தந்தவன்**
- நள்ளி - **தன் மனத்தில் உள்ளத்தை மறைக்காமல் கூறி** நாடி வந்தவர்களையும் நகைக்கச் செய்பவன். பிறர்க்குப் பொருள்களை வாரி வழங்குபவன்

- ஓரி - <u>**இரவலர்க்கு நாடுகளைப் பரிசிலாக நல்கியவன்**</u>

# நற்றிணை

❖ <u>**நூற்குறிப்பு**</u>

- நூல் : நன்மை+திணை = நல்+திணை = நற்றிணை
- அடைமொழி : <u>**நல் என்ற அடைமொழி உடைய நூல்.**</u>
- பாடல்கள் : <u>**400 பாடல்கள்**</u> (234 வது பாடல் கிடைக்கவில்லை)
- பாடியப் புலவர்கள் : <u>**175 சங்ககால புலவர்களால்**</u> பாடப்பெற்றது.
- திணை : <u>**அகத்திணை**</u>
- அடியவரையறை : <u>**9 அடி முதல் 12 அடி**</u> வரை கொண்டவை
- கடவுள் : <u>**திருமால்**</u>
- கடவுள் வாழ்த்து : <u>**பாரதம் பாடிய பெருந்தேவனார்**</u>
- பா வகை : <u>**ஆசிரியப்பாவால்**</u> ஆனது
- தொகுத்தவர் : தொகுத்த புலவர் பெயர் தெரியவில்லை
- தொகுப்பித்தவன் : <u>**பன்னாடு தந்த மாறன் வழுதி**</u> என்னும் பாண்டிய மன்னன்
- நற்றிணைக்கு உரை எழுதியவர் : பின்னந்தூர் நாராயணசாமி, ஔவை. சு. துரைச்சாமி பிள்ளை
- விளக்கமான பேருரை : <u>**ஔவை சு.துரைசாமிப்பிள்ளை**</u>
- உரையுடன் பதிப்பித்தவர் : <u>**பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்**</u> (1914)
- பாடிய பெண்புலவர்கள் : <u>**9 பேர்**</u>. தொடரால் பெயர் பெற்ற புலவர்கள் (7).
- எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக அமையப்பெற்றது **நற்றிணை**.
- அவை அகப்பொருள் பற்றிய பாடல்கள் எனினும் அவற்றுள் புறப்பொருள் செய்திகளும் தமிழக வரலாற்றுக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன வரும்புமுதிர்பு
நன்மா னுழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களங் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப!
இனமணி நெடுந்தேர் பாக னியக்கச்
செலீஇய சேறி யாயின் இவளே
வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே.

\- **நக்கண்ணையார்**

- **திணை** : நெய்தல்
- **துறை** : இது புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாயது.

❖ <u>**துறை விளக்கம்**</u>

- பகற்குறியில் தலைவன் தலைவியைச் சந்தித்துச் செல்கின்றான். அப்பொழுது தோழி தலைவனை நோக்கி, ‘‘இவ்வாறு செல்வாயானால் மீண்டும் நீ வருவதற்குள் தலைவி இறந்து விடுவாள்.
- ஆதலால் அதற்கு ஏற்றது செய்’’ என வரைவு (மணஞ்செய்து கொள்வது) தோன்றக் கூறுவது வரைவு கடாதலாகும்.

❖ **ஆசிரியர் குறிப்பு**

- நற்றிணையின் ஆசிரியர் : **மிளைகிழான் நல்வேட்டனார்**
- நற்றிணையில் **4 பாடல்களையும், குறுந்தொகையில் 1 பாடலையும்** பாடியவர்
- ''அரிகால் மாறிய அங்கண் அகல் வயல் மறுகால் உழுத ஈரச்செறுவின்'' - இவருடைய இந்தப் பாடல்.
- இப்பாடலின் ஆசிரியர் **நக்கண்ணையார்**. இவர் பெண்பாற்புலவர் ஆவார். **'பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை'** யெனவும் கூறப்படுவார்.
- உறையூர் வீரை வேண்மான் வெளியன் தித்தன் என்னும் சோழ மன்னனின் மகன் **பேரவைக் கோப் பெருநற்கிள்ளி** ஆவான் தன் தந்தையொடு பகைத்துக் கொண்டு நாடிழந்து, வறுமையில் புல்லரிசிக் கூழுண்டு வருந்தியிருந்தான்.
- அந்நிலையிலும் ஆமூர் மல்லன் என்பானைப் போரில் வெற்றி கொள்கின்றான். அவன் வீரத்தைக் கண்ட நக்கண்ணையார் அவ்வரசனைத் தாம் மணந்து கொள்ள விரும்பியதாக அவர் பாடிய புறநானூற்று 83, 84, 85 ஆம் பாடல்கள் மூலம் அறிகிறோம்.

**தோழி தலைமகனிடம் கூறியது**

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனோடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்லவம் செல்வமென் பதுவே.

- **மிளைகிழான் நல்வேட்டனார்**

❖ **பொருள்**

- உழவர் நெற்கதிர்களை அறுவடை செய்த பின்னர், அகன்ற அழகிய வயலை மறுபடியும் பயிர் செய்ய உழுதனர்: பனையோலைப் பெட்டியில் விதை கொண்டு சென்று ஈரமுள்ள அந்நிலத்தில் விதைத்தனர்.
- பின்னர், அவர்கள் அங்குள்ள நீர்நிலைகளில் பல்வகை மீன்களைப் பிடித்து அப்பெட்டியில் கொண்டு வருகின்ற புதுவருவாயினை உடைய மருத நிலத்தலைவனே! அரசால் சிறப்பு செய்யப் பெறுதலும், யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் அவ்வரசர் முன்னிலையில் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று அ∴து அவரவர் தம் முன்வினைப் பயனே.
- தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வமெனச் சான்றோர் கூறுவர்.

❖ **நற்றிணை செய்திகள்**

- வணிகாடகளுக்குக் கொடுக்கும் பட்டம் **காவிதி, எட்டி**
- **அன்னி, மிஞிலி இருவரும் சிற்றரசர்கள்**
- **தொண்டி**– சேரநாட்டுத் துறைமுகம்
- **கொற்கை**– பாண்டி நாட்டுத் துறைமுகம்
- **மாந்தை**– சேரநாட்டுக் கடற்கரை ஊர்
- **மருகூர்ப்பட்டினம்** - பாண்டி நாட்டுக் கடற்கரை நகரம்

- மருத்துவன் அறவோன் எனப்பட்டான்
- கணியன் என்பதற்குச் **சோதிடன்** என்று பொருள்
- இந்நூலுக்கு முதலில் உரை எழுதியவர் பின்னத்தூர் **நாராயணசாமி ஐயர்.**

**நற்றிணைத் துளிகள்**

"நீரின்று அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நம்நயந்து அருளி"– கபிலர்

"நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார் தம் ஒட்டினோர் திறத்தே"– கபிலர்

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்"

# குறுந்தொகை

❖ **நூற்குறிப்பு**

- நூல் : **குறுந்தொகை**
- அடைமொழி : **"நல்ல" என்ற அடைமொழி உடைய நூல்**.
- பாடல்கள் : **401 + 1**
- அடிவரையறை : **4 அடி முதல் 8 அடி வரை** கொண்டவை. அடி அளவில் பெயர் பெற்ற நூல்
- பா வகை : **ஆசிரியப்பாவால் ஆனது**
- திணை : **அகத்திணை**
- தொகுத்தவர் : **பூரிக்கோ**.
- தொகுப்பித்தவன் : **தொகுப்பித்தவன் பெயர் தெரியவில்லை**
- முதலில் பதிப்பித்தவர் : **சி.வை.தாமோதரம் பிள்ளை. உ.வே.சா. உரை -1937**
- முதலில் வெளியிட்டவர் : **சௌரிப் பெருமாள் அரங்கனார்**
- 
- பாடியப் புலவர்கள் : **203 சங்ககால** புலவர்களால் பாடப்பெற்றது
- சிறப்பு : **எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக தொகுக்கப்பட்ட நூல்**
- கடவுள் வாழ்த்து : **பாரதம் பாடிய பெருந்தேவனார்.**
- கடவுள் : **முருகன்**
- **குறுமை + தொகை = குறுந்தொகை. இ∴து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று**.
- ஐவகை நிலத்திலும் தமிழரின் **இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர், மாண்பு, அறவுணர்வு** முதலியவற்றை அறிய உதவும் நூல் குறுந்தொகை.
- **ஏழு வள்ளல்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்** அடங்கியுள்ளது. உரிப் பொருளால் சிறந்த நூல்.
- தொகை நூல்களில் உரையாசிரியர்களால் அதிகம் மேற்கோள் காட்டப்பெற்ற நூல் - **குறுந்தொகை**
- மொத்த பெண் புலவர்கள் - **13 பேர்**
- அதிகபாடல் பாடியவர் - **கபிலர் (28 பாடல்கள்)**

- அதிக பாடல் பாடிய பெண் புலவர்கள் - **<u>நக்கண்ணையார் (8 பாடல்கள்) வெள்ளி வீதியார் (8 பாடல்கள்)</u>**
- உவமையால் பெயர் பெற்ற புலவர்கள் : **18** அதில் சிலர் : அணிலாடு முன்றிலார், காக்கை பாடினியார், செம்புலப் பெயல் நீரார், குப்பைக் கோழியார், மீனேறி தூண்டிலார்.

யாரு மில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா என்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே
- **கபிலர்**

- **திணை** : குறிஞ்சி
- **துறை** : வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

❖ **<u>விளக்கம்</u>**

- தலைவன் நெடுங்காலம் தலைவியைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலந்தாழ்த்த அதனால் வருந்திய தலைவி ‘‘தலைவர் கருணைகொண்டு என்னைத் திருமணம் செய்து கொண்டாலன்றி எனக்கு உதவியாகச் சான்று கூறுவார் வேறு ஒருவரும் இலர்’’ என்று தோழியிடம் கூறியது.

❖ **<u>ஆசிரியர் குறிப்பு</u>**

- **<u>கபிலர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரிலே</u>** அந்தணர் மரபில் பிறந்தவர். கடைச்சங்கப் புலவர்கள் **<u>பரணர், இடைக்காடர், ஔவை</u>** ஆகியோரிடம் நட்பு பூண்டவர். கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய **<u>பாரியை உயிர்த் தோழனாகக்</u>** கொண்டவர். பாரியின் அவைக்களப் புலவராகவும் விளங்கியவர். **<u>குறிஞ்சித் திணைப் பாடல்கள்</u>** பாடுவதில் வல்லவர். ‘கபிலரது பாட்டு’ என்னும் தொடரே இவர் பாட்டுத் திறனுக்குச் சான்றாகும்.

- கபிலரை ‘‘வாய்மொழி கபிலன்’’ என்று நக்கீரரும்,‘‘நல்லிசைக் கபிலன்’’ என்று பெருங்**<u>குன்றூர்க் கிழாரும்</u>**‘‘**<u>வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்</u>**’’ என்று பொருத்தில் இளங்கீரனாரும்,? ‘‘புலனழுக்கற்ற அந்தணாளன்’’‘‘**<u>பொய்யா நாவிற் கபிலன்</u>**’’ என மாறோக்கத்து **<u>நப்பசலையாரும்</u>** புகழ்ந்துள்ளனர்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே - **தேவகுலத்தார்**

❖ **<u>பொருள்</u>**

- மலைப்பகுதியிலுள்ள குறிஞ்சியின் கரிய கொம்புகளில் குறிஞ்சுப்பூக்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களிலிருந்து வண்டுகள் தேனைத் திரட்டுவதற்கு இடமாகிய நாட்டை உடையவன் தலைவன்.
- அத்தலைவனோடு ‘‘யான் கொண்ட நட்பானது நிலத்தைவிடப் பெரியது: வானத்தைவிட உயர்ந்தது. கடலைவிட ஆழமானது’’ எனத் தலைவி கூறுகிறாள்.
- **ஏனாதி** : படைத்தலைவருள் சிறந்தவருக்குக்கொடுக்கும் பட்டம்.

- **வண்ணக்கன்** : நாணயங்களைப் பரிசோதிக்கும் அரசாங்க அலுவலன்.
- **வள்ளுவன்** : அரசாங்க உள்படு கருமத்தலைவன்
- **நன்னன்** : **பெண்கொலை புரிந்த மன்னன்**.
- **அகுதை (அ∴தை)** : ஒரு **சிற்றரசன்**.
- அதியமானின் : **தகடூர் (தருமபுரி)**
- **வல்வில் ஓரி** : கொல்லிமலைத் தலைவன்
- **பாரி** : பறம்புமலைத் தலைவன்
- **நல்லி** : ஓய்மாநாடு (திண்டிவனம்)
- **காரி** : கோடை மலை
- **ஆய்** : பொதிகைமலை
- **திருமுடிக்காரி** : திருக்கோவலூரையும் முள்ளூரையும் ஆண்டவன் மலையமான்
- **திருமாவளவன்:** கரிகாலனின் வேறு பெயர்

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ'' - **இறையனார்**

''வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிரே''
- **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

''செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''
- **செம்புலப் பெயல் நீரார்**

''இம்மைமாறி மறுமை ஆயினும்
நீயா கியர்என் கணவனை
யானா கியர் நின் நெஞ்சு நேர்பவளே''
- **அம்மூவனார்**

''சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கு இவள்
உயர்தவச் சிறிது காமமோ பெரிதே''
- **கபிலர்**

''உள்ளது சிதைப்போர் ஊர் எனப் படாஅர்''
- **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

''பெருந்தோள் குறுமகள் சிறுமெல் ஆகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலம் யானே''
- **நக்கீரர்**

''ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்''
- **உ காய்க்குடிகிழார்**

''ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கின்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்

வெண்ணெய் உணங்கல் போல''

- **வெள்ளி வீதியார்**

''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே.. நாடனொடு நட்பே''

- **தேவகுலத்தார்**

''கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை போல''

- **ஆலங்குடி வங்கனார்**

''காமம் ஒழிவதாயினும். எம்
தொடர்பு தேயுமோ நின்வயினான'' - **கபிலர்**

## ஐங்குறு நூறு

❖ **நூற்குறிப்பு**

- நூல் : **ஐந்து + குறுமை + நூறு**
- பாடல்கள் : **500 + 1**
- பா வகை : **ஆசிரியப்பாவால் ஆனது**
- அடிவரையறை : **3 அடி முதல் 6 அடி** வரை கொண்டவை அடி அளவால் பெயர் பெற்ற நூல்
- திணை : **அகத்திணை**
- தொகுத்தவர் : **கூடலூர்க் கிழார்**
- தொகுப்பித்தவர் : **சேர மன்னன் யானைக்கட்சேய் மாந்தருஞ்சேரல் இரும்பொறை**.
- குறிஞ்சி - **கபிலர்**
- முல்லை - **பேயனார்**
- மருதம் - **ஓரம்போகியார்**
- நெய்தல் - **அம்மூவனார்**,
- பாலை - **ஓதலாந்தையார்**
- முதலில் பதிப்பித்தவர் : **உ.வே. சாமிநாத ஐயர்**
- **உரை** : ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை எழுதியுள்ளார்.
- பாடியப் புலவர்கள் : **5 சங்ககால புலவர்களால்** பாடப் பெற்றது
- **சிறப்பு** : அடி அளவால் சிறிய **எட்டுத்தொகை நூல்**
- கடவுள் வாழ்த்து : **பாரதம் பாடிய பெருந்தேவனார்**
- கடவுள் : **சிவன்**

- ஒவ்வொரு திணையிலும் உள்ள **நூறு பாடல்களும் பத்துப் பத்துப் பாடல்களாகத்** தனித்தனித் தலைப்புகளின் கீழ்ப் பகுத்தமைக்கப் பட்டுள்ளன.
- ஒவ்வொரு பத்துப்பாடலின் தலைப்பும் பத்து என்றே முடிகிறது

''மருதமோ ரம்போகி நெய்த லம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய

பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு''

❖ **<u>மறுதரவுப் பத்து</u>**

➢ 'மறுதரவுப் பத்து' என்பது உடன் போக்கு நிகழ்த்திய தலைவனும் தலைவியும் மீண்டு வருதற்கண் நிகழும் கூற்றைப் பாடு பொருளாகக் கொண்ட பத்துப்பாடல்களின் தொகுதி என்பதாம்.

''மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே.''

**-ஓதலாந்தையார்**

➢ **<u>திணை</u>** : பாலை
➢ **<u>துறை</u>** : நற்றாய் கூற்று
➢ இது உடன் போகிய தலைமகள் மீண்டுவருதற் பொருட்டுத் தாய் காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்தது.

❖ **<u>துறை விளக்கம்</u>**

➢ தலைவி தலைவனோடு உடன்போக்குச் சென்று விட்டதை அறிந்த பின்னர், தலைவி மீது பேரன்பு கொண்ட நற்றாய் தன் மகள் தன் கணவனொடு மீண்டும் தன் இல்லத்திற்கே வருதல் வேண்டும் என்றும், அவ்வாறு திரும்பி வந்தால் அவர்களுக்குத் திருமணம் செய்வித்துக் கண்குளிரக் காணல் வேண்டும் என்றும் விரும்புகின்றாள்.
➢ அதனால் தலைவனும் தலைவியும் திரும்ப வருமாறு நன்னிமித்தமாக (சகுனமாக)க் கரையும்படி காக்கையை இரந்து வேண்டுகிறாள்.
➢ அவ்வாறு கரைந்தால் காக்கைக்குப் 'பலிக்கடன்' கொடுப்பதாகவும் கூறுகின்றாள்.
➢ இவ்வாறு தான் வேண்டியவை நிறைவேறுமானால் இன்னது படைப்பேன் என்று கடவுளரையோ, பிறவற்றையோ வேண்டிக்கோடல் பராய்க்கடன் உரைத்தல் என்று அழைப்பர். காக்கை கரைந்தால் விருந்தினரோ, உறவினரோ வீட்டிற்கு வருவர் என்பது நம் மக்களிடையே உள்ள நம்பிக்கையாகும்.

❖ **<u>ஆசிரியர் குறிப்பு</u>**

➢ **<u>ஆந்தையார்</u>** என்பது இவர் இயற்பெயர்.
➢ **<u>ஓதலூர் என்னும் ஊரினராதலின்</u>** ஓதலாந்தையார் என்று அழைக்கப்பட்டனர்.
➢ ஓதலூர் மேலைக் கடற்கரைப் பகுதியில் **<u>குட்டநாட்டில்</u>** உள்ளது. இவர் பாட்டுகளில் பெரும்பாலன **<u>பாலைத் திணைப்</u>** பாடல்களாகும். ஆந்தை என்பது **<u>ஆதன் தந்தை</u>** என்பதன் **<u>மரூஉ</u>** மொழியாகும்.

➢ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் வரிசை முறையில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு திணையும் **<u>100 பாடல்களைக்</u>** கொண்டுள்ளது.
➢ சங்க இலக்கியத்துள் **<u>உள்ளுறையும், இறைச்சியும்</u>** மிகுதியாக இடம்பெற்றுள்ள நூல் ஐங்குறுநூறு

- சங்ககாலத்தில் நடைபெறும் **<u>இந்திரவிழா</u>** குறித்து கூறும் தொகைநூல் - **<u>ஐங்குறுநூறு</u>**
- வேட்கைப்பத்து, தெய்யோப்பத்து, களவன் பத்து – (சொல்லாட்சியால் பெயர் பெறுவன)
- பருவங்கண்டு கிழத்து உரைத்துபத்து, தோழி வற்புறுத்தி பத்து, செவிலிகூற்றுப் பத்து -துறையால் பெயர்.
- குரக்குப் பத்து, கேழற்பத்து, குயிற்பத்து, கிள்ளைப்பத்து – (கருப்பொருளால் பெயர் பெறுவன)
- தொண்டிப்பத்து - அந்தாதி தொடையில் அமைந்துள்ளது.
- நெய்தல் திணை பாடல்களில் பேதைப் பருவ **<u>மகளிரின் விளையாட்டுகள்</u>** பற்றிய கூறப்பட்டுள்ளன.
- எட்டுதொகை அகத்திணை நூல்களுள் இவ்வாறு திணைக்கு ஒரு புலவர் வீதம் பாடும் நூல்கள் **<u>ஐங்குறுநூறும், கலித்தொகை</u>** ஆகிய இரண்டு மட்டுமே.
- நெய்தல் திணையில் உள்ள நொண்டிப் **<u>பத்து அந்தாதி</u>** முறையில் அமைக்கப்பட்டது.
- **<u>நடுநாட் கங்குல என்பது நள்ளிரவு</u>**
- சங்க கால மக்கள் **<u>பகல் 12 மணியிலிருந்து</u>** நாளைக் கணக்கிட்டனர்.
- பாண்டில் என்பது கால் நிறுத்திய **<u>பெரிய விளக்கு</u>**.
- **<u>வண்டல் பாவை</u>** என்பது பெண்கள் ஏழு அல்லது ஒன்பது பேர் கைக்கோத்து ஆடும் ஆட்டம்.
- பஞ்சுரம் என்பது **<u>பாலைப் பண்ணைக்</u>** குறிக்கும்.
- எழுத்துடை நடுகல் என்பது போரில் இறந்த வீரனுக்காக எடுக்கப்பட்ட, அவன் பெயரும் புகழும் எழுதிய **<u>நடுகல்</u>**
- ஆண்களுக்கு **<u>வலக்கண்</u>** துடித்தால் நல்லது
- பெண்களுக்கு **<u>இடக்கண்</u>** துடித்தால் நல்லது

# பதிற்றுப்பத்து

- பத்து + பத்து = பத்து + இன் + இற்று + பத்து = பதிற்றுப்பத்து.
- ஒத்த **இரும்புக் கடலை** என்ற அடைமொழியோடு அழைக்கப்படும் நூல் பதிற்றுப்பத்து
- இது **சேர மரபு வேந்தர்களைப்** பற்றி மட்டுமே கூறுகிறது.
- பதிற்றுப்பத்தில் உள்ள மொத்தம் **பாடல் நூறு**. அவற்றில் முதல் பத்தும், கடைசி பத்தும் கிடைக்கவில்லை அவற்றில் **80 பாடல்கள்** கிடைத்துள்ளன.
- பதிற்றுப்பத்து பாடல்கள் அனைத்தும் பாடாண் திணைப்பாடல்கள் ஆகும்.
- முதலில் பதிப்பித்தவர் **உ.வே. சாமிநாத ஐயர் 1904**.
- உரை எழுதியவர் **சு. துரைசாமி பிள்ளை**
- சங்க நூல்களில் அனைத்துப் பாடலும் பாடல் **தொடரால் பெயர் பெற்ற நூல் பதிற்றுப்பத்து** மட்டுமே ஆகும்.

| பாடல் | பாடியவர் | பாடப்பெற்றவர் |
|---|---|---|
| **முதல் பத்து** | **தெரியவில்லை** | உதயனஞ்சேரல் முதல் பத்து கிடைக்கவில்லை |
| **இரண்டாம் பத்து** | **குமட்டூர்க்கண்ணனார்** | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் |
| **மூன்றாம் பத்து** | **பாலைக்கௌதமனார்** | பல்யானைச் செல்கெழுகுட்டுவன் |
| **நான்காம் பத்து** | **காப்பியாற்றுக்காப்பியனார்** | களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரன் |
| **ஐந்தாம் பத்து** | **பரணர்** | கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் |
| **ஆறாம் பத்து** | **காக்கைப்பாடினியார் (பெண்) நச்செல்லையார்** | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் |
| **ஏழாம் பத்து** | **கபிலர்** | செல்வக்கடுங்கோ வாழியாதன் |
| **எட்டாம் பத்து** | **அரிசில்கிழார்** | தகடூர் எறிந்த பெருஞ்சேரலாதன் |
| **ஒன்பதாம் பத்து** | **பெருங்குன்றூர்க்கிழார்** | குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை |
| **பத்தாம் பத்து** | **தெரியவில்லை** | யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் பத்தாம் பத்து கிடைக்கவில்லை |

- எரிஎள்ளு அன்ன எனத் தொடங்கும் **நச்சினார்கினியரின்** உரைமேற்கோள் பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்து என்பர் என அழைப்பர்.
- மாற்றார் மகளிரின் கூந்தலை அறுத்துக் கயிறாகத் திரித்து யானைகளை கட்டி இழுக்கும் வழக்கம் சொல்லப்பட்டுள்ளது.
- இது முதல் மூன்று நூற்றாண்டுகளில் ஆண்ட சேர வேந்தர் பரம்பரைச் செய்திகளை தெரிவிப்பது.
- ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு (இசை) ஆகியன குறிக்கப்பட்டுள்ளன.
- ஈழத்துப்புலவர் சு. அருளம்பாலனார் சிறந்த தொரு ஆய்வுரையை எழுதியுள்ளார்.
- **நான்காம் பத்து அந்தாதித் தொடையால்** ஆனது. இது பிற்கால அந்தாதிகளுக்கு முன்னோடி எனலாம்.
- வஞ்சி மாநகரின் சிறப்பும், நீர்நிலைகள் நெடுஞ்சாலைகள் பராமரிக்கப்படும் நிலையும் பதிற்றுப்பத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும் சேரநாட்டின் **தொண்டி, நறவு, மாந்தை** ஆகிய நகரங்கள் பற்றியும் அறிய முடிகிறது.
- **கடம்பர்** என்பவர்கள் சேரநாட்டுக் கடற் கொள்ளையர்கள்.
- அதியமானுக்கு **அதிகன்** என்ற பெயரும் உண்டு.
- சேர நாட்டுத் துறைமுகம் **தொண்டி**
- யவன யாத்திரிகர்கள் தொண்டியைத் **துண்டிஸ்** என்று குறித்துள்ளனர்.

# பரிபாடல்

- **"ஓங்கு"** என்ற அடைமொழியுடைய நூல். எட்டுத்தொகை நூல்களில் **அகமும், புறமும் கலந்த** நூல்
- அடி அளவால் **பெரிய நூல் (25 – 400 அடி).**
- மொத்தப்பாடல்கள் **70 கிடைத்தவை 22 பாடல்கள்**.
- சங்ககால நூல்களில் மிகவும் பிற்ப்பட்டது **பரிபாடல்**.
- பாடிய புலவர்கள் **13 பேர்**. உரை எழுதியவர் **பரிமேழலகர்**.
- பதிப்பித்தவர் **உ.வே.சா 1918**
- இது ஒரு இசை கெழுமிய பாவாகும்.
- இசையுடன் பாடக்கூடிய பொருட்கலவை நூல் **பரிபாடல்**
- **கொச்சகம், சரிதகம்** முதலிய கலிப்பா உறுப்புகளைப் பெற்று வரும்.
- பரிபாடல் 4-வது பகுதி கடுவன் இளவெயினனாரலால் பாடப்பட்டதாகும்.
- 5-ம் பகுதி செவ்வேள் மேல் பாடப்பட்டதாகும்.
- பா வகையால் பெயர்பெற்ற நூல் பரிபாடல்
- தமிழின் முதல் **இசைப்பாடல் பரிபாடல்**.
- எட்டுத்தொகை நூல்களுள் **பாண்டியர்களைப் பற்றி மட்டும்** கூறும் நூல்கள் இரண்டு
    - பரிபாடல்
    - கலித்தொகை.
- **பாண்டிய நாட்டைச்** சிறப்பிக்கவே பாடப்பட்ட நூல் பரிபாடல்.
- வையைப் பற்றிய பாடல்கள் அகம் சார்ந்தன.
- கடவுள் வாழ்த்துப் பற்றிய பாடல்கள் புறம் சார்ந்தன.
- எட்டுத்தொகையில் பரிபாடல் இலக்கியம் புறத்திணைப் பாடல்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. ஆகையால், பரிபாடல் **அகத்திற்கும், புறத்திற்கும்** பொதுவான நூலாகிறது.
- **முருகன், திருமால்** பற்றிய புராணக் கதைகள் நிறைந்துள்ளன
- **புதுப்புனல் விழாவும், மார்கழி நீராட்டு விழாவும்** சிறப்பாக கூறப்பட்டு உள்ளன.
- **இயற்கைக் காட்சிகள்** சிறப்பிடம் பெற்றுள்ளன.
- **வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா** ஆகிய நால்வகை பாக்களால் ஆனது.
- **தெய்வங்கள் அடிப்படையில்** பகுப்பு முறை அமைந்த ஒரே தொகை நூல் இதுவாகும்.
- **அறுவகைச்** சமயங்கள்
    - சைவம் சாக்தம் - சக்தி
    - காணாபத்யம் - கணபதி
    - கௌமரம் - குமரன்
    - வைணவம் - திருமால்
    - சௌரம் - சூரியன்

- இவற்றுள் சாக்தம் (காடுகள்), கௌமாரம் (செல்லேள்) வைணவம் என்னும் மூன்று சமயங்களை மட்டும் பரிபாடல் எடுத்துரைக்கின்றது.
    - **திருமால்** : 8 பாடல்கள்
    - **முருகன்** : 31 பாடல்கள்
    - **காளி** : 1 பாடல்
    - **வையை** : 26 பாடல்கள்
    - **மதுரை** : 4 பாடல்கள்

- ஆனால், இப்பொழுது, **<u>திருமாலுக்கு ஆறும், முருகனுக்கு எட்டும், வையைக்கு எட்டும் என்று 22</u>** பாடல்களே கிடைத்துள்ளன.
- இந்நூலின் பாடல்களின் காணப்படும் இசைகளின் பெயர் :- **<u>பாலையாழ், நோதிரம், காந்தாரம்.</u>**
- எட்டுத்தொகை நூல்களில் பரிபாடலில் மட்டுமே நான், போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன.
- ''கினறு'' என்ற காலம் காட்டும் இடைநிலை **முதன் முதலில் பரிபாடலில்தான்** காணப்படுகிறது.
- பதிற்றுப்பத்தில் பண் இல்லை
- பரிபாடலில் தாளம் இல்லை
- ஒன்பது எனும் எண்ணுக்கு உரிய சொல் **தொண்டு** என்பதனை பரிபாடல் பதிவு செய்துள்ளது

# கலித்தொகை

ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரரைப் பொறுத்தல்

- <u>நல்லந்துவனார்</u>

❖ <u>பொருள்</u>

- இல்வாழ்வென்பது : வருந்தி **<u>வந்தோர்க்கு உதவுதல்</u>**.
- பாதுகாப்பதென்பது : அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்.
- பண்பெனப்படுவது : சான்றொோர் வழி **<u>அறிந்து ஒழுகுதல்</u>**.
- அன்பெனப்படுவது : சுற்றம் **<u>தழுவி வாழ்தல்</u>**.
- அறிவெனப்படுவது : **<u>அறிவிலார் சொல் பொறுத்த</u>**ல்.
- நெருக்கம் எனப்படுவது : **<u>கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்</u>**.
- நிறைவு எனப்படுவது : பிறர் அறியாது மறைபொருள் காத்தல்,
- நீதிமுறைமை எனப்படுவது : ஒருபால் கோடாது ஒறுத்தல்.
- பொறுமை எனப்படுவது : **<u>இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளல்</u>**.

❖ <u>ஆசிரியர் குறிப்பு</u>

- நல்லந்துவனார் சங்க காலத்தவர். இவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. இவர் நெய்தல் கலியில் **<u>முப்பத்துமூன்று பாடல்களைப்</u>** பாடியுள்ளார்.
- **<u>கலித்தொகையைத் தொகுத்தவரும் இவரே</u>** என்பர்.

❖ **நூற்குறிப்பு**

- **எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள்.**
- எட்டுத்தொகையுள் ஒன்றான **கலித்தொகை, கலிப்பாக்களால்** அமைந்தது: இது, நாடகப் பாங்கில் அமைந்துள்ளது: இசையோடு பாடுவதற்கேற்றது.
- கலித்தொகையில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்து **நூற்றைம்பது பாடல்கள்** உள்ளன.
- கலித்தொகை **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை** என்னும் ஐம்பெரும்பிரிவுகளை உடையது.
- **கலிப்பா துள்ளல்** ஓசையைக் கொண்டது.
- நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி,**நெய்தற்கலியாகும்**.
- இதனை இயற்றியவர் **நல்லந்துவனார்**.
- இப்பாடல்களைப் படிக்கும்பொழுது, கருத்தாழமும் ஓசையின்பமும் நம் உள்ளத்தினைக் கொள்ளை கொள்ளும். எனவே, இதனைத் தமிழ்சான்றோர் **'கற்றறிந்தார் ஏத்தும் கலி'** எனச் சிறப்பித்துக் கூறுவர்.

❖ **செய்திகள்**

- ஏறு தழுவுதல் பற்றிக் கூறும் நூல் கலித்தொகை.
- பாரதக் கதைகளை மிகுதியும் கூறும் நூல் கலித்தொகை.
- புராணக் கதைகளை மிகுதியும் கூறும் நூல் பரிபாடல்.
- நாடகம் போன்று காட்சி அமைப்புகளைக் கொண்ட நூல் கலித்தொகை.

# அகநானூறு

❖ **நூற்குறிப்பு**

- நூல் : அகம் + நான்கு + நூறு
- அடைமொழி : **நெடுந்தொகை** என்ற அடைமொழி உடைய நூல்.
- பாடல்கள் : **400 பாடல்கள்**
- கடவுள் வாழ்த்து : **ஆசிரியப்பாவில்** ஆனது
- கடவுள் வாழ்த்த : **ஆசிரியப்பாவில்** ஆனது
- பாடியப் புலவர்கள் : **145 சங்ககால** புலவர்களால் பாடப்பெற்றது
- அடிவரையறை : **13 அடி முதல் 31 அடி** வரை கொண்டவை
- கடவுள் வாழ்த்த : **ஆசிரியப்பாவில்** ஆனது
- தொகுத்தவர் : **உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மர்**
- தொகுப்பித்தவர் : **பாண்டிய உக்கிரப்பெருவழுதி**.
- உரை எழுதியவர் : **நா.மு. வேங்கடசாமிநாட்டார்**
- வரலாற்றுச் செய்திகளை அதிகமாக கூறும் நூல்
- இந்நூல் **களிற்றியானைநிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை** என்னும் மூன்று பிரிவுகளையுடையது.
- கற்பக்கனிகள் போன்ற இச்செய்யுள்கள் காலத்தை வென்று என்றென்றும் நிலைபெறும்.
- **குடவோலை** முறை பற்றிக் கூறும் நூல் **அகநானூறு**.
- பண்டைய தமிழர் திருமணம் குறித்தும், **பங்குனி விழா** குறித்தும், குறிப்பிடும் நூல் **அகநானூறு**.

| | | |
|---|---|---|
| 1, 3, 5, 7, 9 | : ஒற்றைப்படை | : பாலைத்திணை (200) |
| 2, 8 | : இரண்டு, எட்டு | : குறிஞ்சித்திணை (80) |
| 4, 14 | : நாலெல்லாம் | : முல்லைத்திணை (40) |
| 6, 16 | : ஆறெல்லாம் | : மருதத்திணை (40) |
| 10, 20 | : பத்தெல்லாம் | : நெய்தல் திணை (40) |

| | | |
|---|---|---|
| **களிற்றினையானை நிரை** | : | 120 |
| **மணிமிடை பவளம்** | : | 180 |
| **நித்திலக்கோவை** | : | 100 |

பல்லிதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப
பாணன் வந்தனன் தூதே: நீயும்
நெடுந்தேர் ஊர்மதி வலவ

அருந்துய ருடையள் அவளென விரும்பிப்
புல்லார் புரவி வில்லிரைந்து பூட்டி
முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே
- **மதுரை.. மள்ளனார்**

- திணை பாலைத்திணை, துறை செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.
- **<u>மணிமிடை பவளத்தில்</u>** உள்ள முல்லைத் திணைப் பாடல் பாடப்பகுதியில் வந்துள்ளது.
- இப்பாடலை இயற்றியவர் **<u>மதுரை. மள்ளனார் ஆவார்</u>**.
- **திணை** : முல்லைத்திணை, **துறை** : வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகனுக்குச் சொல்லியது.

பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன
சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை
பகலுறை முதுமரம் புலம்பப் போகி
முகைவாய் திறந்த நகைவாய் முல்லை
கடிமகள் கதுப்பின் நாறிக் கொடிமிசை
வண்டினந் தவிர்க்குந் தண்பதக் காலை
வரினும் வாரா ராயினும் ஆண்டவர்க்கு
இனிதுகொல் வழி தோழி யெனத்தன்
பல்லிதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப
அருந்துய ருடையள் அவளென விரும்பிப்
பாணன் வந்தனன் தூதே: நீயும்
புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி
நெடுந்தேர் ஊர்மதி வலவ
முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே.
- **மதுரை. மள்ளனார்**

❖ **<u>செய்திகள்</u>**

- **<u>குடவோலைத்</u>** தேர்தல் குறித்துக் கூறும் நூல் **<u>அகநானூறு</u>**
- திங்கள் **<u>ரோகிணியுடன்</u>** கூடிய **<u>நன்நாளில் திருமணம்</u>** நடந்தது.
- கந்து என்பது வழிபாட்டிற்குரிய **<u>மரத்தூண்.</u>**
- **<u>பங்குனி விழா</u>** நடைபெற்றது.

# புறநானூறு

- புறம் + நான்கு + நூறு = புறநானூறு.
- புறப்பொருள் பற்றிய **400 பாடல்கள்**.
- பாடிய புலவர்கள் 158 என்பர்.
- காலம் **கி.பி. 2-ம் நூற்றாண்டாகும்**.
- புறநானூற்றில் **11 திணைகளும், 65 துறைகளும்** குறிப்பிடப்பட்டுள்ளன.
- கடவுள் - சிவன்
- புறநானூற்றுப்பாடல்கள் சிலவற்றை ஜி.யூ.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- **சிறப்புப் பெயர்கள்** : தமிழர் வாழ்வியல் **கருவூலம், புறம், புறப்பாட்டு**
- அறம், பொருள், வீடு என்ற மூன்றையும் குறிப்பிடும் நூல் புறநானூறு.
- புறம் என்பது : **புறம் செய்தலும், மறம் செய்தலும் ஆ**கும்.
- புறநானூற்றில் பெண்கள் **உடன்கட்டை ஏறியதாகவும், கைம்மை நோன்பு இருந்ததாகவும்** செய்திகள் உள்ளன

**புறநானூற்றில் குறிப்பிடப்படும் குறுநில மன்னர்கள்**

- பழனியை ஆண்ட பேகன்
- பறம்பு மலையை ஆண்ட பாரி
- கதிரை மலையை ஆண்ட அதியமான்
- கொல்லி மலையை ஆண்ட குமணன் (ஓரி)
- பொதியை மலையை ஆண்ட ஆய்
- கோடை மலையை ஆண்ட கடிய நெடுவேட்டுவன்

அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே

- **பரணர்**

**திணை : பாடாண்** **துறை - இயன்மொழி**

## ❖ பாடியோர்:

- இப்பாடலை இயற்றியவர் **பரணர்**. இவர் **வரலாற்றுக் குறிப்புகளைப்** பாடல்களுள் பொதிந்து வைத்துப் பாடுவதில் வல்லவர்.
- கபிலர் போல மிக்க புகழுடன் வாழந்தவர்: கபிலபரணர் என்னும் தொடரால் இது விளங்கும். இவர் பதிற்றுப்பத்தில் **ஐந்தாம்பத்து** பாடிக் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றவர்.

## ❖ கொடைமடம்

- **இல்லாதவர்க்கும், உள்ளவர்க்கும், இரந்தவர்க்கும்**, **இரவாதவர்க்கும்** பாகுபாடின்றி வரையாது கொடுத்தல்.

❖ **படைமடம்**

- **வீரர் அல்லாதார் மேலும், முதுகிட்டார் மேலும்**, புண்பட்டார் மேலும், மூத்தார் இளையார் மேலும் செல்லுதல்.

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

- **நரிவெரூஉத் தலையார்**

**திணை : பொதுவியல்**
**துறை : பொருண்மொழிக் காஞ்சி**

❖ **திணை விளக்கம்**

- வெட்சி முதல் பாடாண் இறுதியாகத் தொல்காப்பியனார் கூறும் புறத்திணைகளுள் கூறப்படாத செய்திகளையும, அத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

❖ **துறை விளக்கம்**

- துறவியராகிய மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல்பை உணர்த்தியது 'பொருண்மொழிக் காஞ்சி' என்னும் துறையாகும்.

"எரிந்த லங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள்மொழிந் தன்று"

- **புறப்பொருள் வெண்பாமாலை**

❖ **அடையாளப் பூ**

- சேரன் - போந்தை (பனை)
- சோழன் - ஆர் (அத்தி)
- பாண்டியன் - வேம்பு

❖ **அடையாளக் கொடி**

- சேரன் - வில்
- சோழன் - புலி
- பாண்டியன் - கெண்டை (மீன்)

❖ **தலைநகரம்**

- சேரன் - வஞ்சி
- சோழன் - உறையூர் (உறைந்தை), தஞ்சாவூர் (தஞ்சை),
- உறையூருக்குக் 'கோழி' என்ற பெயரும் உண்டு
- பாண்டியன் - மதுரை
- பல்லவன் - மாமல்லபுரம் (மல்லை)

❖ **வேறுபெயர்கள்**

- சேரன் - குட்டுவன், கடுங்கோ, வானவன்,
    - வானவரம்பன், கோதை, கோக்கோதை,
    - இரும்பொறை
- சோழன் - **வளவன், கிள்ளி, செம்பியன்**
- பாண்டியன் - **செழியன், மாறன், வழுதி, மீனவன், தமிழர்பெருமான், கவுரியர்**

❖ **சூளுரைகள்**

- என் குடிமக்கள் கொடுங்கோலன் என்று என்னைத் தூற்றட்டும், மாங்குடி மருதன் உள்ளிட்ட புலவர்கள் என் நாட்டைப் பாடாது ஒழியட்டும், இல்லை என்று இரப்போர்க்கு இல்லை என்று கூறும் வறுமை அடைவேனாக – என்று சூளுரைத்தவன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.
- என் மனைவியை விட்டு நீங்குவேனாக, அவைக் களத்தில் தகுதி அற்றவனை வைத்துக் கொடுங்கோல் செய்வேனாக, நட்பினைத் தப்பியவன் ஆக, பாண்டியர் அரச மரபிலிருந்து மாறிப் பிறப்பேனாக – என்று சூளுரைத்தவன் பூதப்பாண்டியன்.
- பொதுப்பெண்டிர் மார்பில் என் மாலை துவள்வதாக என்று சூளுரைத்தவன் சோழன் நலங்கிள்ளி.

❖ **புறநானூறு சிறப்புச்செய்திகள்**

- **பெண்களின் வீரத்தை**க் கூறும் துறை **மூதின் முல்லை**.
- தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப்பட்டது.
- **12 பாண்டியர்களையும், 18 சேரர்களையும், 18 சோழர்களையும், 18 வேளிர்களையும்** பற்றி கூறுகிறது.
- **முதுமக்கள் தாழியில் புதைத்தல், நடுகல் வழிபாடு, கைம்மை நோற்றல், உடன்கட்டை ஏறல் போன்ற சமூக பழக்க வழக்கங்கள் புறநானூற்றில்** சுட்டப்பட்டுள்ளன.
- வெண்ணிப் பறந்தலை, வாகைப்பறந்தலை, கழுமலம், தகடூர் தலையாலங்கானம், காணப்பேரெயில் முதலிய **போர்க்களங்கள் புறநானூற்றில்** சுட்டப்பட்டுள்ளன.
- முதல் 266 பாடல்களுக்குப் பழைய உரைக் கண்டு, **1894 –ம் ஆண்டு உ.வே. சா** இதனை முதலில் பதிப்பித்தார்.
- **ஔவை சு. துரைசாமிப்பிள்ளை** நூல் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்
- ஔவையார், பாரிமகளிர், வெண்ணிக்குயத்தியார், ஒக்கூர் மாசாத்தியார், காவற்பெண்டு ஆதிமந்தியார், பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு உள்ளிட்ட 15 பெண்பாற் புலவர்கள் இதில் பாடல் பாடியுள்ளனர்.
- கணவனை இழந்த கைம்மை மகளிரின் தொழில் ஆதாரமாக நூல்நூற்றல் இருந்ததை புறநானூறு காட்டுகின்றது

❖ **பிற**

- கரிகாலன் போர்செய்த இடம் **வெண்ணிப் பறந்தலை**
- நெடுஞ்செழியன் போர் செய்த இடம் **தலையாங் கானம்**
- சேரநாட்டு ஊர் **மாந்தை**
- நந்தர்களின் ஊர் **பாடலிபுத்திரம்**
- பல்யானை செல்கெழு குட்டுவனுக்குக்குரியது**உம்பர்க்காடு**
- பாரதப் போரில் சோறு கொடுத்தவன் **உதியஞ்சேரல்**
- சோழர்கள் மௌரியர்களைத் தோற்கடித்த **இடம் வல்லம்**

பாரிக்கு உரியது பரம்புமலை
பேகனுக்கு உரியது பழனிமலை
ஓரிக்கு உரியது கொல்லிமலை
ஆய்க்கு உரியது பொதிகைமலை
அதியமானுக்கு உரியது தகடூர்
நன்னனுக்கு உரியது நவிரமலை

# பத்துப்பாட்டு

## திருமுருகாற்றுப்படை

- பாடியவர் - **நக்கீர**ர்.
- பாட்டுடைத்தலைவன் - **முருகன்**
- **317 அடிகளைக்** கொண்டது.
- **முருகு, புலவராற்றுப்படை** என அழைக்கப்படுகிறது.
- பாவகை: **ஆசிரியப்பா**
- சங்ககாலத்தில் பக்தியுணர்ச்சி நிரம்பிய முழு நூல்.
- சைவ சமய **11-ம் திருமுறையில்** இடம் பெற்ற நூல் திருமுருகாற்றுப்படை
- ஆற்றுப்படை நூல்கள் **பரிசில் பெறச் செல்வோரால்** பெயர் பெறும். திருமுருகாற்றுப்படை மட்டும் **பரிசில் கொடுப்பேனால்** (முருகன்) பெயர் பெற்றது.
- முருகாற்றுப்படை என்ற தொடருக்கு முருகனிடம் ஆற்றுப்படுத்தல் என்னும் பொருள்: ஆற்றுப்படை என்ற இலக்கணத்திற்கே மாறானதாகும். எனவே, அன்பர்களிடம் அன்பைப் பெற முருகனை ஆற்றுப்படுத்துதல் என்பதே பொருத்தமானதாகும் என **டாக்டர் துரையரங்கசாமி** அவர்கள் கூறுகிறார்கள்.
- ஆற்றுப்படைக்கு இலக்கணம் **தொல்காப்பியத்தில்** உள்ளது.

❖ **முருகனின் அறுபடை வீடுகள்**

- திருப்பரங்குன்றம்
- திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)
- திருஆவினன் குடி (பழனி)
- திருவேரகம் (சுவாமி மலை)
- பழமுதிர்ச்சோலை
- திருத்தணி
- பத்துப்பாடடில் காலத்தால் பிந்திய நூல்.

## பொருநராற்றுப்படை

- பாடியவர் - **முடத்தாமக்கண்ணியார்**
- பாட்டுடைத் தலைவன் - **கரிகாலன்**.
- 248 அடிகள் உடையது.
- பாவகை : **வஞ்சியடிகள் கலந்த ஆசிரியப்பா**
- ஒருவரைப் போல **வேடமிட்டு பாடுநர் பொருநர்** எனப்படுவர்.

- பொருநர் பலவகையினர்
  1. ஏர்க்களம் பாடுநர்
  2. போர்க்களம் பாடுநர்
  3. பரணி பாடுநர்

- பொருநராற்றுப்படை **போர்களம் பாடும் பொருநரைப்** பற்றிக் கூறுகின்றது.
- கரிகாலனின் **வெண்ணிப் பறந்தலை போர்** வெற்றி, சோழ நாட்டின் வளம், காவிரியின் நீர் வளம், வயல் வளம் முதலானவற்றை முடத்தாமக் கண்ணியார் பாடியுள்ளார்.
- கரிகாலன் வெற்றிச்சிற்ப்பினைப் பாடுகிறது.
- விருந்தினரை எதிர் கொள்ளும் பொழுதும் விடை கொடுத்து அனுப்பும் பொழுதும் அவருடன் சேர்ந்து ஏழடி நடந்து விருந்தினரைச் சிறப்பித்தல் சங்ககாலப் பண்பாட்டுவழிப் பழக்கமாக இருந்தது.
- பரிசில் பெற விழைந்த பொருநன் ஒருவனைப் பரிசில் பெற்று வந்த பொருநன் ஆற்றுப்படுத்துவதாக இதன் பொருள் அமைந்துள்ளது.
- இசைக் கலைஞர் தலைவன் **ஏழின் கிழவன்** (ஏழிசைத் தலைவன்) எனப்பட்டான்.
- விருந்தினர் பிரியும்போது **கரிகாலன் ஏழடி நடந்து வந்து** வழியனுப்புவான்.

## சிறுபாணாற்றுப்படை

- பாடியவர் இடைக்கழி நாட்டு : **நல்லூர் நத்தத்தனார்**
- பாட்டுடைத்தலைவன் : **ஓய்மா நாட்டு நல்லியக்கோடான்**
- சிறுபாணாற்றுப்படை **269 அடிகள் கொண்டது**
- **ஆசிரியப்பாவால்** அமைந்ததாகும்.
- மூவேந்தர்களின் தலைநகரங்களின் சிறப்புகளைப் பற்றி பாடும் நூல்.
- **கடையேழு வள்ளல்கள்** பற்றிக் கூறும் நூல்.
- யாழ்ப்பாணர்கள் சிறுபாணர்கள், பெரும்பாணர்கள் என இருவகைப்படுவர். பெரும்பாணனை ஆற்றுப்படுத்துவது –**பெரும்பாணாற்றுப்** படை. சிறும்பாணனை ஆற்றுப்படுத்துவது –**சிறும்பாணாற்றுப் படை**
- பண்பாடுவோர் பாணர். இவர் - இசைப்பாணர், யாழ்ப்பாணர், பிச்சை ஏற்றுப் பிழைக்கும் மண்டைப் பாணர் என 3 வகைப்படுவர்.
- சிறிய யாழை வாசிப்போரைச் சிறுபாணரென்றும், பெரிய யாழை வாசிப்போரைப் பெரும்பாணரென்றும் பாகுபாடு செய்வர்.
- பழந்தமிழ் நாட்டு மக்களின் கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றை உலகுக்கு எடுத்துரைக்கும் சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டில் மூன்றாவதாக உள்ள நூலாகும்.
- ஏழு வள்ளல்களுக்குப் பிறகு அவரது வள்ளன்மையைத் தான் ஒருவனே சுமந்து கொண்டவன் நல்லியக்கோடன். இதனை **எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்** என்று சிறுபாணாற்றுப்படை கூறியுள்ளது.

## பெரும்பாணாற்றுப்படை

- பாடியவர் - **உருத்திரங்கண்ணனார்**,
- பாட்டுடைத்தலைவன் - **தொண்டைமான் இளந்திரையன்**
- இந்நூல் **பாணாறு, சமுதாயப்பாட்டு** என்று அழைக்கப்படுகிறது.
- இந்நூல் **500 அடிகளை** உடையது.

- பாவகை: **<u>ஆசிரியப்பா</u>**
- பட்டினப்பாலையைப் பற்றி பாடப்பட்ட நூல்.
- சிறு பாணாற்றுப்படையைக் காட்டிலும் அதிக அடிகளைப் பெற்றிருப்பதாலும், பெரும்பாணாற்றுப்படை எனப்படுகிறது.
- சங்க காலத்திலேயே மிகப்பெரிய அளவில் கலங்கரை விளக்கம் **<u>நீர்ப்பாயல்துறையில்</u>** அமைக்கப்பட்டிருந்தது.
- காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய இளந்திரையனின் ஆட்சிச் சிறப்பை எடுத்துரைக்கிறது.
- தமிழரின் வணிக அறிவியல், தொழில் நுட்ப ஆற்றல்களை இனம் காட்டுகிறது.
- ஊர்பெயர்களை மருவி வழங்குவது, தமிழகத்து ஊர்களைப் பற்றிய அடையாளச் சாயலை மாற்றி விடுவதற்கு வழி வகுத்து விடுகிறது.
- **<u>திருவெ.்.கா என்பது காஞ்சிபுரம்</u>**
- **<u>நீர்ப்பெயற்று என்ற நகரம்</u>** பற்றி இந்நூல் கூறுகிறது.

## மலைபடுகடாம்

- மலை>**<u>யானை</u>**: ஓசை> **<u>கடாம்</u>**
- பாடியவர் - **<u>பெருங்கௌசிகனார்</u>**
- பாட்டுடைத்தலைவன் - செங்கண் மாத்து வேல் **<u>நன்னன் சேய் நன்னன்</u>**
- இந்நூலில் **<u>583 பாடல்கள் உள்ளன</u>**.
- பாவகை: **<u>ஆசிரியப்பா</u>**
- இந்நூல் **<u>கூத்தராற்றுப்படை</u>** என அழைக்கப்படுகிறது,
- மலைக்கு **<u>யானையை</u>** உவமித்து மலையில் உண்டாகும் **<u>ஓசைகளைக்</u>** கடாம் என்று சிறப்பித்தமையால் இந்நூல் மலைபடுகடாம் எனப் பெயர் பெற்றது.
- கடாம் - யானையின் வாயில் இருந்து ஒழுகும் நீர்: (ஆகுபெயராய் இங்கு ஓசையை உணர்த்திற்று)
- நன்னன் - **<u>பெண்கொலை புரிந்த மன்னன்</u>**, நன்னன் ஆண்ட பகுதி : **<u>ஜவ்வாது மலை</u>**
- பண்டைய (கூத்தருடைய) இசைக்கருவிகள், **<u>தலைவாழ்வு பற்றி மிகுதியாக கூறும் நூல்</u>**.
- கூத்தன் ஒருவன் பிற கூத்தர்களை ஆற்றுப்படுத்தலால் கூத்தாற்றுப்படை எனப்பட்டது.
- தமிழரின் இசைக் கருவியான **யாழின்** உறுப்புகளைக் கூத்தராற்றுப்படையின் மூலம் அறியலாம்.
- சிவனைக் '**<u>காரி உண்டிக் கடவுள்</u>**' என்று கூறுகிறது.
- **<u>தோல் படுக்கை</u>** பற்றிக் கூறுகிறது.

## மதுரைக்காஞ்சி

- பாடியவர் - **<u>மாங்குடி மருதனார்</u>**. **<u>நீண்ட அடிகளைக் கொண்ட நூல் (782).</u>**
- பாட்டுடைத்தலைவன் - தலையானங்காணத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்
- **பா வகை** : **<u>வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பா</u>**.

➢ வேறுபெயர்கள் : **பெருகுவள மதுரைக்காஞ்சி, மாநகர் பாட்டு, ஒருநாள் நிகழ்வு மைய இலக்கியம்.**
➢ **வீடு பேற்றிற்கு** முதன்மை கொடுக்கும் நூல். **நாளங்காடி அல்லங்காடி** இடம் பெற்ற நூல்.
➢ **காஞ்சி – நிலையாமை**. மதுரையைப் பாடுவதாலும் நிலையாமையைக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது.
➢ மதுரையில் **உயிரியல் பூங்கா** இருந்ததை குறிப்பிடுகிறது.
➢ **பௌத்த பள்ளி, அந்தணர் பள்ளி, அமணப்பள்ளி**பற்றிக் கூறும் நூல்.
➢ மதுரையில் நடைபெறும் **ஆறு விழாக்கள்** பற்றி கூறும் நூல் மதுரைக்காஞ்சி.
➢ **பத்துப்பாட்டுள் மிகுதியான அடிகளை** உடைய நூலும் மதுரைக் காஞ்சி.
➢ சங்க இலக்கியத்துள் வேறு எந்த நூலும், ஒரு நாள் நிகழ்வு மைய இலக்கியமாக இல்லை. மேலும் இந்நூல் "**தொல்காப்பியக் காஞ்சி விளக்கப் பாட்டு**" எனலாம்.

# முல்லைப்பாட்டு

➢ பாடியவர் - **நம்பூதனார்**,
➢ பாவகை: **ஆசிரியப்பா** சிறந்த அகப்பாடல் நூல்
➢ பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடையது. (**103 பாடல்கள்**)
➢ **பாசறை அமைப்பைப்** பற்றிக்கூறும் நூல்.
➢ **முல்லைத் திணையைப்** பாடியதால் முல்லைப்பாட்டு எனப்பட்டது.
➢ வினைவழியின் சென்ற தலைவன் கார்காலத்தில் திரும்பி வருதல் என்னும் சமுதாய மரபு, கார் காலத்தை ஒட்டிய பயிர்த்தொழில் அடிப்படையில் அமைந்துள்ளது.
➢ ஒவ்வொரு பெரும்பொழுது இரண்டு திங்கள் கால அளவுடையது.
➢ இப்பாடலில் வரும் "**கானம் நந்திய செந்நிலப் பெருவழி**" என்பது கொண்டு இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் **செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்** என்று சிலர் கூறுவர்.
➢ **"இல் இருத்தல் முல்லை" என்பது இலக்கணம்**

○ **மாலை**– கதிரவன் மறைந்த பிறகு இரவுப்பொழுதின்முற்பகுதி
○ **யாமம்** - நள்ளிரவு, இரவுப்பொழுதின் நடுப்பகுதி
○ **வைகறை**– கதிரவன் தோன்றுவதற்கு பின் பகற்பொழுதின் முற்பகுதி, விடியற்காலம்
○ **நண்பகல்** - பகற்பொழுதின் நடுப்பகுதி
○ **எற்பாடு** – பகற்பொழுதின் இறுதிப்பகுதி, கதிரவன் மறைகின்ற காலம்.

# நெடுநெல்வாடை

➢ நெடுமை + நன்மை + வாடை = **நெடுநல்வாடை** பாடியவர் - நக்கீரர்.
➢ ஆசிரியப்பாவால் ஆனது.
➢ பாட்டுடைத்தலைவன் - **பாண்டியன் நெடுஞ்செழியன்**. பாடல் வரிகள் **188**.
➢ **பாண்டிய மன்னனுக்குரிய வேப்பமாலை** குறிப்பிட்டமையால் இப்பாட்டு புறப்பாட்டு எனப்பட்டது.
➢ எனவே இந்நூல் அகமா? புறமா என சர்ச்சைக்குரிய நூல்.
➢ **மருவினிய கோல்** என அழைக்கப்படுகிறது காலத்தால் பருவத்தால் பெயர் பெற்ற நூல் நெடுநெல்வாடை.

- அரண்மனை அமைப்பைப் பற்றிக் கூறும் நூல் நெடுநல்வாடை, பாசறை அமைப்பைப் பற்றிக் கூறும் நூல் முல்லைப்பாட்டு

❖ **காற்றினைப் பற்றி**

தெற்கிலிருந்து வருவது - **தென்றல்** குணக்கிலிருந்து (கிழக்கு) - **கொண்டல்**

குடக்கிலிருந்து (மேற்கு) - **கோடை** வடக்கிலிருந்து வீசுவது - **வாடை**

- வாடை துன்பத்தைக் குறிப்பது, நல்ல அன்பை உணர்த்துவது நெடு என்பது அழியாமையைத் தெரிவிப்பது.
- அழியாது **நீளும் நல்வாடை** என்று **திரு.வி.க** கூறுவார்.
- நெடுநல் வாடைப் பாட்டின் முழு அமைப்பும் கொற்றவையை (காளி) வேண்டிக் கொள்வதாகவே அமைந்துள்ளது.
- **கொற்றவை வழிபாடே** பாட்டின் நடுமணியாகப் பதிந்துள்ள வைரம் என்று **மு.வ.** எடுத்து உரைக்கிறார்.
- முல்லைப் பாட்டில் கார்காலத்து மழைப் பின்னணி காட்டப்பட்டு உள்ளது. நெடுநல்வாடையில் கூதிர்காலத்து மழைப்பின்னணி விவரிக்கப்பட்டுள்ளது.

# குறிஞ்சிப்பாட்டு

- பாடியவர் - கபிலர், பாட்டுடைத்தலைவன் - இல்லை. **99 பூக்கள் குறித்துக் கூறும் நூல்**.
- அடி அளவு: **261 வரிகள் பா வகை: ஆசிரியப்பா**
- இந்நூல் **பெருங்குறிஞ்சி, காப்பியப்பாட்டு, உளவியல் பாட்டு என அழைக்கப்படுகிறது**.
- **12 ஆண்டுகளுக்கு** ஒரு முறை **பூக்கும் பூ குறிஞ்சிப்பூ, முல்லைமலர் கற்பைக்** குறிப்பதாகக் கூறுவர்.
- **வட நாட்டு ஆரிய அரசன் பிரகத்தனுக்குத்** தமிழ் பண்பாட்டை அறிவுறுத்த கபிலர் பாடிய பாடல்
- மலர்கொண்டு பொழுதைக் கணக்கிட்டனர் மகளிர்.
- “தமிழ் அறிவித்தற்கு என்னும் காரணம் கொண்ட ஒரே தமிழ்நூலும் குறிஞ்சிப்பாட்டு மட்டும்தான்.
- **குறிஞ்சிப்பாட்டில், உள்ளவை:**
    - தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்றல்
    - **99 வகை மலர்கள்**
    - தலைவனின் மனையற்பாங்கு
    - தலைவன் சூளுரைத்தல்
    - பண்டைத் தமிழர் திருமண முறை
    - தலைவியின் அருங்குணம்
- களவு என்னும் கைகோள்களுக்கு (கைகோள் - ஒழுக்கம்) உரிய துறைகள் பலவற்றையும் குறிஞ்சிப்பாட்டு தொகுத்துக் கூறியுள்ளது.
- கற்பு ஒழுக்கத்தின் சிறப்பு – தலைவியின் நிலை : மழை வருணனை : களிறுதரு புணர்ச்சி : தலைமகன் வரும் வழியின் கேடுகள் - தலைமகள் வருத்தம்.

# பட்டினப்பாலை

- பாடியவர் - **உருத்திரங்கண்ணனார்**
- பாட்டுடைத்தலைவன் - **இல்லை**
- பாட்டு வரிகள் **301**

➢ பாவகை : **வஞ்சிப்பா**,

➢ பட்டினம் (காவிரிபூம்பட்டினம், புகார், பூம்புகார்).

➢ அகநூலாக இருந்தும் புறச்செய்திகள் மிகுதியாக உள்ளது.

➢ வேறுபெயர்கள் : **வஞ்சி நெடும்பாட்டு, பயண வழிகாட்டிநூல்**

➢ கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து **உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார் 16 ஆயிரம்** பொன்பரிசு பெற்றார்.

➢ புகார் நகரில் நடைபெற்ற **வணிகத்தின் சிறப்பினைக்** கூறும் நூல். இந்நூல் **வஞ்சி நெடும்பாட்டு என அழைக்கப்படுகிறது**. பண்பாட்டின் சிகரம் - தமிழ்நாட்டின் பழங்கால பெருமைக்கு சான்றான நூல்.

➢ பாலைத் திணையையும், **காவிரி பூம்பட்டினத்தின் வளத்தையும்** ஒருங்கே உரைப்பதால் **பட்டினப்பாலை** என்று பெயர் வந்தது.

➢ பட்டினப்பாலையில் **காவிரியின் சிறப்பு** பற்றிக் கூறப்பட்டுள்ளது.

➢ சோழ நாட்டின் சிறப்புகளான, பண்டமாற்று வணிக முறை, இயற்கை வளம் மிக்க இடங்கள், மக்களின் விளையாட்டு இடங்கள், நடுகற்களின் தோற்றம், தழையாடை அணிந்த மகளிர்,**வணிகச் சிறப்பு மற்றும் தலைவன் செலவமுங்கியமை** பற்றிக் கூறியுள்ளார்.

➢ பிறகு பாட்டுடைத் தலைவனின் **வீரம், வெற்றி** பற்றி கூறியுள்ளார்.

➢ அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன்''
பாட்டுத் தலைவன் : கரிகால் பெருவளத்தான் (திருமாவளவன்)

➢ **கோயில், கடை, கள்ளுக்கடை** ஆகிய இடங்களில் கொடி கட்டியிருந்தனர்.

➢ புலவர்கள் சொற்போர் கருதியபோதும், கொடிகட்டும் வழக்கம் இருந்தது.

➢ புகாரில் ஏழை எளியவர்களுக்கு உணவு அளிக்கும் சமையல் சாலைகள் இருந்தன.

# இயல்-5
# சிலப்பதிகாரம்

❖ **இளங்கோவடிகள்**

- சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் - **இளங்கோவடிகள்**
- பாவகை : **நிலைமண்டில ஆசிரியப்பா**
- காலம் - **2ம் நூற்றாண்டு**.
- இவர் சேரநாட்டு இளவரசர். இவரது சகோதரன் - **சேரன் செங்குட்டுவன்**.
- பெற்றோர் - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் - **நற்சோனை**.
- இளங்கோவே நாடாள்வார் என்று கூறியவர் **கணியன்.**
- **அடிகள் நீரே அருளுக** என்று சாத்தனார் இளங்கோவடிகளிடம் கூறினார்.
- இளங்கோவடிகள் அரசியல் வேறுபாடு கருதாதவர். **சமய வேறுபாடற்ற துறவி**.
- நாட்டுப்புறப் பாடல்களுக்குச் சிறப்புத் தந்து முதலில் பாடியவர் **இளங்கோவடிகள்**.
- இவர் தன் தமையனுக்காக இளமையிலேயே அரசு துறந்து (குணவாயிற் கோட்டத்தில்) பூண்டமையால் இவருக்கு இளங்கோவடிகள் என்ற பெயர் வந்தது. இளங்கோவடிகளின் சமகாலப் புலவர் **சீத்தலைச்சாத்தனார்**.

❖ **சிலப்பதிகார நூற்சிறப்பு**

| |
|---|
| **சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள்** :<br>அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்<br>உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்<br>ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் |

- தமிழின் முதல் காப்பிய நூல் சிலப்பதிகாரம்.
- **3 காண்டங்கள், 30 காதைகள், 5001 பாடல்வரிகளை** உடையது.
- சிலப்பதிகாரத்தின் பெரும் **பிரிவு காண்டம், உட்பிரிவு காதை**.
- சிலப்பதிகாரத்தில் இரண்டு பிரிவு **ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை**.
- இந்நூல் **புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம்** என மூன்று காண்டங்களைக் கொண்டது.
- **புகார்க்காண்டம் : 10**
- **மதுரைக் காண்டம் : 13**
- **வஞ்சிக்காண்டம் : 7**
- **இசை நாடகமே** சிலப்பதிகாரக் கதையின் உருவம்.
- சேரன் செங்குட்டுவன் **சீத்தலைச் சாத்தனாரோடும், இளங்கோவடிகளோடும்** மலைவளம் காணச் சென்றான்.
- அங்கிருந்த மலைவாழ் மக்கள், "**வேங்கை மரத்தின்கீழ் ஒரு பெண்தெய்வத்தைப் பார்த்தோம்**" என்று கூற, உடனிருந்த பெரும்புலவர் சாத்தனார், "**அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்**" என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார்.
- அதனைக் கேட்ட இளங்கோவடிகள், **"இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்**" என்று கூறினார்.
- சாத்தனாரும், '**அடிகள் நீரே அருளுக**' என்றார். இவ்வாறே சிலப்பதிகாரம் உருவாயிற்று.

- மங்கல வாழ்த்துப்பாடல் முதலாக வரந்தருகாதையீறாக **முப்பது காதைகளையும்** கொண்டுள்ளது.
- முதல் உரைநடை நூல். சிலப்பதிகாரத்திற்கு விளக்கவுரை எழுதியவர் **அடியார்க்கு நல்லார்**.
- சைவ வைணவ நெறிகளையும் பாடிய **சமணநூல் சிலப்பதிகாரம்**.
- சிலப்பதிகார உரையாசிரியர்களுள் ஒருவர் **அரும்பத உரைகாரர்**. **இசை நாடகமே சிலப்பதிகாரத்தின் கதை**.
- சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதை இடம் பெற்ற காண்டம் மதுரைக் காண்டம் (10 –வது காதை)
- சிலம்பு + அதிகாரம். கண்ணகியின் **காற்சிலம்பின் கதையைக்** கூறுவதால் சிலப்பதிகாரம் எனப் பெயர்பெற்றது.

❖ **முன்கதைச் சுருக்கம்**

- காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் **கோவலன்**.
- இவன் கலையுணர்வும், வறியோர்க்கு உதவும் நற்பண்பும் மிக்கவன். காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள் **கண்ணகி**.
- இவ்விருவரும் மனையறம்பூண்டு இன்புற்று வாழ்ந்தனர்.
- கோவலன், **ஆடலரசி மாதவியை** விரும்பியதனால் கண்ணகியை விட்டுப் பிரிந்தான்.
- அவன், மாதவி இல்லத்திலேயே தங்கித் தன் செல்வத்தையெல்லாம் இழந்தான்.
- மாதவி **இந்திரவிழாவில்** கானல்வரிப் பாடலைப் பாடினாள்.
- பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்ட கோவலன், மாதவியை விட்டுப் பிரிந்தான்.
- பிரிந்தவன், தன்மனைவி கண்ணகியிடம் சென்றான். அவன், தான் இழந்த செல்வத்தை ஈட்ட எண்ணினான்.
- வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் **மதுரை**க்குச் சென்றான்.
- அவர்களுக்கு வழித்துணையாகக் **கவுந்தியடிகள்** என்னும் சமணத்துறவி சென்றார்.
- அவர், மதுரை நகர்ப்புறத்தில் **மாதிரி** என்னும் இடையர்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார்.
- கோவலன் **சிலம்பு** விற்றுவர மதுரைநகரக் கடைவீதிக்குச் சென்றான்.
- விலைமதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றினைக் கோவலன் விற்பதனைப் பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் அறிந்தான்.
- **பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன், பொய்யான பழி**யைக் கோவலன்மேல் சுமத்தினான்.
- அதனை **ஆராய்ந்து பாராத மன்னன்,'அவனைக் கொன்று, சிலம்பைக் கொணர்க'** என்று ஆணையிட்டான்.
- கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதிரி மூலம் அறிந்த கண்ணகி பெருந்துயருற்றாள்.
- **அவள் 'தன் கணவன் கள்வன் அல்லன்'** என்பதனை மன்னனுக்கும், உலகோர்க்கும் உணர்த்த எண்ணினாள்: பாண்டிய மன்னன் அவைக்குச் சென்று **வழக்குரைத்தாள்**

- **<u>கொற்கை</u>** என்னும் துறைமுகத்தை உடைய **<u>பாண்டிய மன்னனே</u>** வாழ்வாயாக! தெற்குப் பகுதியில் உள்ள **<u>பொதியமலைக்குத் தலைவனே</u>** வாழ்க! செழியனே வாழ்க! தமிழ்நாட்டின் தென்பகுதித் தலைவனே வாழ்க! இதுவரை பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே வாழ்க!
- வெற்றிதரும் வேலினைத் தன்பெரிய கையில் ஏந்தி, பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை பீடத்தில் ஏறிய இளங்கொடியாகிய **<u>கொற்றவையும் அல்லள்</u>**: கன்னியர் எழுவருள் இளையவளாகிய **<u>பிடாரியும் அல்லள்</u>**: இறைவனை நடனமாடச் செய்த **<u>பத்ரகாளியும் அல்லள்</u>**: அச்சம்தரும் காட்டைத் தான் விரும்பும் இடமாகக் கொண்ட **<u>காளியும் அல்லள்</u>**: தாருகன் என்ற அசுரனின் பரந்த மார்பைப் பிளந்த **<u>துர்க்கையும் அல்லள்</u>**: தன் உள்ளத்தில் கறுவு கொண்டாள் போலவும், மிக்க சினம் கொண்டாள் போலவும், விளங்குகின்றாள்: வேலைப்பாடமைந்த பொற்சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தியவளாய் இருக்கின்றாள்: கணவனை இழந்த அவள், நம்வாயிலின் முன்னேநிற்கின்றாள்', என்று வாயிற்காவலன் அறிவித்தான். அத்தகையவளை அழைத்து வருக என்று அரசன் கூறினான்.
- வாயிற்காவலன் கண்ணகியைப் பாண்டிய மன்னனிடம் அழைத்துச் சென்றான்.
- மன்னன் கண்ணகியை நோக்கி, ''இளமையான கொடி போன்றவளே! நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ, யார்? என வினவினான். கண்ணகி மன்னனை நோக்கி,'' ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு'' என உரைக்கத் தொடங்கினாள்.
- 'புறாவின் துன்பத்தைப் போக்கிய **<u>சிபி மன்னனும்</u>**, தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்ற **<u>மனுநீதிச்சோழனும்</u>** வாழ்ந்த, பெரும்புகழுடைய **<u>புகார் நகரமே</u>** யான் பிறந்த ஊர். அப்புகார் நகரில் பழியல்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய **<u>மாசாத்துவான்</u>** மகனை மணம்புரிந்தேன். வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலைசெய்யப்பட்ட **<u>கோவலன் மனைவி நான்</u>**, கண்ணகி என்பது என் பெயர்' என்று கூறினாள்.
- பாண்டிய மன்னன் கண்ணகியிடம், ''**<u>கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று: அதுவேஅரச நீதி</u>**'' என்று கூறினான். அதற்குக் கண்ணகி, ''அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு **<u>மாணிக்கப் பரல்களைக்</u>** கொண்டது'' என்றாள்.
- அதற்கு அரசன்,''நீ கூறியது நல்லதே! எம்முடைச் சிலம்பின் பரல்கள் **<u>முத்துகளே</u>**'' என்றான்.
- கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கொண்டுவரச் செய்து, அவள் முன் வைத்தான்.
- வைத்த அச்சிலம்பினைக் கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள். அதிலிருந்து வெளிப்பட்ட **<u>மாணிக்கப்பரல்</u>** ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது.
- அம்மாணிக்கப் பரல்களைக் கண்ட பாண்டிய மன்னன் தாழ்வுற்ற குடையனாய், சோர்வுற்ற செங்கோலனாய்,''பொன்தொழில் செய்யும் கொல்லனின் பொய்யுரை

கேட்டு, அறநெறி தவறிய, நானோ அரசன்! நானே கள்வன்: அறந்தவறாது குடிமக்களைக் காக்கும் தொன்மையாட்சி என்முதல் தவறியது. என் வாழ்நாள் அழியட்டும்'' என்றவாறே மயங்கி வீழ்ந்தான்.

- மன்னனின் மனைவி கோப்பெருந்தேவி உள்ளங்கலங்கி, உடல் நடுங்கி, '**கணவனை இழந்த மகளிர்க்கு, எவ்விதத்திலும் ஆறுதல் கூற இயலாது**' என்று கூறித், தன் கணவனின் திருவடிகளை வணங்கி நிலத்தில் வீழ்ந்து இறந்தாள்.

## ❖ சிலப்பதிகாரத்திற்குரிய சிறப்புப்பெயர்கள்

- **உரையிட்ட பாட்டுடைச் செய்யுள், குடிமக்கள் காப்பியம், முதுமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம், செந்தமிழ்க் காப்பியம், தமிழின் முதல் காப்பியம், முதன்மைக் காப்பியம், பத்தினிக் காப்பியம், புரட்சி காப்பியம், சமுதாயக் காப்பியம், பொதுமைக் காப்பியம், முதல் தேசியக் காப்பியம், வரலாற்றுக் காப்பியம்**.

- சிலப்பதிகாரத்தை குடிமக்கள் காப்பியம் என **தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்** குறிப்பிட்டுள்ளார்.
- சிலப்பதிகாரத்தை சிறப்பதிகாரம் என **உ.வே.சா** குறிப்பிட்டுள்ளார்.
- 'யாமறிந்த புலவர்களில் கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், பூமிதனில் எங்கேனும் பிறந்ததில்லை : **பாரதியார்**
- பாரதியார் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என இந்நூலைப் புகழ்ந்துள்ளார்.
- தேனிலே ஊறிய செந்தமிழின் சுவைதோறும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர் **கவிமணி**.
- முதன் முதலாக தம் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள் என்றவர் - **மு. வரதராசனார்**.
- சிலம்பு தொடர்பான பல அரிய கட்டுரைகளை சு.செல்லப்பனார் அவர்கள் எழுதியுள்ளார். அவற்றின் அருமை கருதி சு. செல்லப்பனாருக்குச் சொல்லின் செல்வர் **இரா.பி. சேதுப்பிள்ளை** அவர்கள் சிலம்பொலி என்னும் சிறப்புப் பெயரை உரித்தாக்கினார்
- சிலப்பதிகார கதையை நற்றிணை திருவுண்ணி கதையோடும், புறநானூறு பேகன் மனைவி கண்ணகி கதையோடும் தொடர்புபடுத்திக் கருதலாம்.

## ❖ சிலப்பதிகார பாத்திரங்கள்

- காவிரிப் பூம்பட்டினத்து பெருவணிகன் மாசாத்துவான் மகன்: **கோவலன்**.
- காவிரிப் பூம்பட்டினத்து பெருவணிகன் மாநாய்கனின் மகள் : **கண்ணகி**.
- சமண பெண் துறவி கவுந்தியடிகள், ஆடலரசி –**மாதவி**,
- இடைக்கால மூதாட்டி - **மாதிரி பழங்குடி மக்கள் குன்றக்குறவர்கள்**,
- பாண்டிய மன்னன் - நெடுஞ்செழியன், சோழ மன்னன் - **செம்பியன்**
- பாண்டிமாதேவி - கோப்பெருந்தேவி, மாதவியின் தோழி –**வயந்தமாலை**,
- கண்ணகியின் தோழி –**தேவந்தி. இலங்கை மன்னன் கயவாகு**.
- சேர மன்னன் - செங்குட்டுவன். கண்ணகி தவமிருந்தது **வேங்கைமரம்**.
- பாண்டிமாதேவியின் காற்சிலம்பு –**முத்துப்பரல்**. கண்ணகியின் காற்சிலம்பு **மாணிக்கப்பரல்**.
- சிலப்பதிகார விழா இந்திரவிழா (28 நாட்கள் நடைபெறும்) **(இந்திரவிழாவைப் பற்றி கூறும்** மற்றொரு நூல் **ஐங்குறுநூறு**
- திருமணத்தின் போது கோவலன் வயது **16 கண்ணகியின் வயது 12**.

- பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை பீடத்தில் ஏறிய இளங்கொடியவள் **கொற்றவை**.
- கன்னியர் ஏழுவருள் இளையவள் : **பிடாரி.** இறைவனை நடனமாட செய்தவள்: **பத்ரகாளி**
- அச்சம் தரும் காட்டை தான் விரும்பும் இடமாக கொண்டவள் **காளி**.
- தாருகன் என்ற அசுரனின் மார்பை பிளந்தவள் **துர்கை**.
- இந்திர விழாவில் கானல் வரிப் பாடலை பாடியவர் **மாதவி**, வாழ என்பது இசைப்பாடல் வகையது.
- திங்களைப் போன்றது சோழனின் வெண் கொற்றக்குடை, ஞாயிறைப் போன்றது சோழனின் ஆனைச்சக்கரம்,
- மழையைப் போன்றது சோழனின் அளி (கருணை), வடமீனின் திறம் கண்ணகியின் கற்பு
- கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் கற்கோவில் எழுப்பிய இடம் திருவஞ்சைக்களம்.

❖ **சிலப்பதிகார மேற்கோள்கள்**

பெண்ணணங்கே கள்வனைக் கோறல் கொடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்

- **பாண்டிய மன்னன் கண்ணகியிடம்**

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு

- **கண்ணகி பாண்டிய மன்னனிடம்**

தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்

- **பாண்டிய மன்னன்**.

பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்

- **பாண்டிய மன்னன்**.

மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென

- **பாண்டிய மன்னன்**

கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதவீழ்ந் தனளே மடமொழி.'

பாண்டிமாதேவி

தேரா மன்னா செப்புவ துடையேன் - **கண்ணகி பாண்டிய மன்னனிடம்**

கொன்றச் சிலம்பு கொணர்க - **பாண்டிய மன்னன்**.

நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால் - **மாதவி**

- "எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன்"

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத்தான்"
என்ற வரிக்குரியவர் - **<u>மனுநீதிச்சோழன்</u>**

- திருமணத்தன்று கோவலன் கண்ணகியைத் தனிமையில் மாசறு பொன்னே வலம்புரி முத்தே என்று புகழும் வரிகள் அடிகளாரின் இலக்கிய நயத்திற்குச் சான்று தருவன.
- பெண் சமணத்துறவி **<u>கவுந்தியடிகள்</u>**.
- ஆண் பௌத்தத் துறவி **<u>அறவண அடிகள்</u>**.
- மதுரையில் கண்ணகியை அடைக்கலம் பெற்ற ஆயர் குலப் பெண் **<u>மாதிரி</u>**.'
- மாதிரியின் மகள் **<u>ஐயை</u>**.
- கோவலனின் நண்பன் **<u>மாடலன்</u>**.
- மதுரை செல்ல வழிகாட்டியவன் மாங்காட்டு **<u>மறையோன்</u>**
- கோசிகமாணி, மாடலன், மாங்காட்டு மறையோன் மூவரும் அந்தணர்கள்.
- மாதவியின் முதல் கடிதத்தை எடுத்துச் சென்றவள் **<u>வயந்தமாலை</u>**.
- மாதவியின் இரண்டாம் கடிதத்தைக் கோவலனிடம் சேர்ந்தவன் **<u>கோசிகமாணி</u>**.
- மதுரையின் காவல் தெய்வம் **<u>மதுராபதி</u>**
- கண்ணகிக்குக் கோயில் கட்டியவன் **<u>செங்குட்டுவன்</u>**.
- செங்குட்டுவனின் மனைவி **<u>வேண்மாள்</u>**.
- கண்ணகிக்குச் சிலை எடுக்கவேண்டும் என்று சொன்னவள் **<u>வேண்மாள்</u>**.
- சிலை எடுத்தபோது உடன் இருந்தவர்கள் இலங்கை மன்னன் கயவாகு, (கஜபாகு) சோழமன்னன் **<u>பெருநற்கிள்ளி, கனகவிசயர்</u>**.
- கண்ணகி கோயிலின் முதல் பூசாரி **<u>தேவந்தி</u>**
- முதல் பெண் பூசாரி **<u>தேவந்தி</u>**
- செங்குட்டுவனின் அமைச்சர்கள் அழும்பில்வேள், **<u>வில்லவன் கோதை</u>**
- வடநாட்டுப் போரில் செங்குட்டுவனுக்கு உதவியவர்கள் நூற்றுவர் கன்னர் (சதகர்ணிகள்)
- கண்ணகி சிலைக்குக் கல் எடுத்த மலை **<u>இமயமலை</u>**.
- கல்லை நீராட்டிய ஆறு **<u>கங்கையாறு</u>**.
- கண்ணகிக்குக் கோயில் உள்ள ஊர் **<u>திருவஞ்சிக்களம்</u>** (குமுளி).

<u>மதுரைக் காண்டம் (வழக்குரை காதை)</u>

தேரா மன்னன் செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளக்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகளை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்
கென்காற் சிலம்புகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே

❖ **<u>பொருள்</u>**

- கண்ணகி மன்னனை நோக்கி, ''ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு'' என உரைக்கத் தொடங்கினாள்.
- 'புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும், தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்த, பெரும்புகழுடைய புகார் நகரமே யான் பிறந்த ஊர்.
- அப்புகார் நகரில் பழியில்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசாத்துவான் மகனை மணம்புரிந்தேன்.
- வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான், கண்ணகி என்பது என் பெயர்' என்று கூறினாள்.

# மணிமேகலை

- **சீத்தலைச் சாத்தனார்**

❖ **<u>நூற்குறிப்பு</u>**

- தமிழின் **<u>இரண்டாம் காப்பிய நூல்</u>** (பாடல் அடிகள்: 4286 (அ) 4755).
- **<u>பெண்ணின் பெருமை பேசும் நூல்</u>** (சிலப்பதிகாரம் போன்று).
- துறவுக்கு முதன்மை கொடுக்கும் நூல்.
- மணிமேகலையின் கதை நாயகி **<u>கோவலன்</u>** - மாதவியின் **<u>மகள் - மணிமேகலை</u>**
- சிலப்பதிகாரம் கோவலன், கண்ணகி, மாதவி வரலாறும், மணிமேகலை கோவலன் மாதவி மகளான மணிமேகலை வரலாறும் கூறும் காப்பியங்களாகும்.'
- **<u>சிலப்பதிகாரமும் மணிமேகலையும்</u>** ஒரே கதைத் தொடர்புடையவை.
- மணிமேகலை ஒரு **<u>பௌத்த நூலாகும்</u>**. மணிமேகலை **<u>இந்திர விழாவெடுத்த காதை</u>** முதலாகப் பவத்திறம் அறுகெனப்பாவை நோற்ற காதையீறாக. **<u>30 காதைகளைக் கொண்டது</u>**. (காதை – கதை தழுவிய பாடல்)
- **<u>24 வது காதை</u>**–**<u>ஆபுத்திரன் நாடு அடைந்த காதை</u>**.
- மறுபிறப்பு உணர்ந்தவளாகக் குறிப்பிடப்படுவர் மணிமேகலை. பா வகை அகவற்பா வகையைச் சார்ந்தது.
- மணிமேகலை,**<u>ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று</u>**.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதை தொடர்புடையன. எனவே, இவை இரட்டைக்காப்பியங்கள் என வழங்கப்பெறும்.
- மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு **<u>மணிமேகலைத் துறவு</u>** என்னும் வேறு பெயரும் உண்டு.
- இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது: பௌத்தமதச் சார்புடையது: **<u>முப்பது காதைகளைக் கொண்டது</u>**.

❖ **<u>சீத்தலைச் சாத்தனார்</u>**

- மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றியது **<u>மணிமேகலை</u>**.
- **<u>சாத்தன்</u>** என்பது இவரது இயற்பெயர்.
- இவர், திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த **<u>சீத்தலை</u>** (சீர் தண்டலை) என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்:**<u>கூலவாணிகம்</u>** (கூலம் - தானியம்) செய்தவர்.
- இக்காரணங்களினால், இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப்பெற்றார்.
- இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர்.
- இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.

- **தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப்** பாரட்டியுள்ளார்.
- இவரது காலம் **கி.பி. இரண்டாம் நூற்றாண்டு** என்பர்.

❖ **மணிமேகலையின் கதாபாத்திரங்கள்**

- மணிமேகலையின் தோழி **சுதமதி**.
- தாய் மாதவி. தந்தை – கோவலன், மணிமேகலையை காதலித்த இளவரசன் **உதயகுமாரன்**. மணிமேகலைக்கு உதவிய தெய்வம் **மணிமேகலா தெய்வம்**.
- மாருத வேகனால் கைவிடப்பட்டவள் **சுதமதி**
- கண்ணகியின் தோழி **தேவந்தி**.
- புத்தத்துறவி **அறவண அடிகள்**.
- ஆதிரையின் கணவன் **சாதுவன்**.
- இழந்த பொருளை ஈட்டக் கடல் கடந்து சென்றவன் **சாதுவன்**.
- மணிமேகலைக்கு முதன்முதலாக அமுதசுரபியில் பிச்சையிட்டவள் **ஆதிரை**.
- ஆதிரையின் வரலாற்றை மணிமேகலைக்குச் சொன்னவள் **காய சண்டிகை**
- வித்யாதர மங்கை காய சண்டிகை (**காஞ்சினபுரம்**)
- விருச்சிக முனிவரால் பசிநோய் சாபம் பெற்றவள் **காய சண்டிகை**.
- காய சண்டிகையின் பசிநோயைப் போக்கியவள் **மணிமேகலை**
- மணிமேகலாத் தெய்வம் மணிமேகலைக்குக் கொடுத்த வரம் **மூன்று**.
- ஆபுத்திரனுக்கு அமுதசுரபிணைக் கொடுத்தது **சிந்தாதேவி**
- அமுதசுரபியைக் கோமுகியில் இட்டவன் **ஆபுத்திரன்**
- அமுத சுரபி பற்றி மணிமேகலைக்குச் சொன்னது **தீவதிலகை**.
- மணிமேகலைப் பெற்றது–**அமுதச்சுரபி (அட்சயப்பாத்திரம்)**
- அமுதசுரபியை மணிமேகலையிடம் அளித்தவள் தீவ திலகை. மணிமேகலைக்கு வழிகாட்டியவர் - **அறவணடிகள்**
- காய சண்டிகையாக தன்னை உருமாற்றிக் கொண்டவள் - **மணிமேகலை**.

❖ **மணிமேகலையின் சிறப்பு பெயர்கள்**

- **மணிமேகலைத் துறவு, முதல் சமயக் காப்பியம், பௌத்த காப்பியம், அறக் காப்பியம், சீர்திருத்தக் காப்பியம், பசிப்பிணி காப்பியம், குறிக்கோள் காப்பியம்**.
- மணிமேகலைக்கு உ.வே.சா அவர்கள் **கலைச்சொல் ஆக்கக் காப்பியம்** எனப் பெயர் சூட்டியுள்ளார்.
- கிளைக்கதைகளை மிகுதியாகக் கூறுவதால் இந்நூலை **"கதைக் களஞ்சியக் காப்பியம்"** என்று அழைக்கப்படுகிறது.
- "**பெண்ணின் பெருமை பேணும் முதல் காப்பியம்**" மணிமேகலை.

❖ **மேற்கோள்கள்**

- "பசிப்பிணி, உண்டிகொடுத்தோர் உயிர்க்கொடுத்தோரே"
- "அருந்தவர்க்கு அமைந்த ஆசனம் காட்டித்"
- எவ்வுயிர்க்காயினும் இரங்கற் வேண்டும்"
- மணிமேகலையில் ஒரு பகுதியில் புத்த பிரானைப் பற்றி போற்றி கூறப்பட்டுள்ளது.
- "தேவியும் ஆயமும் சித்தரா பதியும்" என்ற பாடல் வரியில் ஆயம் என்பதன் பொருள் தோழியர் கூட்டம்
- அருந்தவர்க்கமைந்த ஆசனம். இவ்வடியில் அருந்தவர் என்பது **தவமுனிவர்**.
- சொல்லில் ஏற்படும் குற்றங்களின் எண்ணிக்கை 4 (**பொய், கோள், கடுஞ்சொல், பயனற்றசொல்**).

- உடலில் தோன்றும் குற்றங்களின் எண்ணிக்கை 3 (**<u>கொலை, களவு, காமம்</u>**)
- உள்ளத்தில் தோன்றுவது – 3 (**<u>பேரவா, கடுஞ்சினம் கொள்ளல்,'தெளிவிலா அறிவு</u>**)
- **மணிமேகலையின் சிறப்பு:**
    - **<u>நிலையாமை கூறல்</u>**
    - "**<u>பசிப்பிணி என்னும் பாவி</u>**"

### ஆபுத்திரன் நாடு அடைந்த காதை

❖ **<u>முன்கதைச் சுருக்கம்</u>**

- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. முற்பிறப்பின் வினைப்பயன் காரணமாக அரசகுமாரனாகிய **<u>உதயகுமரன்</u>**, மணிமேகலையை மணம்புரிய விரும்புகிறான்: மலர்வனத்திற்குச் சென்ற அவளைப் பின்தொடர்கிறான்.
- மணிமேகலை அங்குள்ள **<u>பளிக்கறையில்</u>** சென்று மறைந்துகொள்கிறாள்.
- அங்கிருந்த அவளை **<u>மணிமேகலா தெய்வம், மணிபல்லவத் தீவிற்கு</u>** வான்வழியே தூக்கிச் செல்கிறது.
- அங்குத் தனது பழம்பிறப்பை உணர்கிறாள் **<u>மணிமேகலை</u>**.
- மேலும் மணிமேகலா தெய்வம், அவளுக்குப் பசியற்றிருக்கவும் விரும்பும் உருவம் எடுக்கவும் வான்வழிச் செல்லவும் தேவையான மூன்று மந்திரங்களைத் தெரிவித்து மறைகிறது.
- **<u>தீவதிலகையின் உதவியால், அமுதசுரபியைப்</u>** பெற்றுப் புகார் நகரை அடைகிறாள்.
- அங்கு,**<u>அறவணவடிகளின்</u>** அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன் **<u>முதலில் பிச்சையேற்றாள்</u>**.
- அதன்மூலம் அமுதசுரபியில் அள்ள அள்ளக் குறையாத **<u>அன்னம் பெருகியது</u>**.
- அதனைக்கொண்டு பசிப்பிணிநீக்கும் அறப்பணியை மேற்கொள்கிறாள்.
- அமுதசுரபி, முற்பிறப்பில் **<u>ஆபுத்திரனிடம்</u>** இருந்தது என்பதை அறிந்த மணிமேகலை அவளைக் காணும் பொருட்டு ஆபுத்திரன் நாட்டிற்குச் செல்வது, இங்குப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.
- மணிமேகலை எழுந்து,'தேவியர்களும் ஆயமகளிரும் சித்திராபதியுமாகிய நீங்கள் அறவணரின் நல்ல மொழிகளைப் போற்றி நற்கதியடையுங்கள்.
- இந்நகரில் நான் தங்கினால், மன்னவன் மகனுக்கு வந்த **கூற்றுவன்** என்று என்னைப் பலரும் கூறுவர்.
- ஆகையால், நான் ஆபுத்திரன் நாட்டை அடைந்து, பின்னர் அங்கிருந்து குற்றமற்ற மணிபல்லவத் தீவிற்குச் சென்று பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் குறைவற்ற நல்லறத்தினைச் செய்துகொண்டிருப்பேன். என் மனத்திற்கு இனியவர்களே, எனக்கு இன்னல் உண்டாகுமென்று யாரும் வருந்த வேண்டாம்' என்று கூறினாள்.

- ஒரு கதையை **<u>நீண்ட செய்யுள் வடிவில் கூறுவதைக்</u>** காப்பியமாகக் கருதுவர்.
- காப்பியத்தின் இலக்கணத்தைக் கூறும் நூல் **<u>தண்டியலங்காரம்</u>**.
- ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொடரை முதன் முதலில் கூறியவர் **<u>மயிலைநாதர்</u>** **<u>காப்பியம்</u>** என்பது காப்பை இயம்புவது என்ற பொருள் தரும் தமிழ்ச் சொல் என்பர்.

- **<u>அறம், பொருள், இன்பம், வீடு</u>** என்ற நாற்பொருளையும் கூறுவது **<u>பெருங்காப்பியம்</u>** எனப்படும். **<u>அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறுகாப்பியம்</u>**எனப்படும்.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.
- மணிமேகலை, குண்டலகேசி **<u>பௌத்த காப்பியங்கள்</u>** ஆகும்.
- சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி என்ற மூன்றும் **<u>சமணக் காப்பியங்கள்</u>**
- ஐஞ்சிறுகாப்பியங்கள் அனைத்தும் **<u>சமணக்காப்பியங்கள்</u>** ஆகும்.
- வடமொழியில் இரகுவம்சம், குமாரசம்பவம், மாகம் அல்லது சிசுபாலவதம், கிராதார்ஜீனியம், நைடதம் என்னும் ஐந்து நூல்களையும் **<u>பஞ்ச காவியங்கள்</u>** என்பர். அதைப்போலவே வடமொழியில் நம் ஐம்பெருங்காப்பியங்களையும் **<u>பஞ்சமகா காவியங்கள்</u>** எனக் குறிப்பர்.
- ஐம்பெருங்காப்பியங்களின் நூற்பெயர்களை முதன்முதலாகக் குறிப்பிட்டவர் 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கந்தப்பதேசிகர். கந்தைப்பையர் ''**<u>திருத்தணிகை உலா</u>**'' என்னும் சிற்றிலக்கியத்தில் காணப்படுகின்ற வரிகள்,

''சிந்தா மணி திகழ் சிலப்பதிகாரம்
மணிமே கலை வளையா பதி குண்டல
கேசி பஞ்சகா வியம்எனக் கிளத்துவர்''

## காப்பியங்கள்

## ஐம்பெருங்காப்பியங்கள்

- **சிலப்பதிகாரம்** - இளங்கோவடிகள்
- **மணிமேகலை** - சீத்தலைச்சாத்தனார்
- **சீவகசிந்தாமணி** - திருதக்கத்தேவர் (தேவர்கள் தலையை சீவி விடுவார்கள்)
- **வளையாபதி** - தெரியவில்லை
- **குண்டலகேசி** - நாத குத்தனார் (நாதன் வந்து குண்டா இருக்கான்)

## ஐஞ்சிறுகாப்பியங்கள்

- **சூளாமணி** - தோலாமொழிதேவர்
- **நீலகேசி** - தெரியவில்லை
- **நாககுமார காவியம்** - தெரியவில்லை
- **உதயணகுமார காவியம்**- தெரியவில்லை
- **யசோதரகாவியம்** - வெண்ணாவலுடையார்

## சீவகசிந்தாமணி

- தமிழ் மொழியின்கண் விளங்கும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவக சிந்தாமணியாகும்.
- சிந்தாமணி என்பதற்கு **<u>ஒளிகுன்றாத மணி</u>** என்பது பொருள்.

- குன்றுதலில்லாத அழகு தமிழ்நடை பெற்றிருப்பதாலும் தமிழ் மாந்தர் தம் நெஞ்சில் வைத்துப் போற்றுவதாலும் இந்நூல் சிந்தாமணி என்னும் தகுதியுடையதாயிற்று.
- இக்காப்பியத்தை இயற்றித் தமிழன்னைக்கு அணி செய்தவர் **திருத்தக்கதேவர்** என்னும் புலவர் பெருமானாவர்.
- இவர் **சோழ நாட்டைச்** சேர்ந்தவர். **சமண சமயஞ்சார்ந்த** துறவி. இவர் **நரி விருத்தம்** என்ற நூலையும் எழுதியுள்ளார்.
- சீவகசிந்தாமணிக்கு **மண நூல் என்ற பெயரும் உண்டு**. இ∴து **நாமகள் இலம்பகம் முதலாக முத்தியிலம்பகம் ஈராகப் பதின்மூன்று இலம்பகங்களைக்** கொண்டிலங்குகின்றது.
- விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த **முதல் தமிழ்க் காப்பியம் சிந்தாமணியே**. இந்நூலுக்கு **உரை கண்டவர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் ஆவார்**.
- சீவகன் பிறந்த பொழுது அவன் **தாய் விசயை 'சிந்தாமணியே' என்று அவனை** அழைத்தார்.
- அக்குழந்தை தும்மிய பொழுது **'சீவ'** என்ற வாழ்த்தொலி கேட்டது. அதனால் அவன் சீவகன் என்று அழைக்கப்பட்டான்.
- சீவகன் வரலாற்றைக் கூறும் காப்பியமாதலின் அந்நூல் சீவகசிந்தாமணி என வழங்கலாயிற்று.

## காந்தருவதத்தையார் இலம்பகம்

- வெள்ளி மலையிலுள்ள வித்தியாதரர் வேந்தன் **கலுழவேகன்** என்பான்.
- அவன்மகள் **காந்தருவதத்தைக்கு இராசமாபுரத்தில்தான்** திருமணம் நிகழும் என்பதை நிமித்திகர் மூலம் அறிந்தான். எனவே, **சீதத்தன்** என்னும் **வணிகன்பால்** தன் மகளை ஒப்புவித்து இவளை யாழ்போரிலே வெல்வானுக்கு மணஞ்செய்து கொடுக்க என வேண்டினான்.
- சீதத்தன் அழைத்துவரத் தத்தை **தன்தோழி வீணாபதி** என்பவளோடு **இராசமாபுரம் வந்தாள்**.
- சீதத்தன்,''இவளை **யாழ்ப்போரிலே வெல்வான்** எவனோ அவனுக்கு மணஞ்செய்து கொடுப்பேன்'' என்று முரசறைவித்தான்.
- அதனால் அவளை அடையப் பல நாட்டு மன்னரும் குழுமினார். **யாழ் மண்டபத்திலே** தத்தை யாழ் வாசித்தாள்.
- அந்த இனிய இசையில் **கின்னர் மிதுனங்களும்** மெய்மறந்து நின்றன. வீணாபதி அரசர்களை யாழ்ப்போருக்கு அழைத்தாள். அரசர்கள் யாரும் தத்தைக்கு நிகராக யாழ் இசைக்க இயலாது மயங்கினார். இவ்வாறு **ஆறு** நாள்கள் கழிந்தன.
- இ∴தறிந்த சீவகன் தத்தையை யாழ்ப் போரில் வெல்லக் கருதித் தன் நண்பர்களோடு யாழ் மண்டபம் அடைந்தான்.
- அரங்கிலே வீணாபதி குற்றமுடைய யாழ் பலவும் கொணர்ந்து வைக்கச் சீவகன் அவற்றை விலக்கினான்.
- பிறகு ஒரு யாழைத் தெரிவு செய்து அதிலும் நரம்பிலே தலைமயிர் இருந்ததை உணர்த்தித் தன் தோழன் நபுலனது கையிலிருந்து நரம்பு வாங்கிக் கட்டினான்.
- பின்னர் யாழிசை மீட்டிப் பாடினான். **பருந்தும் நிழலும்** போல் பாட்டும் யாழிசையின் கூட்டும் ஒத்திருந்தன. தத்தை எதிர்ப்பாட்டுப் பாட முயன்று குரல் நடுங்கித் தோற்றாள் பின் சீவகனுக்கு மாலை சூட்டினான்.

❖ **நூல் குறிப்பு**

- நூல் ஆசிரியரே சீவனுக்குக் **'காமதிலகம்'** எனப் பட்டம் சூட்டியுள்ளார்
- சீவகனின் பெற்றோர் சச்சந்தன் - **விசயை**
- நாடு ஏமாங்கத நாடு
- தலைநகரம் **இராசமாபுரம்**
- அமைச்சன் **கட்டியங்காரன்**
- சீவகனின் தந்தையான சச்சந்தனைக் கொன்றவன் **கட்டியங்காரன்**.
- சீவகன் பிறந்த இடம் **சுடுகாடு**
- சீவகனை எடுத்து வளர்த்தவன் **கந்துக்கடன்** என்னும் வணிகன்
- சீவகனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் **அச்சணந்தி**
- மதுரை திரமிளச் சங்கத்தைச் சேர்ந்தவர் **திருத்தக்கத்தேவர்**.
- திரமிளச் சங்கத்தைச் சேர்ந்த புலவோர் சமணத் துறவிக்கு காமச்சுவை ததும்ப காப்பியம் எழுத இயலாது என்றனர். **விருத்தப்பாவில் அமைந்த முதல் தமிழ் நூல்**.
- திரமிளச் சங்க புலவோரின் கூற்றை மறுக்க, தானே அத்தகைய நூலை இயற்ற வேண்டி தனது ஆசிரியரான அச்சணந்தியிடம் அனுமதி கேட்டார்.
- தனது ஆசிரியரான **அச்சணந்தியின் ஆணைப்படி** நரியைப் பற்றி அவர் பாடிய பாடலே **நரிவிருத்தம் ஆகும்**.
- நரிவிருத்தம் பாடிய திருத்தக்க தேவரின் திறமையை உணர்ந்த இவரின் ஆசிரியர் அச்சணந்தி - **காமச்சுவை உடைய காப்பியம்** பாடத் தேவர்க்கு அனுமதி அளித்தார்.
- அதன் பேரில் திருத்தக்கத்தேவர் **எட்டே நாளில்** பாடி முடித்தக் காப்பியமே சீவகசிந்தாமணி ஆகும்.
- சீவகசிந்தாமணியில் வரும் சீவகன் பிறந்த போது அவன் தாய் அவனை **சிந்தாமணியே** என்று அழைத்தார்.
- சிந்தாமணி என்பதற்கு **ஒளி குன்றாத மணி** என்பது பொருள்.
- ‘‘குன்றுதலில்லாத அழகு தமிழ்நடை பெற்றிருப்பதாலும் தமிழ் மாந்தர் தம் நெஞ்சில் வைத்துப் போற்றுவதாலும்’’ இந்நூல் சிந்தாமணி என்று பெயர் பெற்றது.
- சீவகனை எடுத்து வளர்த்த கந்துக்கடன் என்னும் வணிகன் அழைத்த பெயர் சீவகன். எனவே இப்பெயர் வந்தது.
- புலவர்கள் சிந்தித்தவற்றையெல்லாம் தருதலின் சிந்தாமணி என்று பெயர் வந்தது.

### ❖ திருத்தக்கத்தேவர்

- சீவகசிந்தாமணியின் ஆசிரியர்: **திருத்தக்கத்தேவர்**.
- காலம் **கி.பி.9ம் நூற்றாண்டு**. இளமையில் துறவு பூண்டார்
- நாடு : **சோழநாடு**
- சமயம் : **சமண சமயம்**. இவர் எழுதிய வேறுநூல் **நரிவிருத்தம்**.
- வேறுபெயர்கள் : **திருத்தகு முனிவர், திருத்தகு மகாமுனிவர், தேவர்**.
- மைசூர் மாநிலத்தில் உள்ள **சிரவண பெலகொலாக் கல்வெட்டில்** திருத்தக்க தேவர் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

### ❖ சிறப்பு

- அனைத்துச் சமயத்தவரும் விரும்பிக்கற்ற **சமணக் காப்பியம்** - சைவனான குலோத்துங்க மன்னன் விரும்பிக்கற்ற காப்பியம்.
- நூல் முழுமைக்கும் சைவரான **நச்சினார்க்கினியர்** உரை எழுதியுள்ளார்.
- இவர் இருமுறை உரை எழுதினார் என்பர்.
- சைவரான **உ.வே.சா** அவர்கள் முதன்முதலில் பதிப்பித்தார்.

- அவர் பதிப்பித்த முதல் நூலும் **சீவகசிந்தாமணியே** ஆகும்.
- கிறித்துவரான **ஜி.யு.போப்** இதனை **இலியட், ஒடிசியுடன்** ஒப்பிட்டுள்ளார்.

## ❖ சீவகசிந்தாமணியின் செய்திகள்

- இது **நாமகள் இலம்பகம்** முதல் **முக்தியிலம்பகம்** ஈறாகப் **13 இலம்பகங்களைக்** கொண்டது.
- இந்நூலில் சீவகனின் **பிறப்பு முதல் வீடு பேறு** வரை கூறப்பட்டுள்ளது.
- **3143 (அ) 3147** செய்யுள்களை உடையது.
- சீவகன் கதைத் **தலைவன்.** சீவகனின் தந்தை **சச்சந்தன்**, தாயார் **விசயமாதேவி**.
- வளர்ப்புத் தந்தை **கந்துக்கடன்**, வளர்ப்புத் தாய் **சுநந்தை**, அமைச்சன் **கட்டியங்காரன்**.
- ஆசிரியர் **அச்சணந்தி**, மனைவிகள் 8 பேர் நண்பர்கள் **சீதத்தன்**, **புத்திசேனன்**, **புதுமுகன்**, **தேவதத்தன், நபுலன்**.
- இப்பாடலில் சீவகன் மைந்தன் எனவும், சீவகன் தோழன் **நபுலன்** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- **வார்புரி நரம்பு** கொண்டான் எனப்படுபவன் சீவகன்.
- **விருத்தம் என்னும்** பாவினத்தால் அமைந்த முதல் தமிழ்க்காப்பியம் **சீவகசிந்தாமணி** ஆகும். இதனைச் **சுத்தானந்த பாரதியார்** கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும் என்று **தமிழ்த்தாயின் கழுத்தில் அணியும் ஆபரணமாகக்** கூறியுள்ளார்.
- சீவகன் பதுமையார் முதலிய **எட்டு பெண்களைத் திருமணம்** செய்து கொண்டமையாலும் தன் நண்பனுக்கு கோவிந்தையாரை திருமணம் செய்து வைத்தமையாலும் இந்நூலுக்கு **மணநூல் என்ற பெயர் வந்தது**.
- சிந்தாமணியில் **ஓர் அகப்பை முகந்து கொண்டேன் எனக் கம்பர்** கூறியதாகச் செவிவழிச் செய்தி உண்டு.
- ‘‘**ஜைனத்திற்கு** நாட்டிற்கு விளைந்த தொல்லைகள் பல அவற்றால் சிந்தாமணிக்குக் கேடு நேரவில்லை.

வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு
ஊழந்து தோலுரிப் பனபோல் ஒத்த மற்றவற் றருவி
தாழ்ந்து வீழ்ந்தவை முழவின் ததும்பின் மதுகரம் பாடச்
சூழ்ந்து மாமயி லாடி நாடகம் துளக்குறுத் தனவே.
- **திருத்தக்கதேவர்**

## ❖ பொருள்:

- மலையின் மீது வெண்மேகங்கள் தவழ்ந்து செல்கின்றன. அவ்வாறு மலையைவிட்டு வெண்மேகம் நகர்வது பாம்பு தோலுரிப்பதனைப் போன்று இருக்கிறது.
- மேகம் நகர்ந்துவிட்டபின், அம் மலையானது தோலுரிக்கப்பட்ட பாம்புபோல் இருக்கிறது.
- அங்கே வீழ்கின்ற அருவியின் ஒலி, மத்தளம் போன்று ஒலிக்கின்றது. தேன் உண்ணும் - வண்டுகள் பாடுகின்றன, மயில்கள் ஆடுகின்றன, ஆகையால், இக்காட்சி ஒரு நாடகம் நடப்பது போன்று இருக்கிறது.

## ❖ இந்நூல் உணர்த்தும் உண்மைகள்

- அமைச்சரை ஆராய்ந்து தெளிதல் வேண்டும். பெண்வழிச்சேறல் பெருந்துயர் விளைக்கும். தன்னாட்சிரியர் கட்டளைப்படி நடத்தல் வேண்டும்.

➢ பகையை வெல்லக் காலமும் இடமும் வாய்க்குமளவும் தன் எண்ணத்தை வெளிப்படுத்தாதிருத்தல் வேண்டும் எல்லா உயிர்களிடத்தும் எப்போதும் அருளுடையராதல் வேண்டும். நன்றி மறவாதிருத்தல் வேண்டும்.

## குண்டலகேசி

➢ ஆசிரியர் - **நாதகுத்தனார்.**
➢ காலம்: **கி.பி. 8 ம் நூற்றாண்டு**
➢ குண்டலகேசி ஒரு **பௌத்த காப்பியம்**
➢ பாவகை: **விருத்தப்பா**
➢ பாடல்கள்: **கிடைத்தது 19**
➢ குண்டலகேசி என்பதற்கு **சுருண்ட தலைமுடியை உடையவள்** என்று பொருள்.
➢ குண்டலகேசி **விருத்தம், அகல கவி** என்ற வேறு பெயர்களும் உண்டு.
➢ குண்டலகேசியின் வரலாற்றை **நீலகேசி** கூறுகிறது.
➢ வாதக்காப்பியங்கள் என்பவை **குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி**.
➢ இதனை **"குண்டலகேசி விருத்தம்"** என்றும் கூறுவர்.
➢ குண்டலகேசியின் இயற்பெயர் **பத்திரை**
➢ குண்டலகேசி நேசித்து மணந்த கள்வனின் பெயர் **காளன்**.
➢ **காப்பியத் தலைவியால்** பெயர் பெற்ற நூல்.
➢ பௌத்த சமயத்தின் பெருமை கூற எழுந்த காப்பியமான குண்டலகேசி என்னும் நூலுக்கு மறுப்பாகவே **நீலகேசி** எழுதப்பட்டது.
➢ குண்டலகேசி சிறந்த தருக்க நூல் என்று **யாப்பருங்கல விருத்தியால்** இனங்காணப்படுகிறது.

## வளையாபதி

➢ ஆசிரியர் பெயர் தெரியவில்லை
➢ **சமணக்காப்பியம்**
➢ **விருத்தப்பாவால்** ஆனது.
➢ முழுமையாகக் கிடைக்கவில்லை.
➢ கிடைத்தவை **72 பாடல்கள்**
➢ மூலநூல் வைசிக புராணம் **35 வது சருக்கம்**.
➢ **நவகோடி நாராயணன்** என்னும் வணிகரை பற்றிய நூல்.
➢ காலம்: **கி.பி 9** - ஐ சேர்ந்த சிந்தாமணிக்கும் முற்பட்டது.
➢ **புறத்திரட்டு, யாப்பெருங்கல விருத்தியுரை, சிலப்பதிகார உரை, தொல்காப்பிய** உரை ஆகியவற்றில் இருந்தே வளையாபதி செய்யுட் பகுதிகள் திரட்டித் தொகுக்கப்பட்டன.
➢ **மடலேறுதல்** பற்றிக் கூறும் காப்பிய நூல்
➢ ஒட்டக் கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தார் என்று தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் கூறுகிறார்.

## சூளாமணி

➢ ஆசிரியர் : **தோலாமொழித்தேவர்**.

- இயற்பெயர் **வர்த்தமான தேவர்**.
- சமண சமயத்தைச் சார்ந்தவர்.
- காலம் கி.பி. **7-ம் (அ) 10 –ம் நூற்றாண்டு**.
- ஆதரித்த கார்வெட்டி நகர் மன்னன் விசயன். இந்நூல் **சருக்கம் 12, விருத்தப் பாக்கள் 2330**.
- மூல நூல் வட மொழியில் உள்ள **ஆருகத மாபுராணம்** - இதன் கதை **ஸ்ரீ புராணத்திலும்** உள்ளது.
- **திருத்தக்கத்தேவர், தோலா மொழித்தேவர்** ஆகிய இருவரைப்பற்றியும் மைசூர் மாநிலத்தில் உள்ள **சிரவண பெலகோலாக் கல்வெட்டுக்** குறிப்பிடுகிறது.
- இந்நூலை பதிப்பித்தவர் **சி.வை. தாமோதரன் பிள்ளை** (முதல் பதிப்பு 1889)
- எல்லா வகையிலும் **பெருங்காப்பியமாகும் கருத தகுந்த சிறப்புடைய ஐஞ்சிறுக்காப்பிய நூல் சூளாமணி**.
- விருத்தப்பாவைக் கையாள்வதில் இவர் சீவகசிந்தாமணி ஆசிரியரைப் பின்பற்றிய போதிலும் சில இடங்களில் அவரையும் மிஞ்சிவிட்டார் என்று கூறலாம் என்பார் **மு.வரதராசனார்**.
- எல்லா வகையிலும் **பெருங்காப்பியமாகக்** கருதத்தக்க சிறப்புடையது.
- உலகின் முடிக்கோர் சூளாமணி யாயினன் என தலைவன் சிறப்பிக்கப்படுகிறான்.
- சேந்தன் தமிழ்க் கிழவன் முன்னிலையில் அரங்கேற்றம்.
- பாகவதம், சூளாமணி கதை நிகழ்ச்சிகளில் ஓரளவு ஒப்புமை.
- சூளாமணியின் கதாநாயகன் **திவிட்டன்**.
- சிரவண பெலகொலா –'**சமண வெள்ளைக்குளம்**'

## நீலகேசி

- நீலகேசி என்றால் **கருத்தக் கூந்தலை** உடையவள் என்று பொருள்.
- **சருக்கம் 10, 894 பாடல்கள், நீலகேசித்திரட்டு** என்ற வேறு பெயரும் உண்டு.
- **பௌத்தருடன் வாதிக்கும் நூல்**.
- குண்டலகேசி என்ற நூலுக்கு எதிராக எழுதப்பட்ட சமண நூல் **நீலகேசி**
- **சமண முனிவர் முனிச்சந்திரனை** நீலி என்ற பெண் அச்சுறுத்தி மயக்க முயல்கிறாள். மயங்காத முனிவர் அறிவுரை கூற அவள் திருத்தி சமண மதத்தை ஏற்றுப்பிற சமய வாதிகளை வெற்றி கொள்கிறாள்.
- சமணம் அல்லாத பிற இந்திய சமயங்களின் கோட்பாடுகளைத் தருக்க முறையில் மறுத்துரைக்கும் நூல். உரை ஆசிரியர் **சமய திவாகர வாமன முனிவர்**. இவ்வுரைக்குச் **சமய திவாகர விருத்தி** என்ற பெயரும் உண்டு. முதன் முதலில் பதிப்பித்தவர் **சக்கரவர்த்தி நயினார் (1936)**.
- **நாட்டுவளம், நகர்வளம்** பாடுதலில் சிறந்து விளங்கும் நூல்.
- சமய தருக்க நூல்கள் **குண்டலகேசி அஞ்சனகேசி, காலகேசி, நீலகேசி**
- கிபி 7 நூற்றாண்டுக்கு முற்பட்டது என்றவர் **தெ.பொ.மீ**
- 5 நூற்றாண்டு என்றார் புத்துரை வழங்கிய **பெருமழைப் புலவர்**
- குண்டலகேசி முழுதும் கிடைக்காத நிலையில் அதன் கதையை அறிய உதவுவது நீலகேசியிலுள்ள குண்டலகேசிலுள்ள **குண்டலகேசிவாதச் சுருக்கம்**.
- இந்நூலுக்கு சமய திவாகர விருத்தி என்னும் உரை எழுதியிருப்பது சமய திவாகர வாமன முனிவர் அல்லது **வாமணாசிரியர்** அல்லது **மல்லிசேனாசிரியர்**.

## நாககுமார காவியம்

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை. காலம் கி.பி. 10 –ம் நூற்றாண்டு **சருக்கம் 5, பாடல்கள் 170**.
- நாகபஞ்சமி நோன்பின் சிறப்பைக்கூறும் நூல். வேறுபெயர் - **நாகபஞ்சமி கதை**
- **நாககுமார காவியம், நாக பஞ்சமி** எனவும் அழைக்கப்படும்.
- இந்நூலை முதன் முதலில் அறிமுகம் செய்தவர் **சி.வை. தாமோதரம் பிள்ளை**
- முதலில் பதிப்பித்தவர் புலவர் **மு. சண்முகம் பிள்ளை (1978)**
- இதன் தலைவன் **519 பெண்கள்** மணக்கிறான்.
- மணத்தையும் போகத்தையும் மிகுதியாகக் கூறும் **சமண நூல்**.

## உதயணகுமார காவியம்

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை,**காலம் கி.பி. 15-ம் நூற்றாண்டு**.
- காப்பியம் என்று அழைக்கப்பட்ட போதும் காப்பிய அமைதி சிறிதும் இல்லை.
- மூலநூல் - **பெருங்கதை, 6 காண்டங்கள், 369 விருத்தப்பாக்கள். உதயணன் குலம் குருகுலம்.**
- **6 காண்டங்கள் உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம்** பெருங்கதையின் சுருக்கம் என கூறப்படும் காப்பியம் இக்காப்பியத்தின் வேறு பெயர் உதயணன்.
- **வத்தவ தேசத்து அரசன் உதயணன்** பற்றிய கதையைக் கூறும் இந்நூல் பெருங்கதையினின்று வேறுபடுகின்றது.
- அவத்தி அரசன் பிரச்சோதனன், வத்தவளாட்டு மன்னன் உதயணனை சிறையிடல்
- அப்போது உதயணனுக்கு உதவியவர் அமைச்சன் **யூகி**
- உதயணன் பிரச்சோதனன் மகளுக்கு யாழ் கற்றுக்கொடுத்தல் மணத்தல் கடைசி துறவு பெருங்கதையில் முதல் இடை, கடைப்பகுதியிலுள்ள கதைநிகழ்ச்சிப் பாடல்கள் சில கிடைக்கவில்லை. இதை நிறைவு செய்யும் விதமாக அமைந்தது **உதயண குமார காவியம்**.

## யசோதரகாவியம்

- ஆசிரியர் **வெண்ணாவலூர் உடையார் வேள் - சருக்கம் 2, பாடல்கள் 320**
- வடமொழியில் எழுதப்பட்ட **உத்திர புராணத்திலிருந்து** இதன் கதை எடுக்கப்பட்டது என்றும், **புட்பதத்தர் எழுதிய யசோதர சரிதத்தின் தழுவல்** என்றும் கூறுவர்.
- **உயிர்க்கொலை தீது** என்று உணர்த்தும் நூல்.
- **இசை காமத்தைத் தூண்டும்** என வற்புறுத்தப்படும் நூல்
- யசோதரகாவியம் **சமணநூல், விஜயநகர அரசுக்கு** சற்று முந்தியது என்றவர் **தெ.பொ.மீ**
- **மாரிதத்தன் கதை** வேறு எந்நூலிலும் இல்லை
- முதலில் பதிப்பித்தவர் **தில்லையம்பூர் வேங்கடராம அய்யங்கார் (1908**)
- உதய நாட்டு மன்னன் **மாரிதத்தன்.** இவன் மாரிதேவிக்கு உயிர்ப்பலி கொடுக்க முயன்றான்.
- உயிர்ப்பலியாக **அபயருசி** அவன் **தங்கை அபயமதி** இருவரும் இருந்தனர்.
- அபயருசி சிரித்துக் கொண்டே உயிர்ன்கொலையின் விளைவை மாரிதத்தனுக்கு எடுத்துரைக்கின்றாள். இவ்வாறு அவன் எடுத்துரைப்பதே யசோதரனின் கதை ஆகும்.
- ஏழுவகை நரகங்கள் கூறப்படுகின்றன அவை 1. இருளில் இருள் 2. இருள் 3. புகை 4. சேறு 5. மணல் 6. புரல் 7. மருள்.

❖ <u>பெருங்கதை</u>

- ஆசிரியர் கொங்குவேள் - உதயணன் வரலாற்றை முதலில் தமிழில் கூறிய நூல் - சமணக் காப்பியம் இதற்கு கொங்குவேள் மாக்கதை என்ற பெயரும் உண்டு.
- உதயணன் குலம் **<u>குருகுலம்</u>**
- பெற்றோர் **<u>சதானிகன், மிருகாபதி.</u>**
- நாடு **<u>வத்தவ நாடு</u>**
- தலை நகரம் **<u>கோசாம்பி</u>**.

APPOLO STUDY CENTRE

# இயல்-6
# பெரியபுராணம்

❖ **ஆசிரியர் குறிப்பு**

- பெரியபுராணத்தை அருளியவர் சேக்கிழார்.
- இவர், தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள **குன்றத்தூரில்** பிறந்தவர்.
- **வேளாண் மரபினர்**.
- இவரது இயற்பெயர் **அருண்மொழித்தேவர்**.
- இவர், **அநபாயச்சோழனிடம்** தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவர்.
- இவர், **உத்தமசோழப் பல்லவர்** என்னும் பட்டம் பெற்றவர்.
- இவரது காலம் கி.பி. **பன்னிரண்டாம் நூற்றாண்டு**.
- தொண்டர் சீர் பரவுவார், **தெய்வச் சேக்கிழார், தெய்வப்புலவர்** எனப் போற்றப்படுகிறார்

❖ **நூற்குறிப்பு**

- **12-ம் திருமுறையாக உள்ள நூல் பெரியபுராணம்.**
- **பெரியபுராணம் 2 காண்டம் 13 சருக்கம் 4286 பாடல்கள்** கொண்டது.
- **திரு – மேன்மை, தொண்டர் - சிவனடியார், புராணம்** - வரலாறு.
- **உலகெல்லாம்** என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பட்ட நூல் **பெரிய புராணம்**
- நூலின் முதல், இடை, கடை என்ற மூவிடத்தும் உலகெல்லாம் என்ற சொல் வருகிறது.
- **தனியடியார் 63 + தொகையடியார் 9 = சிவனடியார் 72**
- தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவர்.
- அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் **'பெரியபுராணம்'** என்னும் பெயர் பெற்றது.
- இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர், '**திருத்தொண்டர் புராணம் (அ) திருத்தொண்டமாக்கதை** என்பது. தில்லை நடராசப்பெருமான், **'உலகெலாம்'** என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றதெனவும் கூறுவர்.
- இவரது பாடல்கள் அனைத்தும் தெய்வமணம் கமழும் தன்மையுடையன. எனவேதான், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், '**பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ**' எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார்.
- **உலகம், உயிர், கடவுள்** ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான், 'பெரியபுராணம்' **என்பார் திரு.வி. கலியாணசுந்தரனார்**.
- பெரியபுராணம் தமிழின் **இரண்டாவது தேசிய காப்பியம்**.
- முதல் **தேசிய காப்பியம் சிலப்பதிகாரம்**.

# அப்பூதியடிகள்

- அப்பூதியடிகள் **திங்களூரில்** தோன்றியவர்; குற்றமற்றவர்; சிவபக்தி மிக்கவர்: திருநாவுக்கரசரிடம் பேரன்புடையவர்.
- அவ்வன்புக்கு அறிகுறியாகத் தம் மக்கள், அளவை, நிறைகோல், பசு, தாம் வைத்த தண்ணீர்ப்பந்தல் ஆகிய அனைத்திற்கும் **திருநாவுக்கரசு என்னும் பெயரையே** சூட்டி மகிழ்ந்தவர்.
- **திங்களூர் வந்த திருநாவுக்கரசர்** அங்குக் கண்ட **தண்ணீர்ப் பந்தலுக்குத்** தம் பெயர் இருப்பதனைக் கண்டு வியப்புற்றார்.
- அப்பெயர் வைத்தவரான அப்பூதியடிகளின் அன்பைக் கேட்டறிந்து, அவரது இல்லம் சென்றார்.
- வந்தவர்க்குத் திருவமுது படைப்பதற்காக வாழைக்குருத்து அரியச் சென்ற அப்பூதியடிகளின் **மூத்த மகன், பாம்பு தீண்டியதால் இறந்தான்.**
- திருநாவுக்கரசருக்குத் தெரியாதவாறு இது மறைக்கப்பட்டது.
- திருநாவுக்கரசு இதனையறிந்து, **'ஒன்றுகொலாம்' என்னும்** திருப்பதிகம் பாடி, இறந்த பிள்ளையை எழுப்பித் திருவமுது செய்தருளினார்.
- **72 சிவனடியார்களில்** ஒருவர் அப்பூதியடிகள். பிறந்த ஊர் **திங்களூர்**.
- அப்பூதியடிகளின் அன்பைக் கேட்டறிந்து திருநாவுக்கரசர் அவரைக் காணச் சென்ற இடம் திங்களூரில் உள்ள அவரது இல்லம் ஆகும்.
- **களவு, பொய், காமம், கோபம்** முதலிய குற்றம் நீக்கியவர்.
- தம் வீட்டிலுள்ள அனைத்து பொருட்களுக்கும் (தம் மக்கள், அளவை, நிறைகோல், பசு, தண்ணீர் பந்தல்) திருநாவுக்கரசர் எனப் பெயரிட்டவர் அப்பூதியடிகள்.
- திங்களூரில் திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல் அமைத்தவர் அப்பூதியடிகள்.
- **கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலில் எறிந்தபோது**, அக்கல்லினையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய **திருநாவுக்கரசர்**
- சிவபெருமானை அருளும்படி வேண்டி, **ஒன்றுகொலாம் என்ற திருப்பதிகம்** பாடி திருநாவுக்கரசர் அப்பூதியடிகள் மகன் மூத்த திருநாவுக்கரசை உயிர் பிழைக்கச் செய்தார்.

அப்பூதியடிகள் தம் மனையிலுள்ள அனைத்திற்கும்
திருநாவுக்கரசு என்னும் பெயரையே சூட்டல்

களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொடு மேதி மற்றும்
உளஎலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக லாற்றார்.

❖ **பொருள்**

- அப்பூதியடிகள் களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீக்கியவர்: வளமிகு இல்லற வாழ்வினர்: தம் வீட்டிலுள்ள அளவைக் கருவிகள், துலாக்கோல், மக்கள், பசுக்கள், எருமைகள், மற்றுமுள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசு என்னும் திருப்பெயரையே சூட்டி வாழும் வழக்கமுடையவர்.

அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனில் பரிவகற்றிக்
குளம்நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்ந்தூங்கும் பரப்பின்தாய்
வளம்மருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

❖ **<u>பொருள்</u>**

➢ அளவற்ற மக்கள் நடந்துசெல்லும் வழியில், கோடையின் மிகுந்த வெப்பத்தினைப் போக்கியருளும் கருணைமிக்க பெரியோர் உள்ளம் போன்றும் நீர்த்தடாகம் போன்றும் அமைக்கப் பெற்ற குளிர்ச்சி நிறைந்த தண்ணீர்ப்பந்தலைத் திருநாவுக்கரசர் வந்து சேர்ந்தார்.

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்தனை எம்மருங்கும் தாங்கண்டார்.

❖ **<u>பொருள்</u>**

➢ தண்ணீர்ப்பந்தலை வந்தடைந்த **<u>வாகீசர் (திருநாவுக்கரசர்)</u>** இளந்தென்றல் காற்று வீசும் குளிர்ச்சிமிக்க தண்ணீர்ப்பந்தலையும் அமுதமாகிய தண்ணீரையும் கண்டார். அப்பந்தலில், திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் என்னும் பெயர் அழகாக எழுதியிருப்பதனையும் பார்த்து வியந்தார்.

ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறுமென எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார்.

❖ **<u>பொருள்</u>**

➢ அப்பூதியடிகளிடம்**<u>, "கங்கையைச் சடைமுடியில் தாங்கிய சிவபெருமானின்</u>** அடியார்களுக்காக ஊரெல்லையில், நீவிர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் உம்பெயர் எழுதாமல், வேறு பெயர் எழுதிய காரணமென்ன? சொல்வீராக'' என்று, குற்றமற்றவராகிய திருநாவுக்கரசர் மொழிந்தார்.

பொங்குகடல் கல்மிதப்பிற் பொந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்புமென இயம்பினார்.

❖ **<u>பொருள்</u>**

➢ கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலில் எறிந்த போது, அக்கல்லினையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசரின் பெருமையினை, இவ்வுலகத்தில் அறியாதார் யாருளர்? மங்கலமாகிய திருவேடத்துடன் நின்றும், இவ்வகை மொழிந்தீர்! நீர் எங்குறைவீர்? நீர்தாம் யார்? கூறுவீர்'' என்று இயம்பினார், அப்பூதியடிகள்.

திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிற துறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துயர்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார்.

❖ **<u>பொருள்</u>**

- அந்தணராகிய அப்பூதியடிகள் கூறியதைக் கேட்ட திருநாவுக்கரசர், அடியார்மீது அவர் வைத்திருந்த பெருமையினை அறிந்து, ‘பிற சமய நெறியினின்று விடுபட்டு ஏற்றம் காணச் **<u>“சூலை”</u>** என்னும் பெருநோயால் ஆட்கொள்ளப்பட்டுச் சைவ சமயம் வந்தடைந்த தெளிவில்லாத உணர்வுடைய சிறியவனே யான்’ எனக் கூறினார்.

அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுரி கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரண கமலம் பூண்டார்.

❖ **<u>பொருள்</u>**

- திருநாவுக்கரசர், தம்மை இன்னாரென்று அறியும்படி உரைத்தருள, உண்மை அறிந்து கொண்ட அப்பூதியடிகளுடைய கைம்மலர்கள் தலைமேல் குவிந்தன: கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது: உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறியத் தரையில் வீழ்ந்து, திருநாவுக்கரசருடைய திருவடித் தாமரைகளை வணங்கினார். உரை தடுமாறியது: தாமரைகளைத் தலையால் வணங்கினார்

ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார்.

❖ **<u>பொருள்</u>**

- அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை ஓர் இருக்கையில் உட்காரச் செய்தார்: விருப்பமுடன் பூசித்து வழிப்பட்டார்: திருநீற்றுக் காப்பேந்தி அணிந்தார்: மனமகிழ்வுற்றவராய் நாடுய்ய வந்தவரைத் திருவமுது செய்தருள விண்ணப்பம் செய்தார். திருநாவுக்கரசரும் அதற்கு இசைந்தார்.

தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் னமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வாஎன விரைந்து விட்டார்.

❖ **<u>பொருள்</u>**

- அப்பூதியடிகள், திருநாவுக்கரசருக்குப் படைக்கத் தூய்மையான நல்ல காய்கறிகளைக் கொண்டு, அறுசுவையுடன் இனிய அமுதாக்கிச் செய்தார். பின்னர் அவர், தங்களின் குழந்தைகளுள் மூத்த திருநாவுக்கரசை அழைத்து, மிக இளமையான வாழைக்குருத்தை விரைவாகச் சென்று அரிந்து வருமாறு கூறினார்.

நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே

❖ **<u>பொருள்</u>**

- ‘‘நல்ல தாயும் தந்தையும் ஏவ, அதன்படி நான் இப்பணி செய்யும் பேறு பெற்றேன்’ என்று, மூத்த திருநாவுக்கரசு மனமகிழ்ந்து விரைந்து தோட்டத்தினுள்

நுழைந்தான்: பெரிய வாழையின் வளமான இளங்குருத்தினை அரியும்போது, **பாம்பொன்று மிக வருந்தும் வகையில்** கூரிய பற்களால் , அவன் **உள்ளங்கையில் தீண்டியது**.

தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம்பதைத்து உற்று நோக்கி உதிரம்சேர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார்.

❖ **பொருள்**

- மயங்கி வீழ்ந்த மூத்த மகனை, அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் உள்ளப் பதைப்புடன் உற்றுநோக்கினர்: கையினில் குருதி வழியும் வடுவையும் உடற்குறியையும் கண்டு,'விடம் ஏறியதால், இறந்தான்' என அறிந்துகொண்டனர். அறிந்தும், மனவருத்தம் சிறிதுமின்றித் திருநாவுக்கரசர், திருவமுது செய்வதற்குரிய (உணவு உண்பதற்குரிய) சூழலை எண்ணினார்.

ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த என்றாலும் விளைந்த தன்மை
யாதும்ஒன் றுரையார் இப்போது இங்கவன் உதவான் என்றார்.

❖ **பொருள்**

- நான்மறை கற்று வாய்மை தவறாத அப்பூதியாரை நோக்கி, "**அன்புடைய உங்கள் மூத்த பிள்ளையையும் திருநீறு அணியச் செய்வதற்குக் காட்டுவீராக**" என்றார். ஆதனைக் கேட்ட அப்பூதியடிகள், நிகழ்ந்த செயல் ஒன்றனையும் கூறாமல், "இப்போது, இங்கு அவன் உதவான்" என்றார்.

அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி
இவ்வுரை பொறாதென் உள்ளம், என்செய்தான் இதற்கொன்
றுண்டால்
மெய்விரித் துரையும் என்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி.

❖ **பொருள்**

- அப்பூதியடிகளார் கூறியதைக் கேட்டவுடன், இறைவன் திருவருளால், செம்மை மிகுந்த திருநாவுக்கரசரின் திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்ப்பட்டது. அப்பூதியடிகளை நோக்கித் தாங்கள் கூறிய கருத்தினை என்னுள்ளம் ஏற்கவில்லை. உம் மகனுக்கு நிகழ்ந்தது யாது? உண்மை விரித்து உரையும் என்று மொழிய, அப்பூதியடிகளும் நடந்த நிகழ்வை விளம்பலுற்றார்.

நாவினுக் கரசர் கேளா நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவிரித் தன்மை செய்வார் என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்.

❖ **பொருள்**

- அது கேட்ட திருநாவுக்கரசர், நீர் செய்த வண்ணம் நன்று: இவ்வாறு செய்பவர், இவ்வுலகில் யாவர் உள்ளார்?" என்று கூறி, முன்னே எழுந்து சென்று, உயிர் நீங்கிய அப்பிள்ளையின் உடலைக் கொண்டுவரச் செய்தார். சிவபெருமானை

அருளும்படி வேண்டி, 'ஒன்றுகொலாம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப் பாம்பின் விடத்தைப் போக்கியருளினார்.

❖ **பெரியபுராணம் தோன்றக்காரணமாக இருந்தவை:**
- ➢ சுந்தரர் பாடிய **திருத்தொண்டர் தொகை (முதல் நூல்)**
- ➢ நம்பியாண்டார் நம்பி பாடிய **திருத்தொண்டர் திருவந்தாதி (வகை நூல்)**
- ➢ திருத்தொண்டர் **புராணம் விரிநூல்** (சார்பு நூல்)

❖ **மேற்கோள்கள்**
- ➢ "பிறவேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்".

❖ **சிவனடியார்கள்**
- ➢ சிவனடியார்கள் மொத்தம் **72 பேர்**. அதில் **63 பேர் நாயன்மார்கள்.**
- ➢ 63 நாயன்மார்களில் **3 பேர் பெண்கள் காரைக்கால் அம்மையார், இசைஞானியார், மங்கையர்க்கரசியார்**.
- ➢ இதில் **27 நாயன்மார்கள்** பன்னிரு திருமுறைகளை இயற்றியுள்ளனர்.

❖ **9 தொகையடியார்கள்**
- ➢ தில்லைவாழ் அந்தணர்
- ➢ பொய்யடிமை இல்லாத புலவர்
- ➢ பக்தராய்ப் பணிவார்கள்
- ➢ பரமனையே பாடுவர்
- ➢ சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்
- ➢ திருவாரூர்ப் பிறந்தவர்கள்
- ➢ முப்பொழுதும் இறைவன் திருமேனி தீண்டுவார்
- ➢ முழுநீறு பூசிய முனிவர்
- ➢ அப்பாலும் அடிசார்ந்த அடியார்

❖ **சிறப்புகள்**
- ➢ சுந்தரமூர்த்தி நாயனார், **நாயன்மார்களைப்** பற்றித் **திருத்தொண்டர்த் தொகையை 11** பாடல்களால் பாடினார். (8ம் நூற்றாண்டு).
- ➢ நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர்தொகையில் குறிப்பிட்ட தொகையடியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாடல் வீதம் 89 பாடல்களாக **திருத்தொணடர்த் திருவந்தாதியை பாடினார்**.
- ➢ அருண்மொழித்தேவர் இதனை விரித்துப் பாடினார்.
- ➢ காப்பியம் என்ற காரணத்தால் **"ஒப்பற்ற காப்பியத் தலைவராக ஒருவரைப் போற்ற வேண்டும்"** என்ற விதிக்கு பொருந்திச் சுந்தரமூர்த்தி நாயனாரை அமைத்தார்.
- ➢ தமிழ் **உயிர் எழுத்துக்கள் - 12, சைவத்திருமுறைகள் - 12, பெரியபுராணம் - 12 ம் திருமுறை மற்றும் 12ம் நூற்றாண்டு**.
- ➢ சமண நூலான சீவகசிந்தாமணியின்பால் ஈடுபாடு கொண்ட **அநாபய சோழன்** மனத்தைச் சைவத்தின் மீது திருப்பவே சேக்கிழார் **திருத்தொண்டர் புராணம்** பாடினார் என்பர்.
- ➢ சேக்கிழாரைக் கல்வெட்டு **"இராமதேவர்"** என்று குறிக்கப்படுகிறது.
- ➢ பெரியபுராணம் ஒரு சார்பு நூல். அருணகிரிக்கு முருகன் "**முத்தைத்தரு**" என்று அடியெடுத்து கொடுத்தார்.
- ➢ சேக்கிழாருக்குப் புராணம் பாடியவர் கொற்றவன் குடி **உமாபதி சிவாச்சாரியார் (14 ஆம்** நூற்றாண்டு).

- பெரியபுராணம் பக்தியை உயிராகவும், பிறவற்றை உடலாவும் கொண்ட காவியமெனக் கூறலாம்.
- "ஒவ்வொரு தமிழ் மாணவனும் சிறப்புக்குரிய பெரியபுராணத்தைப் படிக்க வேண்டும்"– **ஜி.யு.போப்.**
- இதனை ஓர் "**உலகப்பொதுமறை**" என்று **தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்** பாராட்டுகிறார்.
- பெரியபுராணம் தேவாரம் பாடிய மூவர் உள்ளிட்ட **அறுபத்து மூன்று நாயன்மார்களின்** வரலாற்றினை இந்நூல் கூறுகின்றது.
- இடைக்காலத்து இலக்கியத்துள் நாட்டுமக்களின் வாழ்க்கைப் பற்றி அறிவிக்கும் பெரியநூலாகத் திகழ்வது பெரியபுராணம்.

"பெரிது பெரிது புவனம் பெரிது .....
தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிது"

- என்று **ஔவையார் பாடியதனாலும்**, மிகவும் ஆழ்ந்த பக்தியில் தோய்ந்த சைவப் பெரியோர்களின் ஒவ்வொரு கதையும் உண்மையில் வியப்பினை ஏற்படுத்துவதனாலும் இந்நூல் **பெரியப்புராணம்** எனப்பெயர் பெற்றது

## நாலாயிரதிவ்ய பிரபந்தம்

- ஆழ்வார்களின் தொகுப்பு நாலாயிரத்திவ்ய பிரபந்தம். தொகுத்தவர் **நாதமுனி.**
- பாடியவர்கள் ஆழ்வார்கள் ஆழ்வார்கள் மொத்தம் **12 பேர்**. மொத்தப்பாடல்கள் **3776.**
- இறைவனின் திருவடியில் கல்யாண குணங்களில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள்.
- நாலாயிரத்திவ்ய பிரபந்தம் எனப்பெயரிட்டவர் **நாதமுனி**.
- வேறுபெயர்கள் **ஆன்ற தமிழ் மறை, திராவிடசாகரம்**.
- வைணவ மரபில் இறைவனைப் பாடுதல் என்பது **மங்களாசாசனம் செய்தல்**.
- நாலாயிரத்திவ்ய பிரபந்தம் **4 பிரிவுகளை** உடையது.

முதலாயிரம் | மூத்ததிருமொழி | திருவாய்மொழி | இயற்பா

- பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் **முதலாழ்வார்கள்** எனப்படுவர்.
- இவர்கள் மூவரும் அந்தணர்கள். முதலாழ்வார்கள் மூவரும் சந்தித்த இடம் **திருக்கோவிலூர்.**
- முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசையாழ்வாரைச் சந்தித்த இடம் **திருவல்லிக்கேணி**.
- பெரும்பாலான ஆழ்வார்கள் கண்ணனிடம் பக்தி கொண்டவர்கள்.
- திருமாலுக்காக திருப்பள்ளியெழுச்சி பாடியவர் **தொண்டரடிபொடியாழ்வார்**.
- பாரத மாதாவுக்கு திருப்பள்ளியெழுச்சி **பாடியவர் பாரதியார்**.
- திருமலை முழுமுதற் கடவுளாய்க் கொண்டு போற்றப்படும் சமயம் **வைணவம்**.
- கண்ணி நுண் சிறுதாம்பு – மதுரகவியாழ்வார்
- திருமாலைப் பாடாமல் நம்மாழ்வாரையே தெய்வமாகப் பாடியவர் மதுரகவியாழ்வார்

❖ **குலசேகர ஆழ்வார்**

- நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தில் குலசேகர ஆழ்வார் பாடிய பாடல் **பெருமாள் திருமொழி**.

- **இராமபிரானிடம் பக்தி மிகுதியாக கொண்டதால்** குலசேகரப்பெருமாள் என அழைக்கப்பட்டார்.
- குலசேகர ஆழ்வார் பிறந்த ஊர் - கேரள மாநிலத்திலுள்ள **திருவஞ்சிக்களம்**.
- குலசேகர ஆழ்வார் வடமொழியில் முகுந்தமாலை என்ற நூலையும், தமிழ்மொழியில் பெருமாள் **திருமொழி** என்ற நூலையும் எழுதியுள்ளார். காலம் **கி.பி. 9-ம் நூற்றாண்டு**
- திருவரங்கத்தின் மூன்றாவது மதிலை கட்டியவர் **குலசேகரர்**. மூன்றாவது மதிலைக் கட்டியதால் அந்த வீதியின் பெயர் **குலசேகரன் வீதி**
- ‘‘தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் குடி போன்றிருந்தேனே’’
- குலசேகராழ்வார் பாடல் **முதலாயிரம் தொகுப்பில்** உள்ளது.

❖ **திருப்பாவை**

- திருப்பாவையில் இடம் பெற்ற **நான்காவது பாடல்** திருமாலைப் போற்றி பாடப்பட்டுள்ளது.‘
- திருப்பாவை என்பது பக்திக்காலத்தில் எழுதப்பட்ட உயரிய **பக்தி இலக்கியமாகும்**.
- திருப்பாவையை **வேதம் அனைத்திற்கும் வித்து** எனப் புகழ்வர் - **இராமானுஜர்**
- நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் **3 வது பிரபந்தமாக** வைக்கப்பட்டிருப்பது **திருப்பாவை**.
- திருப்பாவை பாக்கள் **30 வெண்டளையால்** வந்த **எட்டடி நாற்சீர் கொச்சக் கலிப்பா வகையைச்** சார்ந்தது.
- திருப்பாவையை நமக்காக அருளியவர் **ஆண்டாள்**. இவர் காலம் **8 ம் நூற்றாண்டின்** இறுதி
- ஆழ்வார் என்னும் சொல்லுக்கு ஆழ்ந்தறியும் அறிவை கருவியாக உடையவர் என்றும், எம்பெருமானுடைய மங்கலக் குணங்களில் ஆழங்காற்பட்டவர் என்றும் பொருள்.
- ஆழ்வார்களின் நாலாயிரத்திவ்ய பிரபந்தத்திற்கு உரை வழங்கியவர் **பெரிய வாச்சான் பிள்ளை**.

# திருவிளையாடற் புராணம்

**- பரஞ்சோதி முனிவர்**
**(பரஞ்சோதி விளையாட்டு பிள்ளை)**

## திருவாலவாய்க் காண்டம்

### (தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்)

❖ **முன்கதைச் சுருக்கம்**

- எந்நாட்டவர்க்கும் பொதுவாக இருப்பதுடன், தென்னாட்டில் தனது அருள் விளையாடலை நிகழ்த்தியவர் தென்னாடுடைய **சிவபெருமான்**.
- தமிழ்ப்புலவர்கள் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை உறுதிப்படுத்தவே **திருவிளையாடல் புராணம்** முதலிய புராணங்களை இயற்றியதாகக் கொள்ளலாம்.
- புலவர்தம் புலமைத் திறத்தை அறிய இறைவனை வேண்டிச் சங்கப்பலகையைப் பெற்றனர்.
- சங்கப்புலவர் **நாற்பத்தெண்மரின்** கருத்துப்போரைத் தீர்க்க இறைவனே தலைமைப்புலவராய் எழுந்தருளினார்.

➢ அவரையும் சேர்த்துச் சங்கப்புலவர் **நாற்பத்தொன்பதின்மர்** ஆயினர்.
➢ இச்சமயத்தில் வங்கிய சேகரபாண்டியனின் மகன் வங்கிய **சூடாமணிபாண்டியன்** மதுரையின் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றான்.
➢ அவன், இறைவனுக்குச் **சண்பகமாலை சாத்தி** வழிப்படக்கருதிச் சண்பக நந்தவனத்தை ஏற்படுத்தினான்.
➢ இதனால், சூடாமணி பாண்டியனுக்குச் **சண்பகப் பாண்டியன்** என்னும் பெயர் வழங்கலாயிற்று.
➢ அவன் ஒரு சமயம், தன் காதல் மனைவியுடன் சண்பகவனத்திற்குச் சென்றான்.
➢ அவ்வேளையில் மெல்லெனப் புகுந்த இளந்தென்றல் புதுமணத்தை வீசியது.
➢ அப்படியொரு மணத்தை இதுவரை நுகர்ந்திராத பாண்டியனின் மனத்தில் ஓர் ஐயம் எழுந்தது.
➢ அது தீர்ந்ததா என்பதனை விளக்குவதே நம் பாடப்பகுதியாகும்.

**இறைவனிடம் தருமி வேண்டல்**

ஐய யாவையும் அறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து)
உய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்

❖ **பொருள்**
➢ தருமி இறைவனிடம், எல்லாவற்றையும் அறிந்த இறைவனே! நீங்கள், பாண்டியன் ஐயத்தை நீக்கும் கருத்தைக் கவியாகப் பாடியளித்து அருள்புரிய வேண்டும்' என வேண்டினான்.

தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் 'கொங்குதேர் வாழ்க்கை' யின்தமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்னல் தீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினான்.

❖ **பொருள்**
➢ பாண்டியர் குலத் தெய்வமாகிய **சொக்கநாதர் கொங்குதேர் வாழ்க்கை** எனத் தொடங்கும் பாடலைச் சொல்லினிமை தோன்ற இயற்றித் தருமிக்கு வழங்கினார். தருமி தன்மனத்துயர் நீங்க, அதனைப் பணிவுடன் பெற்றுச் சென்றான்.

அளக்கில் கேள்வியார் அரசன் முன்புபோய்
விளக்கி அக்கவி விளம்பி னார்கடன்
உளக்க ருத்துநேர் ஒத்த லால்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான்.

❖ **பொருள்**
➢ அளவில்லாத நூலறிவுடைய சங்கப் புலவர்கள் பாண்டியனிடம் சென்று, அப்பாடலின் பொருளை விளக்கினார்கள்.
➢ மீன்கொடியை உடைய பாண்டியனின் கருத்திற்கேற்றவாறு அவ்விளக்கம் பொருந்தி வந்தமையால், அவன் மனமகிழ்ந்தான்.

வேந்தன் ஏவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி அறுக்கும் நம்பியை

நேர்ந்து கீரனில் லெனவி லக்கினான்.

❖ <u>பொருள்</u>

➢ பாண்டியனின் ஏவலால், புலவரோடும் திரும்பிச்சென்று, கழகத்தின் வெளியில் தொங்கிய சிறந்த பொன் முடிப்பினை அறுத்தெடுக்கும் தருமியைக் கீரன் எதிர்ப்பட்டு **'நில்'** எனத் தடுத்தான்.

செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டஅப் பனவன் என்னைநீ
மையுண் கண்டஇவ் வழுவு பாடலைக்
கையுள் நல்கினாய் கதியி லேற்கெனா.

❖ <u>பொருள்</u>

➢ தருமி, இறைவன் அளித்த பாடலை அவன் திருமுன் வைத்து, 'நீலநிறக் கழுத்தினை உடைய இறைவனே! குற்றமுள்ள பாடலை நீ எனக்கு அளித்தது ஏன்?' என மனவருத்தத்துடன் கேட்டான்.

ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநம் கவிக்குக் குற்றம் இயம்பினார் என்னா முன்னம்
கீரனஞ் சாது நானே கிளத்தினேன் என்றான் நின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

❖ <u>பொருள்</u>

➢ புலவர்கள் நிறைந்த அவையில் நுழைந்த இறைவன், அவையினரை நோக்கி, "என் பாடலில் குற்றம் கூறியவர் யார்"? எனக் கேட்டார்.

➢ அவ்வாறு அவர் கேட்டு முடிப்பதற்குள்,"நானே குற்றம் கூறினேன்" என நக்கீரன், அஞ்சாது எழுந்து கூறினான்.

➢ குற்றம் யாதென இறைவன் கேட்டார்.

சொற்குற்றம் இன்று வேறு பொருட்குற்றம் என்றாள் தூய
பொற்குற்ற வேணி அண்ணல் பொருட்குற்றம் என்னை?
என்றான்
தற்குற்றம் வருவது ஓரான் புனைமலர்ச் சார்பால் அன்றி
அற்குற்ற குழற்கு நாற்றம் இல்லையே என்றான் ஐயன்.

❖ <u>பொருள்</u>

➢ பாடலில், "**<u>சொல் குற்றம் இல்லை: பொருள் குற்றம் உள்ளது</u>**' என்றான் நக்கீரன்.

➢ பொன்னிறத்தன்ன சடையினை உடைய இறைவன்,"பொருள் குற்றம் என்ன?" எனக் கேட்டார்.

➢ அதற்கு,"மலர்கள் முதலியவற்றால் சாரும் மணம் அன்றி, இருளையொத்த கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை" என்றான், நக்கீரன்.

பரவிநீ வழிபட்டு ஏத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத்து அமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீரங் குழலும் அற்றோ எனஅ:.தும் அற்றே என்னா
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு
நோக்கான்.

❖ <u>பொருள்</u>

- நக்கீரனை நோக்கி, 'நீ வழிபடும் பரஞ்சோதியாகிய இறைவன், திருக்காளத்தியில் கோவில் கொண்டவன்: பாம்பையும் கங்கையையும் அணிந்த சடையினை உடையவன்.
- அவனது இடப்பாகத்தில் எழுந்தருளிய ஞானப்பூங்கோதையாகிய இறைவியின் குளிர்ந்த கருங்கூந்தலுக்கும் இதே தன்மை தானோ?' என இறைவன் வினவினார்.
- அதற்கு நக்கீரன், எதிர்வருவதனை எண்ணிச் சிறிதும் அஞ்சாமல், '**<u>அக்கூந்தலும் அத்தன்மையுடையதே'</u>** எனப் பதிலிறுத்தான்

கற்றைவார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவான் இன்னும் அஞ்சான் உம்பரார் பதிபோல் ஆகம்
முற்றுநீர் கண்ணா னாலும் மொழிந்தநும் பாடல் குற்றம்
குற்றமே யென்றான் தன்பால் ஆகிய குற்றம் தேரான்.

❖ <u>பொருள்</u>

- அடர்ந்த நீண்ட சடையை உடைய இறைவன், நெற்றிக்கண்ணைச் சிறிதளவு காட்ட, அதனால் துன்புற்றபோதும் அஞ்சாதவனாய், '**<u>இந்திரன்போல் உடல் முழுவதும் கண்களை</u>** உடையவராயினும், உமது பாடல் குற்றமுடையதே' என்று கூறினான் நக்கீரன்.

தேய்ந்த நாண்மதிக் கண்ணியால் நுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையில் பொறாதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் அவனைக்
காய்ந்த நாவலன் இம்மெனத் திருவுக் கரந்தான்.

❖ <u>பொருள்</u>

- பிறை நிலைவைத் தலையில் சூடியவன் இறைவன். அவனது, நெற்றிக் கண்ணில் இருந்து வந்த தீப்பொறியின் வெப்பம் தாளாது நக்கீரன் **<u>பொற்றாமரைக் குளத்தில்</u>** மூழ்கினான்.
- புலவர் வடிவில் வந்த சோமசுந்தரக் கடவுள் விரைந்து தனது திருவுருவத்தை மறைத்து அருளினார்.

❖ <u>ஆசிரியர் குறிப்பு</u>

- பரஞ்சோதி முனிவர் **<u>நாகை மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்)</u>** என்னும் ஊரில் பிறந்தவர்.
- தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். இவரின் தந்தையார் **<u>மீனாட்சிசுந்தர தேசிகர்</u>** ஆவார்.
- சைவவேளாா் மரபில் இவா் **<u>16-ம் நூற்றாண்டின்</u>** பிற்பகுதியில் திகழ்ந்தவராவார்.
- இவர் எழுதிய மொழிபெயர்ப்பு நூல் **<u>வேதாரண்ய புராணம் (திருமறைக்காட்டு புராணம்)</u>**
- பரஞ்சோதி முனிவர் துறவியாகச் சிவாலயங்கள்தோறும் சென்று இறைவனை வழிபட்டு வந்தார்.
- அவ்வாறு மதுரை நகரினை அடைந்து மீனாட்சிஅம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் வணங்கியவர், அந்நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார்.
- **<u>அந்நகரத்தார் அவரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க</u>**, திருவிளையாடற் புராணத்தை இயற்றினார்.
- அந்நூலைச் சிவபெருமான் திருக்கோவிலின் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் இருந்து வடமொழி, தென்மொழிப்புலவர் யாவரும் போற்ற அரங்கேற்றினார்.

➢ இவர் **திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய** நூல்களையும் இயற்றியுள்ளார்.

❖ **நூற்குறிப்பு**

➢ **திருவிளையாடற் புராணம், மதுரைக்காண்டம் (பதினெட்டுப் படலம்), கூடற்காண்டம் (முப்பது** படலம்), **திருவாலவாய்க்காண்டம்** (பதினாறு படலம்) என்னும் முப்பெரும்பகுதிகளையும் படலம் என்னும் **அறுபத்து நான்கு உட்பிரிவுகளையும்** உடையது.

➢ இதில், **மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று விருத்தப்பாக்கள்** உள்ளன.

➢ மதுரையில் இறைவன் நிகழ்த்திய **அறுபத்து நான்கு** திருவிளையாடல்களை இப்படலங்கள் விளக்குகின்றன.

➢ இந்நூல், **இறைவனின் திருவிளையாடல்களை விளக்கி** எழுந்த நூல்களுள் விரிவானதும் சிறப்பானதும் ஆகும்.

➢ தொடைநயமும் பத்திச்சுவையும் மிக்க இந்நூலுக்கு பண்டிதமணி **ந.மு. வேங்கடசாமி நாட்டார்** உரையெழுதியுள்ளார்.

➢ பெரிய புராணத்திற்கு அடுத்து புகழ்பெற்ற **சைவநூல்**.

➢ மதுரையில் இறைவன் நிகழ்த்திய **64 திருவிளையாடல்களைப்** பற்றி இந்நூல் கூறுகிறது.

➢ திருவிளையாடற் புராணத்தை இயற்றிய இடம் : **மதுரை**

➢ இந்நூல் வடமொழியில் இயற்றப்பட்ட கந்தபுராணத்தின் ஒரு பகுதியாகிய ஆலாசிய மான்மியத்தை அடிப்படையாக கொண்டது.

➢ தமிழ்ப்புலவர்கள் இறைவனுக்கும் தமிழுக்கும் உள்ள பிணைப்பை உறுதிப்படுத்தவே இயற்றியநூல்கள் திருவிளையாடற்புராணம் முதலிய புராணங்கள்.

➢ வடமொழியில் உள்ள **ஆலாசிய மகாத்மியம்** என்பதையும், புலியூர் **நம்பியின் திருவிளையாடற்** புராணத்தையும் தழுவியது.

➢ திருவிளையாடல் புராணங்கள் பற்றி 6 தொன்மங்கள் இருந்தாலும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் மட்டுமே மக்களிடம் செல்வாக்கு பெற்றுள்ளது.

➢ புராணம் என்றால் **பழமையான வரலாறு** என்று பொருள்.

➢ கி.பி. **13-ம்** நூற்றாண்டில் பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவாலவாயுடையார் புராணம் பாடினார். பழைய திருவிளையாடல், வேம்பத்தூர் திருவிளையாடல் எனவும் வழங்கும் திருவிளையாடல் புராண நூல்கள் 56 ஆகும் ஆயினும் பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணமே சிறந்து விளங்குகிறது.

➢ உடல் முழுவதும் கண்களையுடையவன் (ஆயிரம் கண்ணோன்) இந்திரன்

சிவனின் வலக்கண் - **பெரியபுராணம்**
சிவனின் இடக்கண் - **திருவிளையாடற்புராணம்**
நெற்றிக்கண் - **கந்தபுராணம்**
- **கச்சியப்ப சிவாச்சாரியார்** கூறுகிறார்

➢ இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றி முதன்முதலில் கூறிய நூல்கள் **கல்லாடம்**, **சுந்தரபாண்டியம்.**

மதுரை நகரத் திருவிளையாடல் தொன்மங்கள் - **6**

- கல்லாடம் (கல்லாடனார்)
- **பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல்** புராணம் (பரஞ்சோதி முனிவர்)
- **திருஆலவாயுடையார் புராணம்** (பெரும்பற்றப் புலியூர் நம்பி)
- **வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம்** (வேம்பத்தூரார்)

- **<u>சுந்தரபாண்டியம்</u>** <u>(அனதாரியப்பன்)</u>
- **<u>கடம்பவன புராணம்</u>** (வீமநாத பண்டிதர்)

➢ தென்னாட்டில் தனது அருள் விளையாடலை நிகழ்த்தியவர் தென்னாடுடைய சிவபெருமான்

➢ சங்கப்புலவர்கள் **<u>49 பேர்</u>**, **<u>செண்பகப் பாண்டியன்</u>** என்னும் பெயர் பெற்றவன் சூடாமணி **<u>பாண்டியன்</u>**.

➢ பாண்டியர்களின் குலதெய்வம் **<u>சோமசுந்தர கடவுள்</u>**.

➢ இறைவனிடம் பாடலைப் பெற்றுச் சென்றவன் **<u>தருமி.</u>** பெறச்சென்ற தருமியைத் தடுத்தவர் **<u>நக்கீரர்</u>**.

➢ பாண்டியர் குலத் தெய்வமாகிய **<u>சொக்கநாதர் கொங்குதேர் வாழ்க்கை</u>** எனத் தொடங்கும் பாடலைச் சொல்லினிமை தோன்ற இயற்றித் தருமிக்கு வழங்கினார்.

**<u>இறைவன் தருமிக்கு அருளிய பாடல்</u>**

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே.

\- **குறுந்தொகை, 2**

# தேம்பாவணி

➢ இத்தாலி நாட்டிலிருந்து **<u>இயேசு சபையின் குருவாகிக் கத்தோலிக்க சமயம்</u>** பரப்பத் தமிழ் நாட்டிற்கு வந்த வீரமாமுனிவர் இயற்றியளித்த பெருங்காப்பியம் **<u>தேம்பாவணியாகும்</u>**.

➢ **<u>3 காண்டங்கள் - 36 படலங்கள் - 3615 பாடல்கள் கொண்டது தேம்பாவணி</u>**.

➢ தேம்பா + அணி என்னுங்கால் என்றும் **<u>வாடாத மாலை</u>** என்றும் தேன் + பா + அணி என்னும் போது 'தேன் போன்ற பாக்களை அணியாக உடையது' என்னும் பொருள்படுவதாயிற்று.

➢ இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாராகிய **<u>சூசை மாமுனிவரைப் பாட்டுடைத் தலைவராகக்</u>** கொண்டு தேம்பாவணி நடை பயில்கிறது.

➢ கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கைகளும் அறிவுரைகளும் கதை வடிவாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எனவே இந்நூல் கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது.

➢ வீரமாமுனிவர் **<u>கொன்ஸ்டான் ஜோசப்பெஸ்கி</u>** என்னும் இயற்பெயரையுடையவர். கொன்ஸ்டான் என்னும் இத்தாலி மொழிச் சொல்லுக்கு **<u>அஞ்சாமை</u>** என்பது பொருள்.

➢ ஜோசப் -பை **<u>வளன் என்றும் சானைக் கருணையன்</u>** என்றும் **<u>ஐசக்-கை நகுலன்</u>** என்று தமிழில் மாற்றியமைக்கிறார்.

➢ உரை எழுதியவரும் **<u>வீரமாமுனிவரே</u>** ஆவார்.

➢ **<u>கம்பராமாயணம், சீவகசிந்தாமணி</u>** போன்று தமிழ் மரபைப் பின்பற்றி இக்காப்பியத்தை அமைத்துள்ளார்.

➢ ஆகவே இவர் தம் பெயரைத் **<u>தைரியநாதசாமி என்று</u>** மாற்றிக் கொண்டார். தமிழ்ச்சான்றோர் இவரை வீரமாமுனிவர் என்று அழைத்தனர்.

- **1710 ஆம்** ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த இப்பெரியார் முப்பத்தேழாண்டுகள் சமயப் பணியும், தமிழ்ப் பணியும் புரிந்து **1747 ஆம்** ஆண்டில் **அம்பலக்காடு** என்னும் இடத்தில் இயற்கையெய்தினார்.
- வீரமாமுனிவரின் தமிழ்ப்பணிகள் என்றும் நினைக்கற்பாலன. சிற்றிலக்கியங்கள், உரைநடை, அகராதி, மொழி பெயர்ப்பு, இலக்கணம், பெருங்காப்பியம் என்று தமிழிலக்கிய வரலாற்றில் அவரது பங்களிப்பு நிலைபேறுடையதாக விளங்குகிறது.
- இவர் **திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருகதை, செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், சதுரகராதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்**.
- திருக்குறளின் **அறத்துப்பால் பொருட்பால்** இரண்டனையும் வீரமாமுனிவர் **இலத்தீன் மொழியில் மொழி** பெயர்த்துள்ளார்.
- அப்புலவர் பெருமான் இயற்றிய தேம்பாவணிக் காப்பியத்தினின்று நமது பாடப்பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- வளன் என்ற சொல்லின் பொருள் வளங்களை வளரச்செய்பவன் என்பதாகும்.
- இதன் சுவை தேர்ந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பெஸ்கிக்கு **'வீரமாமுனிவர்'** என்ற பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினார்.
- **1726 –ல் இயற்றப்பட்டது**.

❖ **வீரமாமுனிவர்**

- தேம்பாவணியின் ஆசிரியர் **வீரமாமுனிவர்**.
- பிறந்த ஊர் - **காஸ்திகிலியோன் (இத்தாலி)**.
- காலம் : **1680 – 1747**
- பெற்றோர் : **கொண்டல் போபெஸ்கி – எலிசபெத்**
- வீரமாமுனிவரின் இயற்பெயர் **கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி**
- வீரமாமுனிவரின் ஆசிரியர் பெயர் மதுரை **சுப்பிரதீப கவிராயர்**
- இவர் திருச்சி **சந்தா சாகப்பிடம் திவானாகப்** பணியாற்றினார்.
- வீரமாமுனிவர் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டனையும் **இலத்தீன்** மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.
- கான்ஸ்டான் என்னும் இத்தாலி மொழிச்சொல்லின் பொருள் **அஞ்சாதவன்**. இவர்தம் பெயரைத் தைரியநாதன் என்று மாற்றிக்கொண்டார்.
- வீரமாமுனிவர் தனது **30-வது வயதில்** சமயத் திருப்பணியாற்ற தமிழகத்திற்கு வந்தார்.
- **ஆங்கிலம், கிரேக்கம், எபிரேயம்** ஆகிய மொழிகளை அறிந்திருந்தாலும் தமிழ்மொழியின் பால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்.
- தமிழில் முதன் முதலாக **சதுரகராதி** என்னும் அகரமுதலியை வெளியிட்டவர்.
- தமிழ் எழுத்து வரிவடிவத்தைத் திருத்தி, எழுத்துச் சீர்த்திருத்தம் மேற்கொண்டார்.
- வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகிறார் எனப் புகழாரம் சூட்டியவர் சொல்லின் செல்வர் **ரா.பி. சேதுபிள்ளை**.
- இவருக்கு **மதுரை தமிழ்ச்சங்கம் தைரியநாதர் என்ற பட்டம்** வழங்கியுள்ளது.
- வீரமாமுனிவர் 1710ல் தமிழகத்திற்கு வந்து **37 வருடங்கள் சமயப்பணியும்**, தமிழ்ப்பணியும் ஆற்றி **1747-ல் அம்பலக்காடு** என்னும் இடத்தில் இயற்கை எய்தினார்.
- வீரமாமுனிவர் தேம்பாவணியை புறநிலைக் காப்பியம் என்னும் தன்னை புறநிலைகாப்பியன் என்றும் குறிப்பிட்டு உள்ளார்.

❖ **வீரமாமுனிவரின் மற்றநூல்கள்**

- **ஞானோபதேசம், திருக்காவலூர் கலம்பகம், பரமார்த்த குருகதை (நகைச்சுவை**, சிறுகதை தொகுப்பு) சதுரகராதி**, தொன்னூல் விளக்கம் (குட்டித்தொல்காப்பியம்), கொடுந்தமிழ், ஏதகம்**, ஏக்கம் **மாறுதல், வேதியர் ஒழுக்கம்**.

APPOLO STUDY CENTRE

# வளன் செனித்த படலம்

- காப்பியத் தலைவனான **வளன்** என்னும் **சூசை மாமுனிவர் தாவீது மன்னனின்** அரச மரபில் தோன்றிய வரலாற்றையுரைப்பதுவே வளன் செனித்த படலமாகும்.
- (யோசேப்பு என்றும் சூசை என்றும் ஒலிபெயர்க்கப்பட்ட **ஜோசப் என்னும் பெயரை வீரமாமுனிவர் வளன்** என்று தமிழ்ப்படுத்தியுள்ளமை உற்று நோக்கத்தக்கது. வளங்களை வளரச் செய்பவன் என்னும் கருத்திற்றான் **எபிரேய மொழியிற் சூசை** என்ற பெயர் வழங்குகிறது. அதன் நேரிய மொழி பெயர்ப்பாகவே **'வளன்'** என்ற பெயரை வீரமாமுனிவர் இட்டு வழங்கியுள்ளார் என்க).

## ❖ கதைச்சுருக்கம்

- **யூதேயா நாட்டில் சவுல்** என்ற மன்னன் ஆட்சிபுரிந்த நாள்களில் மலைநாடுகளில் வாழ்ந்த **பிலித்தையர்** என்பார் திருமறையைப் பழித்தும் கடவுளை இகழ்ந்தும் வந்தனர்.
- அவர்கள் சவுல் மன்னனை எதிர்த்துப் படைக்கொண்டு வந்தபொழுது **கோலியாத்து** என்னும் அரக்கன் அவர்களிடையே தோன்றினான்.
- அவன் **இஸ்ராயேல்** மக்களை இகழ்ந்து,''நும்மில் ஒருவன் என்னொடு போர்புரிந்து வெற்றிபெறவருக. எம் இருவர்க்கு மட்டுமே போர் நிகழட்டும்.
- தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாக வேண்டும்'' என்று அறைகூவல் விடுத்தான். மக்கள் அவன் தோற்றத்தையும் கடுமொழிகளையும் கண்டு மிரண்டனர்.
- இஸ்ராயேலர் அஞ்சிய தன்மையைக் கண்ட சவுல் மன்னன் வருந்தினான்.
- 'இவ்வரக்கனைப் போரில் வெல்வானுக்கு என் மகளை மணஞ்செய்து தருகிறேன்' என்று அறிவித்தான்.
- **நாற்பது நாள்கள்** கழிந்தன. தாவீதன் என்னும் இளஞ்சிறுவன் படையிற்சேர்ந்த தன் அண்ணன்மார் மூவரையும் பார்க்க வந்தான்: அரக்கனது இகழ்ச்சி மொழிகளையும் மக்கள் அஞ்சியிருத்தலையும் கண்டு வருந்தினான்.
- 'வெற்று உடல் வலிமை கொண்டவனுக்கு நாம் அஞ்சுவதா? தெய்வத்தின் வல்லமையே வலிமையாகக் கொண்டு நானே அவனை வெல்வேன்' என்று சூள் உரைத்தான்.
- அது கேட்ட மன்னன் அவனுக்கு ஆயுதங்களை வழங்க முன்வரத் தாவீதனோ தனக்கு அவற்றைப் பயன்படுத்தத் தெரியாது என்று மறுத்து அகன்றான்.
- பின்னர் ஒரு **கவணும் ஐந்து கற்களும்** கொண்டு போர்முனைக்குச் சென்றான்.
- இருவரும் எதிரெதிர் நின்று வீரவுரை கூறினர். தாவீதன் கல்லையெடுத்தும் கவணிடைப் பூட்டியதும் யாரும் காண்கிலர் கோலியாத்து கருமேகம் போல வீழ்ந்ததனையே கண்டனர்.
- ''**தெய்வ வல்லமையை நிந்தனை செய்வோர்க்கு இன்னபடியே நேருமென்று காண்பீர்**'' என்று தாவீது அவன் தலையைக் கொய்தான்.

# சீறாப்புராணம்

- இறைவனின் திருத்தூதர் **நபிகள் நாயகம்** அவர்களின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய தமிழ் நூல் **சீறாப்புராணம்**.
- சீறத் என்னும் **அரபுச் சொல்**, தமிழ் மரபிற்கேற்பச் **சீறா** என்று வழங்கப்பட்டது.
- **சீறா** என்பதற்கு **வாழ்க்கை** என்பது பொருள், **புராணம் என்பது வரலாறு**. எனவே சீறாப்புராணம் என்பதற்கு **நபிகள் நாயகத்தின் வாழ்க்கை** வரலாறு எனலாம்.
- இந்நூல் **விலாதத்துக் காண்டம், நுபுவ் வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம்** என்ற மூன்று பெரும் பிரிவுகளையும், 92 படலங்களையும், **5027 விருத்தப்பாக்களையும்** கொண்டு இலங்குவது: இவை முறையே பிறப்பியற்காண்டம் , செம் பொருட்காண்டம், செலவியற்காண்டம் எனவும் படும்.
- பெருமானார் பிறந்ததும் இளமை நிகழ்வுகளும் திருமணமும் விலாதத்துக் காண்டத்தில் உரைக்கப்படுகின்றன.
- வானவர் **ஜிப்றாயில்** மூலம் திருமறை நபிகள் பெருமானார்க்கு அருளப்பட்டதும் அதன்பின் மக்கத்தில் நடந்தவையும் **நுபுவ்வத்துக் காண்டத்தில்** பேசப்படுகின்றன.
- மக்கத்தை விட்டுப் பெருமானார் **மதீனம் சென்றதும் தீன் நிலை** நிறுத்தற்காக நிகழ்ந்த போர்களும் பிறவும் **ஹிஜ்றத்துக் காண்டத்தில்** வரையப்பட்டுள்ளன.
- சீறாபுரணத்தில் நபிகள் நாயகத்தின் வாழ்வு முற்றிலுமாக பாடி நிறைவு செய்யப்படவில்லை.
- **பனூ அகுமது மரைக்காயர்** என்பவர்தாம் பெருமானாரின் தூய திருவாழ்வு முழுமையும் பாடிமுடித்தார்.
- **அஃது சின்னச் சீறா** என்று வழங்கப்படுகிறது.
- சீறாப்புரணத்ததை இயற்றியவர் **உமறுப்புலவர்**. இவர் **எட்டயாபுரம் கடிகை முத்துப் புலவரின்** மாணவர்.
- செய்கு **அப்துல் காதிர் மரைக்காயர்** என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே **உமறுப் புலவர்** சீறாப்புராணத்தை எழுத தொடங்கினார். நூல் முற்றுறும் முன்னமே **சீதக்காதி** மறைந்தார். பின் அபுல்காசிம் அவர்களின் உதவியுடன் சீறாப்புராணத்தை எழுதினார்.
- அபுல் காசீம் அவர்களை நூலின் பல இடங்களில் நினைவு கூர்ந்து போற்றுவது குறிப்பிடத்தக்கது
- உமறுப்புலவர் **முதுமொழிமாலை** என்ற எண்பது பாக்களால் ஆகிய நூலையும் படைத்தளித்துள்ளார்.
- காலம் **பதினேழாம் நூற்றாண்டு**.

## விடமீட்ட படலம்

- பகைவர்களுக்குப் புலப்படாவாறு நபிகள் பெருமானார் **அபூபக்கர்** என்ற தம் துணைவரோடு **தௌர் மலைக்குகையில்** தங்கியிருந்தார்கள்.
- ஒரு சமயம் அபூபக்கர் மடியில் தலைசாய்த்துப் பெருமானார் துயில் கொண்டார்கள்.
- அந்த மலைக்குகையில் நிறைய வளைகள் இருந்தன.
- அவற்றுள் ஒரு வளையின் வழியாகப் பாம்பொன்று தலை நீட்டிற்று.
- ஆபூபக்கர் பெருமானாரின் உறக்கத்துக்கு இடையூறு வாராவண்ணம் தமது மேலாடையைக் கிழித்து அந்தப் பொந்தினை அடைத்தார்.
- பாம்பு வேறொரு பொந்தின் வழியே தலையை நீட்ட அதனையும் துணிகிழித்து அபூபக்கர் அடைத்தார்.
- இப்படி வளைகளெல்லாவற்றையும் அடைத்தும் மீண்டும் ஒரு பொந்தின் வழியே பாம்பு வெளிவந்தது.
- மேலாடைத்துணி முற்றிலும் தீர்ந்து போனதால் அபூபக்கர் தமது உள்ளங்காலை வைத்து அந்தப் புழையை அடைத்தார்.
- சினமுற்ற பாம்பு அபூபக்கர் காலைப் பலமுறை தீண்டிற்று.
- பெருமானாரின் துயில் கலைந்து விடக் கூடாதே என்ற கனிவோடு அபூபக்கர் தமது காலை அகற்றாமலும் அசையாமலும் இருந்தார்.
- நஞ்சு தலைக்கேறி மயக்குறும் பொழுது நாயகத் திருமேனி கண் விழித்தார்கள்.
- நஞ்சேறி அலமரும் தம் துணைவரைப் பார்த்து உற்றது வினவினார்கள்.
- அபூபக்கரும் நிகழ்ந்தது உரைத்தார்.
- பெருமானார் பாம்பினைப் பார்த்துத்தாம் ஏதும் தீங்கு செய்யாதிருந்த போதும் சினந்து தீண்டியதென்ன வினாவினார்கள.
- பாம்பு பெருமானாரின் திருமுகம் காணும் நோக்கோடு காத்துக் கிடந்ததையும் திருமுகத்தைக் காணவியலாதவாறு அபூபக்கர் தடுத்ததால் தீண்டியதையும் எடுத்துரைத்தது.
- பெருமானார் பாம்பிற்கு அருள் புரிந்துவிடுத்தார்கள்.
- பின் நஞ்சேறி மயங்கியிருந்த தம் துணைவரின் பாதத்திலே தமது திருவாயில் ஊறிய எச்சில் அமுதத்தால் நஞ்சு தீரும்படி அருளினார்கள்.
- பெருமானாரின் எச்சில் அமுதம் தடவப் பெற்றதும் மேனியில் ஏறிய நஞ்சு தீர்ந்து அபூபக்கர் நிறை நலம் மீளப் பெற்று நாயகத் திருமேனியைப் பணிந்து தொழுதார்.

## உமறுப்புலவர்

- சீறாப்புராணத்தின் ஆசிரியர் **உமறுப்புலவர்**. (**சீறும் சிங்கம் உறுமும்**)
- **சீறா – வாழ்க்கை, புராணம் - வரலாறு**
- இவர் **தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரத்தில்** பிறந்தார்.
- முழுப்பெயர் **உமறுகத்தாப்**
- இவரது தந்தை செய்கு **முகமது அலியார் எனும் சேகு முதலியார்**.
- இவர் காலம் கி.பி. 17 ம் நூற்றாண்டு. சிறப்புப் பெயர் **இஸ்லாமியக் கம்பர்.**
- **கிழவன் சேதுபதி, விஜயரகுநாத தேவர், சீதக்காதி** இவர்களிடம் அமைச்சராகப் பணியாற்றினார்.
- உமறுப்புலவரின் நூல்கள் : **முதுமொழிமாலை, சீதக்காதி, நொண்டி நாடகம், சீறாப்புராணம்**.

- சீறாப்புராணத்தில் நபிகள் நாயகம் வாழ்வு முற்றிலுமாக பாடி முடிக்கப்படவில்லை. இதனை **பனு அகமது மரைக்காயர் என்பவர்** பாடிமுடித்தார். அது **சின்னச்சீறா** எனப்படுகிறது.
- சீறத் என்னும் அரபுச்சொல் தமிழ் மரபிற்கேற்ப **சீறா** என அழைக்கப்பட்டது.
- சீறாப்புராணம் இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் வரலாற்றை எடுத்து இயம்புகிறது.
- உமறுப்புலவர் எட்டயபுர மன்னரின் அவைப்புலவராக விளங்கிய கடிகை முத்துப்புலவரின் மாணவராகவும், அவர் மறைவிற்குப்பின் எட்டயபுர அவைப் புலவராகவும் விளங்கியவர்.
- ஆதிரித்தவர் - **அப்துல் காதிர் மரைக்கையார் (அ) சீதக்காதி**
- **80 பாக்களால்** ஆன முதுமொழிமாலை என்னும் நூலை படைத்தவர் உமறுப்புலவர்.

| | |
|---|---|
| விலாதத்துக்காண்டம் - | **நபிகள் நாயகம் பிறப்பு, இளமை நிகழ்வுகள், திருமணம்** |
| நுபுவ்வத்துக்காண்டம் - | **வானவர் ஜிப்றாயில் மூலம் திருமறை நபிகள்** பெருமனாார்க்கு அருளப்பட்டதும் அதன் பின்மக்கத்தில் நடந்தவைகள் |
| ஹிஜ்ரத்துக்காண்டம் - | **மக்கத்தை விட்டுப்பெருமனார் மதீனம் சென்றதும்** |
| தீன்நிலை நிறுத்தற்காக நிகழ்ந்த போர்கள் பற்றி,**விடமீட்டப் படலம் ஹிஜ்ரத்துக்காண்டத்தில் உள்ளது**. | |

- நபிகள் நாயகம் அபூபக்கருடன் தங்கியிருந்த குகையுள்ள மலையின் பெயர் **தௌர்**.
- இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களில் முதன்மையானது. பெரியது, **சீறாப்புராணம்**.
- உமறுப்புலவர் **வாலைவாரிதி** என்ற வடநாட்டுப் புலவரை வென்றார்.
- செய்யது காதிர் மரைக்காயர் என்பவரே செத்தும் கொடுத்த சீதக்காதி எனப் புகழப்படும் வள்ளலாவார்.
- படிக்காசுப் புலவரால் இச்சீதக்காதி வள்ளல் பாரட்டப்பட்டவர்.
- இந்நூலின் முதல் பதிப்பு 1842 –ல் வெளியானது. இதை முதலில் பதிப்பித்தவர் அப்துல் காதிர் நெய்னா லெப்பை ஆலிம் ஆவார்.
- விலாதத் என்ற அரபுச் சொல்லுக்கு **பிறப்பு என்று பொருள்**.
- ஹிஜ்ரத் - **இடம் பெயர்தல்**.

# இயல்-7
# சிற்றிலக்கியங்கள்

## சிற்றிலக்கியங்கள் - பிரபந்தம்

- சிற்றிலக்கியத்திற்கு **பிரபந்தம்** என்ற பெயரும் உண்டு. பிரபந்தம் என்னும் **வடசொல்** உணர்த்தும் பொருள் **நன்கு கட்டப்பட்டது**. வீரமாமுனிவரின் சதுரகராதியில் **96 வகை** பிரபந்தங்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளார். **கோவை, உலா, தூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, அந்தாதி** போன்ற சிற்றிலக்கியங்கள் முக்கியமானவையாகும்.

- **அறம், பொருள், இன்பம், வீடு** என்ற உறுதிப்பொருள் நான்கனுள் ஒன்றோ, சிலவோ குறைந்து வந்து கற்பனை, தெய்வப்போற்றல், தனிமனிதப் போற்றல் முதலானவற்றை பாடுவது சிற்றிலக்கியமாகும். சிற்றிலக்கிய வகை **96 என்று** முதன் முதலாக கூறும் நூல் **பிரபந்த மரபியல்**. பன்னிரு படலம் என்பது பறப்பொருள் இலக்கண நூல், புறப்பொருள் வெண்பா மாலைக்கு முதல் நூல்.

- சிற்றிலக்கிய நூலாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் **குமரகுருபரர், சிவப்பிரகாசர், மாகவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை**, ஒட்டக்கூத்தர்.
- சிற்றிலக்கியங்களின் இலக்கணம் சொன்ன நூல் **தொல்காப்பியம்**.
- சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறும் நூல் **பன்னிரு பாட்டியல்**.
- பெரும்பாலான சிற்றிலக்கியங்கள் **சைவ சமயத்தை** சார்ந்தவை.
- பெருங்காப்பியங்களில் அவற்றின் உட்பிரிவுகளாக இடம் பெறும் தூது, **உலா, போர்**, வெற்றியைக் குறிக்கும் செயல்கள் போன்றவை பின்னர்த் தனி இலக்கியங்களாக உலா, பரணி, தூது, குறவஞ்சி, பள்ளு என உருப்பெற்றது.
- சிற்றிலக்கியங்கள் மிகுதியான கற்பனையைக் கொண்டு அமைந்தவை.

- சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் - 4
  1. **பன்னிரு பாட்டியல்**
  2. **வெண்பாப் பாட்டியல்**
  3. **நவநீதப் பாட்டியல்**
  4. **சிதம்பரப் பாட்டியல்**
- சிற்றிலக்கியங்கள் கருப்பொருளும் யாப்பமைப்பும் இன்னதுவே, இத்துணையவே எனும் வரையறை கடந்தவை.
- பக்தி இலக்கியங்கள் சிற்றிலக்கியங்களின் செல்வாக்காலேயே செழுமை யுற்றன.

| | **நூல்** | **ஆசிரியர்** | **சிற்றிலக்கிய எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | பன்னிரு பாட்டியல் | 12 பேர் | 62 |
| 2. | வெண்பாப்பாட்டியல் | குணவீர பண்டிதர் | 52(+1) |
| 3. | நவநீதப் பாட்டியல் | நவநீத நாடனார் | 45 |
| 4. | பிரபந்த மரபியல் | பெயர் தெரியவில்லை | 96 |
| 5. | சிதம்பரப் பாட்டியல் | பரஞ்சோதியார் | 59 |

| | | | |
|---|---|---|---|
| 6. | பிரபந்த தீபிகை | முத்துவேங்கட சுப்பையர் | 77 |
| 7. | வரையறுத்த பாட்டியல் | பெயர் தெரியவில்லை | இல்லை |
| **ஐந்திலக்கணங்களையும் கூறிப் பாட்டியல் கருத்துகளையும் கூறுவன** | | | |
| 8. | இலக்ண விளக்கப்பட்டியல் | வைத்தியநாத தேசிகர் | 63+1 |
| 9. | தொன்னூல் விளக்கம் | வீரமா முனிவர் | 35 |
| 10. | முத்துவீரியப் பாட்டியல் | முத்துவீரிய உபாத்யாயர் | 90 |
| 11. | சுவாமிநாதப் பாட்டியல் | சுவாமிக் கவிராயர் | 37 |

# குறவஞ்சி

- குறவஞ்சி ஓர் **அக இலக்கிய நூல்.** எனினும் **தலைவன் தலைவியின்** பெயர் கூறப்படும்.
- **இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ்** கலந்த இலக்கியம் குறவஞ்சி.
- **"கட்டினும் கழங்கினும்"** என்ற தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் தோன்றிய இலக்கியம் குறவஞ்சி
- 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று. வேறுபெயர் குறம், குறத்திப்பாட்டு, குறவஞ்சி நாடகம், குடிமக்கள் காப்பியம்.
- முதல் குறவஞ்சி நூல் **திருக்குற்றாலக் குறவஞ்சி** (மிகவும் புகழ்பெற்ற குறவஞ்சி)
- குறவஞ்சி இலக்கியத்திற்கு முன்னோடி / அடிப்படை நூல் **குமரகுருபரரின் மீனாட்சிக் குறம்**.
- காதல் வயப்பட்ட பெண்ணிடம் குறத்தி ஒருத்தி ஆடிப்பாடி தலைவனைப் புகழ்ந்து பாடும் நூல் **குறம்**.
- குற்றாலக்குறவஞ்சி குற்றாலத்தில் உள் **குறும்பலா ஈஸ்வரர்** மேல் பாடப்பட்டது.

**நூல்கள்**

- **வரத நஞ்சையப்பப் பிள்ளை** - தமிழரசி குறவஞ்சி
- **வேதநாயக சாஸ்திரி** - பெத்தலகேம் குறவஞ்சி
- **குமரகுருபரர்** - மீனாட்சிக் குறம்

**மொழி வாழ்த்து**

நண்ணு மிளமைப் பருவத்தி லேமுதல்
நாவை யசைத்தமொழி – எங்கள்
கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்
கருத்தோ டிசைத்தமொழி – எந்தம்
எண்ணத்தைக் கூறற்கு நானென்று முன்வந்
திருந்த திருந்துமொழி – வேற்று
வண்ணப் பிறமொழி கற்க வுதவிய
வண்மைபொ ருந்தும் மொழி – அதனால்
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய
வென்றடி வாழ்த்துவமே

**அ. வரதநஞ்சையப் பிள்ளை**

**நூற்குறிப்பு:**

- இம்மொழி வாழ்த்துப் பாடல் தோரமங்கலம் திரு.அ. வரதநஞ்சையப் பிள்ளை இயற்றிய **'தமிழரசி குறவஞ்சி'** என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றதாகும். குறவஞ்சி என்பது **96 வகைச் சிற்றிலக்கியங்களுள்** (பிரபந்தங்களுள்) ஒன்றாகும்.
- தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் **சுவாமிமலையில்** கோவில் கொண்டுள்ள **முருகப்பெருமான்** ஆவார்.
- உலா வரும் அவரைக் கண்டு மையல் கொள்பவள் **தமிழரசி என்னும் தலைவியாவாள்.** தமிழன்னையையே பாட்டுடைத் தலைவியாக்கிக் குறவஞ்சி படைத்துள்ளார்.
- தமிழரசி தம்தோழியருடன் பந்து முதலியன விளையாடி மகிழ்ந்திருக்கும் வேளையில் **முருகப்பெருமான் உலா** வருகின்றார்.
- அவரைக் கண்டு மையல் கொண்ட தமிழரசி, திருமணத்திற்கு அவர் இசைவினைப் பெற்று வர, தூது அனுப்பிவிட்டு வருந்தியிருக்கின்றாள்.
- அப்பொழுது வீதியில் குறி கூறிவரும் குறவஞ்சி ஒருத்தி தமிழரசியைக் கண்டு அவள் காதல் கைகூடுமென்று குறி கூறுகின்றாள். இவ்வாறு அமைந்துள்ளது தமிழரசி குறவஞ்சி.

❖ **ஆசிரியர் குறிப்பு:**

- தமிழரசி குறவஞ்சியை இயற்றியவர் **தாரமங்கலம் திரு.அ. வரதநஞ்சையப் பிள்ளை** ஆவார். அவர் **1.9.1877** இல் அப்பாசாமிப் பிள்ளை, வரதாயி என்பார்க்கு மகனாகத் தோன்றினார்.
- **தெலுங்கையும் வடமொழியையும்** நன்கு அறிந்தவர். விரைந்து **கவிதை பாடுவதில்** வல்லவர்.
- கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் **'ஆசிரியர்'** என்னும் சிறப்புப்பட்டம் பெற்றவர்.
- கற்றோரால் **'புலவரேறு'** என்று சிறப்பிக்கப் பெற்றார்.
- கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நமச்சிவாய முதலியார் தலைமையில் '**தங்கத்தோடா**' பரிசளிக்கப் பெற்றார்.
- **தமிழ்வேள் உமாமகேசுவரனார்** இவரிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இவர் தமிழரசி **குறவஞ்சியை** இயற்றினார்.
- அந்நூலைக் **கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்** வெள்ளி விழாவின் பொழுது **ஞானியாரடிகள்** தலைமையில் அரங்கேற்றினார்.
- **11.7.1956** அன்று புகழுடம்பு எய்தினார்.

# பெத்தலகேம் குறவஞ்சி

- சிற்றிலக்கியங்களைத் தொண்ணூற்றாறு வகையினவாக உரைப்பர். கோவை, உலா, அந்தாதி, பள்ளு, குறவஞ்சி, தூது, பிள்ளைத்தமிழ் முதலியன அவற்றுள்ளடங்கும்.
- இச்சிற்றிலக்கிய வகை **தொல்காப்பியனார் வனப்பு** என்று உரைக்கும் நூல் வகையுள் வைக்கப்படும்.
- உலாப் போகும் மன்னனையோ தெய்வத்தையோ கண்டு தலைவி மையல் கொள்வதும். அதனால் மனம் நலிவதும், வீதியிலே குறத்தி வருகையும், தலைவி அவளை அழைத்துக் குறிகேட்க முற்படுவதும், குறத்தி தனது சதுரப்பாடுகளையெல்லாம் விரித்தும் தனது மலைவளம் நாட்டுவளம் பற்றிப் புனைந்தும் தலைவியின் கையைப் புகழ்ந்தும் **கைக்குறி, முகக்குறி, பல்லிசொல்** முதலியவற்றான் மனக்கருத்தைக் கண்டுணர்ந்து உரைத்தலும், தலைவி

மகிழ்ந்து வரிசையளித்தலும், குறவனாகிய சிங்கன் வருகையும் குறவன் குறத்தி ஆகிய இருவர் உரையாடலும், கடவுளை வாழ்த்தி விடை பெறுதலும் ஆகிய காட்சிகள் நாடக வடிவிலே வடிவமைக்கப்பட்டிருப்பது **குறவஞ்சி நாடகம்** ஆகும்.

- இஃது பெத்தலகேம் குறவஞ்சி, உலாவரும் மன்னர் இயேசுவாகவும் தேவமோகினியாகிய தலைவி **சீயோன் மகளாகவும்,** குறவஞ்சி விசுவாசமாகவும் **குறி கூறுதல் தீர்க்க தரிசனமாகவும், சிங்கன் குருவாகவும், நாவன் உபதேசியாகவும்**, அவர்கள் பிடிக்கும் **பறவைகளாக மக்களும்** அதற்குப் பயன்படுத்தப்படும் வகையாக இறைவாக்கு என்ற நற்செய்தியும் உருவகிக்கப்பட்டுள்ளன.
- இந்நூல் முற்றுருவகமாகத் திகழ்வது தனிச்சிறப்பாகும்.
- இதன் ஆசிரியர் தஞ்சை **வேதநாயக சாஸ்திரியார்** ஆவார்.
- **திருநெல்வேலியில் தேவசகாயம் ஞானப்பூ** அம்மையார் ஆகியோர்க்கு மகனாகப்பிறந்தார்.
- தஞ்சையில் அப்போது மதபோதகராக விளங்கிய **சுவார்ட்ஸ் பாதிரியார்** இவரைத் தமது மாணாக்கரில் ஒருவராக ஏற்றார்.
- இவர் **இறையியல், வானியல், உடலியல், சமூகவியல்** என்ற பல்வேறு அறிவுத்துறைகளில் கற்றுத்துறைபோகிய அறிஞராகத் திகழ்ந்தார்.
- தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னருக்கு உற்ற நண்பராக விளங்கினார்.
- தமது மிக்க இளம்பருவத்திலேயே **25 ஆம் ஆண்டில்** குற்றாலக் குறவஞ்சிக்கு நிகராகப் பெத்தலகேம் குறவஞ்சியை இயற்றி அழியாப் புகழ் பெற்றார்.
- மேலும் அழியாத பல நூல்களையும் இசைநெறி போற்றும் கீர்த்தனங்களையும் இயற்றியுள்ளார். காலம் கி.பி. **18-ஆம் நூற்றாண்டு**.
- இவர் எழுதிய பிற நூல்கள் ஞானத்தச்சன், ஞானவுலா, ஆரணாதிந்தம், பல்வேறு கீர்த்தனங்கள் ஆகியவையாகும்.

**விசுவாசக் குறவஞ்சி தேவமோகினிக்கு மலைவளம் கூறுதல்**

வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பார்
வண்மையுள்ள சித்தரெல்லாம் அருந்தவங்கள் பிடிப்பார்
ஞானமுடன் முல்லைநிலத் தலைவர் வந்து தொழுவார்
நட்சேத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்
தான தர்மம் ஏழைகட்கு யாவர்களுங் கொடுப்பார்
சண்டாளப் பாவமெல்லாம் அண்டாது தடுப்பார்
ஈனமுள்ள பேய்க்கணங்கள் மயங்கியங்கே துடிப்பார்
ஏகன்மனு வானவெல்லை யெங்கள் மலை யம்மே.

**குற்றாலக் குறவஞ்சி**
**குற்றால மலையின் வளம்**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சம்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல்இளம் பிறைமுடிந்த வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே!
ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூல்உளைச் சங்கு

போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே!

**திரிகூட ராசப்பக் கவிராயர்**

❖ **பாடல் 1 பொருள்:**

- வளைந்த **இளம்பிறையைத்** தன் சடையில் அணிந்த **சிவபெருமான்** வீற்றிருக்கும் மலை **குற்றால மலை**.
- அதுதான் எங்கள் மலை. இந்த மலையில் ஆண்குரங்குகள் பெண் குரங்குகளுக்குப் பழங்களைப் பறித்துக் கொண்டு வந்து தரும்.
- உண்ணும்போது பெண் குரங்குகள் பழங்களைத் தவறவிடும். அவை சிந்தும் பழங்களைக் கேட்டுத் தேவர்கள் கெஞ்சி நிற்பார்கள்.
- உயர்ந்த எங்கள் மலையில் உள்ள கானவர்கள் வானத்தில் இருக்கும் தேவர்களைக் கண் சிமிட்டி அழைப்பார்கள்.
- சித்தர்கள், இறப்பை நீக்கும் மூலிகைகளை எங்கள் மலையில் வளர்த்து வருவார்கள். அருவியின் அலை உயர்ந்து எழும்பி வானத்தையே தொடும்.
- அந்த அலைநீரில் கதிரவனின் தேரில் பூட்டிய குதிரைகளின் கால்களும் தேரின் சக்கரங்களும் வழுக்கி விழும்.

❖ **பாடல் 2 – பொருள்:**

- **குற்றாலநாதராகிய சிவபெருமான்** வாழும் நாடு எங்கள் நாடு.
- எங்கள் நாட்டில் மக்கள் அஞ்சி ஓடிப்போவதில்லை.
- வெள்ளம்தான் ஓடும். மக்கள் இங்கு ஒடுங்கி இருப்பதில்லை; தவம் செய்வோரின் உள்ளம் தான் ஒடுங்கி இருக்கும். மக்கள் இங்கு நோய், வறுமையால் வாடுவதில்லை; பெண்களின் மெல்லிடை மட்டுமே வாடும்.
- மக்கள் இங்கு வருந்துவதில்லை; முத்துக்களை ஈனும் சங்குகள் மட்டுமே வருந்துகின்றன.
- இங்குப் பயனற்றவை என எவையும் தூக்கிப் போடப்படுவதில்லை; விதைகள் மட்டுமே மண்ணில் போடப்படுகின்றன.
- மக்கள் இங்கே துன்பத்தில் புலம்புவதில்லை; குழந்தைகள் காலில் அணியும் கிண்கிணிகளே புலம்பிச் சத்தமிடுகின்றன.
- மக்கள் இங்கே செல்வங்களைத் தேடி அலைவதில்லை; அறம் பெருமை இரண்டை மட்டுமே மக்கள் இங்குத் தேடுவார்கள்.
- இவ்வாறு குறத்தி, தன் மலை வளமும் நாட்டுவளமும் கூறுகிறாள்.
- பாட்டுடைத் தலைவன் **திருக்குற்றால நாதர்**, தலைவி **வசந்த வல்லி**
- ஆசிரியர் **திரிகூடராசப்பக் கவிராயர்**. ஊர் **மேலகரம்**
- முத்து **விஜயரங்க சொக்கநாத நாயக்கர்** இவரை பாராட்டி பரிசு கொடுத்தார்.

## பரணி

- **திருக்குற்றால மாலை, திருக்குற்றால உலா, திருக்குற்றாலப்பிள்ளைத்தமிழ், திருக்குற்றால சிலேடை வெண்பா**.
- ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி – **பன்னிருபாட்டியல்**
- போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் பாடுவதைப் **பரணி என்கிறோம்**.

➢ பரணி என்ற **<u>நாள்மீன் காளியையும், யமனையும்</u>** தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்று தமிழ்த்தாத்தா **<u>உ.வே.சாமிநாத ஐயர் கூறுவர்</u>**.

➢ போர்க்களத் தெய்வமான கொற்றவையைப் பாடும் நூல் **<u>பரணி</u>**.

## <u>பரணி இலக்கியங்கள்</u>

| நூல் | ஆசிரியர் | பாடப்பட்டோர் |
|---|---|---|
| கலிங்கத்துப்பரணி | ஜெயங்கொண்டார் | கருணாகரத் தொண்டைமான் |
| தக்கயாக பரணி | ஒட்டக்கூத்தர் | வீரபத்திர தேவர் |
| கொப்பத்துப் பரணி | பெயர் தெரியவில்லை | - |
| கூடல் சங்கமத்துப்பரணி | பெயர் தெரியவில்லை | 2-ஆம் ராசேந்திரன் |
| அஞ்ஞானவதைப் பரணி | தத்துவராயர் | - |
| மோகவதைப் பரணி | தத்துவராயர் | - |
| பாசவதைப்பரணி | வைத்தியநாத தேசிகர் | - |
| சீனத்துப்பரணி | மு.பி. பாலசுப்பிரமணியன் | இந்தியர் |
| திராவிடத்துப்பரணி | இராசைக்கவிஞர் | திராவிடர் |
| வங்கத்துப்பரணி | அரங்க சீனிவாசன் | இந்தியா |
| புரட்சித்தலைவி போர்பரணி | அக்கினிபுத்திரன் | ஜெயலலிதா |

➢ பரணி நட்சத்திரத்தின் போது கொற்றவைக்கு **<u>கூழ் அட்டு விழாக்</u>** கொண்டாடுவர்.

➢ கொற்றவைக்குரிய நாள் பரணி, மேலும் பேய், யானை, எமன் இவற்றொடு தொடர்புடையது பரணி என்பர்.

➢ நச்சினார்க்கினியார் ஏர்க்களம் பாடுநரும், போர்க்களம் பாடுநரும், பரணி பாடுநரும் எனக் குறிப்பிடும்போது பொருநர்களில் பரணி பாடுவோர் எனத் தனிப்பிரிவுகள் இருந்தன.

➢ பரணி பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் **<u>ந.வீ. ஜெயராமன் 17 பரணி நூல்கள்</u>** பற்றிய குறிப்பு கிடைப்பதாக கூறுவர்.

➢ பரணியில் 13 பகுதிகள் உள்ளன.

➢ கடவுள் வாழ்த்து, கடைத்திறப்பு, காடு பாடியது, கோவில் பாடியது, தேவி பாடியது, பேய்களைப் பாடியது, இராசபாரம்பரியம் அவதாரம், காளிக்குக் கூளி கூறியது. இந்திரசாலம், களம் பாடியது, போர் பாடியது, கூழ் எடுதல்.

➢ இது இரண்டடி கலித்தாழிசையால் பாடப்பெறும்.

காடிதனைக் கடத்தும் எனக் கருமுகிலும்
வெண்மதியும் கடக்க அப்பால்
ஓடிஇளைத்து உடல் வியர்த்த வியர்வன்றோ
உகுபுனலும் பனியும் அம்மா!

❖ **<u>பொருள்</u>**:

➢ கருமேகமும் வெண்ணிலவும் பாலை நிலத்தை மெல்லக் கடந்து சென்றன. அப்பொழுது வெப்பம் மிகுதியாக இருந்தது. அவ்வெப்பத்தைத் தாங்காமல், அவை விரைந்து ஓடின. ஓடும்பொழுது அவற்றின் உடல் களைத்து வியர்த்துக் கொட்டிய வியர்வை நீரையே, கருமேகம் மழையாகவும், வெண்ணிலவு பனியாகவும் பொழிந்தன.

## கலிங்கத்துப்பரணி

❖ **<u>நூற்குறிப்பு:</u>**

- **<u>ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில்</u>** கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் **<u>பரணி</u>** என்பது பெயர்.
- இது, **<u>தொண்ணூற்றாறு வகை</u>** சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய **<u>முதல் நூல்</u>** கலிங்கத்துப்பரணி.
- கலிங்க மன்னன் அனந்தபத்மநாபன் மீது முதல் **<u>குலோத்துங்கச் சோழன்</u>** போர்தொடுத்து வெற்றி பெற்றான்.
- அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல், தோல்வியுற்ற கலிங்க நாட்டின் பெயரால், அமைந்து உள்ளது.
- இந்நூலில், **<u>ஐநூற்றுத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள் உள்ளன</u>**. சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான **<u>ஒட்டக்கூத்தர்</u>** இந்நூலைத் **<u>தென்தமிழ்த் தெய்வப்பரணி</u>** எனப் புகழ்ந்துள்ளார்.

**“எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால்**
**அது கலிங்கத்துப்பரணியே” - பேரறிஞர் அண்ணா**

❖ **<u>ஆசிரியர் குறிப்பு:</u>**

- கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் **<u>சயங்கொண்டார்</u>**. இவர், **<u>திருவாரூர்</u>** மாவட்டத்திலுள்ள **<u>தீபங்குடி</u>** என்னும் ஊரினர்; **<u>முதல் குலோத்துங்கச் சோழனின்</u>** அரசவைப் புலவராகத் திகழ்ந்தவர்; பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் **<u>பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்</u>** பாராட்டியுள்ளார்; **<u>இசையாயிரம், உலா, மடல்</u>** ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் **<u>கி.பி. பன்னிரண்டாம்</u>** நூற்றாண்டு.
- பரணி என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் பாடுவதைப் பரணி என்றனர்.

  ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
  மான வனுக்கு வகுப்பது பரணி
  என்று **<u>இலக்கண விளக்கப் பாட்டியல்நூல்</u>** பரணியின் இலக்கணம் கூறும்.

- நம்ம பாடப்பகுதி காளிக்குக் கூளி கூறியது என்ற பகுதியில் இடம் பெற்றதாகும். **<u>ஐந்து கலித்தாழிசைகள் இடம்</u>** பெற்றுள்ளன.
- கலிங்க நாட்டிலிருந்து வந்த பேய் காளிதேவிக்குக் கூறிய போரின் வெம்மையான தன்மைகள் பலவும் இப்பகுதியில் கூறப்படுகின்றன.
- இன்றைய **<u>ஓரிசா மாநிலம் கலிங்கம்</u>** என்று வழங்கப்பட்டது. அந்நாட்டின் மீது போர் தொடுக்க **<u>முதற் குலோத்துங்க சோழன்</u>** தன் படைத்தளபதி கருணாகரத் தொண்டைமான் என்பாரை அனுப்பினான். அவர்தம் **<u>வெற்றி குறித்துப் பாடுவதே கலிங்கத்துப் பரணி</u>**ஆகும்.

# முத்தொள்ளாயிரம்

**<u>சேரன்</u>**

பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்
மல்லல் நெடுமதில் வாங்குவில் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வார் விசும்பு.

❖ **<u>பொருள்</u>**

- பல யானைகளைக் கொண்டுள்ள அரசர்களே! உங்களுக்குக் கிடைக்கும் பொருளைச் சேர மன்னனுக்குத் திறையாக அளித்துப் பிழைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களின் வளமிக்க நெடிய மதில்கள் மீது வில் சின்னத்தைப் பொறித்து வையுங்கள். ஏனெனில், **<u>வாடாத மாலையணிந்த வானவர்களும் சேரனின் வில் வடிவத்தை எழுதி வைத்தே</u>** வானுலகில் வாழ்கின்றனர்.

**<u>சோழன்</u>**

சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்த்திட் டுயர்துலைதான் ஏறினான் - நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு.

❖ **<u>பொருள்</u>**

- சோழ மன்னன், தன்னிடம் அடைக்கலமான **<u>புறாவினைக் காக்க</u>**, தன் **<u>தசையை அறுத்துக்கொடுத்தான்</u>**.
- அத்தசை ஈடாகாத காரணத்தால், தானே துலாக்கோலில் ஏறினான்.
- இப்படிச் செய்யத் துணிந்தமைக்கு அவனது கொடை வீரமோ மெய்யொழுக்கம் குறையாத படைவீரமோ காரணம் அன்று; அது சோழனின் நற்பண்பு.

**<u>பாண்டியன்</u>**

மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத் - திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேல் மாறன் களிறு.

❖ **<u>பொருள்</u>**

- நெருங்கி அமைந்த **<u>இலை போன்ற வடிவிலான வேலை உடையவன் பாண்டிய மன்னன்</u>**. அம்மன்னனின் யானை, தன் **<u>தந்தங்களை எழுத்தாணியாகவும்</u>** வீரம் செறிந்த வேற்படையையுடைய பகை மன்னரின் அகன்ற **<u>மார்புகளை ஓலைகளாகவும்</u>** கொண்டு செல்வம் நிலைத்த உலக மெல்லாம் எம் பாண்டியருக்குரியது என எழுதும்.

❖ **<u>நூற்குறிப்பு</u>**

- **<u>மூவேந்தர்களைப் பற்றி மூன்று தொள்ளாயிரம்</u>** பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம்.
- ஆயினும் இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை.
- புறத்திரட்டு என்னும் நூல்வாயிலாக **<u>நூற்றெட்டு வெண்பாக்களும்</u>**, பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக **<u>இருபத்திரண்டு வெண்பாக்களும்</u>** கிடைத்துள்ளன. மூவேந்தர்களின் ஆட்சிச் சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.

- சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாக முத்தொள்ளாயிரம் திகழ்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.
- பல்யானை மன்னீர் படுதிறை தந்துய்ம்மின்''–**சேரனைப் பற்றியது**.
- ''மருப்பூசியாக மறக்கனல்வேல் மன்னர்''–**பாண்டியன்**
- சேர மன்னரின் அடையாள சின்னம் **வில் அம்பு**
- சோழ மன்னன் புறாவினைக் காக்க தன் **சதையை அளித்தான்**
- மார்போலையில் எழுதும் **எழுத்தாணி தந்தம்**.
- அகமும், புறமும் கலந்த நூல் எனினும் **அகப்பொருளுக்கே** முதன்மை தருகிறது.

## தனிப்பாடல் திரட்டு

- சங்க இலக்கியத்திற்கு பின் தோன்றிய நூல் தனிப்பாடல்களின் தொகுதி. **ஆசிரியர் பெயர் தெரியவில்லை**.
- புலவர்கள் பலர் அவ்வப்போது பாடிய பல **பாடல்களின் தொகுப்பு தனிப்பாடல் திரட்டு**.
- தனிப்பாடல் திரட்டு **110 புலவர்களால் 1113 பாடல்களாக** பாடப்பட்டுள்ளது.
- தனிப்பாடல் திரட்டு **இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமியின்** வேண்டுதலுக்கு இணங்க தொகுத்தவர் **சந்திரசேகர கவிராசப் பண்டிதர்**.
- ஒரு சொல்லையோ தொடரையோ **இரு பொருள்** பாடக்கூறுவது **சிலேடை எனப்படும்**.

## தூது

- **உயர்திணைப் பொருளையோ அ∴றிணைப்பொருளையோ** தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம்.
- காமம் மிக்க **கலிபடர் கிளவி** என்ற தொல்காப்பிய அடியின் அடிப்படையில் தோன்றிய இலக்கியம் தூது.
- **தொடை (மாலை)** வாங்கி வா என்று கூறும் இலக்கியம் **தொல்காப்பியம்** கலிவெண்பாவால் பாடப்படுவது தூது.
- தூது இலக்கியத்திற்கு **வாயில் இலக்கியம், சந்து இலக்கியம்** என்ற பெயர்களும் உண்டு.
- **தூது – அகத்தூது, புறத்தூது** என இருவகைப்படும். **நாயன்மார்களும்**, **ஆழ்வார்களும்** தூது படல் பாடியுள்ளனர்.
- சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவியிடம் தூது அனுப்புவது உண்டு.
- **தசவிடு தூது அல்லது பத்து தூதையும் பாடியவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை**.
- முதல் தூதுவிடு நூல் **நெஞ்சுவிடு தூது**. சிறந்த தூது நூல்கள் அழகர் **கிள்ளை விடு தூது, தமிழ்விடு தூது**.
  1. உமாபதி சிவாச்சாரியார் - **நெஞ்சுவிடு தூது**
  2. பத்மகிரியார் - **தென்றல் விடு தூது**
- ஒருவர் கருத்தை மற்றொருவற்க்கு வெளிப்படுத்த பல்வேறு வழிகள் உள்ளன. அவற்றுள் தூது செல்லுதல் ஒன்று
- குறுந்தொகை போன்ற அக இலக்கியங்கள் **பாணன் தூது, தோழி தூது** என அருமையான தூது இலக்கியப் பாடல்களைத் தருகின்றன.
- தண்டியலங்காரம் தூதினையும் காப்பிய முறையில் ஒன்றாக குறிப்பிட்டுச் சொல்கின்றது.

➢ தமிழில் இலக்கண விளக்கம் என்னும் நூல் தூதிற்குரிய பொருள்கள் இவை எனப் பட்டியலிடுகின்றது.
➢ இலக்கண விளக்கம் தூதுக்குரிய பொருள் பத்து எனக் குறிப்பிடினும் பிற்காலப் புலவர்கள் **மான், நெல், பணம், புகையிலை, மனம், தமிழ்** போன்ற பல பொருட்களை தூதாக அனுப்பியுள்ளனர்.
➢ நாயன்மார்களை விட ஆழ்வார்கள் தூது அனுப்பும் பாடல்கள் நம் உள்ளத்தை உருக்கித் தமிழின் சிறப்பினை எடுத்துரைப்பனவாகும்.
➢ தன்னை தலைவியாக நினைத்துக் கொண்டு நாரையை தூது விட்ட ஆழ்வார் - **நம்மாழ்வார்.**
➢ பிள்ளைத்தமிழுக்கு அடுத்து சிற்றிலக்கிய வகைகளில் தூது இலக்கியமே மிகுதியாக உள்ளது.
➢ தூது வடமொழியில் **சந்தேசம்** என்று கூறப்படுகிறது. **காளிதாசரின் மேகசந்தேகம்** வட மொழி இலக்கியங்களுள் புகழ் பெற்றது.
➢ உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் சந்தியின் விடுத்தல் **முந்நூறு தூது - இலக்கண விளக்கம்**

## தமிழ்விடு தூது

➢ **வெண்பா, ஆசிரியர்ப்பா, கலிப்பா, வஞ்சிப்பா** என்னும் நால்வகைப் பாக்களும் **வயலின் வரப்புகளாகவும்**
➢ **துறை, தாழிசை, விருத்தம்** என்னும் பாவினங்கள் **மடைகளாகவும்**
➢ **மனம்**, **புத்தி, சித்தம், அகங்காரம்** என்னும் **நாற்கரணங்களையும் நல்ல ஏர்களாகவும்** கொண்டு சொல்லேருழவர் உழவு செய்ய, **வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம்** ஆகிய செய்யுள் நன்னெறிகளே **விதைகளாக அறம், பொருள், இன்பம், வீடு** ஆகியன விளைபொருள்களாயின.
➢ இப்பயிர்களின் இடையே வளரும் களைகளாகிய போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் **குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிபுத்தூரனும்** தலையை வெட்டுவதற்கு **ஒட்டக்கூத்தனும் இருந்தமையால்**, தமிழே நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்.
➢ தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் **தூதும்** ஒன்று. கலிவெண்பாவில் உயர்திணைப் பொருளையோ அஃறிணைப்பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம்.
➢ **மதுரையில் கோவில்** கொண்டிருக்கும் **சொக்கநாதர்மேல்** காதல்கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறி வருவாறு **தமிழ்மொழியைத் தூது** விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடு தூது.
➢ இதனை இயற்றியவர் **பெயர் அறிய இயலவில்லை**.
➢ “அரியா சனமுனக்கே யானால் உனக்குச் சரியாரும் உண்டோ” என்று தமிழ் விடு தூதில் தமிழை சிறப்பாகக் குறிப்பிடுகிறார். பால், முந்திரி, வாழை, கரும்பு போன்றது தமிழ்.

## அழகர் கிள்ளைவிடு தூது

➢ அரசன் ஒருவன் மற்றோர் அரசனுக்குத் தூதுவரை அனுப்புவது பழங்காலம் முதல் இருந்துவரும் வழக்கமாகும்.
➢ **அதியமானின் தூதராக ஔவை** சென்றதைப் **புறநானூறு** கூறுகிறது.
➢ மனிதர்களை மட்டுமின்றி உயிருள்ள, உயிரற்ற பிறபொருள்களையும் தூதனுப்புவதாகக் கற்பனை செய்து பாடும் வழக்கமும் அன்று இருந்தது.
➢ இதுவே பிற்காலத்தில் ஒரு சிற்றிலக்கிய வகையாக உருவாயிற்று.

➢ தூது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தலைவன் ஒருவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி ஒருத்தி தன் காதலையும் பிரிவாற்றாமையையும் வெளிப்படுத்த விரும்பித் தலைவன்பால் தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியமாகும்.

**"பயிறருங் கலிவெண் பாவி னாலே**
உயர்திணைப் பொருளையும் அ∴றிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே''

என்று இலக்கண **விளக்க நூற்பா, தூதின் இலக்கணம்** கூறுகிறது. **வெண்டளை விரவிய**
**கலிவெண்பாவால்** தூது இலக்கியம் பாடப் பெற வேண்டும்.

➢ அன்னம், மயில், கிளி, குயில், வண்டு, நெஞ்சம், முகில், தென்றல், மான், தமிழ் முதலியவற்றுள் யாதானும் ஒன்றைத் தூதாக அனுப்புவர்.
➢ **திருமாலிருஞ்சோலை** மலையில் கோயில் கொண்டிருக்கும் **அழகரிடத்து பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை** என்ற புலவர் **கிளியைத் தூதுவிடுவதாக** அமைத்துப் பாடியிருப்பது அழகர் கிள்ளைவிடு தூது ஆகும்.
➢ இ∴து ஏறக்குறைய **250** ஆண்டுகளுக்கு முந்திய நூலாகும். **காப்பு வெண்பா ஒன்றையும் 239 கண்ணிகளையும்** உடையது. பாட்டின் **இரண்டடிகளைக் கண்ணி என்பர்**.
➢ சொக்கநாத பிள்ளை மரபினர் **பலபட்டடைக்கணக்கு** என்னும் ஒருவகைப் பணியைச் செய்து வந்தனர்.
➢ இவர் தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை.
➢ **மதுரை மும்மணிக்கோவை, தென்றல் விடு தூது என்பன இவர் இயற்றி வேறு சில நூல்கள் ஆகும்.**

## அழகர் சிறப்பு

அரிவடிவு மாய்ப்பின் னரன்வடிவு மாகிப்
பெரியதொரு தூணிற் பிறந்து – கரிய 1
வரைத் தடந் தோளவுணன் வன்காயங் கூட்டி
அரைத் திடுஞ் சேனை யருந்தி – உருத்திரனாய்ப் 2

| | |
|---|---|
| **கோசிகமணி தூது, வயுந்த மாலை தூது,** | சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு அனுப்பியது |
| **கிளிவிடு தூது** | சீவக சிந்தாமணியில் **குணமாலை** சீவகனுக்கு அனுப்பியது |
| **இறைவன் தூது** | பெரிய புராணத்தில் சுந்தரர் பறவையாருக்கு அனுப்பியது |
| **அன்னவிடு தூது** | நளவெண்பாவில் நளன் தமயந்திக்கு அனுப்பியது |
| **ஔவை தூது** | அதியமான் தொண்டைமானிடம் அனுப்பியது |
| **அன்னச் சேவல் தூது** | பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடம் அனுப்பியது |
| **வீரபாகுத் தேவர் தூது** | முருகன் சூரபதுமனிடம் அனுப்பியது |
| **அங்கதன் தூது** | இராமன் இராவணனிடம் அனுப்பியது |
| **விண்ணவத் தூது** | தேம்பாவணியில் வரும் தூது சூசையப்பரின் |
| **காக்கைவிடு தூது** | வெள்ளை வாரணர் **(இராஜாஜியை** |

| | |
|---|---|
| | **<u>எதிர்த்து)</u>** |

## கலம்பகம்

- **<u>பல்வகைப் பாக்களையும் கலந்து பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம்.</u>** அந்தாதித் தொடை அமையப் பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம்.
- **<u>கலம் - பன்னிரண்டு, பகம் - அதில் பாதி ஆறு</u>**, புயவகுப்பு, அம்மானை, குறம், மறம், கொற்றியார் போன்ற பதினெட்டு உறுப்புகள் சேர்ந்தது கலம்பகம்.
- கலம்பகத்தின் தொடக்கத்தில் மயங்கிசைக் **<u>கொச்சகக் கலிப்பா, வெண்பா, கட்டளைக்</u>** கலித்துறை என்ற மூன்றும் வரிசையாக வரும்.
- சம்பிரதம் என்பது கண்கட்டு வித்தை, **<u>அறம் வைத்துப்</u>** பாடப்படும் இலக்கியம் **<u>கலம்பகம்</u>**.
- அரசன் மீது பாடப்பட்ட **<u>100 பாடல்களைக்</u>** கொண்ட நூல் **<u>நந்திக்கலம்பகம்</u>**.
- அகப்பொருளும், புறப்பொருளும் கலந்து பாடப்படும் இலக்கியம் கலம்பகம்
- கதம்பம் என்பது கலம்பகம் என்று திரிந்ததாகக் கூறியவர் **<u>உ.வே.சா</u>**.
- ஒட்டுமொத்த சமுதாயத்தையும் படம்பிடித்துக் காட்டும் சிற்றிலக்கியம் **கலம்பகம்.**
- கலம்பகம் பாடுவதில் வல்லவர் **<u>இரட்டையர்கள் (இளஞ்சூரி (குருடு), முதுசூரி (நொண்டி)</u>**

  ‘‘கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்’’
- **<u>கதம்பம்</u>** - பல பூக்களை சேர்த்து தொடுக்கும் மாலை
- நந்திவர்மன் இறந்தமையைக் கூறும் பாடல் **கையறு நிலையன் உச்சத்திற்கு** சான்றாக அமையும்.
- கலம்பு + அகம் என்பது **மெலித்தல் விகாரம்** பெற்றுக் கலம்பகம் என்றாயிற்று. கலம்பக இலக்கியத்தின் பெயர்கள் பெரும்பாலும் தலைவனின் ஊர் பெயராலேயோ (அ) தலைவன் பெயராலயோ அமையும்.
- நந்திக் கலம்பகத்தின் கதையை **<u>சிவஞான சுவாமிகள் இயற்றிய சோமேசர் முதுமொழி</u>** வெண்பா.
- **பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்** - திருவரங்கக் கலம்பகம்,
- **வீரமாமுனிவர்** - திருக்காவலூர்க் கலம்பகம்
- **இரட்டையர்கள்** - திருவாமத்தூர்க் கலம்பகம், தில்லைக் கம்பலகம்.

## <u>மதுரைக் கலம்பகம்</u>

- மதுரைக் கலம்பகம் மதுரை மாநகரில் கோவில் கொண்டுள்ள அருள்மிகு அங்கயற்கண்ணி உடனாய **<u>சொக்கநாதப் பெருமானைப்</u>** பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட நூல்.
- இந்நூலைப் பாடியவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த **<u>குமரகுருபரர்</u>** ஆவார்.
- பிறந்தது முதல் ஐந்தாண்டு வரை பேசாத குழந்தையாய் இருந்து பின்னர் **<u>திருச்செந்தூர் முருகப் பெருமான்</u>** திருவருளால் பேசுந்திறன் பெற்றவர் குமரகுருபரர்.
- அவர் இயற்றிய **<u>மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்</u>**, பிள்ளைத் தமிழ் இலக்கிய வகையில் மிகச் சிறந்த ஒன்று என்பர்.
- **<u>கந்தர் கலி வெண்பா, காசிக் கலம்பகம், முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லி மாலை,</u>** நீதிநெறி விளக்கம் முதலியன இவர் இயற்றிய வேறு சில நூல்கள் ஆகும்.
- தமிழையும் தெய்வத்தையும் இருகண்களாகக் கொண்டு வாழ்ந்த துறவியாவார்.

- தமிழில் தோன்றிய **முதல் கலம்பகம் நந்திக்கலம்பகம்** எனப்படும். **ஆசிரியர் பெயர் தெரியவில்லை**. நந்திவர்மனின் பெருமையை போற்றும் நூல். கலம்பகத்தால் இறந்த மன்னன் **மூன்றாம் நந்திவர்மன்**.
- ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாக்களும் தாழிசை துறை விருத்தங்களும் இதில் விரவிவரும் பலவகை யாப்புகளாகும்.
- **கலம்பகத்தின் 18 உறுப்புகள்:** புயவகுப்பு, அம்மானை, பாண், தவம், வண்டு, மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், தூது, குறம்,
- நந்திக் கலம்பத்தின் **பாட்டுடைத் தலைவன்** பல்லவ மன்னன் **மூன்றாம் நந்திவர்மன்**
- கலம்பக நூல்களில் முதல் நூல் நந்திக் கலம்பகம். காலம் **கி.பி. 9-ம் நூற்றாண்டு**.
- ‘‘பதிதொறு புயல்மொழி தருமணி பணைதரு’’ என்னும் நந்திக்கலம்பக பாடல் வரியில் உள்ள புயல் மற்றும் பணை என்பதன் பொருள் **பணை - மூங்கில், புயல் - மேகம்**.
- வைணவ நூல்களில் முதலில் நாலாயிரத்திவ்ய பிரபந்தமும் அடுத்து **வேதாந்த தேசிகரின் தேசிகப் பிரபந்தமும்** பிறகு **பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் அஷ்டப் பிரபந்தமும்** புகழ்பெற்ற நூலாகும்.
- **‘‘நந்தி கலம்பகத்தால் இறந்தகதை நாடறியும்’’** என்பது **சோமேசர் முதுமொழி** வெண்பா பாடல்.

## உலா

- ‘‘ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப’’ என்ற தொல்காப்பிய நூற்பா அடிப்படையில் தோன்றிய இலக்கியம் **உலா இலக்கியம்**.
- வேறுபெயர்கள் **பவனி, பெண்பாற் கைக்கிளை.**
- கலிவெண்பாவால் பாடப்படுவது உலா, உலா வரப் பயன்படுவன தேர், குதிரை, யானை.
- உலா இருபகுதிகளை உடையது முன்னிலைப்பகுதி, பின்னிலைப் பகுதி.
- முன்னிலைப் பகுதியில் பாட்டுடைத் **தலைவனின் சிறப்புக்** கூறப்படும்.
- பின்னிலைப் பகுதியில் ஏழு பருவப் **பெண்களின் காமம்** கூறப்படும்.
- தசாங்கம் என்பது பாட்டுடைத் தலைவனின் **பத்து உறுப்புகளைச்** சிறப்பித்தல்
- **பத்து உறுப்புகள்**: பெயர், நாடு, தலைநகர், மலை, ஆறு தார், ஊர்தி. தேர், படை, முரசு.

### பெண்களின் ஏழு பருவம்

| பருவம் | : | வயது |
|---|---|---|
| பேதை | : | 5 – 7 |
| பெதும்பை | : | 8 – 11 |
| மங்கை | : | 12 – 13 |
| மடந்தை | : | 14 – 19 |
| அரிவை | : | 20 – 25 |
| தெரிவை | : | 26 – 32 |
| பேரிளம் பெண் | : | 33 – 40 |

- பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர் கூறப்படும். ஏழு பருவப் பெண்களின் பெயர் கூறப்படாது.
- ஏழு பருவப் பெண்களும் பாட்டுடைத்தலைவன் மீது காமம் கொள்வதாகப் பாடப்படும்.
- பாட்டுடைத் தலைவன் காமம் கொள்வதாகப் பாடும் மரபு இல்லை.
- பெதும்பைப் பருவம் பாடுவது கடினம், பேசும் உலாவிற் பெதும்பைப் புலி எனும் வழக்கு உள்ளது. **உலா– கலி வெண்பாவில்** இயற்றப்படும்.
- வேறுபெயர்கள் - **உலாப்புறம், பவனி உலா, உலா மாலை புறவுலா**
- முன்னெழுநிலை– தலைவனது குலம், குடிப்பிறப்பு, மரபு, அழகு, அறிவு, ஆண்மை, அன்பு ஆகியவை பேசப்படும்.
- பின்னெழுநிலை - **பேதை, பெதுமை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்** எனும் ஏழு பருவப் பெண்டிரின் உடல் அமைப்பு, உள்ள உணர்வுகள், தலைவன் மீது அவள் கொள்ளும் காதல் மெய்ப்பாடுகள் போன்றவை கூறப்படும்.

❖ **முதல் உலா நூல்:**

- முதல் உலா நூல் திருக்கையிலாய ஞான உலா - **சேரமான் பெருமாள்** நாயனார் 9ஆம் நூற்றாண்டு
- திருக்கையிலாய ஞான உலாவிற்கு **ஆதி உலா, தெய்வீக உலா** என்ற வேறு பெயர்களும் உண்டு.

❖ **உலா நூல்கள்:**

- ஒட்டக்கூத்தர் - **மூவர் உலா**
- நம்பியாண்டார் நம்பி – ஆளுடையப் பிள்ளை திரு உலாமாலை
- இரட்டையர்கள் - **ஏகம்பநாதர் உலா**
- திரிகூடராசப்பக் கவிராயர் - திருக்குற்றாலநாதர் உலா
- அந்தக்கவி வீரராகவ முதலியார் - திருவாரூர் உலா, திருக்கழுங்குன்றத்து உலா
- படிக்காசுப் புலவர் - சிவந்தெழுந்த பல்லவராயன் உலா
- கத்துவராயர் - சொக்கநாதர் உலா

## இராசராசசோழன் உலா

- இங்குப் பாடமாக இடம் பெறுவது **இராசராசசோழன் உலா**. இராசராச சோழனுலாவைப் பாடியவர் **ஒட்டக்கூத்தர்**. **கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன்** என்றெல்லாம் புகழப்படும் ஒட்டக்கூத்தர் **விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன்** ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு விளங்கியவர். அம்மூவரைப் பற்றியும் அவர் பாடிய மூன்று உலாக்களும் மூவருலா எனப்படுகிறது. **தக்கயாகப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்** முதலியன இவர் இயற்றிய வேறு நூல்கள் ஆகும். கூத்தர் என்பதே இவர் இயற்பெயர். **ஒட்டம் (பந்தயம்)** வைத்துப்பாடுவதில் **வல்லவர்** ஆதலால் இவர் ஒட்டக்கூத்தர் எனப்பட்டார். இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகும்.

## விக்கிரமசோழன் உலா

- குடகு மலையை ஊடறுத்து அலைமோதும் காவிரியைத் தந்தவன் **கவேரன்**.

- தெளிந்த அருவியை உடைய மேரு மலையின் உச்சியில் **புலிக்கொடி நாட்டி**, பொன்னியாகிய காவிரியின் இருகரைகளையும் உயர்த்திக் கட்டியவன் **சோழன் கரிகாலன்**.
- பொய்கையாரின் களவழி நாற்பது பாடலுக்குப் பரிசாகச் **சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறைவீடு செய்தவன் சோழன் செங்கணான்;** போரில் பெருமையாக எண்ணத்தக்க விழும்புண்கள் தொண்ணூற்றாறும் பெற்றவன் சோழன் விசயாலயன்.
- **சிவபெருமான் ஆடலரசராய்க்** காட்சிதரும் தில்லைக்குப் பொன்வேய்ந்தவன் **சோழன் முதல் பராந்தகன்;** பதினெட்டுச் சிற்றூர்களையும் கைப்பற்றி மலைநாடு வென்றவன் சோழன் **முதல் இராசராசன்;** வடக்கே படையெடுத்துக் கங்கையும் கிழக்கில் கடாரமும் வென்று கைக்கொண்டவன், சேரர் கப்பற்படை முழுவதையும் அழித்தவன் **சோழன் இராசேந்திரன்**.
- **சாளுக்கியர்களின்** தலைநகரான **கல்யாணபுரத்தின் மீது** படையெடுத்து மும்முறை போரிட்டு வென்றவன் **சோழன் இராசாதிராசன்**.
- கொப்பத்துப் போரில் ஆயிரம் யானைகளை வென்றவன் **சோழன் இராசேந்திரன்**. **திருவரங்கத்தில்** பள்ளிகொண்ட பெருமாளுக்கு மணிகள் பலவற்றால் பாம்பணை அமைத்தவன் **சோழன் இராசமகேந்திரன்**.
- முதல் குலோத்துங்க சோழனுடைய நான்காவது **மகன் விக்கிரம சோழன்**.
- விக்கிரம சோழனின் தலைநகரம் **கங்கை கொண்ட சோழபுரம்**.
- விக்கிரம சோழனின் தாய் **மதுராந்தகி**

❖ **ஆசிரியர் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | **ஒட்டக்கூத்தர்** |
| சிறப்புப்பெயர் | : | **கவிச்சக்கரவர்த்தி** |
| சிறப்பு | : | **விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன்**, **இரண்டாம் இராசராசன்** ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு விளங்கியவர். |
| இயற்றிய நூல்கள் | : | **மூவருலா, தக்கயாகப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்** |
| காலம் | : | பன்னிரண்டாம் நூற்றாண்டு |

❖ **நூல் குறிப்பு:**

- **உலா என்பது**, தொண்ணூற்றாறு **சிற்றிலக்கிய வகைளுள்** ஒன்று. இறைவன், மன்னன், மக்களுள் சிறந்தோர் முதலியோரின் சிறப்புகளை எடுத்துக்கூறும் நோக்கிலேயே இவ்வகைச் சிற்றிலக்கியங்கள் எழுதப்பெற்றுள்ளன.
- உலா என்பதற்குப் **ஊர்கோலம் வருதல்** என்பது பொருள்.
- பாட்டுடைத்தலைவன் வீதியில் உலா வர அவனைப் **பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்** என்னும் எழுவகைப்பருவ மகளிரும் கண்டு காதல்கொள்வதாய் அமைத்துப் பாடுவது உலா.
- முதற்குலோத்துங்க சோழனுடைய **நான்காவது மகன் விக்கிரமசோழன்**. அவருடைய தாய் **மதுராந்தகி**.
- இவர் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்.
- இவருடைய காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

மகளிரின் எழுவகைப் பருவங்கள் பற்றி அறிந்தீர்கள் அல்லவா!
மலரின் எழுவகைப் பருவங்கள் பற்றியும் அறிந்துகொள்ளுங்கள்

1. **அரும்பு 2. மொட்டு 3. முகை 4.மலர் 5.அலர் 6.வீ 7.செம்மல்**

## திருக்கையிலாய ஞான உலா

- மற்றொரு பெயர் - தெய்வீக உலா
- பாட்டுடைத் தலைவன் - சிவபெருமான்
- கோவை உலா அந்தாதிக்கு - ஒட்டக்கூத்தர்
- இரட்டைப் புலவர்கள் - ஏகம்பநாதருலா
- உலாவில் ஏழுவகைப் பருவங்கள்
- **ஆடவர்**

| பெயர்கள் | வயது |
|---|---|
| பாலன் | 1 - 7 |
| மீளி | 8 - 10 |
| மறவன் | 11 - 14 |
| திறலோன் | 15 |
| காளை | 16 |
| விடலை | 17 - 30 |
| முதுமகன் | 38 - 48 |

- **மகளிர்:**

| பெயர்கள் | வயது |
|---|---|
| பேதை | 5 - 7 |
| பெதும்பை | 8 - 11 |
| மங்கை | 12 - 13 |
| மடந்தை | 14 - 19 |
| அரிவை | 20 – 25 |
| தெரிவை | 26 – 32 |
| பேரிளம் பெண் | 33 - 40 |

# பள்ளு

- **<u>உழவர் வாழ்வைச்</u>** சித்திரிக்கும் இலக்கியம் **<u>பள்ளு</u>**. வேறுபெயர் **<u>உழத்திப்பாட்டு</u>**.
- **<u>இஸ்லாமியர் பாடாத இலக்கியம் பள்ளு</u>**.
- பள்ளு இலக்கியம் **<u>பள்சேல், பள்ளு நாடகம்</u>** எனவும் வழங்குவர்.
- இதன் எண்ணிக்கையின் மிகுதி கருதி 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பர்.
- **<u>120 வகை மீன் வகைகளையும் பள்ளு நூல்கள்</u>** கூறுகின்றன.
- தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டனுள் இது **புலன்** எனும் வகையில் அடங்கும். தொல்காப்பியம் புறத்திணையியல் சுட்டும் ஏரோர் களவழி சிலப்பதிகாரம் காட்டும் ஏர்மங்கலம்,
- பின்னால் தோன்றிய உழத்திப்பாட்டு இவையே பின்னர் காலப்போக்கில் தனி இலக்கியமாகிப் பள்ளு இலக்கியமாக மலர்ந்தது.
- பள்ளு நூல்கள் சிந்து யாப்பு மிகுதியாகப் பெற்று விருத்தம் குறைந்து வரும் இயல்பினை கொண்டது.
- பள்ளனே **<u>உழவுத் தொழிலாளி</u>**. அவனுக்கு இருமனைவியர் மூத்தபள்ளி. இளையபள்ளி.
- இரு மனைவிகளுக்கு இடையே நடைபெறும் பள்ளனின் அன்பைப் பெறுவதற்கான போட்டி மனப்பான்மை, அதன் காரணமாக எழுகிற குடும்பச் சண்டைகள் இச்சிக்கலில் பள்ளனுக்கு ஏற்படுகிற நெருக்கடி போன்றவற்றையும் சுவைபட விவரிக்கிறது.
- பள்ளு இலக்கியங்கள் பெரும்பாலும் ஊர்ப் பெயரிலே அமையும்.
- உழவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை சுவை பெறச்செய்யும் சிற்றிலக்கியம் பள்ளு ஆகும்.
- மூத்த பள்ளி, இளைய பள்ளி குடும்பன் வரவோடு அவர் பெருமைகூறல், நாட்டு வளன், குறிகேட்டல், மழை வேண்டி வழிபடல், மழைக்குறியோர்தல், ஆற்றல் நீர் வரவு முதலான பல உறுப்புகளைப் பெற்றது பள்ளு இலக்கியமாகும்.
- மருதநில நூலாக கருதப்படும் சிற்றிலக்கியம் பள்ளு. சந்த இசை மிகுந்த நூல் பள்ளு.
- சமயங்களைத் தாக்குவது போன்று சமயக் கருத்துகளையும் கதைகளையும் சுவையாகக் கூறுவது பள்ளு.

## <u>முக்கூடற் பள்ளு</u>

- 'பள்' என்பது பள்ளமான **<u>நன்செய் நிலங்களையும்</u>** அங்குச் செய்யப்படும் உழவினையும் குறிக்கும். ஆகவே பள்ளு உழவரின் பாட்டுக்குப் பெயராக வந்தது. பள்ளு சிற்றிலக்கிய வகைகள் ஒன்று.

  ''சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
  தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
  புலனென மொழிப் புலனுணர்ந் தோரே''

- என்பது தொல்காப்பியம். தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வகைப்பிரிவில் ஒன்றான புலன் என்னும் இலக்கிய வகை 'பள்ளு வகை' இலக்கியத்திற்குப் பொருந்தும் என்பர்.
- **<u>சைவ வைணவங்களை ஒருங்கிணைக்கும்</u>** இலட்சியங் கொண்ட நூலாக முக்கூடற் பள்ளு தெரிகிறது.

- உழவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவை பெறச் சொல்லும் சிற்றிலக்கியம் பள்ளு. மூத்தபள்ளு, இளையபள்ளு குடும்பண் வரவோடு அவன் பெருமை கூறல், நாட்டுவளன், குறிகேட்டல், மழை வேண்டி வழிபடல், மழைக்குறியோர்தல், ஆற்றில் நீர் வரவு முதலான பல உறுப்புகளைப் பெற்றது பள்ளு இலக்கியமாகும்.
- சிந்தும் விருத்தமும் பரவிவர இது பாடப் பெறும். இந்நூலை இயற்றியவர் இன்னார் என அறியப்படவில்லை.
- இந்நூல் தோன்றிய காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டு என்பர்.

## முக்கூடற்பள்ளு

### தென்கரை நாட்டு வளம்

காயக் கண்டது சூரிய காந்தி;
கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம்.
மாயக் கண்டது நாழிகை வாரம்;
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்;
தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்;
சீவல மங்கைத் தென்கரை நாடே.

- முக்கூடற்பள்ளுவின் ஆசிரியர் **என்னாயினாப் புலவர்** (எனக் கூறுவர்) காலம் - **17ம் நூற்றாண்டு**.
- மறுபெயர் : **ஆசூர் வடகரை நாடு. தென்பால் உள்ள பகுதி: சீவல மங்கை தென்கரை நாடு.**
- பள்ளுநூல்களில் முதல் மற்றும் சிறந்தது **முக்கூடற்பள்ளுவாகும்**.
- உழவு தொழில் செய்து வரும் பள்ளர்களின் வாழ்க்கையை குறிப்பதால் பள்ளு என்று வழங்கப்படுகிறது.
- ஒன்பது மணிகள் (நவரத்தினங்கள்) : **முத்து, பவளம், வைரம், புஷ்பராகம், இரத்தினம், வைடூரியம், கோமேதகம், மரகதம், மாணிக்கம்**.
- திருநெல்வேலிக்கு சிறிது வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகளும் கலக்கும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர் **முக்கூடல்**. **அழகர் மீது பாடப்பட்டது முக்கூடற்பள்ளு ஆகும்.**
- இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.
- ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னாயினாப் புலவர் எனச் சிலர் கூறுவர்.
- சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், **திருநெல்வேலி மாவட்டப் பேச்சு** வழக்கை ஆங்காங்கே காணலாம்.
- **நூல் குறிப்பு:** நீர் நிறைந்த பள்ளமான சேற்று நிலத்தில் உழவுத்தொழில் செய்து வாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துக் கூறுவதாக அமைந்த நூல் பள்ளு.
- திருநெல்வேலிக்குச் சற்று வடகிழக்கில் **தண்பொருநை, சிற்றாறு**, **கோதண்டராம ஆறு** ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர், முக்கூடல், இதற்கு ஆசூர் **வடகரை நாடு** என்னும் பெயருமுண்டு.
- தென்பால் உள்ள பகுதி, **சீவல மங்கைத் தென்கரை** நாடு என வழங்கப் பெறுகின்றது.
- தென்கரை நாட்டில் **மருதீசர்** வீற்றிருக்கும் ஊர் **மருதூர்**.

- முக்கூடலில் வாழும் பள்ளி **<u>மூத்த மனைவி</u>**, மருதூரில் வாழும் பள்ளி **<u>இளைய மனைவி</u>**.
- இருவரையும் மணந்து திண்டாடும் பள்ளனின், வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பது போலப் பாடப்பட்ட இந்நூல், முக்கூடற்பள்ளு எனப் பெயர் பெற்றது.
- **நூல் பயன்:** முக்கூடற்பள்ளுவைக் கற்பதால், அக்கால மக்களின் உழவுத்தொழில் பற்றியும் அச்சமுதாயத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.
- காளைகளின் பல்வேறு பெயர்கள், விதைகளின் பெயர்கள், மீன்வகைகள் என மருத நிலவளம் பற்றியும் அறியலாம்.

## <u>காவடிச்சிந்து</u>

- காவடிச்சிந்து நூல் கண்ணிகளால் அமைந்த "சிந்து" என்ற சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது.
- காவடிச்சிந்து என்ற இலக்கிய வகையை முதன்முதலில் பாடியவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்.
- பெற்றோர் சென்னவர் - ஓவுஅம்மாள்
- காலம் 1861- 1890
- இவர் வீரை அந்தாதி, கோமதி அந்தாதி, வீரைப்பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

புள்ளிக் கலாபமயிற் பாகன்-சக்தி
புதல்வ னானகன யோகன்-மலை
போலத் தான்திரண்ட
கோலப் பன்னிரண்டு வாகன்
நல்வி வேகன்

வள்ளிக் கிசைந்த முரு கேசன்-
அண்ணா
மலைக்கவி ராசன்மகிழ் நேசன் -
என்றும்
வாழும் கழுகுமலை
வாவி வளம்சொல்லுவேன் மாதா
கேள் இப்போதே

**- அண்ணாமலையார்**

- **<u>பொருள்:</u>**
  - பெண்ணே! அழகிய புள்ளிகளை உடைய மயிலை உடையவன் முருகன்; உமையவளின் மகன்; சிறந்த பேறு பெற்றவன்.
  - மலை போன்ற திரண்ட அழகிய பன்னிரு தோள்களை உடையவன்; சீரிய ஞானமுடையவன்; வள்ளிக்குப் பொருத்தமானவன்; அண்ணாமலைக் கவியரசனின் மனம் மகிழச்செய்யும் அன்பன்.

➢ இத்தகைய முருகன் எழுந்தருளியிருக்கும் கழுகுமலையில் அமைந்துள்ள பொய்கையின் வளத்தைப் இப்பொழுதே சொல்வேன, கேட்பாயாக!

## திருவேங்கடத்தந்தாதி

❖ **அந்தாதி:**

➢ **அந்தாதிக்குச் சொற்றொடர் நிலை** என்ற பெயரும் உண்டு.

➢ யாப்பெருங்கலங்காரிகை – அந்தம் முதலாக தொடுப்பது அந்தம் எனக் குறிப்பிடுக.

➢ இது தனியிலக்கணமாக இருப்பினும் கலம்பகத்தில் ஓர் உறுப்பாக வருகின்றது.

➢ முதல் அந்தாதி நூல் **அற்புதத் திருவந்தாதி**, பாடியவர் - **காரைக்கால் அம்மையார்**.

➢ **அந்தாதி பாட வல்லவர் ஒட்டக்கூத்தர்**. முதல் (அ) ஆதி அந்தாதி – காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி (6-ம் நூற்றாண்டு, 101 பாடல்கள்) உள்ளன.

➢ சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று அந்தாதி. அந்தம் என்ற சொல்லுக்கு இறுதி என்றும். ஆதி என்ற சொல்லுக்கு முதல் என்றும் பொருள்.

➢ ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.

➢ இதற்குரிய யாப்பு வெண்பா (அ) **கட்டளை கலித்துறையாகும்**.

➢ **புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாதராயர்** பாடிய பாடலில் முதலில் ஐந்து வரிகளில் அந்தாதி அமைப்பினை காணக் முடிகின்றது.

➢ பக்தி இலக்கிய காலமே அந்தாதி பெரிதும் உருவாகிய காலமெனலாம்.

➢ சைவத்தின் பன்னிரு திருமுறைகளில் பதினொராம் திருமுறையில் மட்டும் எட்டு அந்தாதி நூல்கள் அடங்கியுள்ளன.

❖ **11-ம் திருமுறையில் வந்த அந்தாதிகள்:**

➢ சிவபெருமாள் திருவந்தாதி - இரண்டு 1 கபிலர் 2. பரணர்.
கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி - நக்கீரர்
திருவேகம்ப முடையார் அந்தாதி - பட்டினத்தடிகள்
திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பிகள்
பொன் வண்ணத் தந்தாதி - சேரமான் பெருமாள்

➢ ஆழ்வார்களில் தலைசிறந்த **நம்மாழ்வார் திருவாய்மொழியின் ஆயிரம்** பாடல்களையும் **அந்தாதி தொடையில்** அமைத்துள்ளார்.

➢ அந்தாதி பல வகைப்படும், சிலேடை அந்தாதி பாடுவது கடினம் என்பர்.

- **1, 2, 3 திருவந்தாதி** - முதல் மூன்று ஆழ்வார்கள்
- **திருவந்தாதி** - திருமழிசை ஆழ்வார்
- **சடகோபரந்தாதி** - கம்பர்
- **திருவரங்கத்தந்தாதி** - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்
- **கந்தரந்தாதி** - அருணகிரிநாதர்
- **திருவஞ்சணை அந்தாதி** - எல்லப்பநாவலர்
- **அபிராமி அந்தாதி** - அபிராமி பட்டர்
- **திருக்குறள் அந்தாதி** - இராசைக் கவிஞர்

- வண்ணச் சரபம் **<u>தண்டபாணி சுவாமிகள்</u>** அதிக எண்ணிக்கையில் அந்தாதி பாடியுள்ளார்.
- திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி –**<u>அதிவீரராம பாண்டியன், விருத்தப் பாக்களால் ஆனது</u>**. இது குட்டித் திருவாசகம் என போற்றப்படுகிறது.

"செல்வம் ஈயும் சிறப்பும் அளித்தளத்து
அல்லல் தீர்க்கும் அறிவை உதவிடும்" - **<u>திருக்கருவை பதிற்றுப்பந்தாதி</u>**

**<u>திருவேங்கடத்தந்தாதி</u>**

- திருவேங்கடத்தில் கோயில் கொண்டிருக்கும் **<u>திருமாலின் அருளை வேண்டிப்</u>** பாடப்பெற்ற அந்தாதி நூல்.
- ஆதலால் இதனைத் திருவேங்கடத்து அந்தாதி என்று கூறுவர்.
- இந்நூலைப்பாடியவர் **<u>பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ஆவார்</u>**.
- 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இவர் **<u>அழகிய மணவாளதாசர்</u>** எனவும் அழைக்கப்பட்டார்.
- தெய்வக்கவிஞர் என்று பொருள்படும் **<u>'திவ்வியகவி'</u>** என்ற பெயராலும் இவரை அழைத்தனர்.
- இவர் இயற்றிய எட்டு நூல்களின் தொகுதியை **<u>அஷ்டபிரபந்தம்</u>** எனக் கூறுவர்.
- "**<u>அஷ்டபிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்</u>**" என்னும் பழமொழி இந்நூல்களின் உயர்வைப் புலப்படுத்தும் இவர்தம் பாடல்கள் சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடை நோக்கும் நடைநோக்கும் கொண்டு ஒளிர்கின்றன.
- கி.பி. 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்த இவர் பின்னர் இறைத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

**அட்டபிரபந்தங்கள்**

1. திருவரங்கத்தந்தாதி
2. திருவேங்கடத்தந்தாதி
3. திருவேங்கடமாலை
4. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி
5. அழகர்அந்தாதி
6. திருவரங்கத்து மாலை
7. திருவரங்கக் கலம்பகம்
8. ஸ்ரீரங்க நாயகர் ஊசல்

## <u>திருவேங்கடத் தந்தாதி</u>

### <u>பாத வகுப்பு</u>

திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன; சிற்றன்னையால்
தருவேங் கடத்துத் தரைமே னடந்தன; தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன; வுற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றோடின மால் கழலே.

## பிள்ளைத்தமிழ்

- இறைவனையோ, நல்லாரையோ, மன்னனையோ பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப்பாடப்படும் சிற்றிலக்கிய வகை **பிள்ளைத்தமிழ் எனப்படும்**.
- பிள்ளைத்தமிழில் பொதுவானவற்றின் **எண்ணிக்கை 7**.
- **பிள்ளைக் கவி, பிள்ளைப் பாட்டு** என்ற பெயர்களும் உண்டு.
- **ஆணுக்குப் பதினாறு வயது** வரைப் பாடலாம்.
- **பெண்ணுக்கு பூப்புத் தொடங்கும் வரை பாடலாம்**.
-
- பிள்ளைத்தமிழ் **ஆண்பாற் பிள்ளைத்தமிழ்**, **பெண்பாற் பிள்ளைத்தமிழ்** என இருவகைப்படும்.
- ஆண்பால் பிள்ளைத்தமிழ்: **காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்**.
- பெண்பால் பிள்ளைத்தமிழ் : காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, **அம்மானை, நீராடல் (கழங்கு), ஊசல்**
- **குழவி மருங்கினும் கிழவதாகும்** என்ற தொல்காப்பிய இலக்கணத்தால் கட்டப்படும் இலக்கியம் பிள்ளைத்தமிழ்.
- இந்நூல் குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் பாடப்படும் ஒற்றைப் படை மாதத்தில் **(3, 5, 7,….) 21** மாதம் வரை பாடப்படும்.
- அரச குமாரர்களுக்கு **முடி சூட்டிய பிறகு பாடக்கூடாது.**
- பிள்ளைத்தமிழ் பாட முடியாமல் விலக்கப்பட்ட **ஒரே கடவுள் சிவன்**.
- செங்கீரை என்றால் **தண்டுக்கீரை**. தால் என்றால் **தாலாட்டு**, சப்பாணி என்றால் **கைகொட்டுவது**.
- அம்புலி என்றால் **நிலவு**. அம்புலிப் பருவம் பாடுவது கடினம் புலவர்க்கு அம்புலி புலியாம் என்பர்.
- **சாம, தான, பேத, தண்டம்** என்ற நான்கும் அமையப்பாடுவது **அம்புலி பருவம்**.
- **ஆசிரிய சந்த விருத்தத்தில்** (சீர் 16) பாடப்படுவது **பிள்ளைத்தமிழ்**.
- பிள்ளைத்தமிழின் முன்னோடி **பெரியாழ்வார்**.
- கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர்கள் **பெரியாழ்வார்**.
- பிற்காலத்தில் **பாரதியார்**.
- இராமனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர் **குலசேகர ஆழ்வார்**.
- வள்ளலார் பிள்ளைத்தமிழ் **மா.க. காமாட்சி நாதன்**.
- முதல் பிள்ளைத்தமிழ் **குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்** (ஆசிரியர் **ஒட்டக்கூத்தர்**)
- ‘‘பிள்ளைத்தமிழ் ஆயினும் பெரிய தமிழ் என்று சிறப்பிக்கப்படுவது **திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்**’’
- சங்ககாலத்தில் பிள்ளைத்தமிழ் நூல்கள் இல்லை, **ஆழ்வார்கள் காலத்திலேயே பிள்ளைத்தமிழ் இலக்கியம்** மலரத் தொடங்கியது.
- பிள்ளைத்தமிழின் யாப்பு **ஆசிரிய விருத்தம்**, கட்டளை அடியோடு கூடிய **கலிப்பா, கலிவிருத்தம்** பெற்று அமையும்.
- சிற்றிலக்கிய வகைகளில் மிகுதியான இலக்கியங்கள் **பிள்ளைத் தமிழிலேயே** தோன்றியுள்ளன.
- மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் 10 பிள்ளைத்தமிழ் நூல்களை இயற்றியுள்ளார்.
- திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் - **பகழிக்கூத்தர்**
- ‘‘வாரா திருந்தால் இனிநான் உன்
  வடிவேல் விழிக்கும் மை எழுந்தேன்’’ - **அழகிய சொக்கநாதர்**.

➢ குமரகுருபரர், தன் ஆசிரியரான மாசியாமணி தேசிகரின் விருப்பப்படி சிதம்பரம் செல்ல புறப்பட்ட குருபரர், வழியில் **வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளியுள்ள முத்துக்குமாரனைக் கண்டு** மனம் பறிகொடுத்து அவர்மீது முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடினார்.

➢ பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு என்ற பெயர்களும் உண்டு.

➢ பத்துப்பருவங்கள் அமைத்து பருவத்திற்கு பத்துப்பாடலென நூறு பாடலாக பாடுவது பிள்ளைத்தமிழ்.

➢ **புள்ளிருக்கு வேளூரில்** எழுந்தருளியுள்ள கடவுள் **முத்துக்குமார சுவாமி** (வைத்தீஸ்வரன் கோயில்).

➢ பொருள் தெரியாத ஒலியைக் குழந்தை எழுப்பும் பருவத்தைக் குறிப்பது **செங்கீரைப்பருவம்**.

➢ இது பிள்ளைத்தமிழில் இரண்டாவது பருவமாகும். **கழங்கின் மறுபெயர் நீராடல்.**

➢ தொட்டிலில் பிள்ளை **தலையையுயர்த்திக் கையால் ஊன்றி உடம்பை** அசைத்தலைச் **செங்கீரையாடுதல்** என்பர்.

## நூல்கள்:

1. காந்தியம்மை பிள்ளைத்தமிழ் - **அழகிய சொக்கநாதர்**
2. அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் - **சிவஞான முனிவர்**
3. திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் - **கே.எம். பாலசுப்பிரமணியன்**
4. பாவேந்தர் பிள்ளைத்தமிழ் - **புலமைப்பித்தன்**
5. கம்பன் பிள்ளைத்தமிழ - **கனகராஜ்**
6. காந்தி பிள்ளைத்தமிழ் - **ராய. சொக்கலிங்கம்**
7. இயோசுநாதர் பிள்ளைத்தமிழ் - **குற்றாலம்**
8. வீரமாமுனிவர் பிள்ளைத்தமிழ் - **சண்முகம்**

## முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

➢ கடவுளையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகப் பாவித்து அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துக் கொண்டு பருவத்துக்குப் பத்து ஆசிரிய விருத்தங்கள் அமையப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும்.

➢ **பிள்ளைத்தமிழ் 96 வகைச்** சிற்றிலக்கியங்களுள் ஒன்று. அது **ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ்** என இருவகைப்படும்.

➢ காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடுவது ஆண்பால் பிள்ளைத் தமிழ் என்றும் இறுதியில் உள்ள மூன்று பருவங்களுக்குப் பதிலாக அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பருவங்கள் அமைத்துப்பாடுவது பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் கூறுவர்.

➢ முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழைப் பாடியவர் **குமரகுருபரர் ஆவார்**. தாமிரபரணி நதிக்கரையிலுள்ள திருவைகுண்டத்தில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரிக்கும் மகனாகப் பிறந்தார்.

➢ பிறந்தது முதல் ஐந்தாண்டு வரையில் பேச்சின்றி இருந்தார். பின்னர் **திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால்** பேசுந்திறம் பெற்றார்.

➢ அவர் **கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், காசிக் கலம்பகம்** முதலான பல இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

- நமக்குப் பாடமாக வந்திருப்பது செங்கீரைப் பருவத்தில் உள்ள பாடலாகும். செங்கீரைப் பருவம் பிள்ளைத்தமிழில் **இரண்டாம் பருவமாகும்**.

## திருவாரூர் நான்மணிமாலை

(இறைவன் மண் சுமந்ததற்கு இரங்கல்)
என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில்
முன்பணிந்த தெய்வ முனிவோர்கள் - அன்புஎன்னாம்
புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தார் என்றுருகு வார்.

**- குமரகுருபரர்**

- எலும்பை மாலையாக அணிந்தவரும் **திருவாரூரில்** எழுந்தருளி உள்ளவருமான **சிவபெருமானைத்** தெய்வத் தன்மையுள்ள முனிவர்கள் வணங்கிய போது, நந்தியால் அடிப்பட்டதற்கு அவர்கள் வருந்தவில்லை. வந்தி எனும் பெயருடைய கிழவிக்காக மண்சுமந்து பாண்டியனிடம் இறைவன் அடிபட்டார் என்பதனை நினைத்து அவர்கள் மனம் வருந்தினார்கள். அவர்களின் அன்பு மிகவும் உயர்ந்தது.
- நான்மணிமாலையை கற்பதன் மூலம் : **திருவாரூர், தியாகராசப் பெருமானைப்** பற்றிய பெருமைகளை அறியமுடியும்.

# சிற்றிலக்கிய ஆசிரியர்கள்

## குமரகுருபரர்

- ஆசிரியர் : **குமரகுருபரர்** (பிறந்த ஊர் திருவைகுண்டம்)
- காலம் : **கி.பி. 17-ம் நூற்றாண்டு**
- பெற்றோர் : சண்முக சிகாமணிக் கவிராயர் - சிவகாமசுந்தரி அம்மையார்.
- இவர் பிறந்த முதல் **5 ஆண்டு** வரை பேச்சின்றி இருந்தார்.
- பின்னர் **திருச்செந்தூர் முருகப்பெருமாள்** திருவருளால் பேசும் திறன் பெற்றார்.
- **முருகப் பெருமானால் குருபரன்** என்று அழைக்கப்பட்டவர் இவர்.
- **தமிழ், வடமொழி, இந்துஸ்தானி** ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர் குமரகுருபரர்.
- சிற்றிலக்கிய வேந்தர் **குமரகுருபரர்**.
- **திருப்பனந்தாளிலும், காசியிலும்** தம்பெயரால் மடம் நிறுவி உள்ளவர் குமரகுருபரர்.
- குமரகுருபரர் இறைவனடி சேர்ந்த ஊர் **காசி**.
- குமரகுருபரர் இயற்றிய நூல்கள்: **கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லி மாலை, நிதிநெறி** விளக்கம், காசிக்கலம்பகம், சிதம்பரச் செய்யுள் கோவை, முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை.

## ஓட்டக்கூத்தர்

- மூவருலாவை இயற்றியவர் : **ஓட்டக்கூத்தர்** (கவிச்சக்கரவர்த்தி)
- **காலம்** : 12ம் நூற்றாண்டு இயற்பெயர் : **கூத்தர்**
- **கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன்** என்றெல்லாம் புகழப்படுபவர் ஒட்டக்கூத்தர்.
- ஒட்டர் + கூத்தர் - கூத்தர் என்பது தில்லையிலுள்ள சிவபெருமான் திருப்பெயர்
- வேறு நூல்கள் : **தக்கயாகப்பரணி, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், உத்திர காண்டம்**.
- **கோவை, உலா, அந்தாதிக்கு வல்லவர் ஒட்டக்கூத்த**ர்.
- **விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராசராசன் ஆகிய** மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு விளங்கியவர் ஒட்டக்கூத்தர்.
- **மூவருலா** இம்மூன்று மன்னர்களைப் பற்றி பாடப்பட்டதாகும்.

## ஜெயங்கொண்டார்

- கலிங்கத்துப்பரணியை இயற்றிவர் **ஜெயங்கொண்டார்**.
- பிறந்த ஊர் : **தீபக்குடி (திருவாரூர்)**
- இவர் காலம் 12ம் நூற்றாண்டு
- ஜெயங்கொண்டார் **முதல் குலோத்துங்க சோழனின்** (தளபதி – கருணாகரத்தொண்டமான்) அவைப்புலவராக இருந்தார்.
- இயற்றிய நூல்கள் - **இசையாயிரம், உலா, மடல்.**
- ஜெயங்கொண்டாரின் சமகாலப் புலவர் **ஓட்டக்கூத்தர்**.
- பிற்காலப் புலவரான **பலபட்டடைச் சொக்கநாதர் ஜெயங்கொண்டாரைப் பரணிக்கோர் ஜெயங்கொண்டார்** எனப் புகழ்ந்து பாடியுள்ளார்.

## பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை

- இவர் காலத்தில் சொக்கநாத பிள்ளை மரபினர் **பலபட்டடைக்கணக்கு** என்னும் ஒருவகைப் பணியைச் செய்து வந்தார்
- இவரது தந்தை சொக்கலிங்கம் பிள்ளை.
- இயற்றிய வேறு நூல்கள் : **மதுரைமும்மணிக்கோவை, தென்றல் விடு தூது**

## வரதநஞ்சையப்பிள்ளை

- தமிழரசி குறவஞ்சியின் ஆசிரியர் - **வரதநஞ்சைப்பிள்ளை**, **காலம் 1877 – 1956**
- **பெற்றோர்** - அப்பாசாமிப்பிள்ளை – வரதாயி பிறப்பிடம் தோரமங்கலம்
- புலவரேறு என்ற சிறப்புப் பட்டத்தை வரதநஞ்சைப்பிள்ளைக்கு வழங்கியவர் **தமிழ்வேள் உமாமகேஸ்வரனார்**.
- இவர் தெலுங்கு. வடமொழி நன்கு அறிந்தவர். விரைந்து கவி பாடுவதில் வல்லவர்.

- இவர் <u>**கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில்**</u> ஆசிரியர் என்னும் சிறப்புப்பட்டம் பெற்றார்.
- வரதநஞ்சையப்பிள்ளை தாம் இயற்றிய <u>**தமிழரசி குறவஞ்சி**</u> என்னும் நூலைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் வெள்ளி விழாவின் போது <u>**ஞானியாரடிகள் தலைமையில்**</u> அரங்கேற்றினார்.
- வரதநஞ்சைப்பிள்ளை கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் <u>**நமச்சிவாய முதலியார்**</u> தலைமையில் <u>**தங்கத்தோடா பரிசாகப்**</u> பெற்றார்.

## தஞ்சை வேதநாயக சாத்திரியார்

- <u>பெத்தலகேம் குறவஞ்சியின் ஆசிரியர் தஞ்சை வேதநாயக சாத்திரியார்</u>.
- வாழ்ந்த காலம் : 07.09.1774-<u>**24.01.1864**</u>.
- <u>**ஊர் : திருநெல்வேலியில்**</u>
- **சிறப்புப் பெயர்** சுவிசேஷக் கவிராயர், <u>**ஞான தீபக் கவிராயர்**</u>.
- இவரது ஆசிரியர் - தஞ்சையில் மதபோதகராகிய <u>**சுவார்ட்ஸ் பாதிரியார்**</u>.
- இவரது நண்பர் - <u>**தஞ்சை சரபோஜி**</u>.
- இவர் <u>**வானியல், உடலியல், சமூகவியல்**</u> என்ற பல அறிவுத்துறைகளில் கற்றுத்தேர்ந்தார்.
- இவரது காலம் <u>**18ம் நூற்றாண்டு இவர் தம் 25-ம் வயதில் பெத்தலகேம்**</u> குறவஞ்சியை இயற்றினார்.
- இயற்றிய பிற நூல்கள் : <u>**ஞானத்தச்சன், ஞானயுலா, ஆரணாதிந்தம்**</u>, ஆதி <u>**ஆனந்தம், ஞான அந்தாதி, ஞான பக்தி கீர்த்தனைகள், பராபரமாலை, ஞான நொண்டி நாடகம், பாலசரித்திரம்**</u>

## வில்லிபாரதம்

❖ <u>**ஆசிரியர் குறிப்பு:**</u>

- <u>**ஆசிரியர் வில்லிபுத்தூராழ்வார்**</u>. இவரது காலம் 14ம் நூற்றாண்டு.
- வில்லிபுத்தூராரை ஆதரித்தவர் வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்.
- வில்லிபுத்தூராரின் தந்தை வீரராகவர்.

❖ <u>**நூற்குறிப்பு:**</u>

- வில்லிபாரதம் <u>10 பருவங்களையும், 4350 விருத்தப்பாடல்களாக</u> கொண்டது.
- வில்லிபாரதத்தின் பெரும்பிரிவு <u>பருவம் என்றும்</u>, <u>சிறு பிரிவு சருக்கம்</u> என்றும் அழைக்கப்படுகிறது.
- பாரதத்தின் சூதுபோர்ச் சருக்கமே பாரதியின் பாஞ்சாலி சபதம் என்னும் சிறுகாப்பியத்திற்கு மூலமாகிறது.

<u>வில்லிபாரதத்தின் 10 பருவங்கள்</u>

- ஆதிபருவம், சபா பருவம், ஆரணிய பருவம், விராட பருவம், உத்தியோக பருவம், பீஷ்ம பருவம், துரோண பருவம், கன்ன (கர்ண) பருவம், சல்லிய பருவம், சௌப்திக பருவம்.

## நளவெண்பா

## (சுயம்வர காண்டம்)

❖ **ஆசிரியர் குறிப்பு:**

- நளவெண்பா நூலின் ஆசிரியர் : **புகழேந்திப் புலவர் (வரகுண** பாண்டியனின் அவைப்புலவர்) காலம் : **12ம் நூற்றாண்டு**
- பிறந்த ஊர் : **களத்தூர்** (தொண்டை நாடு)
- இது தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள **பெருங்களத்தூர்**.
- புகழேந்திப் புலவரின் சமகாலத்தவர் : **கம்பரும், ஒட்டக்கூத்தரும்.**
- புகழேந்திப் புலவரை ஆதரித்த வள்ளல் **சந்திரன் ஸ்வர்க்கி**.
- வெண்பா யாப்பில் காப்பியப் பொருளைத் தொடர் நிலைச் செய்யுள்களாய்ப் பாடிய சிறப்பினையுடையவர் **புகழேந்திப் புலவர்**.

❖ **நூற்குறிப்பு:**

- நளனது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூல் **நளவெண்பா (சுயம்வர காண்டம்)**.
- இந்நூலின் தலைவன் : **நளன் - நிடத நாட்டு மன்னன் தலைவி** : **தமயந்தி – விதர்ப** நாட்டு இளவரசி
- தமயந்தியின் தந்தை பெயர் **வீமன்**. புகழேந்திப் புலவர் வெண்பாவிற்குப் புகழேந்தி என அழைக்கப்படுகிறார்.
- இந்நூல் மகாபாரதத்தில் உள்ள நளோபாக்கியானம் பருவம் என்னும் பிரிவைத் தழுவி எழுதப்பட்டது.
- நளவெண்பாவில் அமைந்துள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை **431**.
- புகழேந்தியின் வேறு நூல்கள் : **ரத்தினக்கலம்பகம், செஞ்சிக்கலம்பகம்**.
- நளவெண்பாவின் 3 காண்டங்கள் : **சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம்**, **கலிநீங்கு காண்டம்.**

# இயல் - 8
# மனோன்மணீயம்

- நாடகத்தமிழ் நூல்களுள் தலையாய சிறப்பினையுடையதாக விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்றது. இந்நாடகம் **லிட்டன்** பிரபு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய **"இரகசிய" வழி** என்ற நூலைத் தழுவி அமைந்தது. எனினும் இது வழிநூல் என்னாது முதல் நூல் எனவே கொள்ளப்பெறும் சீர்மையுடையது.
- பெருங்காப்பிய நூல்களுக்குரிய இயற்கை வர்ணனை, கற்பனையெழில், தத்துவச் செறிவு, உலகியல் உண்மை முதலிய கருத்துகள் அமைய எழுதப் பெற்றிருப்பினும் செய்யுள் நடையில் மிடுக்குடனும் நாடகத்தன்மைக் கேற்ற உரையாடற் சிறப்புகளுடனும் இந்நூல் தன்னிகரற்று விளங்குகிறது.
- அங்கங்களையும் காட்சிகளையும் அமைத்து எழுதுவது நாடக நன்னூல் மரபு. இந்நாடகம் **ஐந்து அங்கங்களையும் இருபது காட்சிகளையும்** கொண்டு விளங்குகிறது. **இடையே சிவகாமி** சரிதம் என்னும் துணைக் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது.
- இந்நாடகத்தைத் **தமிழன்னைக்கு** இயற்றியளித்தவர், பேராசிரியர் **பெ. சுந்தரம்பிள்ளை** ஆவார்.
- இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆலப்புழை **என்னும் ஊரில் பிறந்தார்**. தந்தை – பெருமாள் பிள்ளை, தாய் - மாடத்தி அம்மையார்.
- இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் **தத்துவப்** பேராசிரியராகப் பணிபுரிந்தார். கோடக **நல்லூர் சுந்தர சுவாமிகள்** என்பவரைத் தமது **ஞானாசிரியராகக்** கொண்டு ஒழுகி வந்தார்.
- **இவர் காலம் 1897 (19ம் நூற்றாண்டு)**.
- இவர் இயற்றிய பிற நூல்கள் : **நூல் தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர் பண்டைய மன்னர் கால ஆராய்ச்சி என்பன**.
- அந்நாளைய **சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் பட்டம்** வழங்கிச் சிறப்பித்தது.
- தமிழ்நாடு அரசு **மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்** என்னும் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவிப் பெருமைப்படுத்தியுள்ளது.
- இவரது **நீராருங்கடலுடுத்த என்ற தமிழ் வாழ்த்துப்பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய்** வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது.
- மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் **ஜீவகன்**.
- பளிங்குபோல் கள்ளமற்ற உளத்தினன். ஆயினும் வஞ்சக அமைச்சன் குடிலனின் சூழ்ச்சிகளுக்கு ஆட்படுகிறான்.
- அவனுடைய பழம்பதியாகிய மதுரையை விட்டுத் **திருநெல்வேலியிலே கோட்டையமைத்துத்** தங்குகிறான்.
- புதிய கோட்டை வலிமையற்றதாக இருப்பதனையும் பகைவர் வந்து தாக்குவாராயின் விரைவில் வீழ்ந்து விடும் என்பதனையும் உணர்ந்த **சுந்தர முனிவர்** தமக்கு ஓர் அறையை வேண்டிப் பெற்று அதன் வழியே சுரங்கப்பாதை ஒன்று அமைக்கிறார்.
- ஜீவகனின் **ஒரே மகள் மனோன்மணி**, சேர நாட்டரசன் புருஷோத்தமனைக் கனவில் கண்டு காதல் வயப்படுகிறாள்.
- அவளுடைய நலிவினைக் கண்ட சுந்தரமுனிவர் மனோன்மணிக்கு விரைவில் திருமணம் நிகழ்த்துதல் வேண்டும் என்றும் சேர மன்னனே அவளுக்கு ஏற்றவன் என்றும் அவனுக்குத் தூதுபோகுக என்றும் **ஜீவகனைப் பணிக்கிறார்**.
- குடிலனுடைய தலையீட்டினால் அவன் மகன் **பலதேவனே சேரனிடம்** தூது செல்லுகிறான்.

- பலதேவனுடைய முறையற்ற பேச்சால் சினம் கொண்ட சேரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வருகிறான். போரெதிர் கொள்ள ஜீவகன் தன் படைவீரர்களுக்கு உரைக்கும் வீரவுரையே நமது பாடப்பகுதி.

- பெயர் - பேராசிரியர் பெ. **<u>சுந்தரம் பிள்ளை</u>**
- பெற்றோர் - **<u>பெருமாள் பிள்ளை – மாடத்தி அம்மையார்</u>**
- காலம் - 1855 முதல் 1897 (19-ம் நூற்றாண்டு)
- ஊர் - **<u>கேரளம் மாநிலம் ஆலப்புழை</u>**
- நூல்கள் - **<u>தொகைநூல் விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி, திருஞான சம்பந்தர் கால நிர்ணயம், நூற்றொகை விளக்கம், சேரநாட்டுப் பழங்கால அரசர்கள்</u>**
- பணி - திருவனந்தபுரம் அரசர் கல்லூரி **<u>தத்துவப் பேராசிரியர்</u>**
- நாடகத்தமிழ் நூல்களுள் தலையாய சிறப்பினையுடையதாக விளங்குவது **<u>மனோன்மணீயம்</u>**.
- மனோன்மணீயம் ஒரு **<u>கவிதை நாடகம்</u>**.
- இந்நாடகம் **<u>லிட்டன் பிரபு</u>** ஆங்கிலத்தில் எழுதிய **<u>இரகசிய வழி (The Secret Way)</u>** என்ற நூலைத் தழுவி அமைத்தது. எனவே இது **<u>வழிநூல்</u>** எனப்படும்.
- இந்நூலின் இடையே **<u>சிவகாமி சரிதம்</u>** என்னும் துணைக்கதை ஒன்று இடம் பெற்றுள்ளது.
- பாண்டிய மன்னன் **<u>சீவகனின் மகள் மனோன்மணி</u>**.
- சேர மன்னன் புருஷோத்தமனின் கனவுக் காதலி.
- மனோன்மணிக்கும் சேர மன்னன் கனவுக் காதலன்.
- சீவகனின் அமைச்சர் **<u>குடிலன் எனும் கொடியோன்</u>**.
- தன் மைந்தன் பலதேவனுக்கு மனோன்மணியை மணமுடித்து நாட்டைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்கிறான்.
- சீவகனின் குருநாதர் சுந்தரமுனிவர் அமைந்த மறைவழி (சுரங்கப்பாதை) சூழ்ச்சியை முறியடிக்கிறது. காதலர் மணமுடிக்கின்றனர்.
- ஜீவகன், மனோன்மணியம், குடிலன், புருஷோத்தமன், வாணி, நடராசன், சுந்தர முனிவர், கருணாகரர், நிஷ்டாபரர் போன்ற பாத்திரங்கள் இடம் பெறும் நூல்.
- **<u>பாண்டிய மன்னன் ஜீவகன்</u>**. **<u>ஜீவகனின் குரு சுந்தர முனிவர். ஜீவகனின் அமைச்சன் குடிலன்.</u>**
- சுந்தர மூர்த்தியின் சீடர்கள் **<u>கருணாகரர், நிஷ்டாபரர்</u>**.
- சிவகாமியின் சரிதம் என்ற கிளைக்கதை இடம் பெற்ற நூல் **<u>மனோன்மணியம்</u>**.
- நாடகத்துள் நாடகமாகத் திகழ்வது சிவகாமியின் சரிதம், தத்துவப் பொருள் கொண்டது **<u>சிவகாமியின் சரிதம்</u>**.
- **<u>சிவகாமியின் சபதம்</u>** என்பது கல்கி எழுதிய வரலாற்று நாவல்.
- ஜீவகன் புதியதாய்க் கோட்டை நிறுவிய இடம் **<u>திருநெல்வேலி</u>**.

❖ **<u>சுந்தரம்பிள்ளை:</u>**

- **<u>கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள்</u>** என்பாரைத் தம் **<u>ஞானாசிரியராகக் கொண்டார்</u>**.
- அன்றைய சென்னை மாகாண அரசு சுந்தரம் பிள்ளைக்கு **<u>ராவ் பகதூர்</u>** பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
- தமிழ்நாடு அரசு **<u>மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்</u>** என்னும் பெயரில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவிப் பெருமைப்படுத்தியுள்ளது.

➢ தமிழில் இலக்கியத்தரம் வாய்ந்த நாடகம் இல்லாத குறையைப் போக்கியது மனோன்மணியம். இவரது **நீராருங் கடலுடுத்த என்ற தமிழ் வாழ்த்துப் பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது**.
➢ தமிழ்த்தாய் வாழ்த்திற்கு இசை அமைத்தவர் **மெல்லிசை மன்னன் எம்.எஸ். விஸ்வநாதன்**.
➢ தமிழை தெய்வமாகப் போற்றிய நூல், தமிழ்த்தாய்க்கு கோயில் உள்ள ஊர் காரைக்குடி.
➢ ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவை **திருமுருகாற்றுப்படை, நெடுநெல்வாடை, மதுரைக் காஞ்சி** பொன்னாலான கரை கொண்ட கருஞ்சிகரங்கள், இருட்கடலில் மிதக்கும் திமிங்கலங்கள்.
➢ மனோன்மணியம் '**நடித்ததற்கு உரியது அன்று படித்ததற்கு உரியது**' என்று முன்னுரையில் ஆசிரியரே குறிப்பிடுகிறார்.
➢ தமிழில் தோன்றிய நாடக இலக்கியங்களில் முதன்மையாக போற்றப்படும் மனோன்மணியம் ஆசிரியப்பாவால் ஆனது.

❖ **மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் மேற்கோள்கள்** :

''இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்''
''தம்பிவுடையான் படைக்கு அஞ்சான்''

## பாஞ்சாலி சபதம்

❖ **ஆசிரியர் குறிப்பு**

➢ சுப்பிரமணிய **பாரதியார்**, தற்போதைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள **எட்டையபுரத்தில்** பிறந்தார்
➢ **வாழ்ந்த காலம் : 11.12.1882 - 11.09.1921**
➢ பெற்றோர் **சின்னசாமி - இலக்குமி** அம்மையார் ஆவர்.
➢ சிறந்த படைப்பாளரான பாரதியார் **குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம்** முதலிய நூல்களைப் படைத்தளித்தார். நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல் இயற்றினார்.
➢ **ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு** முதலிய உரைநடை இலக்கியங்களையும் எழுதினார்.
➢ பாஞ்சாலி சபதம் **5 சருக்கங்களையும் 412 பாடல்களையும்** கொண்டது.
➢ இது **சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச்சருக்கம், அடிமைச்சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச்சருக்கம்** என ஐந்து சருக்கங்களையும் நானூற்றுப் பன்னிரண்டு பாடல்களையும் கொண்ட குறுங்காப்பியம்.
➢ பாஞ்சாலியின் தந்தை பாஞ்சாலம் நாட்டு மன்னன் **பாஞ்சாலன்**.
➢ பாஞ்சாலி சபதம் சூழ்ச்சிச் சருக்கத்தில் இடம் பெற்றுள்ளது.
➢ பெண்ணுரிமைக் காப்பியமாகத் தமிழில் பாரதி வடித்துத் தந்ததே **பாஞ்சாலி** சபதம். பாஞ்சாலி – பாரதத்தாய். பாண்டவர்கள் - அன்றையப் பாரத மக்கள்.
➢ துரியோதனக் கூட்டம் - நம் நாட்டை அடிமைப்படுத்தியிருந்த **வெள்ளையர்**.
➢ பாரதத் தாயின் துன்பமே பாஞ்சாலியின் துன்பமாக உருவகம்.
➢ இந்திர மாநகரை ஆண்டு வந்தவர்கள் **பாண்டவர்கள்**. அஸ்தினாபுரத்தை ஆண்ட மன்னன் **துரியோதனன்**.
➢ துரியோதனின் மாமனின் பெயர் **சகுனி**. தந்தையின் பெயர் **திருதராட்டிரன்**.
➢ பாஞ்சாலன் மகள் (திரௌபதி) பாஞ்சாலியாவாள். விருத்தம் - **ஆசிரிய விருத்தம்**.

- சிந்து அமைப்பில் எளிய இனிய நடையில் அமைந்த தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று **பாரதியார்** தமிழைக் கூறினார்.
- எளிய பதம், எளிய நடை, எளிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றை உடைய காவியம் படைத்து தாய்மொழிக்கு புதிய உயிரும் தமிழ் ஜாதிக்கு புதிய வாழ்வு தருதலே பாஞ்சாலி சபதத்தை எழுதிய நோக்கம் என்று பாரதியார் கூறுகிறார்.
- ''காரியம் மிகப்பெரிது, எனது திறமை சிறிது. ஆசையால் இதனை எழுதி வெளியிடுகின்றேன். பிறருக்கு ஆதர்சமாக அன்று. வழிகாட்டியாக!'' என்று பாரதியார் பாஞ்சாலி சபதத்திற்கு எழுதியுள்ள முகவுரை சிந்தனைக்குரிய சிறந்த பகுதியாகும்.

- **மேற்கோள்கள்:**
- பாரதியார் பாண்டவர்கள் ஆளும் நாடான இந்திர மாநகரை
- ''நீலமுடி தரித்த பல மலைசேர் நாடு
- பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு'' என வர்ணிக்கிறார்.
- ''நெட்டை மரங்கள் என நின்று புலம்பினால் பெட்டைப் புலம்பல் பிறருக்கும் துணையாமோ''.
- ''கோயில் பூசை செய்வோர் சிலையைக் கொண்டு விற்றல் போலும்''.
- ''செருப்புக்குத் தோல் வேண்டியே கொல்வாரோ செல்வக் குழந்தையினை''.
- ''நெஞ்சு பொறுப்பதில்லை தம்பி எரி தழல் கொண்டு வா'' கதிரை வைத்திழந்தான், அண்ணன் கையை எரித்திடுவோம்''.
- யாமறிந்த மொழிகளிலே
- தமிழ்மொழி போல் இனிதாவது
- எங்கும் காணோம்.

## குயில் பாட்டு

- **<u>பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா</u>**! என்று வியந்தவர் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர்.
- அடிமைப்பட்டு கிடந்த இந்தியாவில் வீறு கொண்டெழுந்த விடுதலை வேட்கைக்குத் தம் கவிதைகளால் உரம் காட்டியவர். தேசிய கவி என்றும் மகாகவி என்றும் போற்றப்பட்டவர்.
- **<u>இந்தியா, விஜயா</u>** என்ற இதழ்களை வெளியிட்டுக் கட்டுரைகளாலும், கருத்துப் படங்களாலும் ஆங்கிலேய ஆட்சியாளர்களைத் திணறச் செய்தவர்.
- **<u>சுதேசமித்திரன் இதழாசிரியராகச்</u>** சில நாள் விளங்கியவர்.
- பாரதியார் கவிதைகள், பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய கவிதைகள் மட்டுமின்றி ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை நூல்களையும் எழுதியவர்.

- இவருடைய வசன கவிதைகள் **<u>வால்ட்விட்மன் கலீல் கிப்ரான்</u>** முதலிய கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பிடத்தக்கவை.

காதல், காதல், காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல், சாதல், சாதல்!

**பாரதியார்**

- குயில்பாட்டு நூல்,"**<u>பட்டப் பகலிலே பாவலருக்குத் தோன்றுவதாம் நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேன் யான்</u>**" எனத் தொடங்குகிறது.
- குயில் பெண்ணை பாரதியார் "கவிதைப் பழத்தின் சாற்றில் இசை நாட்டியம் என்று கலைகளின் சாறாது சேர்த்து அமிழ்தம் கலந்து காதல் என்னும் வெயியிலே உலர்த்தி பொடியாக்கி தேனில் செய்யப்பட்ட மேனி" என்று வருணிக்கிறார்.
- குயிலின் குரல் ஒலியில் உள்ளத்தைப் பறிகொடுத்த கவிஞர் அதன் மேல் காதல் கொண்டு அலைந்ததை ஒரு கனவுக் காட்சியாய்த் தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிப் பாடிய அற்புதப் படைப்பாகும், குயில் பாட்டு.
- தன்னுணர்ச்சி வெளிப்பாடாய் அமைந்த இப்பாடல், எளிய - இனிய நடையில் கவிதைச் சுவையும், கற்பனை நயமும், அழகிய வருணனையும் அகப்பொருள் நயமும் நிறைந்த சொற்சித்திரமாகும்.
- பாரதியார் பாடிய கவிதைகளுள் குயில்பாட்டு ஒப்பற்ற கற்பனைக் கதைப் பாட்டாகும்.
- **குயில் பாட்டின் கரு :**
- முற்பிறவியில் வேடர்குலப் பெண்ணழகி "**<u>குயிலி</u>**".
- சேர மன்னனிடம் மயங்குகிறாள், தனியிடத்தில் காதல்.
- கள்ளக் காதலனை வாளால் வீழ்த்துகிறான் வேடன்.
- "அடுத்த பிறவியிலும் காதலிப்போம்"– மன்னன் சபதம்.
- கூறியபடியே வந்து விடுகிறான் முற்பிறவி மன்னன்.
- வேடன் மகளோ மானிடப் பிறவியல்ல, குயிலி!
- அந்தக் குயிலின் சோக கீதமே பாரதியின் குயில் பாட்டு.

# இரட்டுற மொழிதல்

## <u>காளமேகப்புலவர்</u>

- இயற்பெயர் - **<u>வரதன்</u>**
- ஊர் - கும்பகோணம் **<u>நந்தி கிராமம்</u>** (அ) **<u>விழுப்புரம் மாவட்டம்</u>** எண்ணாயிரம்
- காலம் - 15-ம் நூற்றாண்டு
- சமயம் - வைணவ சமயத்தில் இருந்து **<u>சைவ சமயம்</u>**
- குலம் - **<u>அந்தணர் குலம்</u>**
- பணி - **<u>ஸ்ரீரங்கம் கோயிலில் மடப்பள்ளியில் வேலை</u>**
- நூல்கள் - திருவானைக்கா உலா, சித்திர மடல், பரப்பிரம்ம விளக்கம்,

சரசுவதி மாலை

## காளமேகப்புலவர் சிறப்புகள்

- காளமேகப்புலவர் இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர்.
- ஆசுக்கவி என்றழைக்கப்படுபவர் காளமேகப்புலவர் (இயற்பெயர் - **வரதன்**)
- **கார்மேகம் போல்** கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால் இவர் **காளமேகப்புலவர் எனப்பட்டார்.**
- காளமேகம் எண்ணியவுடனே அதே நேரத்தில் கவி பாடுகிறவர்களை **ஆசுகவி** எனச் சொல்வது உண்டு.
- காளமேகம் எதிர்பாராமல் பெருமழை பெய்து திகைக்க வைப்பது போல், நாட்டில் பல நிகழ்ச்சிகளின் போது ஆசுகவிகள் பல பாடி வியப்பூட்டிய காரணத்தால் அவர் காளமேகம் எனப்பெயர் பெற்றார்.
- புலவர்களை மதியாமல் செருக்குடன் இருந்த சிலரின் செருக்கு அடங்கும் வகையில் அவர்களைப் பழித்துப் பாடல்கள் பாடியுள்ளார்.
- காதலில் ஏமாற்றம் உற்றவர் தம்மை வருத்திக் கொள்வதற்காகப் பாடும் மடல் சித்திர மடல்.
- இவர் பாடியதாக **218 தனிப்பாடல்கள்** கிடைத்துள்ளன.
- இவரை **திருமலைராயன்** என்ற சாளுக்கிய சிற்றரசன் ஆதரித்தான்.
- இவர் **வசைபாட காளமேகம்** என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்.

❖ **இவர் பாடிய சிலேடைகள்:**

- ஆமணக்கு யானை
- வைக்கோல் யானை
- பாம்பு எள்
- பனைமரம் வேசி
- தென்னைமரம் வேசி
- வெற்றிலை வேசி
- ஓடம் அல்குல்
- கரண்டகம் பெண்குறி
- கவி என்பதற்குக் குரங்கு என்னும் பொருள் உண்டு.
- காளமேகப் புலவர் திருவினைக்காவில் உள்ள அகிலாண்ட நாயகியின் அருளால் வரகவியானார் என்று புலவர் புராணம் கூறுகிறது.
- வாசவயல் நந்தி வராத திசையனைத்தும் விசுகவி காளமேகம் என்று காளமேகத்தைப் பற்றி அதிமதுரகவி என்பவர் பாடியுள்ளார்.
- காளமேகப்புலவர் வைக்கோலுக்கும் யானைக்கும், பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும், பாம்புக்கும் எள்ளுக்கும், தேங்காய்க்கும் நாய்க்கும், மீனுக்கும் பேனுக்கும், பனைமரத்திற்கும் வேசிக்கும் எனப் பல்வேறு சிலேடை பாடியுள்ளார்.

## அழகிய சொக்கநாத பிள்ளை

- இயற்பெயர் - அழகிய சொக்கநாத பிள்ளை
- ஊர் - தச்சநல்லூர் (திருநேல்வேலி)
- காலம் - 19ம் நூற்றாண்டு
- நூல்கள் - **காந்தியம்மை பிள்ளைத்தமிழ் அந்தாதி, முத்துச்சாமி பிள்ளை**

மீது காதற் பிரபந்தம்

## இராமச்சந்திரக்கவிராயர்

- **ஊர்** - தொண்டை நாட்டு ராச நல்லூர்
- **துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்- இராமச்சந்திரக்கவிராயர்**.

## அந்தகக்கவி வீரராகவர்

- காலம் - **கி.பி. 17-ம் நூற்றாண்டு**
- ஊர் - **காஞ்சிபுரம் மாவட்டம் பூதூரில்** பிறந்து பொன்விளைந்த களத்தூரில் வாழ்ந்தார்
- தந்தை - **வடுகநாதர்**
- நூல்கள் - **திருக்கழுக்குன்ற புராணம், திருக்கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை**.

❖ அந்தகக் கவி வீரராகவர் சிறப்புகள்

- இவர் **சீட்டுக்கவி பாடுவதிலும், நகைச்சுவை ததும்ப பாடல்** இயற்றுவதிலும் வல்லவர் ஆவார்.
- வீரராகவர் இலங்கை சென்று **பரராசசேகர மன்னனை** பாடி ஒரு யானை, பொற்பந்தம். ஓர் ஊர் ஆகியவற்றை பரிசாகப் பெற்றார். ஆயிரம் தலைகளையுடையவன் **ஆதிசேடன்**.
- **குதிரையைக் குறிக்கும் பல பெயர்கள்**: கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், சடிலம், கிள்ளை.
- அந்தகன் என்றால் **பார்வை இழந்தவன்** என்று பொருள்.
- ஏடுகள் எழுதாமல் தன் மனத்திலே எழுதிப் படித்தேன் என்றவர் வீரராகவர்
- **சேலத்து வேந்தன் செழிய தரையனுக்கு** குதிரை வேண்டி வீரராகவர் எழுதி அனுப்பியது சீட்டுக்கவி.
- செய்யுள் வடிவில் எழுதப்படும் கடித வகை சீட்டுக்கவி. வேறுபெயர்கள் : **ஓலைத்தூக்கு, ஓலைப்பாசுரம்**
- பிறவியிலேயே கண் பார்வை இல்லாமல் இருந்தும், புலமை நிரம்பியவராய் இலக்கியத் தொண்டு புரிந்தவர் அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்பார்.
- இவர் இசையிலும் பயிற்சி உள்ளவர். இவர் இயற்றிய பாடல்கள் சொற்சுவையும், பொருள் நயமும் உடையவை.
- இவர் இலங்கைக்கும் சென்று அங்கே பரராசசேகர மன்னனிடம் சிறந்த பரிசுகள் பெற்றுள்ளார்.
- இவர் பிள்ளைத் தமிழ், கலம்பகம், கோவை, உலா முதலியவற்றை இவர் பாடியுள்ளார்.
- இவர் **திருக்கழுக்குன்றத்தைப் பற்றிய தல புராணம்** ஒன்று பாடியுள்ளார்.
- திருவாரூர் சிவபெருமானின் உலா பற்றியது. இதையே திருவாரூர் உலா என்பர்.
- இவை தவிர இவர் அவ்வப்போது கடிதங்கள் போல் பிறர்க்கு எழுதியனுப்பிய கவிதைகள் பல உண்டு.
- அவையே **சீட்டுக் கவிகள்** எனப்படும்.
- யானையைக் குறிக்கும் சொல்: **களபம், சந்தனம், மாதங்கம், வேழம், கரும்பு, பகடு, கம்பமா**.

APPOLLO STUDY CENTRE

## திருவள்ளுவமாலை

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு
வள்ளைக்(கு) உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி **- கபிலர்**

❖ **பொருள்:**

- உலக்கைப் பாட்டின் இன்னிசை கேட்டுக் கண்ணுறங்கும் கோழிகளை உடைய வளநாட்டு மன்னனே! சிறுபுல்லின் தலையில் உள்ள தினையளவினும் சிறுபனிநீர், நெடிதுயர்ந்த பனைமரத்தின் உருவத்தைத் தன்னுள் தெளிவாகக் காட்டும். அதுபோல, வள்ளுவரின் குறள் வெண்பாக்கள் அரிய பொருள்களைத் தம்மகத்தே அடக்கி மிகத் தெளிவாக காட்டுகின்றன.
- திருக்குறளின் சிறப்பினை உணர்த்தும் நூல் **திருவள்ளுவமாலை**.
- இந்நூல் **55 வெண்பாக்களையும், 55 பாடல்களையும் கொண்டது. 53 புலவர்கள் பாடியுள்ளனர்.**
- நெடுந்தொலைவிலுள்ள பெரிய மரத்தின் உருவத்தைப்புல் நுனியில் தேங்கிய சிறுபனித்துளி தெளிவாகக் காட்டும் என்ற சிந்தனையை உடையவர் - **கபிலர்.**
- நெல்குத்தும் போது பெண்களால் பாடப்படும் ஒரு வகைப்பாட்டு வள்ளை எனப்படும்.

## விவேக சிந்தாமணி

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்
வான்உறு மதியம் வந்தென்(று) எண்ணி
மலர்க்கரம் குவியுமென்(று) அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையோ இதுஎனப் புகன்றாள்

❖ **பொருள்:**

- தேன் உண்ணும் வண்டு மலர்த்தேனை உண்டு மயங்கிக் கிடந்தது. அக்கருநிற வண்டினை நாவற்பழமெனக் கருதி மங்கை ஒருத்தி, தன் கையில் எடுத்துப் பார்த்தாள். அந்த வண்டானது, அவள் முகத்தை வான்நிலவு என நினைத்தது. அவள் கையைத் தாமரையெனக் கருதி, நிலவு வந்துவிட்டால் மலர்குவிந்து தன்னை மூடிவிடும் என அஞ்சியது. அதனால், அவ்வண்டு அவள் கையை விட்டுப் பறந்தது. அம்மங்கை, பறந்தது வண்டா, பழமா? இஃது என்ன விந்தையாக இருக்கிறதே! என மயங்கிக் கூறினாள்.
- பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு. விருத்தம் முதலிய பலவகை பாக்களால் ஆனது. நீதி கூறும் நூல்.
- **சம்புவின் கனி** எனப்படுவது **நாவற்பழம்**.
- பெண்ணின் முகத்திற்கு ஒப்புமையாக கூறப்படுவது **வான்நிலவு**.

# <u>கல்விக்கு எல்லை இல்லை</u>

❖ **<u>கல்விக்கு எல்லை இல்லை</u>:**

கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் - மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டா புல்வீர்
எறும்புந்தன் கையால்எண் சாண் **- ஔவையார்.**

❖ **<u>பொருள்:</u>**

- புலவர்களே! இதுவரை நாம் படித்தது கைம்மண்ணளவே. இன்னும் படிக்க வேண்டியவை உலகளவு என நினைத்து கலைமகளே இன்றளவும் படித்துக் கொண்டே இருக்கிறாள்.
- ஆதலால், மிகுதியாகப் படித்துவிட்டோம் என்னும் செருக்குடன் வீண் வல்லமை பேசுதல் வேண்டா. சிறு எறும்பும் அதன் கையினால் எண் சாண் உடையதே.
- இவர் சோழர்கால ஔவையார், சங்க கால ஔவையார் இல்லை
- இவர் பாடிய பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ளது கலை மந்தை – **சரஸ்வதி**

# புலவர் குழந்தை (இராவணக் காவியம்)

- **<u>இராவண காவியத்தின் ஆசிரியர் புலவர் குழந்தை</u>**.
- பிறந்த ஊர் : கொங்கு நாட்டு மாவட்டத்தில் உள்ள **<u>ஓலவலசு</u>**. பிறந்த ஆண்டு : **<u>1906</u>**
- பெற்றோர் : **<u>முத்துச்சாமி – சின்னம்மையார்</u>**
- **எழுதிய நூல்கள்** : செய்யுள் நூல்கள் - இராவண காவியம், அரசியலரங்கம், நெடுஞ்சிப்பழம், காமஞ்சரி, திருநணாச் சிலேடை வெண்பா, உலகப்பெரியோன் கென்னடி.
- உரை நூல்கள் - **<u>திருக்குறள் குழந்தையுரை, தொல்காப்பியம், பொருளதிகார உரை, நீதிக்களஞ்சியம்</u>**
- **இலக்கண நூல்கள்** - இன்னூல், யாப்பதிகாரம், தொடையதிகாரம், தமிழ் எழுத்துச்சீர்திருத்தம், தமிழ் வாழ்க, பூவாமுல்லை, தீரன் சின்னமாலை, கொங்குநாடு, தமிழக வரலாறு.
- இராவண காப்பியத்தில் தென்திசையைப் பார்க்கின்றேன் என சொல்வேன் என்றாள்.

சிந்தையெலாம்தோள்களெலாம்
பூரிக்குதடா அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்!
ஐயிரண்டு திசைமுகத்துத் தன்புகழை நட்டோன்!
குன்றொத்த பெருந்தோளன்!
கொடை கொடுக்கும் கையன்!

- குள்ள நரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம் என் தமிழர் மூதாதை என் தமிழர் பெருமான்
- இராவணன் காண் என்று **<u>பாவேந்தர் பாரதிதாசன் இராவணனின் புகழ் பாடுவர்</u>**.

- இராவணின் புகழையும் பெருமையும் அவர்தம் வஞ்சகத்தால் வீழ்ந்த வரலாற்றையும் புலவர் குழந்தை தந்துள்ளார்.
- இவர் தமிழகக்காண்டம், இலங்கைக்காண்டம், விந்தக்காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என்ற 5 பிரிவுகளில் 3100 செய்யுட்களில் காப்பியம் பாடியுள்ளார். இதன் உட்பிரிவு படலம் எனப்படும். (57 படலங்கள்)

# இரட்சணிய யாத்திரிகம்

**இன்னா செய்தார்க்கு இனியவே செய்தல்**

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போது பரிந்தெந்தாய்!
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை
மன்னியுமென், றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல்

- **எச்.ஏ. கிருட்டினார்**

❖ **பொருள்:**

- இயேசுவின் திருவுடலைச் சிலுவையில் அறைந்ததும், அவர் உடல் சொல்லுதற்கரிய பெருந்துன்புற்றது. மனமோ பதை பதைத்தது இருப்பினும் இயேசு, "என் தந்தையே! இவர்கள், தாங்கள் செய்வது இன்னதென அறியாமல் செய்கிறார்கள் இவர்தம் பிழையை மன்னித்தருள்வீராக! என்று வேண்டினார்.

❖ **ஆசிரியர் குறிப்பு:**

- ஆசிரியர் - **எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை பிறந்த ஊர் : திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பு**.
- காலம் : **1827 இறப்பு 1900 ஹென்றி ஆல்பர்ட் என்ற பெயரின் சுருக்கமே எச்.ஏ. என்பதாகும்**.
- கிருட்டினணார் **30-வது வயதில் தம் பெயரை எச்.ஏ. கிருட்டினணார்** என மாற்றினார்.
- **பெற்றோர்** : சங்கர நாராயண பிள்ளை – தெய்வ நாயகி, இவர்கள் ரெட்டியார்பட்டியில் வாழ்ந்தனர்.
- கிருட்டினணார் தமிழ் பயின்றது **தந்தை சங்கரநாராயணரிடம் இலக்கணம் கற்றது வாசுதேவரிடம்**
- வடமொழி கற்றது பிலவணச் **சோதிடர். கிருட்டிணப்பிள்ளை கிறித்துவக் கம்பர் என அழைக்கப்பட்டார்**.
- தமிழ் இலக்கணம், இலக்கியங்களை கற்றது திருப்பாற் கடல் நாத கவிராயரிடம்.
- 1857-ல் **சென்னையில் தினவர்த்தமானியின் துணை ஆசிரியராகவும், 1876-ல் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தலைமை தமிழ் ஆசிரியராகவும்** பணியாற்றினார்.

❖ **நூற் குறிப்பு:**

- இரட்சணியம் என்பதற்கு ஆன்ம ஈடேற்றம் என்பது பொருள். ஆன்ம ஈடேற்றம் விரும்புவார் செல்லும் சிந்தனையாத்திரை என்பதுவே இரட்சணிய யாத்திரிகம்.
- இரட்சண்ய யாத்ரிகம் : **இறைவனை நோக்கிச் செல்லும் பயணம்** என்பது பொருள்.
- **ஜான் பனியன்** என்பார் எழுதிய **பில்கிரிம்ஸ் பிராகிரஸ்** என்ற நூலை **இரட்சணிய யாத்திரிகம் என எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை** மொழி பெயர்த்துள்ளார்.

❖ **வேறு நூல்கள்:**

- இரட்சணிய யாத்திரிகம், **<u>இரட்சணிய மனோகரம்</u>** (**<u>கிறித்தவர்களின் தேவாரம்</u>**), இரட்சணிய குறள், இரட்சணிய பால சோதனை, போற்றி திருவகவல் இரட்சணிய சமய நிர்ணயம்.

APPOLLO STUDY CENTRE

# இயல்-9
# நாட்டுப்புறப்பாடல்கள்

- **நாட்டார் பாடல்கள், நாட்டார் வழக்காற்றியல், கிராமியப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம்** என்ற பெயர்களும் உண்டு.
- குடும்பம், தொழில், விளையாட்டுச் சார்ந்த பாடல்கள், விடுகதை, பழமொழி, இதிகாசங்கள், புராணங்கள் போன்றன இதில் அடங்கும்.
- **நாட்டுப்புறப் பாடல்களின் இயல்புகள்**:
  - பேச்சு வழக்குடையது
  - கொச்சை மொழி கொண்டது
  - கூறியது கூறல் வரும்
  - வாய்மொழியாகப் பரவுவது
  - வடிவம் மாறக்கூடியது
  - படைத்தவர் பெயர் தெரியாதது
  - மக்களின் பக்தி, நீதி, உளவியல், சமுதாயம் என அனைத்துக் கூறுகள் பற்றிக் கூறுவது.
- நிலைத்த அமைப்புடைய நாட்டுப்புறப் பாடல் வகை **பிசி.**
- **விடுகதையை தொல்காப்பியர் பிசி** என்று கூறுகிறார்.
- தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி என்பது நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்கும் என்று சொல்பவர்கள் பேராசிரியர். **கி. வா. ஜகந்நாதன்** ஆகியோர்.
- தொல்காப்பியர் கூறும் புலன் என்ற வனப்பு நாட்டுப்புறப் பாடலைக் குறிக்கும் என்று கூறியவர் **ஆ. அழகப்பன்.**
- வள்ளைப்பாட்டு என்பது **உலக்கைப்பாட்டு**.
- வள்ளைப் பாட்டைத் திருப்பொற்கண்ணம் என்று கூறியவர் **மாணிக்கவாசகர்**.
- திருப்பூவல்லி என்பது **பூத்தொடுப்போர், பறிப்போர் பாடும் பாடல்**.
- தோழியர் இருவர் விளையாட்டாகப் பாடுவது **திருச்சாழல். தாலாட்டுப்பாடல் நீலாம்பரி ராகத்தில்** பாடப்படும்.
- ஆராரோ என்ற தாலாட்டின் தொடக்கத்திற்குத் தத்துவப் பொருள் **சொன்னவர் மு. அருணாச்சலம்**.
- **பிலாக்கணம், கையறுநிலை, இரங்கற்பா** ஆகியன ஒப்பாரிப் பாடலின் வேறு பெயர்கள்.
- **முஸ்லீம், கிறிஸ்தவர், பார்ப்பார் ஆகியோர் ஒப்பாரி பாடுவதில்லை**.
- தேன் + பாங்கு என்பது தான் தெம்மாங்க எனத் திரிந்தது என்பர். காதல் சுவை மிகுந்த பாடல் **தெம்மாங்கு**.
- தனிவழிச் செல்லல், வண்டி ஓட்டுதல் ஆகியவற்றின் போதும் வயல்வெளி, நிலா வெளிச்சம் ஆகிய இடங்களிலும் **தெம்மாங்கு** பாடப்படும்.
- எண்ணிக்கையுடன் தொடர்புடையது **ஏற்றப்பாட்டு**.
- **இராவாண்டை** என்பது இரவில் வரும் நிலவை ஆண்பாலாகப் பாவித்து **பெண்கள் பாடும் பாட்டு**.
- **மணமாகாத பெண்கள்** தமக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் என்பதற்காகப் பாடப்படும் பாடல் **இராவாண்டை**.

- இலாவணி என்பது **மராட்டிய நாட்டுப்புறப் பாடல் மெட்டின்** பெயர்.
- ஆண்கள் மட்டும் அடிக்கும் கும்மி ஒயிற் கும்மி. ஒயிற் கும்மியின் பிறப்பிடம் **ஆந்திரா**.
- பழமொழிப் பதிகம் பாடியவர் **திருநாவுக்கரசர். அம்பா பாடல்** என்பது **மீனவர் பாடலைக்** குறிக்கும்.
- **தைநீராடல்** என்பது **மார்கழி நோன்பைக்** குறிக்கும்.
- **குரவை** என்பது (இசைக்கு ஒரு பெண்ணாக) **ஏழு பெண்ணாக வட்டமாக நின்று கைகோத்து ஆடும் ஆட்டம்.**
- **துணங்கை** என்பது பெண்கள் பலர் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு ஆடும் ஆட்டம்.
- துணங்கை ஆடும் போது **ஆண்களும் உடன் இருப்பர்**.
- **பாகவத மேளா என்பது நாட்டிய நாடகம், மஞ்சு விரட்டு என்பது ஏறு தழுவுதல்**.
- ஏறு தழுவுதல் என்பது **ஜல்லிக்கட்டு**. ஏறு தழுவுதல் என்பது **தமிழரின் வீர விளையாட்டு**.
- ஏறு தழுவுதல் குறித்துக் கூறும் சங்க நூல்கள் **கலித்தொகை, முல்லைப்பாட்டு**.
- மஞ்சு விரட்டில் பயன்படுத்தும் கருவி **தப்பு, கொட்டு**.
- அண்ணன் மார்கதை அல்லது குன்றுடைய கவுண்டன் கதை உடுக்கை அடித்துப் பாடப்படும்.
- நாட்டுப்புறப் பாடல்களுக்குத் தொகுப்பாசிரியர் பதிப்பாசிரியர் மட்டுமே உண்டு.
- முதல் நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு காற்றில் மிதந்த கவிதை – **1943 – மு. அருணாச்சலம்**.
- முதல் நாட்டுப்புறக் கதைப்பாட்டு பவளக்கொடி மாலை – **1863 – கருணானந்த சுவாமி**.
- முதல் நாட்டுப்புறப் புராணக் கதை மயில்வாணன் - **1887 – வீராசாமி நாயக்கர்**.
- முதல் பழமொழித் தொகுப்பு பழமொழிகள் - **1870 – லாரி**.
- முதல் விடுதலைத் தொகுப்பு இருசொல் அலங்காரம் - **1877 – அருணாச்சல முதலியார்**.
- **மலையருவி** (நாடோடிப் பாடல்கள்) எனும் நூலின் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்துள்ளார் - **கீ.வா. ஜகந்நாதன்**.
- **நாட்டுப்புற இலக்கிய மும்மணிகள் எனப் போற்றப்படுவர்கள்.**
  - சே. **அன்னக்காமு**
  - கி.வா. **ஜகந்நாதன்**
  - நா. **வானமாமலை** (வீரபாண்டிய கட்டபொம்மன் கதை)
- சே. அன்னக்காமு **- ஏட்டில் எழுதாக் கவிதைகள்**.
- **கி.வா. ஜகந்நாதன்** - நாடோடி இலக்கியம், காஞ்சியிலும் இன்பம், குழந்தை உலகம், மச்ச வீடு, மலையருவி.
- **நா. வானமாமலை -** வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாட்டு, கான் சாகிப்பு சண்டை, ஐவர் ராஜாக்கள் கதை, தமிழ்நாட்டுப் பாடல்கள், தமிழண்ணல் - தாலாட்டு.
- பெரும்பாலும் தெருக்கூத்து **திரௌபதியம்மன்** தொடர்புடையது.
- கரகாட்டம் மாரியம்மன் தொடர்புடையது. **கணியன் கூத்து சுடலைமாடன்** தொடர்படையது.

➢ **<u>வில்லிப்பாட்டு சிவபெருமான்</u>** தொடர்புடையது.
➢ **<u>சேவையாட்டம் பெருமாள்</u>** தொடர்புடையது.
➢ **அ.மு. பரமசிவானந்தம்** - வாய்மொழி இலக்கியம்
➢ **ச.வே. சுப்பிரமணியன்** - தமிழில் விடுகதைகள்
➢ **ஆறு. அழகப்பன்** - நாட்டுப்புறப் பாடல் திறனாய்வு

➢ **தி.ச. கோமதிநாயகம்** - தமிழ் வில்லுப்பாட்டுகள்
➢ **அண்ணாமலை ரெட்டியார்** - காவடிச்சிந்து
➢ **இராமநாதன்** - நாட்டுப்புற இயல் ஆய்வுகள்

## சித்தர்கள்

➢ சித்தர் என்ற சொல் **<u>சித் என்ற வடமொழிச்</u>** சொல்லிலிருந்து தோன்றியது. சித்து என்றால் அறிவு என்று பொருள்.
➢ காலம் கி.பி. 14-ம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ம் நூற்றாண்டு வரை.
➢ **<u>சித்தர்</u>** என்றால் நிறைமொழி **<u>மாந்தர்</u>** என்று பொருள்.
➢ பருவுடலை நுண்உடல் ஆக்குவதே பிறவாதிருக்க வழி என்பது **<u>சித்தர் கொள்கை</u>**.
➢ சித்தர்களில் ஐவர் **<u>பஞ்சமர் என்று</u>** அழைக்கப்படுகிறார்கள்.
- திருமூலர்
- சிவவாக்கியர்
- பட்டினத்தார்
- திருமாளிகைத் தேவர்
- கருவூரார்

➢ **18 சித்தர்கள்**
➢ 1. அகத்தியர் 2. பட்டினத்தார் 3. பத்திரிகிரியார்
4. சிவாக்கியர் 5. பாம்பாட்டிச் சித்தர் 6. இடைக்காட்டுச் சித்தர்
7. அகப்பேய்ச் சித்தர் 8. குதம்பைச் சித்தர் 9. கடுவெளிச்சித்தர்
10. அழுகுணிச்சித்தர் 11. கொங்கணச்சித்தர் 12. சுப்பிரமணிய சித்தர்
13. தேரையர் 14. சட்டைமுனி 15. திருமூலர்
16. உரோமரிஷி 17. கருவூரார் 18. போகர்
➢ மேலும் ஔவையார். ஏனாதி சித்தர், களைச் சித்தர் போன்றோரும் உண்டு.
➢ பெண்பால் யோகியான **ஔவையார் ஞானக்குறள்** பாடினர்.
➢ சித்தர்களில் சைவ சமயத்தைச் சாராதவரும் உள்ளனர்.

☐ சித்தர் பாடல்கள் மக்கள் இலக்கியம் என்று அழைக்கப்படுகின்றது.
☐ பௌத்த சமய சித்தர்கள் சாரணர்கள் எனப்பட்டனர்.
☐ இஸ்லாம் சமய சித்தர்கள் மஸ்தான்கள் எனப்பட்டனர்.

## கடுவெளிச்சித்தர்

➢ இயற்பெயர் தெரியவில்லை. <u>கடுவெளி என்றால் சுத்தவெளி</u>.

- அதாவது பிரம்மம். பிரம்மத்தைக் கடுவெளி என்றதால் கடுவெளிச்சித்தர் எனப்பட்டார்.
- இவரது பாடல்களில் நீதிக்கருத்துக்கள் மிகுதி. 34 பாடல்கள்.
- உருவ வழிபாடு செய்யாமல் வெட்ட வெளியையே கடவுளாக வழிபட்டவர் - கடுவெளிச்சித்தர்.
- (எளிய சொற்களில் அறிவுரை சொன்னவர்) – வைதோரைக்கூட வையாதே என்ற சித்தர் பாடல்.
- கருவூர் சித்தர் - அறிவே சிவம், திருமூலர் - அன்பே சிவம்.

வைதோரைக் கூட வையாதே - இந்த
வைய முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே!
வெய்ய வினைகள் செய்யாதே – கல்லை
வீணில் பறவைகள் மீதில் எய்யாதே!

பாம்பினைப் பற்றி ஆட்டாதே – உன்றன்
பத்தினி மார்களைப் பழித்துக் காட்டாதே!
வேம்பினை உலகில் ஊட்டாதே – உன்றன்
வீறாப்பு தன்னை விளங்க நாட்டாதே!

போற்றும் சடங்கை நண்ணாதே – உன்னைப்
புகழந்து பலரில் புகலல் ஒண்ணாதே!
சாற்றும்முன் வாழ்வை எண்ணாதே – பிறர்
தாழுமபடிக்கு நீ தாழ்வைப் பண்ணாதே!

கள்ளவேடம் புனையாதே – பல
கங்கையிலே உன்கடம் நனையாதே!
கொள்ளை கொள்ள நினையாதே – நட்புக்
கொண்டு பிரிந்து நீ கோள்முனையாதே!

- **கடுவெளிச் சித்தர்**

❖ **சித்தர்களும் மலைகளும்**

1. திருமூலர் - சிதம்பரம்
2. பட்டினத்தார் - திருவொற்றியூர்
3. பாம்பாட்டிச்சித்தர் - மருதமலை
4. இடைக்காடர் - திருவண்ணாமலை
5. அகப்பேய்ச்சித்தர் - விருத்தாசலம்
6. குதம்பைச்சித்தர் - திருக்கழுக்குன்றம்
7. கொங்கணர் - திருப்பதி (வேங்கடம்)
8. சட்டைமுனி - திருவரங்கம்
9. அகத்தியர் - பொதியமலை
10. போகர் - பழனிமலை
11. கருவூர்ச்சித்தர் - கருவூர்

12. நந்திதேவர் - சீர்காழி
13. தன்வந்திரி - வைத்தீஸ்வரன் கோயில் (புள்ளிருக்கு வேளூர்)
14. கமலமுனி - திருவாரூர்
15. வால்மீகி - எட்டுக்குடி
16. சுந்தரானந்தர் - மதுரை
17. மச்சமுனி - திருப்பரங்குன்றம்
18. இராமதேவர் - அழகர்மலை
19. பதஞ்சலி - இராமேசுவரம்

APPOLO STUDY CENTRE

# இயல்-10
# சமயமுன்னோடிகள்

| வாழ்ந்த காலம் | 16 திருஞானசம்பந்தர் | 81 திருநாவுக்கரசர் | 18 சுந்தரர் | 32 மாணிக்கவாசகர் |
|---|---|---|---|---|
| சிறப்புப் பெயர்கள் | ஆளுடை பிள்ளை, காளிவள்ளல், திராவிடசிசு | ஆளுடை அரசு, மருள் நீக்கியார், தருமசேனர், வாகீசர், தாண்டக வேந்தர், அப்பர் | ஆளுடைநம்பி, வன்தொண்டன், தம்பிரான் தோழன், ஆரூரார், ஆலால சுந்தரர் | ஆளுடை அடிகள், தென்னவன், பிரம்மராயன், திருவாதவூரார் |
| ஊர் | சீர்காழி – தோணிபுரம், பிரம்மபுரம், வேணுபுரம் | திருவாமூர் | திருநாவலூர் | திருவாதவூர் |
| பெற்றோர் | சிவபாத இருதயர் பகவதி அம்மையார் | புகழனார் மாதினியார் | சடையன் இசைஞானி | சம்புபாத இருதயர் சிவஞானவதி |
| ஆட்கொண்ட ஊர் | சீர்காழி | திருவதிகை | திருவெண்ணெய்நல்லூர் | திருப் பெருந்துறை |
| இறைவனடி சேர்ந்த ஊர் | பெருமனநல்லூர் | திருப்புகலூர் | கைலாயம் | சிதம்பரம் |
| தமிழ் | கொஞ்சு தமிழ் | கெஞ்சு தமிழ் | மிஞ்சு தமிழ் | - |
| மார்க்கம் | சத்புத்ர மார்க்கம் | தாச மார்க்கம் | சக மார்க்கம் | சற்குரு மார்க்கம் |
| இயற்றியவை | 1, 2, 3 திருமுறைகள் | 4, 5, 6 திருமுறைகள் | 7-ஆம் திருமுறை | 8-ஆம் திருமுறை திருவாசகம் திருக்கோவையார் |

## <u>சைவத் திருமுறைகளின் சிறப்புகள்</u>

- சைவப் பெரியோர்கள் சிவனைப் பற்றி பாடிய பாக்கள். **<u>12 சைவ திருமுறைகள் எனப்படும்</u>**.
- சைவ திருமுறைகளைத் தொகுத்தவர் **<u>நம்பியாண்டார் நம்பி</u>**.
- நம்பியாண்டார் நம்பி தொகுத்தவை **<u>11 திருமுறைகள் மட்டுமே</u>**.
- நம்பியாண்டார் நம்பிக்குப் பின் சேர்ந்தது **<u>பெரிய புராணம்</u>**.
- **<u>திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்</u>** ஆகிய நால்வரையும் **<u>சமயக் குரவர்கள்</u>** என்று அழைப்பர். குரவர் என்பதற்கு **<u>சமயப் பெரியவர்கள்</u>** என்று பொருள்.
- **<u>திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்</u>** ஆகிய மூவரும் மூவர் **<u>முதலிகள்</u>** எனப்படுவர்.

- சைவர்களின் **<u>தமிழ் வேதம் பன்னிரு திருமுறைகள்</u>**.
- சேரநாட்டு மரபில் வந்த சைவர் **<u>சேரமான் பெருமாள் நாயனார்</u>**.
- தமிழ் வியாசர் என்று அழைக்கப்படுபவர் **<u>நம்பியாண்டார் நம்பி</u>**.
- நம்பியாண்டார் நம்பி பாடியது **<u>திருத்தொண்டர் திருவந்தாதி</u>**.
- திருஞானசம்பந்தர் பாடியது **<u>திருக்கடைக்காப்பு</u>**; சுந்தரர் பாடியது **<u>திருத்தொண்டர் தொகை</u>**.
- ஒன்பது பேர் பாடிய ஒன்பதாம் திருமுறை **<u>திருவிசைப்பா</u>**.
- சைவத் திருமுறைகளை தொகுத்த மன்னன் **<u>இராஜராஜசோழன் 11-ம் திருமுறை பிரபந்தத்திட்டு</u>**.

## தேவாரம்

- தே + வாரம் - தே → தெய்வத்தன்மை வாய்ந்தது, வாரம் → இசைப்பாட்டு.
- தே + ஆரம் - தெய்வத்திற்குச் சூட்டப்படும் மாலை.
- சைவத் திருமுறைகளில் **<u>முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும்</u>**.
- தேவாரம் அடங்கன் முறை என்று அழைக்கப்படுகிறது.
- தேவாரம் பாடியவர் மூவர் **<u>திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்</u>**.
- திருஞானசம்பந்தர் பாடியது **<u>1, 2, 3 திருமுறைகள்</u>**.
- திருநாவுக்கரசர் பாடியது **<u>4, 5, 6 திருமுறைகள்</u>**.
- சுந்தரர் பாடியது **<u>7-ம் திருமுறை</u>**.

<u>1, 2, 3-ம் திருமுறைகள் (திருஞானசம்பந்தர்)</u>

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

- திருஞானசம்பந்தரின் இயற்பெயர் **<u>ஆளுடைப்பிள்ளை</u>**.
- **<u>குலம் அந்தணர் (சோழ நாடு)</u>**.
- பெற்றோர் சிவபாத **<u>இருதயர் - பகவதி</u>** அம்மையார்.
- காலம் கி.பி. 7-ம் நூற்றாண்டு
- பிறந்த ஊர் - **<u>சீர்காழி (தோணிபுரம், பிரமபுரம்</u>**, **<u>வேணுபுரம், கழுமலம்</u>**) என்ற பெயர்களும் உண்டு).
- சமயக் குரவர்கள் **<u>நால்வருள் முதலாவதாகக்</u>** குறிக்கப்படுபவர்.
- தேவாரத்தின் முதல் நூலைப் பாடியவர்.
- இவரது பாடல்கள் **<u>1, 2, 3-ஆம் திருமுறைகளாகத்</u>** தொடுக்கப் பட்டுள்ளன.
- **<u>முருகனின் அவதாரமாகப் போற்றப்படுபவர்</u>**.
- பாடியவை **<u>16000 பதிகங்கள்</u>**. கிடைத்தவை **<u>384 பதிகங்கள்</u>**.
- கிடைத்த பாடல்கள் **<u>3840 மு.வரதராசனார்- 4168, விமலானந்தன் - 1213</u>**.
- **<u>23 பண்களில்</u>** (இசைகளில்) பாடியுள்ளார். **<u>220 பதிகளுக்கு</u>** (ஊர்களுக்குச்) சென்று இறைவனை வழிபட்டவர்.

❖ **முக்கிய நிகழ்ச்சிகள்**

- சீர்காழியில் மூன்று வயதில் உமையாள் கொடுத்த **ஞானப்பாலை உண்டவர்**.
- ஒருநாள் காலை சிவபாத இருதயர் நீராடப் புறப்பட்டார். அப்போது தாமும் உடன் வருவதாகத் தந்தையாரிடம் அப்பிள்ளையார் கூறி உடன் சென்றார்.
- திருஞான சம்பந்தர் **சீர்காழியில் அந்தணர்** (கவுணியர்) குலத்தில் பிறந்தார்.
- திருஞான சம்பந்தர் மூன்று வயதாக இருக்கையில் தந்தை இவரைச் சீர்காழித் தோணியப்பர் கோயில் திருக்குளக்கரையில் நிறுத்தி விட்டு நீராடினார். குழந்தை சம்பந்தர் திருக்கோயில் விமானத்தைப் பார்த்து அம்மே அப்பா என்று அழவே சிவனும் உமாதேவியும் தோன்றினர்.
- உமாதேவி குழந்தைக்கு அருள்மிகு ஞானப்பாலை ஊட்டினார்.
- பால் மணம் மாறாத பச்சிலம் பருவத்திலேயே உமையாள் அளித்த ஞானப்பாலைப் பருகி இறை தரிசனம் பெற்று தோடுடைய செவியனே எனத் தொடங்கும் திருப்பாடலைப் பாடினார்.

❖ **மேற்கோள்கள்**

- பால் குடித்த போது பாடியது: "**தோடுடையசெவியன்**" (முதற்பாடல்)
- கதவு திறக்கப் பாடியது-: **"இரக்கம் ஒன்றிலீர்!"**
- மன்னன் நோய் தீர்க்கப் பாடியது: "**மந்திரமாவது நீறு**"
- புனல் வாதத்தில் எழுதியது: "**வாழ்க அந்தணர் வானவர் ஆணினம்**"
- நாயகன் நாயகி பாவத்தில் பாடியது: "**சிறையாகும் மடக்கிளியே**"
- 7 கோள்களைப் பாடியது : "**நல்லவர்களுக்கு நாளும் கோளும் இல்லை**"

❖ **சிறப்புகள் :**

- திருஞானசம்பந்தரின் பாடல்களை யாழில் பாடியவர் **திருநீலகண்ட யாழ்ப்பாணர்.**
- **யாழ் முறி** இவருக்கு மட்டுமே உரியது. **இயற்கையை அதிகமாகப்** பாடியவர்.
- ஆதிசங்கரர் தம் நூலான **சௌந்தர்ய லஹரியில்** திருஞான சம்பந்தரைத் **திராவிட சிசு** என்று புகழ்ந்துள்ளார்.
- நாளும் இன்னிசையால் **தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்** என்று புகழ்ந்தவர் **சுந்தரர்**.
- வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கத் தோன்றியவர் என்று புகழ்ந்தவர் **சேக்கிழார்**.
- சிறப்புப் பெயர்கள் : **தோணிபுரத் தோன்றல், பாலவராயர், இன்தமிழ் ஏசுநாதர், ஆளுடைய பிள்ளை, காளிவள்ளல், குழந்தை ஞானி, கவுனியர், பரசமயக் கோளரி**.
- ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் முதன் முதலில் சந்தித்த இடம் - **திருப்புகலூர்.**
- 16 வயதில் திருமணம் - மணமகள் திருநல்லூர் நம்பாண்டார் **மகன் சொக்கியார்**.

❖ **திருஞானசம்பந்தர் அற்புதங்கள்**

- **திருமறைக்காடு (வேதாரண்யம்)** கோயில் கதவு திறக்கவும் மூடவும் பதிகம் பாடியவர்.

- சமண மதத்தைப் போற்றிய கூன்பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் வேண்ட மதுரை வந்தவர். மதுரையில் சமணரைப் புனல் வாதத்திலும் அனல் வாதத்திலும் வென்று பாண்டியனைச் சைவனாக்கியவர்.
- **<u>கூன் பாண்டியனின் வெப்பு நோயைப்</u>** போக்கியவர்.
- **<u>கூன்பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன்</u>** ஆனான்.
- இவர் வைகையாற்றில் இட்ட ஏடு கரையேறிய இடம் - **<u>திருஏடகம்</u>**.
- இவரின் சிவிகையைத் திருநாவுக்கரசர் சுமந்த இடம் - **<u>திருப்பூந்துருத்தி</u>**.
- அப்போது திருநாவுக்கரசருக்கு அப்பர் என்ற பெயரைக் கொடுத்தவர் - **<u>திருஞானசம்பந்தர்</u>**.
- ஆண் பனையைப் பெண் பனையாக்கிய இடம் - **<u>திருவோத்தூர்</u>**.
- திருமணம் நடந்த இடம் **<u>திருப்பெருமணநல்லூர்</u>**. இங்கு இவர் திருமணக் கோலத்துடன் இறைவனடி சேர்ந்தார்.
- திருஞானசம்பந்தர் அற்புதங்கள் பல செய்தவர். **<u>திருமறைக்காட்டு கோயிலில் கதவுகள் தாமே மூடிக்</u>** கொள்ளுமாறு பாடினார். திருமருகலில் வணிகனது பாம்பு விஷம் நீங்குமாறுப் பாடினார்.
- **<u>மயிலாப்பூரில் பாம்பு தீண்டி</u>** இருந்த **<u>பூம்பாவை</u>** என்னும் பெண்ணிணாக உயிர் பெற்று எழச் செய்தார்.
- திருஞானசம்பந்தரின் பாடல்கள் திருநீறு, ஐந்தெழுத்து மந்திரம், திருக்கோயில் வழிபாடு போன்ற சைவச் சின்னங்களின் பெருமையை எடுத்துக் கூறி சமயப் பற்றினை ஊட்ட வல்லவை.
- திருஞானசம்பந்தர் பாடல்கள் சைவ வழிபாட்டில் **<u>சத்புத்திர</u>** (நல்லமகன்) **<u>நெறியை</u>** விவரிக்கின்றன.

## 4, 5, 6-ம் திருமுறைகள் (திருநாவுக்கரசர்)

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
நாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே

## திருநாவுக்கரசர்

- <u>**பொருள் :**</u>
  - எவர்க்கும் ஆட்படாத தன்மையன் சங்கரன், அழகிய வெண்மையான சங்கினைக் காதிற்குழையாக கொண்டவன். அத்தகு தலைவனுக்கே மீளா அடிமை கொண்டோம். அன்றலர்ந்த மலருக்கு ஒப்பான சிவந்த திருவடிகளை அடைந்தோம். ஆதலால், நாம் எவர்க்கும் அடிமையில்லை, நமனுக்கும் அஞ்ச மாட்டோம், நகரத்தினுள் செல்லோம் என்றும் துயர்ப்பட மாட்டோம். இறைவனின் பாதுகாப்பில் உள்ளோம். பிணி இதுவென

அறியோம், யாரிடத்தும் சென்று பணிந்து நில்லோம், எந்நாளும் இன்பமே அன்றித் துன்பம் இல்லை.

- இயற்பெயர் - **மருள் நீக்கியார்**.
- பிறந்த ஊர் - **திருவாரூர்**.
- காலம் - கி.பி. **7-ம் நூற்றாண்டு**.
- பெற்றோர் - **புகழனார், மாதினியார்**
- தமக்கை - **திலகவதியார்**
- குலம் - **வேளாளர் குடி**
- சமயம் முதலில் **சமணம், பின்னர் சைவம்**.
- சூலை நோய் நீங்க திருநீறு கொடுத்த தம் தமக்கையாகிய திலகவதியாரால் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறினார்.
- நாவுக்கரசரின் வடமொழிப் பெயர்கள் - **வாகீசர். திருவதிகையில் சிவனால் நாவுக்கரசர்** என்று அழைக்கப்பட்டார்.
- தாண்டகம் என்னும் செய்யும் வகையுள் சிறந்த பாடல்கள் இயற்றியதால் (திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்) **தாண்டக வேந்தர்** எனப்பட்டார்.
- சமண தருமத்தில் வல்லமை பெற்று விளங்கியதால் தருமசேனர் எனப்பட்டார்.
- இவர் திருவதிகை ஊர் இறைவனை வணங்கிச் சைவ சமயத்திற்கு மாறினர்.
- **முதலாம் மகேந்திரவர்மனை சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினார்**.
- ஞான சம்பந்தர் இவரை **அப்பரே** என்று அழைத்ததால் அப்பர் எனப்பட்டார்.
- இறைவனுக்கு ஆட்தொண்டு (அடிமை) செய்து உயர்ந்ததால் **ஆளுடைய அரசு** எனப்பட்டார்.
- திருநாவுக்கரசரையே வழிபட்டவர் அப்பூதியடிகள் என்ற அந்தணர் ஆவார்.
- இவர் பாடியது **4990 பதிகங்கள், 49900 பாடல்கள்**, கிடைத்தவை **312 பதிகங்கள் 3066 பாடல்கள்**.
- இவை **4, 5, 6ஆம்** திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருப்புகலூரில் **81-ம் வயதில் இறைவனடி** சேர்ந்தார்.
- தமிழகத்தில் விடுதலை வேட்கைக் கனலை தம் வீறுகொண்ட பாக்களால் மக்களைத் தட்டியெழுப்பிய பாரதியின் **அச்சமில்லை! அச்சமில்லை**! எனும் பாடலுக்கு முன்னோடி ‘‘**நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்**’’ என்ற திருநாவுக்கரசர் பாடல்.
- மருள் நீக்கியார் பருவம் நிரம்பிக் கல்வி அறிவும் உலகியலறிவும் வாய்ந்து உலக மக்கட்கு உதவும், ஒப்புரவு அறங்கள் பல செய்து வந்தார்.
- பின்பு சமண சமயத்தைத் தழுவி, அச்சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.
- சமணர்கள், தம் சமயத்தைச் சார்ந்திருந்த மகேந்திரவர்மன் (ஆட்சிக் காலம், கி.பி. 600 – 630) வாயிலாகத் திருநாவுக்கரசருக்குப் பல துன்பங்கள் இழைக்க முற்பட்டனர்.
- யானையின் காலால் இடறுதலும், நீற்றறையில் இடுதலும், நஞ்சு ஊட்டுதலும், கல்லிற் கட்டிக் கடலில் இடுதலும் ஆகிய கொடுமைகளை நிகழ்த்தினர்.
- திருநெல்லூரில் திருவடி சூட்டப்பெற்றார்.
- இறைவனது திருமேனி எழிலைக் காணும் பேறு வாய்க்கு மேயாயின் இவ்வுலகில் எத்தனை முறை வேண்டுமானாலும் மனிதராகப் பிறக்கலாம் என தம் எண்ணத்தை வெளியிடுகிறார்.

- இவரது பதிகங்கள் தேவாரம் என்று சிறப்பாகப் பேசப்படுகின்றன.
- இவர் இறைவனிடம் கொண்ட நெறி **தாச நெறி (அ) அடிமை நெறி**.
- திருநாவுக்கரசருக்கு சிவபெருமான் கையிலாய தரிசனம் தந்த இடம் - **திருவையாறு**.

"குனித்தப் புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்
புனித்த சடையும் பவளம் போல்மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந் மாநிலத்தே"

❖ **மேற்கோள்கள் :**

- "மாசில் வீணையும் மாலை மதியமும்", "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை".
- "மனமென்னும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றிச் சினமெனும் சரக்கை ஏற்றி"
- "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே","என் கடன் பணி செய்து கிடப்பதே"
- "சாத்திரம் பல பேசும் சழுக்கர்கால் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்","தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்".

## 7-ம் திருமுறை (சுந்தரர்)

செங்கண் மேதிகள் சேடெறிந்து தம்படிதலில் சேலினத்தொடு
பைங்கண் வாளைகள் பாய்பழனத் திருப்பனையூர்
குரங்கினம் குதிகொள்ளத் தேனுகக் குண்டுதண் வயிற் கெண்டைபாய்தரப்
பரக்கும் தண்கழனிப் பழனத் திருப்பனையூர்

## சுந்தரர்

- பிறந்த ஊர் - **திருநாவலூர்**
- இயற்பெயர் - **ஆரூரர்**
- காலம் - கி.பி. **7, 8-ம் நூற்றாண்டு**
- வேறு பெயர்கள் - **வன்தொண்டர், தம்பிரான் தோழன், நாவலூரார்**
- அந்தணர் மரபைச் சேர்ந்தவர்
- பெற்றோர் - **சடையனார் - இசைஞானியார்**
- இறைவனையே மனைவிடம் தூது அனுப்பியதால் **வன்தொண்டர்** எனப்பட்டார்.
- இறைவனுக்குத் தோழன் ஆதலால் தம்பிரான் **தோழன்** எனப்பட்டார்.
- திருவாரூரில் பரவையாரையும் (கமலினி), திருவொற்றியூரில் சங்கிலியாரையும் (அனிந்திதை) மணந்தார்.
- **நரசிங்க முனையரையர்** என்ற அரசர் சுந்தரரை தத்து எடுத்தார்.
- திருவாரூர் கோயிலில் உள்ள திருவாசிரிய மண்டபத்தில் **திருத்தொண்டத் தொகை** பாடினார்.
- சுந்தரரின் நண்பர் **சேரமான் பெருமாள் நாயனார்**.
- சுந்தரருடன் தொடர்பு கொண்டிருந்த ஆழ்வார் **திருமங்கை ஆழ்வார்**.

- ஆதிஉலா என்ற திருக்கயிலாய ஞான உலாவைப் பாடியவர் சேரமான் பெருமாள் நாயனார்.
- இவர் பாடிய பதிகங்கள் **38000, கிடைத்தது 10 பதிகம்**, மொத்தம் **1026 பாடல்கள்**.
- இவர் தம் பாடல்கள் 7-ம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. **யோகமுறை என்ற சகமார்க்கத்தினர்**.
- இவருடைய பாடல்களில் கோயில் பண்டாரங்கள், இசை நடன கலைஞர்கள், நாடு, நகரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது.
- வாழ்நாள் இறுதியில் சேரமான் பெருமாள் நாயனாரோடு வெள்ளை யானையிலேறிக் கயிலை அடைந்ததாகக் கூறப்படுகிறது.
- சுந்தரரை வழிபட்டவர்கள் : சோமாசி மாற நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார்.
- இவர் தம் **18ம் வயதில் இறந்தார்**.

❖ **இவருடைய சிறப்புகள்** :

- பரவையாரின் ஊடலைத் தவிர்க்க இறைவனையே **இருமுறை தூது** அனுப்பினார்.
- 12,000 பொன்னை மணிமுத்தாற்றில் போட்டு கமலாலயத்தில் எடுத்தார்
- இவர் பொருட்டு காவிரி ஆறு இரண்டு கூறாகப் பிளந்து நின்றது
- திருப்புகலூரில் தலையில் வைத்த செங்கல் தங்கக் கல்லாக மாறியது
- சிவபெருமான் அவர்தம் கருத்தினை உணர்ந்து பூவுலகில் பிறந்து அவ்விருவதுடனும் காதலின்பம் துய்த்து மீண்டுவருமாறு கட்டளையிட்டார்.
- ஆனால் சுந்தரர் இறைவனை வணங்கித் தாம் மனிதப் பிறவியில் மதி மயங்கும் காலத்தில் தம்மைத் தடுத்தாட் கொள்ள வேண்டுமென்று இறைஞ்சி வரம் பெற்றார்.
- பக்குவப்பட்ட ஆன்மாக்களை இறைவன் தீவினைவழிச் செல்லாமல் தானே வந்து தடுத்து ஆட்கொள்வான் என்பது சைவ நெறி. இந்நெறிக்கு இலக்கியமாக இவரது வாழ்வு அமைந்துள்ளது.
- சுந்தரர் தம் குலத்தைச் சார்ந்த பரவையாரைத் திருமணம் செய்யும் வேளையில் இறைவனால் தனக்குப் பரம்பரை அடிமை என்று தடுத்து ஆட்கொள்ளப்பட்டார்.
- பின்னர் வேளாளர் குலத்துச் சங்கிலியாரையும் காதலித்து மணந்து கொண்டார்.
- **நாவலூரார்** என்ற பெயரும் உண்டு.
- சேரமான் பெருமாள் நாயனார், காடவர் கோள் சுழற்சிங்கன், திருமங்கையாழ்வார், நந்திவர்மன் (இரண்டாம் நரசிம்மன்) ஆகியோர் சுந்தரர் காலத்தில் வாழ்ந்தவர்.
- திருத்தொண்டர்த் தொகை பிற்காலத்தில் இயற்றப்பட்ட நம்பியாண்டாரின் திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணம் ஆகியவற்றிற்கு விதையாகக் காணப்படுகிறது.

❖ **சுந்தரர் வாழ்வில் நிகழ்ந்த பல அற்புதங்கள் :**

- இரு கண்களிலும் பார்வையை இழந்தார். மீண்டும் அவற்றுள் ஒன்றினை **காஞ்சியிலும்**, மற்றொன்றினைத் **திருவாரூரிலும்** பெற்றார்.
- **முதலையால் விழுங்கப்பட்ட** சிறுவனை உயிரோடு மீட்டார்.
- இவரது **பதிகங்கள் பாட்டு** என்று கூறப்படுகின்றன.
- சுந்தரர் இறைவனைத் தோழனாகக் கருத்திற் கொண்டு பக்தி செலுத்தினார்.
- சிவபெருமானது திருவுருவ அமைப்பினையும், **திருவிளையாடல் களையும் நகைச்சுவையுடன் சுந்தரர்** விவரிக்கிறார்.

- அவ்வூர் திருக்கோயிலில் அடியார்கள் பலரைக் கண்டு, இவர்களுக்கு நான் அடியன் ஆகும் நாள் எந்நாளோ என்று ஏங்கி இறைவனிடம் வேண்டினார்.

❖ **மேற்கோள்கள் :**

- "பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா" - **முதற்பாடல்**
- "பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக் கசைத்து" – **தேவார பாடல்**

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண் ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்துறையுள்
அத்தா உனக்கானாய் இனிஅல்லேன் எனலாமே!

## மாணிக்கவாசகர்

❖ **8-ம் திருமுறை (மாணிக்கவாசகர்)**

- பெற்றோர் - சம்புபாதசாரியார் - **சிவஞானவதி**
- குலம் - **அந்தணர்**
- சிறப்புப் பெயர்கள் - **அருள் வாசகர், தென்னவன் பிரம்மராயன், காமுகர், திருவாதவூரடிகள்**
- பாடியவை – **திருவாசகம், திருக்கோவையார்**
- **அருள் வாசகர், மணிவாசகர்** என்றும் அழைக்கப்படுகிறார்.
- திருவாசகம் **658 பாடல்களைக்** கொண்டது.
- அகவல், பத்து, சதகம் அம்மானை எனப் பல சிற்றிலக்கிய யாப்பு வகைகளை அடக்கியது.
- **அரிமர்த்தன பாண்டியனின்** அமைச்சராகப் பணியாற்றினார்.
- இவர் எழுதிய நூல்கள் : **திருக்கோவை, திருவெம்பாவை, திருச்சிற்றம்பலக் கோவை, திருவாசகம்**
- இவர் எழுதிய **திருவெம்பாவை மார்கழி மாதத்தில்** சைவர்களால் பாடப்படுகிறது.
- மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்த போது **தென்னவன் பிரம்மராயர்** என்ற பட்டப்பெயருடன் திகழ்ந்தார்.
- மாணிக்கவாசகருக்காக இறைவன் **நரியைப் பரியாக்கினார்**. இவர் **பிட்டுக்கு மண் சுமந்தவர்**.
- தாய்லாந்து நாட்டில் கொண்டாடப்படும் ஒரு விழா **த்ரியெம்பாவ – த்ரிபாவ**
- இறைவன் பாவை பாடிய வாயால் கோவை பாடுக என மாணிக்கவாசகர் பாடியது திருக்கோவையார்.
- திருவாசகத்திற்குப் **பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார்** போன்றோர் உரை எழுதியுள்ளனர்.
- சிவனுக்கு **திருப்பள்ளியெழுச்சி** பாடியவர்.

❖ **சிறப்பு:**

- மாணிக்கவாசகர் பாடிய பக்திப் பாடல்கள் **திருவாசகம்** என்று தொகுக்கப்பட்டுள்ளன. இது **தமிழ்வேதம்** என்றும் **சைவவேதம்** என்றும் போற்றப்படுகிறது.
- "**திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும்** உருகார்"– பழமொழி.

- ''வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை'' **சைவ வேதம்** எனப்படுவது **திருவாசகம்**.
- **ஜி.யு. போப் விரும்பிக் கற்**று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த நூல் - **திருவாசகம்** (கி.பி. 1900)
- **ஜி.யு. போப் மாணிக்கவாசகரை தமிழ்ப் புலவர்களின் இளவரசன்** என்று குறிப்பிட்டுள்ளார்.

❖ **மேற்கோள்கள்:**

- ''**நமச்சிவாயம் வாழ்க நாதன் தாள் வாழ்க**''-சிவபுராணத் தொடக்கம்
- **''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி''**– திருவெம்பாவையின் தொடக்கம்
- ''தென்நாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''.

# 9-ம் திருமுறை (9 பேர்)

- 9-ம் திருமுறைக்கு **திருவிசைப்பா** என்ற பெயரும் உண்டு.

❖ **9-ம் திருமுறையை பாடியவர்கள் 9 பேர்கள்**

1. திருமாளிகைத் தேவர்
2. கருவூர்த் தேவர்
3. சேந்தனார்
4. பூந்துருத்தி நம்பி காடவ நம்பி
5. கண்டராதித்தர்
6. வேணாட்டடிகள்
7. திருவாலி அமுதனார்
8. புருஷோத்தம் நம்பி
9. சேதிராயர்

- சேந்தனார் இறைவனுக்குப் **பல்லாண்டு** பாடினார்.
- சேந்தனார் சைவ சித்தாந்தத்தின் **தந்தையாகக்** கருதப்படுகிறார்.
- பிரான் என்று சுந்தரரும் நம்பியாண்டார் நம்பியும் இவரைப் போற்றுகின்றனர்.
- இதில் **29 பதிகங்களும், 303 பாடல்களும்** உள்ளன.
- **ஒன்பதாம் திருமுறை** குறைந்த பாடல்களையே கொண்டுள்ளது.
- கருவூர்த் தேவரே மிகுதியாக **105 பாடல்களைப் பாடியுள்ளார்**.
- தில்லையில் உலக இயக்கத்தின் குறியீடாகத் திருநடம்புரிகிற பெருமானைத் திருமாளிகைத் தேவர் இவ்வாறு மனம் உருகிப் பாடுகிறார்.

''ஒளிவர் விளக்கே உவப்பிலா ஒன்றே
ஊணர்வுகழ் கடத்ததோர் உணர்வே
தேளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டலோன் விளம்புமா விவம்பே''

| அடியவர் பெயர் | அடியவர் வயது | பின்பற்றிய மார்க்கம் (நெறி) | இறைவனடி சேர்ந்த இடம் |
|---|---|---|---|
| திருஞானசம்பந்தர் | 16 | சத்புத்ர (பிள்ளை) மார்க்கம் - கிரியை | பெருமணநல்லூர் |
| திருநாவுக்கரசர் | 81 | தாச (அடிமை) மார்க்கம் - சரியை | திருப்புகலூர் |
| சுந்தரர் | 18 | சக (தோழர்) மார்க்கம் - யோகம் | கைலாயம் |
| மாணிக்கவாசகர் | 32 | சற்குரு (மாணவ) மார்க்கம் - ஞானம் | சிதம்பரம் |

## 10-ம் திருமுறை (திருமூலர்)

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

**திருமூலர்**

❖ **பொருள்:**

- நோய் முதலான காரணங்களால் உடம்பு அழியுமாயின் உயிரும் அழியும். அவ்வாறு அழிவதால், உறுதி தரும் மெய்யறிவை அடைய இயலாது. ஆகவே, உடம்பை வளர்க்கும் வழிமுறைகளை அறிந்து **உடம்பை வளர்த்தேன்**. அதனால், உயிரை அழிவிலிருந்து காத்தேன்.
- **திரு** என்னும் பெயரடை பெற்று, **அர்** என்னும் மரியாதைப் பண்பையும் பெற்று திருமூலர் ஆயிற்று.
- திருமந்திரம் **10-ம் திருமுறையாகத்** தொகுக்கப்பட்டுள்ளது. திருமந்திரத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர் **திருமந்திர மாலை**.
- இதற்கு **தமிழ் மூவாயிரம்** என்ற பெயரும் உண்டு. **முதல் சித்த நூல் திருமந்திரம்**.
- திருமூலர் ஒரு **சித்தர்**. மூலன் என்பவன் ஒரு **இடையன்**. காலம் 5-ம் நூற்றாண்டின் முற்பகுதி.
- காட்டில் மூலன் என்னும் இடையன் இறந்து கிடக்க, அவன் அருகில் பசுக்கள் நின்று கண்ணீர் வடித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். பசுவின் துயர் நீக்க வேண்டி மூலனின் உடலில் கூடு விட்டு கூடு பாய்ந்தார். **நிகழ்ந்த இடம் சாத்தனூர்.**
- 3000 ஆண்டுகள் வாழ்ந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களை **திருவாவடுதுறையில்** பாடினார்.
- திருவாவடுதுறையின் வேறுபெயர் - **நவகோடி சித்தபுரம்**
- திருமந்திரம் **ஒன்பது பிரிவுகளைக்** கொண்டது பிரிவுக்கு தந்திரம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- திருமந்திரம் **9 தந்திரங்களையும் 232 அதிகாரங்களையும்** கொண்டுள்ளது.
- தமிழில் சிறந்த இலக்கியங்களின் பட்டியலில் இந்நூலும் இடம் பெற்றுள்ளது.
- **1–4 தந்திரங்கள்** : சிவஞானத்தைப் பெறுவதற்கான சாதனங்களைக் கூறுகின்றன.
- **5-ஆம் தந்திரம்** : சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறுகிறது.
- **6–9 தந்திரங்கள்** : சிவஞானத்தால் பிறக்கும் நன்மைகளைக் கூறுகின்றன.

- சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு முன்பு சைவ சமய முதல் நூலாக விளங்கியது திருமந்திரம்.
- யோக நெறியைக் கூறும் **தமிழின் ஒரே நூல்.**
- சைவ சித்தாந்தம் என்ற தொடரை முதன் முதலில் திருமூலர் பயன்படுத்தினார்.

❖ **மேற்கோள்கள்:**

- "**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**","யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"
- "**அன்பும் சிவனும் இரண்டென்பார் அறிவிலார்**", "உடம்பான் அழியி உயிரார் அழிவர்" **தனிமனிதனையும் சமூகத்தையும்** மேம்படுத்தி அமைதியான வாழ்க்கையை தரவல்ல கருத்து மணிகள் பல திருமந்திரத்தில் உள்ளன.

## 11-ம் திருமுறை (12 பேர்)

- 11-ம் திருமுறைக்குப் **பிரபந்தமாலை** என்ற பெயரும் உண்டு. இதனைப் பாடியவர்கள் **12 பேர்**.
- இதில் மொத்தம் **40 நூல்கள்** உள்ளன.
- திரு ஆலவாய் உடையார் - 1 (திருமுகப்பாசுரம்)
- காரைக்கால் அம்மையாரின் - 4 (திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், இரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி)
- நக்கீரர் பாடியவை - 10 நூல்கள்
- கபிலர்
- பரணர்
- அதிரா அடிகள்
- இளம்பெருமானடிகள்
- ஐயடிகள் காடவர்கோன்
- சேரமான் பெருமாள் நாயனார்
- பட்டினத்தார்
- நம்பியாண்டார் நம்பி
- கல்லாட தேவ நாயனார்
- சேரமான் பெருமாள் நாயனார் வில்லியத்திலுள்ள மன்னன் சாலமோனைப் போன்று அஃறிணை உயிர்களின் மொழிகளையும் அறிய வல்லவர்.
- இவரது **பொன் வண்ணத்தந்தாதி திருவாசகம்** பாடல்களைப் போன்று உள்ளத்தை உருக்க வல்லவை.

**39 சிற்றிலக்கியங்களின் தொகுப்பான பதினொராம் திருமுறையைப் பாடிய பதினொரு அடியார்கள்**

1. காரைக்காலம்மையார்
2. காடவர்கோன்
3. சேரமான் பெருமாள் நாயனார்
4. நக்கீரத் தேவர்
5. கல்லாடத் தேவர்
6. கபிலத் தேவர்

7. பரண தேவர்
8. இளம்பெருமான்
9. அதிரா அடிகள்
10. பட்டினத்தார்
11. நம்பியாண்டார் நம்பி

“அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே – அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்”

# பக்தி இலக்கியங்கள்

- **<u>சமய மறுமலர்ச்சிக் காலம், பக்தி இலக்கியம், பக்தி இயக்கக் காலம்</u>** என அழைக்கப்படுவது **<u>பல்லவர் காலம்</u>**.
- பாண்டிய நாட்டு மன்னர்களும், பல்லவ மன்னர்களும் சைவ, வைணவத்தை ஆதரிக்கத் தொடங்கியமையால் வைணவமும், சைவமும் வேகமாக வளரத் தொடங்கின.

தமிழ்நாட்டில் பல்லவர்கள் ஆட்சிக்காலம் பக்தி இயக்க காலம் (கி.பி. 6 – கி.பி. 9)

சைவம் (சிவன்) <u>63</u> **<u>நாயன்மார்கள்</u>** → **<u>நாயன்மார்களின்</u>** சைவத் திருமுறைகள்

வைணவம் (பெருமாள்) **<u>12 ஆழ்வார்கள்</u>** → ஆழ்வார்களின் **<u>நாலாயிரத் திவ்ய பிரபந்தம்</u>**

❖ **<u>நாயன்மார்களின் சைவத்திருமுறைகள்</u>**

**<u>(தொகுத்தவர் - நம்பியாண்டார் நம்பி)</u>**

| **<u>திருமுறை</u>** | **பெயர்** | **<u>நூல்</u>** | |
|---|---|---|---|
| 1வது திருமுறை | திருஞான சம்பந்தர் (திருக்கடைக்காப்பு) | தேவாரம் | சமயக்குரவர்கள் |
| 2வது திருமுறை | | | |
| 3வது திருமுறை | | | |
| 4வது திருமுறை | திருநாவுக்கரசர் | | |
| 5வது திருமுறை | | | |
| 6வது திருமுறை | | | |

| | | | |
|---|---|---|---|
| 7வது திருமுறை | சுந்தரர் (திருப்பாட்டு) | | |
| 8வது திருமுறை | மாணிக்கவாசகர் | திருவாசகம் | |
| 9வது திருமுறை | 9 பேர் (திருவிசைப்பா) | | |
| 10வது திருமுறை | திருமூலர் | திருமந்திரம் | |
| 11வது திருமுறை | 12 பேர் (பிரபந்தத்திரட்டு) | | காரைக்கால் அம்மையார், பட்டினத்தார் |
| 12வது திருமுறை | சேக்கிழார் | பெரியபுராணம் | |

❖ **<u>பன்னிரு ஆழ்வார்கள்</u>**

| எண் | பெயர் | நூற்பெயர் | பாடல் |
|---|---|---|---|
| 1 | பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி | 100 |
| 2 | பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி | 100 |
| 3 | பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி | 100 |
| 4 | திருமழிசையாழ்வார் | நான்காம் திருவந்தாதி (100)<br>திருச்சந்த விருத்தம் (96) | 216 |
| 5 | நம்மாழ்வார் | திருவிருத்தம் (100)<br>திருவாசிரியம் (7)<br>பெரிய திருவந்தாதி (87)<br>திருவாய்மொழி (1102) | 1296 |
| 6 | மதுரகவியாழ்வார் | கண்ணிநுன்சிறுதாம்பு திருப்பதிகம் | 11 |
| 7 | பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு (137)<br>திருமொழி (460) | 473 |
| 8 | ஆண்டாள் | நாச்சியார் திருமொழி<br>திருப்பாவை | 173 |
| 9 | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி (1084)<br>திருக்குறுந்தாண்டகம் (20)<br>திருநெடுந்தாண்டகம் (30)<br>பெரிய திருமடல் (1)<br>சிறிய திருமடல் (1)<br>திருவெழுக்கூற்றிக்கை (1) | 1361 |
| 10 | தொண்டரடிப் பொடியாழ்வார் | திருப்பள்ளியெழுச்சி<br>திருமாலை | 55 |
| 11 | திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் திருப்பதிகம் | 10 |
| 12 | குலசேகர ஆழ்வார் | பெருமாள் திருமொழி | 105 |

❖ **<u>ஆழ்வார்கள்</u>**

| ஆழ்வார்கள் | ஊர் | அம்சம் (பிறப்பு) | இயற்பெயர் / | பாடியது |
|---|---|---|---|---|

| | | | சிறப்பு | |
|---|---|---|---|---|
| பொய்கையாழ்வார் | காஞ்சிபுரம் | சங்கு | - | முதல் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | மகாபலிபுரம் | கதாயுதம் | பெருந்தமிழன் (தன்னை) | இரண்டாம் திருவந்தாதி |
| பேயாழ்வார் | மைலாப்பூர் | வாள் | - | மூன்றாம் திருவந்தாதி |
| திருமழிசை ஆழ்வார் | திருமழிசை | சக்கரம் | பக்தி சாகரர் | நான்காம்திருவந்தாதி திருச்சந்தவிருத்தம் |
| பெரியாழ்வார் | ஸ்ரீவில்லிபுத்தூர் | கருடாழ்வார் | விஷ்ணுசித்தர், பட்டர்பிரான் | திருப்பல்லாண்டு, திருமொழி |
| ஆண்டாள் | ஸ்ரீவில்லிபுத்தூர் | பூமகள் | நாச்சியார் | திருப்பாவை, நாச்சியார் திருமொழி |
| குலசேகராழ்வார் | திருவஞ்சிக்களம் | கௌத்துவமணி | கொல்லிகாவலன் கூடல் நாயகன், கோழிக்கோன் | பெருமாள் திருமொழி |
| தொண்டரடிப் பொடியாழ்வார் தொண்டையில் சிக்கிய மண்டை | திருமண்டகுடி | வனமாலை | விப்ர நாராயணன் | திருமாலை, திருப்பள்ளி எழுச்சி |
| திருமங்கையாழ்வார் மங்கை – பெண் - கல்யாணம் பண்ணினால் குறை நீங்கும் | திருக்குறையலூர் | வில்லின் | கலியன், மங்கயர்கோன், பரகாலன் | பெரிய திருமொழி, நெடுந்தாண்டவம் குறுக்காண்டவம், திருக்கெழுகூர் சிறிய / பெரிய திருமடல் |
| நம்மாழ்வார் கடவுள் | ஆழ்வார் திருநகர் குருகூர் | இறைவன் | சடகோபர் மாறன் பராங்குசன், வேதம் தமிழ் செய்த மாறன் | திருவிருத்தம் - ரிக், திருவாசிரியம் - யஜுர், திருவாய்மொழி– சாமம்,பெரிய திருவந்தாதி– அதர்வணம் |
| மதுரகவி ஆழ்வார் இவருக்கு கடவுள் நம்மாழ்வார் | திருக்கோவிலூர் | கருடாழ்வார் | நம்மாழ்வாரின் சீடர் | கண்ணி நுண் சிறுதாம்பு |
| திருப்பாணாழ்வார் | உறையூர் | ஸ்ரீ வத்ஸம் (திருமரு) | - | அமலனாதி பிரான் |

# ஆழ்வார்கள்

- வைணவத்தைப் போற்றி வளர்த்தவர்கள் **ஆழ்வார்கள்**.
- ஆழ்வார்கள் என்னும் சொல்லின் பொருள் : திருமாலுடைய மங்கல குணங்களில் **ஆழங்காற்பட்டவர்** என்று பொருள்.
- சைவ சமயத்தோர்க்கு தோத்திர நூல் திருமுறைத் தொகுப்பு என்பது போல் வைணவ சமயத்தார்க்கு தோத்திர தொகுப்பு நூல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்.
- ஆழ்வார்கள் பாடல்கள் **3776.** தொகுத்தவர் **நாதமுனி**.

- நாலாயிர திவ்விய பிரபந்தத்தை பாடிய ஆழ்வார்கள் 12 பேர்.
    - பொய்கையாழ்வார்
    - பேயாழ்வார்
    - பெரியாழ்வார்
    - தொண்டரடிப் பொடியாழ்வார்
    - திருப்பாணாழ்வார்
    - நம்மாழ்வார்
    - பூதத்தாழ்வார்
    - திருமழிசையாழ்வார்
    - ஸ்ரீஆண்டாள்
    - திருமங்கையாழ்வார்
    - குலசேகராழ்வார்
    - மதுரகவியாழ்வார்

## பொய்கையாழ்வார்

- பிறந்த ஊர் : **காஞ்சிபுரம். சங்கின் அம்சமாக** பிறந்தவர்.
- முதல் திருவந்தாதியில் **100 வெண்பாக்கள்** பாடியவர். **தாமரையில்** அவதரித்தார்.
- திருமாலின் **10 அவதாரங்களைப்** பாடியவர்.
- காலம் : கி.பி. **6-ம் நூற்றாண்டு**.
- **களவழி நாற்பது** பாடிய பொய்கையாரும் இவரும் ஒருவரே என்று மு. இராகவையங்கார் கூறுவர். இ∴து ஏற்புடையது அன்று.
- இவர் திருவரங்கம், திருவண்ணகரம், திருவேங்கடம், திருவெ∴கா, திருக்காவலூர் ஆகிய இடங்களில் உறையும் திருமாலின் பெருமையும் பாடியுள்ளார்.
- அந்தாதித் தொடைக்கு முன்னோடியாக இவரது பாடல்கள் அமைகின்றன.
- ஒருவர் கிடக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்று கூறியவர்.

  ‘‘வையம் தகளியா வார்கடலே நெய்காக
  வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
  சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
  இடராழி நீங்குகவே என்று’’
  என்று தம் பாடலைச் சொன்மாலை என்று கூறியவர் பொய்கையாழ்வார்.

## பூதத்தாழ்வார்

- பிறந்த ஊர் : **மகாபலிபுரம். கதாயுதத்தின்** அம்சமாக பிறந்தார்.
- பாடியது இரண்டாம் திருவந்தாதி **100 வெண்பாக்கள்.**
- **குருக்கத்தி மலரில்** அவதரித்தார்.
- சிறப்புப் பெயர் **பெருந்தமிழன்**.
- பொய்கையார் பிறந்த மறுநாள் இவர் பிறந்ததாகக் கூறுவர்.
- இவர் திருமாலைக் கடல் வண்ணன் பூதம், மறுத்திரு மார்பன் அவன் பூதம் எனப் பல இடங்களில் பாடியுள்ளமையால் பூதத்தாழ்வார் எனப் பெயர் பெற்றார்.

- இவர் **<u>திருவேங்கடம், திருவரங்கம், திருப்பாகம், திருவத்தியூர் திருக்குடமுக்கு</u>** ஆகியன இவர் பாடிய தலங்களாகும்.
- இவர் இயற்கை அழகைப் பக்தியோடு இணைத்துப் பாடுகின்றார்.
- திருக்காவலூரில் மூன்று ஆழ்வார்களும் சந்தித்த போது, "வையகம் தகளியா என்னும் பாடலைப் பொய்கையாழ்வார் பாட" அச்சூழலில் பூதத்தாழ்வார்.

  "அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக
  இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புருதி
  ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்"– என்ற பாடலைப் பாடியருளினார்.

- இப்பாடல் இசைநலமும் இறை உணர்வும் மிகுந்ததாக அமைந்துள்ளது. இவருக்குப் **<u>பேயாழ்வார் தத்துவ உபதேசம்</u>** செய்தார்.

## பேயாழ்வார்

- பிறந்த ஊர் : **<u>மயிலாப்பூர். வாளின் அம்சமாக</u>** பிறந்தார்.
- மூன்றாம் திருவந்தாதியில் **<u>100 வெண்பாக்கள்</u>** பாடியவர். **<u>செவ்வல்லியில்</u>** அவதரித்தார்.
- திருமாலின் மீது கொண்ட பக்தியால் அடிக்கடி அழுது, சிரித்து, ஆடிப்பாடி பேய்பிடித்தவர் போன்ற உலக இயற்கை வாழ்விலிருந்து மாறுபட்டு விளங்கியதால் இவர் பேயாழ்வார் எனப் பெயர் பெற்றார்.
- காலம் கி.பி. **<u>6-ம் நூற்றாண்டு. திருக்கோவிலூரில்</u>** இம்மூன்று ஆழ்வார்களும் சந்தித்துத் திருமால் பெருமையைப் பாடியதாகக் கூறுவர்.
- ஆழ்வார்களில் சைவம், வைணவம் என்று பாகுபாடின்றி திருமாலோடு சிவனையும் இணைந்துப் பாடிய பெருமை இவ்வாழ்வாரையே சாரும்.

> திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
> அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
> பொன்னாழி கண்டேன் பரிசிங்கம் கைக் கண்டேன்
> என்னாழி வண்ணன்பால் இன்று.

## திருமழிசையாழ்வார்

- பிறந்த ஊர் **<u>திருமழிசை. சக்கரத்தின்</u>** அம்சமாக பிறந்தவர்.
- நான்காம் திருவந்தாதி, நான்முக திருவந்தாதி, திருசந்த விருத்தம் பாடியுள்ளார்.
- வேறுபெயர்கள் **<u>சக்கரத்தாழ்வார், பக்தி சாகரர்</u>**.
- சைவ சமயத்தில் இருந்த போது இவர் பெயர் **<u>சிவவாக்கியார்</u>**.
- இவருடைய தோழன் - **<u>கணிகண்ணன்</u>**.
- இவர் திரவாளன் என்னும் வேளாளரால் வளர்க்கப்பட்டவர் என்று கூறுவர்.
- இவருக்குப் **<u>பத்திசாரர்</u>** என்ற வேறொரு பெயரும் உண்டு.
- காலம் 8-ம் நூற்றாண்டு என கருத்து உடையவர் **<u>மா. இராச மாணிக்கனார்</u>**.
- முதல் 3 ஆழ்வார்களும் பிற சமயத்தை கடித்துரைக்கவில்லை. இத்திருமழிசையாழ்வாரே பிற சமயத்தை சாடுகின்றார் என்பது நோக்கத்தக்கது.
- இவரை **<u>சிவவாக்கிய சித்தர்</u>** என்று கூறுவர். இவர் **<u>வீர வைணவர்</u>** ஆவார்.
- ‘‘அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர் - சிறியார் சிவபட்டர்’’ எனச் சமண, புத்த, சைவ சமயத்தை இழிவாகப் பேசுகின்றார்.

> ‘‘கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
> மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம் - துணிவுடைய
> செந்நாப் புலவன்யான் செல்கின்றேன்; நீயுமுன்றன்
> பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்’’.

# பெரியாழ்வார்

- பிறந்த ஊர் **ஸ்ரீவில்லிபுத்தூர். கருடாழ்வார்** அம்சமாக பிறந்தார். **வேதியர் குலத்தைச்** சார்ந்தவர்.
- **திருப்பல்லாண்டு, திருமொழி பாடல்கள்** பாடியுள்ளார். வேறுபெயர்கள் பட்டர்பிரான், கிழியறுத்த ஆழ்வார்.
- சிறப்புகள் இறைவனுக்கு வாழ்த்து, **கண்ணனுக்கு தாலாட்டுப்** பாட்டுப் பாடியுள்ளார்.
- **திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி**.
- ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள இறைவனுக்கு சாத்து திருத்துழாய் (துளசி) வளரும் **நந்தவனத்தில் தோன்றியவர் ஸ்ரீ ஆண்டாள்.**
- ஆண்டாளைக் கண்டெடுத்து தனது வளர்ப்பு மகளாய் வளர்த்தவர் **பெரியாழ்வார்**.
- இவர் காலம் கி.பி. **9-ம் நூற்றாண்டு**.
- இவரது இயற்பெயர் **விஷ்ணுசித்தர்**.
- **பட்டர்பிரான்** என்றும் இவரை அழைப்பர். **பிள்ளைத் தமிழ் வளர்ச்சிக்கு** முன்னோடியாக விளங்கியவர் பெரியாழ்வார். இவர் கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு காப்பு, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, தளர்நடை, புலம்பல்கள் முதலிய குழந்தைப் பருவ நலன்களைப் பாடியமையால் வேறு பெயர் **வேள்கோன்**.
- இவர் காலம் கி.பி. 9-ம் நூற்றாண்டு. இவர் **ஸ்ரீ வல்லபன்** என்ற பாண்டிய மன்னன் கி.பி. 835 – 862 காலத்தவர்.

> ''தனிக்கடலே! தனிச்சுடரே! தனியாக என்றென்று
> உனக்கிடமாயிருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே''.

# தொண்டரடிப்பொடியாழ்வார்

- பிறந்த ஊர் - **திருமண்டக்குடி. இயற்பெயர் விப்ரநாராயணன். வனமாலை** அம்சமாக பிறந்தார்.
- இவர் சோழிய அந்தன மரபினர். காலம் **கி.பி. 9-ம் நூற்றாண்டு**.
- இவர் **திருமங்கையாழ்வார்** காலத்தவர்.
- பாடல்கள் **திருப்பள்ளியெழுச்சி, திருமாலை**.
- இவர் தேவ தேவி என்ற பரத்தையின் மையலுக்கு ஆளாகி, பின்னர் திருமாலால் அடிமை கொள்ளப்பட்டவர்.
- திருமாலை - **10 பாடல்கள்**
- திருபள்ளிஎழுச்சி - **45 பாடல்கள்**
- ''தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாதத்துளி படுதல் கங்கை நீராடுதலிலும் சிறப்புடைத்து எனப் பாடியவர்''– **குலசேகரா ஆழ்வார்**.
- திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அரங்கலுக்குத் தொண்டரடிப் பொடியாழ்வார் நந்தவனம் அமைத்து மாலைக் கட்டி சேவை செய்தார்.
- அரங்கனை காலையில் பள்ளியினின்று எழுந்தருளுமாறு வேண்டும் முறையில் அமைந்த இவரின் நூல் குலசேகர ஆழ்வார் இவரை ஆடிப்பாடி அரங்காவோ என்றழைக்கும் **தொண்டரடிப்பொடி** எனக் குறிப்பிடுகிறார்.

# ஆண்டாள்

- பிறந்த ஊர் - **ஸ்ரீவில்லிபுத்தூர்.**
- இயற்பெயர் **கோதை. பூமகள்** அம்சமாக தோன்றியவள்.
- பன்னிரு ஆழ்வார்களில் **ஓரே பெண்**. பாடல்கள் **திருப்பாவை**. **நாச்சியார் திருமொழி** (நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தின் மூன்றாவது தொகுப்பு).
- வேறுபெயர்கள் **சூடிக்கொடுத்த சுடர்கொடி** நாச்சியார்.
- சிறப்புகள் **பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்**.
- ஆண்டாளுக்கும், இறைவனுக்கும் திருமணம் நடைபெற்ற இடம் **ஸ்ரீரங்கம்**.
- பன்னிரு ஆழ்வார்களில் பெண்பாலர் இவர் ஒருவரேயாவர்.
- ஆண்டாள் பாடிய நூல்கள்.

**திருப்பாவை (30 பாடல்கள்) நாச்சியார் திருமொழி (143 பாடல்கள்)**

- மார்கழி மாதத்தில் திருமாலை அடையும் வகையைப் பெண்களுக்கு நீராடும் பழியாக எடுத்துரைக்கும் நூல் **திருப்பாவை**.
- ஸ்ரீஆண்டாள் அணிந்த மலர் மாலையைத் திருமால் மனமுவந்து ஏற்றதால் இவரை சூடிக் கொடுத்த சுடர்கொடி என்று அழைப்பர்.
- ‘‘மானிடர்க்கென்று வாழ்க்கைப்பட்டால் உயிர்வாழ மாட்டேன்’’ என்று வாழ்ந்தவர் ஸ்ரீ ஆண்டாள்.
- சங்க தமிழ் மாலை என்று போற்றப்படும் ஆண்டாளின் பிரபந்தம் **திருப்பாவை (30 பாசுரங்கள்).**
- ஸ்ரீஆண்டாளின் திருப்பாவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் **திருப்பாவை ஜீயர் என அழைக்கப்படுபவர் இராமானுஜர்**.
- திருப்பாவையை வேதம் அனைத்திற்கும் வித்து என்று சொன்னவர் இராமானுஜர்
- பூஞ்சோலையிலுள்ள மலர்களிலெல்லாம் திருமாலைக் கண்ட ஆண்டாள் எப்பெயரிட்டு செல்லமாக அழைத்தாள் முல்லைப் பிராட்டி.

**பாவை நூல்களில் காலத்தால் முற்பட்டது – திருப்பாவை**

**கோவை நூல்களில் காலத்தால் முற்பட்டது -திருக்கோவை (மாணிக்கவாசகர்**)

‘‘வாரணம் ஆயிர சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின் நான் என்று’’
‘‘மானிடவர்க்கு என்று பேச்சும் படின்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே’’
‘‘மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால்’’

# குலசேகரஆழ்வார்

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகினுமுன் பற்றற்றால் பற்றிலலேன்
நானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்

கோனாக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே

❖ **பொருள் :**

➢ மீன்கள் நீந்துகின்ற வயல்கள் சூழ்ந்த வித்துவக்கோட்டில் உள்ள பெருமானே! நீ எனக்குத் திருவருள் புரியவில்லை என்றாலும், உன்னையே அடைக்கலமாய்ப் புகுவேனேயன்றி, எனக்கு வேறு ஒரு பற்றில்லை. மன்னவன் ஒருவன் செங்கோல் முறை தவறித் துன்புறுத்தினாலும், அவனுடைய ஆட்சியையே எதிர்நோக்கி வாழ்கின்ற குடிமக்களைப் போல, நான் உன் திருவடிகளையே எண்ணிக் கொண்டிருக்கிறேன்!

- பிறந்த ஊர் : **திருவஞ்சைக்களம்**. **கௌத்துவமணி** அம்சமாகப் பிறந்தார்.
- பாடல்கள்: **பெருமாள் திருமொழி, முகுந்த மாலை**.
- வேறுபெயர்கள் : **கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன்**.
- இவர் **சேர மரபில் வந்தவர். இராமனுக்கு தாலாட்டுப் பாடியவர்**.
- இவர் **திருடவரதன் என்னும் மன்னனின் மகன்**.
- சேர மன்னனாக இருந்து அரசைத் துறந்து ஆழ்வாராக மாறியவர் **குலசேகர ஆழ்வார்**.
- குலசேகர ஆழ்வார்கள் வடமொழியில் எழுதியதாகக் கூறப்படும் நூல் **முகுந்தமாலை.**
- பெருமாள் திருமொழி – **105 பாடல்கள்**.
- **திருவரங்கத்தின் மூன்றாம் மதிலை கட்டியதாக** கூறுவர்.
- கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து இன்பமுறும் செல்லமும் இவ்வரசும் யான் வேண்டேன்'' என்று அரசைத் துறந்தவர், குலசேகர ஆழ்வார். காலம் 10ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது.
- இவர் பாடிய தசரதன் புலம்பல் இலக்கியம் நயமிக்கது.
- திருவரங்கம், திருகண்ணபுரம், தில்லை ஆகிய தலங்களுக்கு **மங்களாசாசனம்** செய்துள்ளார்.

## திருமங்கையாழ்வார்

- பிறந்த ஊர் **திருக்குறையலூர்**. **வில்லின்** அம்சமாக பிறந்தார்.
- பாடல்கள் திருவாய்மொழியில் **6 அங்கங்கள். பெரிய திருமொழி**, **சிறிய திருமடல்**.
- **திருக்குறுந்தாண்டகம், திருஏழுகூற்றிருக்கை, திருநெடுந்தாண்டகம், பெரிய திருமடல்**.
- வேறு பெயர்கள் : கலிநாடன், அருள்மாறி, மங்கையர் கோன், மங்கை வேந்தன்.
- **நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில்** அதிக பாடல்களை பாடியவர்.
- கள்ளர் மரபைச் சார்ந்தவர். இவரின் தந்தை **நீலி, மனைவி குமுதவல்லியார்**.
- காலம் **9-ம் நூற்றாண்டு**.
- திருவரங்கத்தின் மூன்றாம் மதில் திருப்பணியைக் கட்டி முடித்தவர் எனக் கூறுவர்.

## நம்மாழ்வார்

- பிறந்த ஊர் ஆழ்வார் **திருநகரி (அ) திருக்குருகூர்**. இறைவனின் அம்சமாக பிறந்தார். இயற்பெயர் **மாறன்**.
- காலம் **9-ம் நூற்றாண்டு**.
- இவர் **16-வது வய**து வரை பேசும் திறனறிந்தார்.
- பாடல்கள் **திருவிருத்தம், ரிக் வேதம், திருவாசிரியம், யசூர் வேதம், திருவாய்மொழி, சாம வேதம், பெரிய திருவந்தாதி, அதர்வண வேதம்**.
- திருவாய்மொழிக்கு உரை எழுதியவர் - **பெரியவாச்சான் பிள்ளை**.
- வைணவர்கள் நாளும் ஓதும் பெருமை பெற்றது **திருவாய்மொழி (2971).**
- வேறுபெயர்கள் **சடகோபன், பராங்குசர், மாறன், திராவிட சிசு**.
- **பன்னிரு ஆழ்வார்களுள் தலைவராகக்** கருதப்படுபவர்.
- இவர் **திருமாலை என் திருவாழ்மார்பன்** என உரிமையுடன் போற்றுகின்றார்.
- **திரு.வி.க., நம்மாழ்வார்** பிறந்த தமிழ்நாட்டை மணத்தால் நினைத்து வாயால் வாழ்த்தி, கையால் தொழுகிறேன் என்றார்.
- நம்மாழ்வார் பாடியவை **திருவாய்மொழி**, ஏனையோர் பாடியவை திருமொழி என அழைக்கப்படுதலே இவர் பெருமையை விளக்கும் தன்மை.
- உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்கிறார்.

  ‘‘பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
  காவி மலரென்றும் காண்டெறும் - பாவியேன்
  மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
  எல்லாம் பிரான் உருவே’’.

## மதுரகவியாழ்வார்

- **பிறந்த ஊர் திருக்கோவிளுர்**. கருடாழ்வார் அம்சமாக பிறந்தார்.
- பாடல் கண்ணிநுண் சிறுதாம்பு (11 பாடல்கள்). **நம்மாழ்வாரின் சீடர்**.
- இவர் திருமாலைப் பாடாது திருமாலின் தொண்டர் நம்மாழ்வாரை மட்டும் பாடிய ஒரே ஆழ்வார் ஆவார்.

  ‘‘....தென்குருகூர் நம்பியென்றக்கால்
  அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே’’

## திருப்பாணாழ்வார்

- பிறந்த ஊர் **உறையூர்**.
- **ஸ்ரீவத்ஸம்** அவதாரமாகப் பிறந்தார்.
- பாடல் அமலனாதி பிரான் (10 பாடல்கள்). பாண் குடியினர்.

  ‘‘அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
  கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே’’
  ‘‘ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்
  ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்’’

# காரைக்கால் அம்மையார்

- இயற்பெயர் - **<u>புனிதவதியார்</u>**
- பிறந்த ஊர் - **<u>காரைக்கால், பேய்வடிவம்</u>** விரும்பியவர்
- கணவர் - **<u>நாகை வணிகன் பரமதத்தன்</u>**
- திருவாலங்காட்டில் **<u>தலையால் தவழ்ந்து</u>** சென்று இறைவனை வழிபட்டவர்.

❖ **<u>சிறப்புகள்:</u>**

- இவருடைய பாடல்கள் மட்டுமே மூத்த **<u>திருப்பதிகம்</u>** என்று சிறப்பிக்கப்படுகிறது.
- சைவ சமயத்துப் பக்தி நூல்களுள் மிகவும் பழமை வாய்ந்தவை.
- இவர் தம் நூல்கள் **சைவ சமய எழுச்சிக்கு வித்திட்ட முன்னோடி**.
- **<u>அந்தாதி, மாலை</u>** என்ற சிற்றிலக்கிய வகையைத் தொடங்கி வைத்தவர்.
- இறைவனால் **<u>அம்மையே</u>** என்று அழைக்கப்பட்டவர்.
- கோயிலில் நாயன்மார்கள் எல்லாம் நின்ற கோலத்தில் இருக்க இவர் மட்டும் அமர்ந்த கோலத்தில் இருக்கும் ஏற்றம் கொண்டவர்.
- இவர் **<u>தலையால்</u>** நடந்த **<u>திருவாலங்காட்டில்</u>** தம் கால் பதிக்க அஞ்சி **<u>ஞான சம்பந்தர்</u>** ஊர்ப்புறத்தே தங்கினார்.
- நூல் - அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணி மாலை

# <u>சேரமான் பெருமாள் நாயனார்</u>

- இவருடைய இயற்பெயர் செங்கோர்பொறையன்.
- சுந்தரமூர்த்தி நாயனாரின் நண்பர்.

# அகத்தியம்

- ஆசிரியர் - **<u>அகத்தியர்</u>**.
- நூல் - **<u>அகத்தியம்</u>**.
- **<u>மூன்று சங்கங்களிலும்</u>** இடம் பெற்ற நூல்.
- இது **<u>முத்தமிழ் இலக்கண நூல்</u>**.
- **<u>ஐந்திலக்கண நூல்</u>** என அழைக்கப்படுகிறது.
- அகத்திய மாணவர்கள் **<u>12 பேரும்</u>** சேர்ந்து எழுதிய நூல் பன்னிரு படலம்.
- அகத்தியம் **<u>12000 நூற்பாக்களைக்</u>** கொண்டது.
- தற்போது **<u>103 நூற்பாக்கள்</u>** மட்டுமே கிடைத்துள்ளன.
- வேறுபெயர்கள் : **<u>குடமுனி, குறுமுனி, தவமுனி, முதல் சித்தர், பொதிகை முனி</u>**.
- மதுரை தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர் - **<u>அகத்தியர்</u>**
- பாண்டி நாட்டு **<u>பொதிகை மலையில்</u>** வாழ்ந்தவர்.
- அகத்தியம் **<u>12 பகுதிகளை</u>** உடையது. அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், ஜோதிடவியல், கந்தர்வம், கூத்து.
- இலக்கியத்திலிருந்து இலக்கணம் எடுக்கப்படுகிறது என்பதை
  ‘‘எள்ளின் நின்று எண்ணெய் எடுப்பது போல்
  இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்’’ எனக் கூறுவது அகத்தியம்.
- ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க்குணர்த்திய மாதொருபாகற்’’ எனச் சேனாவரையர் தொல்காப்பிய உரையின் கடவுள் வாழ்த்தில் குறிப்பிடுகின்றார். சிவபெருமான் தமிழை அகத்தியர்க்குக் கற்பித்த உண்மை இதனால் புலனாகிறது.

❖ **<u>அகத்திய முனிவரின் பன்னிரு சீடர்கள் :</u>**

1. தொல்காப்பியர்
2. அதங்கோட்டாசான்
3. துராலிங்கன்
4. செம்பூட்சேய்
5. வையாபிகள்
6. வாய்ப்பியன்
7. பனம்பாரன்
8. கழாரம்பன்
9. அவிநயன்
10. காக்கைப்பாடினி
11. நற்றத்தன்
12. வாமனன

- அகத்தியம் **<u>12000 இலக்கண</u>** நூற்பாக்கள் கொண்டதெனிலும் பெரும்பகுதி கிடைக்கவில்லை. **<u>103 மந்திரங்களைத்</u>** திரட்டில் பவானந்தம் பிள்ளை பேரகத்தியத் திரட்டு என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.
- அகத்தியரை, பரிபாடல் பொதியில் **<u>முனிவன்</u>** என்றும் சிலம்பு மாதவ முனிவன் என்றும், மணிமேகலை **<u>அமர முனிவன்</u>** என்றும் குறிப்பிடுகின்றன.

## தொல்காப்பியம்

❖ **<u>தொல்காப்பியர்</u>**

- ஆசிரியர் - **<u>தொல்காப்பியர்</u>**
- காலம் - **<u>இடைச்சங்க காலம்</u>**
- அகத்தியரின் பன்னிரு மாணவர்களில் ஒருவர்
- இயற்பெயர் - **<u>திரண தூமாக்கினியார்</u>** (ஆக இருக்கலாம்)
- **<u>மொழியியல் துறைக்கு அடித்தளமிட்ட ஓர் உலக அறிஞர் - தொல்காப்பியர்</u>**
- காப்பியக்குடியில் தோன்றியதால் தொல்காப்பியர் எனப்பட்டார் **<u>இளம்பூரணர்</u>**.
- ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் - பாயிரத்தில் பனம்பாரனார்
- தொல்காப்பியர் காலம் கி.மு. 4-ம் நூற்றாண்டு என்கிறார் கே.என். சிவராச பிள்ளை.

❖ **<u>தொல்காப்பியம்</u>**

- தொல்காப்பியம் - தொல் + காப்பு + இயம்.
- "பழமையை காத்து இயம்பும் நூல்" என்று பொருள்.
- தமிழ் நூல்களில் மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம்.
- முதலில் கிடைத்த இலக்கண நூல் தொல்காப்பியம்.
- **<u>3 இலக்கணங்களை கூறும் நூல்</u>**.
- **<u>இடை, கடைச் சங்கத்தில்</u>** இடம் பெற்ற நூல்.
- எழுத்து, சொல், பொருள் - மூன்று அதிகாரங்கள்.
- அதிகாரத்துக்கு **<u>9 இயல்களாக</u>**, **<u>37 இயல்களையும்</u>**, **<u>1611 நூற்பாக்களையும்</u>** உடையது.
- எழுத்ததிகாரம் **<u>483 நூற்பா</u>** சொல்லதிகாரம் **<u>463 நூற்பா</u>** பொருளதிகாரம் **<u>664 நூற்பா</u>**.
- தொல்காப்பியத்தை மூதறிஞர் **<u>வ.சு.ப. மாணிக்கனார்</u>** தமிழின் உயிர் நூல் என்றும் முனைவர் ச.வெ.சு. **மனித பண்பாட்டின் விதை** என்றும் குறிப்பிடுவர்.

❖ <u>**தொல்காப்பியத்திற்கு உரைகண்ட பழைய உரையாசிரியர்கள்:**</u>

- <u>**இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர்**</u> (சொல் அதிகாரம்), நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார்.
- தொல்காப்பியத்திற்கு பாயிரம் (முன்னுரை) தந்தவர் - <u>**பனம்பாரனார்**</u>.
- பனம்பாரனாரின் தொல்காப்பியப் பாயிரத்தில் - "<u>**வடவேங்கடம்**</u> தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம்".
- இன்றைய மொழியியல் பிரிவுகளில் ஒன்றான ஒலியில் துறையின் கருத்துக்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் **பிறப்பியலில்** சொல்லியிருப்பதைக் கண்டு வியக்கின்றனர் மேல்நாட்டு வல்லுநர்கள்.
- சாகித்ய அகாடமியின் இந்திய இலக்கிய சிற்பிகள் வரிசை நூல்களில் தொல்காப்பியர் என்ற நூலைத் தமிழண்ணல் எழுதியுள்ளார்.
- தொல்காப்பியப்பூங்கா – கலைஞன் (தொல்காப்பிய நூற்பாக்களின் பொருளை விளக்கும் நூல்)

❖ <u>**தொல்காப்பியர் தரும் சிறப்பு செய்திகள்:**</u>

- தொல்காப்பியம் பத்து வகை நூல் <u>**குற்றங்களைக்**</u> குறிப்பிடுகிறது.
- தொல்காப்பியம் கூறும் எட்டு வகை மெய்ப்பாடுகள் : <u>**நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை**</u>.
- <u>**ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிர்களை**</u> பிரித்துக் காட்டுகிறார்.

❖ <u>**நானில தெய்வங்கள்:**</u>

- நான்கு நிலத்துக்கு உரிய தெய்வங்களையும், பிற்காலத்தில் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகிய தெய்வங்கள் முறையே திருமால், முருகன், இந்திரன், வருணன் என அடையாளப் படுத்தப்பட்டன.

❖ <u>**தொல்காப்பியத்தின் நூற்பா :**</u>

- "எழுத்து எனப்படுவது அகரம் முதல் னகரம் இறுவாய் முப்ப∴து என்ப" என்பதே தொல்காப்பியத்தின் முதல் நூற்பா.
- "**எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே**" என்ற நூற்பா எல்லாத் தமிழ்ச் சொல்லுக்கும் பொருளுண்டு என விளக்குகிறது.
- காதலர்களின் அகவாழ்க்கையை பற்றி பாடும் பொழுது அவர்களின் பெயரை சொல்லக் கூடாது என்ற நாகரிகத்தை இயம்புவது 'மக்கள் நூதலிய அகனந்திணையும் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப் பெறார்' என்ற நூற்பா.

# சங்க காலப் புலவர்கள்

## நக்கீரர்

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி உண்பது நாழி உடுப்பவை இரண்டே
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும் பிறவும் எல்லாம் ஓர்ஓம் கும்மே
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான் செல்வத்துப் பயனே ஈதல்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும் துய்ப்போம் எனினே தப்புன பலவே
**மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**

❖ **பொருள்:**

- இவ்வுலகம் தெளிந்த கடல் நீரால் சூழப்பட்டது. இவ்வுலகம் முழுவதனையும் பொதுவின்றித் தனதாக்கி ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்பவன் மன்னன்.
- அவனுக்கும், நள்ளிரவிலும் பகலிலும் உறங்காது.
- விரைந்தோடும் விலங்குகளை வேட்டையாடி வீழ்த்த எண்ணுகின்ற கல்வியறிவற்ற ஒருவனுக்கும், உண்ணத் தேவைப்படும் பொருள் நாழியளவே, உடுத்தும் உடை மேலாடையும், இடுப்பாடையும் ஆகிய இரண்டே.
- மற்றவை எல்லாமும் இவ்வாறாகவே அமையும். ஆகவே. ஒருவன் தனது செல்வத்தினால் பெறும் பயன். அதனை மற்றவர்க்கும் கொடுத்தலாகும். அவ்வாறன்றித் தாமே நுகர்வோம் என எண்ணினால், பலவற்றை அவன் இழக்க நேரிடும்.
- **மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**. இவர் இறையனார் எழுதிய **களவியலுக்கு உரை கண்டவர்**.
- **கடைச்சங்க தலைமைப் புலவராக** விளங்கினார். சிறப்புப் பெயர் **இலக்கியச் சிங்கம்.**
- இயற்றிய நூல்கள் : **திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை**.
- **நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே** என்ற வாசகத்தின் மூலம் புகழ்பெற்றவர்

## மோசிகீரனார்

நெல்லும் உயிரன்றே; நீரும்உயி ரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.
- புறநானூறு

❖ **பொருள்:**

- இவ்வுலகத்தார்க்கு நெல்லும் நீரும் உயிராகாது. முறை செய்து காத்தலினால் மன்னவனே உயிராவான். வேற்படை உடைய வேந்தனின் கடமை நாட்டைப் பேணிக் காப்பதே ஆகும்.
- மோசிகீரனார் தென்பாண்டி நாட்டிலுள்ள **மோசி என்னும் ஊரில் பிறந்தவர்**. கீரன் என்பது குடிப்பெயராக குறிப்பிடப்படுகிறது.
- உடல் சோர்வின் காரணமாக அரசருக்குரிய **முரசு கட்டிலில் மோசிகீரனார் படுத்துறங்கிய போது சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை** என்ற அரசனால் கவரி வீசப்பட்டார்.

## கண்ணகனார்

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே

❖ **பொருள்:**

- பொன்னும் பவளமும் முத்தும் நிலைத்த பெருமலையில் பிறக்கும் மாணிக்கமும், தோன்றும் இடங்களால் ஒன்றுக்கொன்று தொலைவில் இருப்பினும், மாலையாகக் கோர்த்து மதிப்பு மிக்க அணிகலனாக அமைக்கும் போது, தம்முள் ஒழுங்கு சேரும்.
- அதுபோல, சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர்.
- சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர்.
- **கண்ணகனார் கோப்பெருஞ்சோழனின்** அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.
- **கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாருடன் வடக்கிருந்த போது** உடன் இருந்தவர் கண்ணகனார்.

## பரணர்

அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
காடஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே

- புறநானூற்றின் சில பகுதிகளை **பரணர்** என்பவர் எழுதியுள்ளார்.
- **கபில பரணர்** என்ற தொடரிலிருந்து கபிலர் பரணரின் நண்பர் என அறியலாம்.
- இவர் **வரலாற்றுக் குறிப்புகளை பாடல்களுள் பொதிந்து வைத்து பாடுவதில் வல்லவர்**.
- இவர் பாடல் வையாவிக் **கோப்பெரும் பேகன்** எனும் குறுநில மன்னனைப் புகழ்ந்து பாடியதாகும்.
- **பேகன் கடையேழு வள்ளல்களுள் ஒருவன். கான மஞ்ஞைக்குக் கலிங்கம்** நல்கிய புகழுக்குரியவன். இவன் மலை நாட்டை உடையவன். இவன் ஊர் **நல்லூர்** என்பதும், **ஆவியர் குடியில் பிறந்தவன்**.
- இப்பாடலில் அமைந்த பாடாண் திணை என்பது ஒரு மன்னனது புகழ், வலிமை, வள்ளல் தன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவதாகும்.

- ஒரு வேந்தனெதிர் சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வது இயன்மொழி வாழ்த்து துறையாகும்.

## ஔவையார்

நாடாகு ஒன்றோ: காடாகு ஒன்றோ:
அவலாகு ஒன்றோ: மிசையாகு ஒன்றோ:
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை: வாழிய நிலனே!

**ஔவையார்**

❖ **பொருள்:**

- நிலமே! நீ நாடாக இருந்தால் என்ன? காடாக இருந்தால் என்ன? பள்ளமாக இருந்தால் என்ன? மேடாக இருந்தால் என்ன? எங்கே ஆண்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அங்கு நீயும் நல்லதாக இருக்கிறாய், நிலமே! நீ வாழ்க!
- **ஔவை** – தாய் - திருமகள், தமிழ் மூதாட்டி, அருள் தமிழ்ச்செல்வி அரும்புகழ் பெற்ற பெருந்தமிழ்புலவர், கூழுக்குப் பாடியவர், இந்தியாவின் **முதல் பெண் தூதர்** என அழைக்கப்படுகிறார்.
- மு. வரதராசனின் கருத்துப்படி "குறைந்த பட்சம் 4 ஔவையார்களாவது இருந்திருக்க வேண்டும்".
- அரிய நெல்லிக்கனியை **அதியமானிடம்** பெற்றவர் - ஔவையார்.
- சங்ககாலப் பெண் கவிஞர்களுள் **மிகுதியான பாடல்களைப் பாடியவர்** ஔவையார்.
- சங்கப்பாடல் பாடிய ஔவையாரும், ஆத்திச்சூடி பாடிய ஔவையாரும் ஒருவர் அல்லர்.
- அகநானூற்றின் சில பகுதிகளைப் பாடியவர் ஔவையார். இவர் சங்ககாலப் பெண்பாற் புலவருள் சிறந்து விளங்கியவர். இவர் அதியமான் நெடுமானஞ்சி எனும் குறுநில மன்னனுடன் நட்பு கொண்டு அவருடைய அவைக்களப் புலவராக திகழ்ந்தவர்.
- நீண்டநாள் வாழச் செய்யும் அமிழ்தத்தை ஒத்ததோர் அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது அதியமான் ஔவைக்கு ஈந்து மகிழ்ந்த செய்தியை புறநானூற்றால் அறியலாம்.
- ஔவையார் பாடிய பாடல்களைப் **புறநானூற்றிலும், நற்றிணையிலும், குறுந்தொகையிலும்** காணலாம்.

❖ **சங்ககால ஔவை :**

- **அதியமானின் அவைப்புலவராக தொண்டைமானிடம்** தூது சென்றவர்.
- **புறநானூற்றில் அதிக பாடல்கள் பாடியவர் (33 பாடல்கள்)**
- சங்ககால 31 பெண் புலவர்களில் அதிக பாடல்கள் பாடிய பெண் - ஔவையார் (59 பாடல்கள்)

❖ **சோழர் கால ஔவை :**

- பாமரர்களிடம் புகழ் பெற்றவர், கூழுக்குப் பாடியவர்.
- ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி இயற்றியவர்.

❖ **ஔவை பற்றிய பாடல்கள் :**

- படம் - ஜெமினி பிக்சர்ஸ் - கே.பி. சுந்தராம்பாள் - எஸ்.எஸ். வாசன் தயாரிப்பு
- பாலா சண்முகானந்தா சபை – டி.கே.எஸ் சண்முகம் - ஔவை ஓட்டம்
- மா.பொ.சி. ஔவை யார்? – நூல்
- முனைவர் தமிழண்ணல் - ஔவையார் நூல்.

## கபிலர்

- குறிஞ்சித் திணையை பாடிய கபிலர் வள்ளல் **பாரியின் அவைக்களப்** புலவராய் விளங்கியவர்.
- கபிலர் பாண்டி நாட்டுத் **திருவாதவூரில்** பிறந்தவர் - அந்தண மரபு.
- இவர் சங்ககாலப் புலவர்களாகிய **பரணர், ஔவையார்**, இடைக்காடர் முதலியோரிடம் நட்பாய்ப் பழகினார்.
- குறிஞ்சித்திணை பாடுவதில் வல்லவராதலின் **குறிஞ்சிக்கபிலர்** எனப்பட்டார்.
- இவரையும் தன் நண்பராகிய பரணர் பெயரையும் சேர்த்து கபிலபரணர் என வழங்குவார்.
- கபிலரின் பாட்டுத் திறனுக்கு **கபிலரது பாட்டு** என்னும் தொடரே சான்றாகும்.
- **வாய்மொழிக் கபிலன், நல்லிசைக்கபிலன், புலனழுக்கற்ற அந்தணர்களால் சிறப்பிக்கப்பட்டார்**.
- வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன் குறிஞ்சிக்கவி, பொய்யா நாவிற்கபிலன்.
- **நக்கீரன்** : கபிலரை வாய்மொழிக்கபிலர்
- **பெருங்குன்றூர்க் கிழார்** : நல்லிசைக்கபிலர்
- **இளங்கீரனார்** : வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்
- **மாறோக்கத்து நப்பசலையார்** : புலனழுக்கற்ற **அந்தணாளனும்**, பொய்யா நாவிற் கபிலன்
- கபிலர் இயற்றியவை :

  1. **குறிஞ்சிப்பாட்டு 2. ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் நூறு 3. பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்து 4. கலித்தொகையில் குறிஞ்சிக் கலியிலுள்ள 29 பாக்கள்**.

- தமிழ் இலக்கிய வரலாற்றில் கபிலர் என்ற பெயரில் ஐந்து புலவர்கள் பாடல் இயற்றியுள்ளனர்.

## ஓதலாந்தையார்

- ஓதலாந்தையாரின் இயற்பெயர் **ஆந்தையார்**.
- பிறந்த ஊர் - **ஓதலூர், ஓதலூர்** என்பது மேலைக் கடற்கரைப் பகுதியில் **குட்ட நாட்டில்** உள்ளது. இவருடைய பாடல்கள் பெரும்பாலானவை பாலைத் திணைப் பாடல்களாகும்.
- ஆந்தை என்பது ஆதன் தந்தை என்பதன் மரூஉ மொழியாகும்.
  ‘‘விளைக வயலே வருக இரவலர் என வேட்டோய் யாயே’’

## ஓரம்போகியார்

- மானம் மிக்க இரும்பொறை காலம் தாழ்த்தித் தந்த நீரை குடிக்க மறுத்து தனது சேர மன்னன் உயிர் துறக்கும் தருவாயில் பாடிய பாடல் :

  ''குழவி இறப்பினும் உளன் தடி பிறப்பினும்
  ஆளன்று என்று வாயில் தப்பார்''
  (இப்பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது)

  ''சான்றோ னாக்குதல் தந்தைக்கு கடனே''
  ''பல்சான் றீரே பல்சான் றீரே''
  ''கயன்முன் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
  நல்லது செய்தா லாற்றி ராயினும்
  அல்லது செய்த லோம்பமி னதுதான்''

**<u>நரிவெரூஉ த்தலையார்</u>**

## வெற்றிவேற்கை

- வேறுபெயர் - **<u>நறுந்தொகை</u>**
- ஆசிரியர் - **<u>அதிவீரராம பாண்டியன்</u>**
- காலம் : **<u>1564 – 1610</u>**
- இவர் இயற்றிய பிறநூல் : **<u>நைடதம், காசிகாண்டம், கூர்மபுராணம், மகாபுராணம்</u>**.

## நீதி நெறி விளக்கம்

- ஆசிரியர் - **<u>குமரகுருபரர்</u>**
- பக்தராய் இருந்து நீதி கூறியவர்
- 17-ஆம் நூற்றாண்டு
- கடவுள் வாழ்த்தில் இறைவனை '**<u>எம்பிரான்</u>**' என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார்.
- **<u>102 வெண்பாக்கள்</u>** உள்ளன.

## நன்னெறி

- ஆசிரியர் - **<u>துறைமங்கலம் சிவப்பிரகாசர்</u>**
- 17-ஆம் நூற்றாண்டு
- பிறநூல்கள் : **<u>பிரபுலிங்க லீலை, நால்வர் நான்மணிமாலை போன்றன</u>**.

## உலக நீதி

- ஆசிரியர் - **<u>உலகநாதர்</u>**
- **காலம் : <u>18-ஆம் நூற்றாண்டு</u>**
- அனைத்தும் எண்சீர் ஆசிரிய விருத்தம்

## நீதிநூல்

- ஆசிரியர் - **மாயூரம் வேதநாயகம் பிள்ளை**
- காலம் : 19-ஆம் நூற்றாண்டு (1826 – 1889)
- பிறநூல்கள் : **பிரதாப முதலியார் சரித்திரம், பெண்மதிமாலை போன்ற** நூல்கள்
- **45 அதிகாரங்களையும், 524 பாடல்களையும் கொண்டது**.

## பெண்மதிமாலை

- ஆசிரியர் - **மாயூரம் வேதநாயகம்பிள்ளை**
- **பெண்ணின் பெருமை பேசும் நூல்**
- **170 பாடல்கள்**
- அனைத்தும் **ஈரடிக் கண்ணிகள்**

## நூல்களும், உட்பிரிவுகளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிலப்பதிகாரம் | காண்டம்<br>காதைகள்<br>பாடல்கள் | 3<br>30<br>5001 | சீறாப்புராணம் | காண்டம்<br>பாக்கள் | 3<br>5027 |
| தேம்பாவணி | காண்டம்<br>படலம்<br>பாக்கள் | 3<br>36<br>3615 | அழகர் கிள்ளை விடு தூது | கண்ணிகள் | 238 |
| வில்லிபாரதம் | பருவம்<br>விருத்தப்பாடல் | 10<br>4350 | சீவகசிந்தாமணி | இலம்பகங்கள்<br>பாடல்கள் | 13<br>3145 |
| கலிங்கத்துப்பரணி | இலக்கணம்<br>தாழிசை | 6<br>599 | பாஞ்சாலிசபதம் | சருக்கம் வெண்பா<br>பாடல்கள் | 5<br>97<br>412 |
| திருவாய்மொழி | பாசுரங்கள் | 150 | திருவள்ளுவமாலை | பாடல் | 55 |
| திருவருட்பா | திருமலை<br>பாடல்கள் | 6<br>5818 | நளவெண்பா | காண்டம்<br>வெண்பா | 3<br>431 |
| கம்பராமாயணம் | காண்டம்<br>படலம்<br>பாடல்கள் | 6<br>113<br>10569 | பெரியபுராணம் | காண்டம்<br>சருக்கம்<br>பாடல்கள் | 2<br>13<br>4286 |
| திருவிளையாடற் புராணம் | காண்டம்<br>படலம் | 3<br>64 | மணிமேகலை | காதைகள் | 30 |
| உதயண குமாரகாவியம் | சருக்கம்<br>பாடல்கள் | 5<br>170 | திருக்குறள் | அதிகாரம் பாடல்கள்<br>இயல்கள் | 133<br>1330<br>9 |
| நீதிநூல் | அதிகாரம்<br>பாடல்கள் | 45<br>524 | நாககுமார காவியம் | சருக்கம்<br>பாடல்கள் | 5<br>170 |
| நாலடியார் | அதிகாரம்<br>இயல்கள் | 40<br>12 | குண்டலகேசி | பாடல்கள் | 224 |
| நாலாயிரத் திவ்விய பிரபந்தம் | மொத்தப் பாடல்கள் | 3776 | சிவஞான வேதம் | சூத்திரங்கள்<br>அதிகாரம்<br>வெண்பாக்கள் | 12<br>39<br>81 |
| திருமந்திரம் | தந்திரங்கள்<br>அதிகாரங்கள்<br>பாடல்கள் | 9<br>232<br>3071 | தாயுமானவர் திரட்டு | உப்பிரிவு<br>பாடல்கள் | 5<br>1452 |
| புறப்பொருள் வெண்பா மாலை | பகுதி (திணை)<br>நூற்பா<br>கொளு<br>வெண்பா | 12<br>19<br>341<br>361 | தொல்காப்பியம் | அதிகாரம்<br>இயல்<br>நூற்பா | 3<br>27<br>1610 |
| திருப்புகழ் | பாடல்கள்<br>சந்தங்கள் | 1307<br>1008 | திருவாசகம் | பிரிவு<br>பாடல்கள் | 51<br>658 |
| நீலகேசி | சருக்கம்<br>காதைகள் | 10<br>99 | கந்தபுராணம் | காண்டம்<br>விருத்தங்கள் | 6<br>10346 |
| கலம்பகம் | உறுப்புகள் | 18 | நம்பியகப் பொருள் | இயல்<br>நூற்பா | 5<br>252 |
| தண்டியலங்காரம் | இயல்கள்<br>நூற்பா | 3<br>126 | நன்னூல் | அதிகாரம்<br>நூற்பா | 2<br>462 |
| நைடதம் | பாடல்கள் | 1172 | பிள்ளைத்தமிழ் | பருவங்கள் | 10 |
| பரணி | உறுப்புகள் | 13 | முத்தொள்ளாயிரம் | பாடல் | 22 |

❖ <u>மேலும் சில:</u>

- **இராமகிருஷ்ண பரமஹம்சர்** : கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்
- **நல்லந்துவனார்** : முப்பால் அறிந்த முதற்பாவலர் ஒப்பார் எப்பா பலரினும் இல்
- **சுந்தரர்** : பித்தா பிறைசூடி பெருமானே
- **படிக்காசுப் புலவர்** : செத்தும் கெடுத்த சீதக்காதி
- **தாயுமானவர்** : எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே
- **பொன்முடியார்** : களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே
- **திருஞானசம்பந்தர்** : தோடுடை செவியன் போற்றி
- **நம்மாழ்வார்** : அடியவர்க்கும் அடியவர்க்கும் அடியவர்க்கும் அடியேன் நான்
- **மாணிக்க வாசகர்** : கற்றாரை யான் வேண்டேன்
- **பட்டினத்தடிகள்** : ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு
- **விவேகானந்தர்** : விழுமின் எழுமின் அயராது உழைமின்
- **பெரியார்** : மதம் அறிவைக்கெடுக்கும்
- **மீனாட்சி சுந்தரம்பிள்ளை** : பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவி
- **உடுமலை நாரயாணகவி** : பெண்களை நம்பாதே கண்களே பெண்களை நம்பாதே
- **புலமைப்பித்தன்** : தென்பாண்டிச்சீமையிலே தேரோடும் வீதியிலே மான்போல வந்தவனை யார் அடிச்சிரோ
- **கண்ணதாசன்** : ஆறு மனமே ஆறு, ஆயிரம் நிலவே வா
- **முத்து ராமலிங்கத்தேவர்**: பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பு வழுக்கி இறந்தவனும் உண்டு.
- **கல்யாணசுந்தரனார்** : செய்யும் தொழிலே தெய்வம், தூங்காதே தம்பி தூங்காதே

❖ <u>தமிழில் முதன் முதலாய்</u>

| | | |
|---|---|---|
| **முதல் பத்திரிக்கை** | சுதேசமித்திரன் - 1882 | சி. சுப்பிரமணிய ஐயர் |
| **முதல் பரணி** | கலிங்கத்துப்பரணி | ஜெயங்கொண்டான் |
| **முதல் பிள்ளைத்தமிழ்** | குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் | ஒட்டக்கூத்தர் |
| **முதல் புதினம் (அ) நாவல்** | பிரதாப முதலியார் சரித்திரம் | மாயூரம் வேதநாயகம் பிள்ளை |
| **முதல் சிறுகதை** | குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை | வ.வே.சு. ஐயர் |
| **முதல் கலம்பகம்** | நந்திக்கலம்பகம் | ஆசிரியர் பெயர் தெரியவில்லை |
| **முதல் அகராதி** | சதுரகராதி – 1732 | வீரமாமுனிவர் |
| **முதல் நூல்** | அகத்தியம் | அகத்தியர் |
| **முதலில் கிடைத்த நூல்** | தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| **முதல் நிகண்டு நூல்** | திவாகர நிகண்டு | திவாகர முனிவர் |
| **முதல் உலா** | திருக்கயிலாய ஞான உலா (ஆதியுலா) | சிவப்பிரகாச சுவாமிகள் |
| **முதல் தூது** | நெஞ்சுவிடுதூது | உமாபதி சிவாச்சாரியார் |
| **முதல் காப்பியம்** | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| **முதல் நீதிநூல்** | திருக்குறள் | திருவள்ளுவர் |
| **முதல் பௌத்த நூல்** | மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் |
| **முதல் குறவஞ்சி** | குற்றாலக்குறவஞ்சி | திரிகூடராசப்பக்கவிராயர் |
| **முதல் சமய காப்பியம்** | மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் |

| | | |
|---|---|---|
| **முதல் சமூக நாடகம்** | டம்பாச்சாரி விலாசம் | காசி விஸ்வநாத முதலியார் |
| **தொடர்கதையாக வந்த முதல் நூல்** | கமலாம்பாள் சரித்திரம் | இராஜம் ஐயர் |
| **முதல் பெண்ணியல் நாவல்** | சுகுண சுந்தரி சரித்திரம் | வேதநாயகம் பிள்ளை |
| **முதல் செய்யுள் நாடகம்** | மனோன்மனியம் | மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| **முதல் ஒப்பிலக்கணம்** | திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் | ராபர்ட் கால்டுவெல் |
| **தமிழின் முதல் ஏளன இலக்கியம்** | பரமார்த்தகுருகதை | வீரமாமுனிவர் |

❖ **<u>பழைய பெயர்கள்:</u>**

| **பழையப் பெயர்** | **தற்போதையப்பெயர்** | **பழையப்பெயர்** | **தற்போதை யப்பெயர்** |
|---|---|---|---|
| **திருவரங்கம்** | ஸ்ரீரங்கம் | **நீள்நெடுங்கண்ணி** | விசாலாட்சி |
| **திருச்சிற்றம்பலம்** | சிதம்பரம் | **யாழினும் நன்மொழியாள்** | வீணாமதுர பாஷிணி |
| **திருமறைக்காடு** | வேதாரண்யம் | **தேன்மொழிப்பாவை** | மதுரவசனி |
| **திருமுதுகுன்றம், பழமலை** | விருத்தாசலம் | **பழமழைநாதர்** | விருத்தகிரீச்சுரர் |
| **அங்கயற்கன்னி** | மீனாட்சி | **மதிரை** | மதுரை |
| **அறம்வளர்த்தாள்** | தர்மசம்வர்த்தனி | **திருசிரபுரம்** | திருச்சி |
| **எரிசினக் கொற்றவை** | ரௌத்திர துர்க்கை | **துள்ளம்** | தண்டலம் |
| **ஐயாறப்பர்** | பஞ்சநதீசுவரர் | **திருச்சீரலைவாய்** | திருச் செந்தூர் |
| **குடமூக்கு** | கும்பகோணம் | **திருஆவினன்குடி** | பழனி |
| **வாள் நெடுங்கண்ணி** | கட்கநேத்ரி | **திருவேகரம்** | சுவாமிமலை |
| **செம்பொன்பள்ளியார்** | சொர்ணபுரீச்சுரர் | | |

| **உலகத் தமிழ் மாநாடுகள்: வ.எ.** | **மாநாடு** | **நடந்த இடம்** | **ஆண்டு** | **தலைவர்கள்** |
|---|---|---|---|---|
| 1. | முதல் மாநாடு | கோலாலம்பூர் | 1966 | தனிநாயகம் அடிகளார் |
| 2. | இரண்டாவது மாநாடு | சென்னை | 1968 | அறிஞர் அண்ணாத்துரை |
| 3. | மூன்றாவது மாநாடு | பாரிஸ் | 1970 | பேராசியர் ஜூன் பிலியோசா |
| 4. | நான்காவது மாநாடு | யாழ்ப்பாணம் | 1974 | சு.வித்தியானந்தன் |
| 5. | ஐந்தாவது மாநாடு | மதுரை | 1981 | எம்.ஜி.இராமச்சந்திரன் |
| 6. | ஆறாவது மாநாடு | கோலாம்பூர் | 1987 | எம்.ஜி. இராமச்சந்திரன் |
| 7. | ஏழாவது மாநாடு | மொரீஷியஸ் | 1989 | |
| 8. | எட்டாவது மாநாடு | தஞ்சாவூர் | 1995 | செல்வி.ஜெ.ஜெயலலிதா |
| 9. | ஒன்பதாவது மாநாடு | கோயம்புத்தூர் | 2010 | கலைஞர். மு. கருணாநிதி |

❖ **பல்லவர் காலம் + சோழர் காலம்+ நாயக்கர் காலம்**

| நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|
| பெருங்காதை | கொங்குவேள் |
| வளையாபதி | ஆசிரியர் தெரியவில்லை |
| வினா வெண்பா | உமாபதிசிவாசாரியார் |
| தொண்டை மண்டலச் சதகம் | படிக்காசுப் புலவர் |
| திருவாசகம் | மாணிக்கவாசகர் |
| திருத்தொண்டத்தொகை | சுந்தரர் |
| நறுந்தொகை | அதிவீரராம பாண்டியர் |
| சரஸ்வதி அந்தாதி | கம்பர் |
| முக்கூடற்பள்ளு | ஆசிரியர் தெரியவில்லை |
| நீதிநெறிவிளக்கம் | குமரகுருபரர் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| யசோதர காவியம் | ஆசிரியர் தெரியவில்லை |
| வில்லிபாரதம் | வில்லிப்புத்தூராழ்வார் |
| நாககுமார காவியம் | ஆசிரியர் தெரியவில்லை |
| நன்னெறி | சிவப்பிரகாசர் |
| ஏர் எழுபது | கம்பர் |
| சீவகசிந்தாமணி | திருத்தக்கதேவர் |
| உலக நீதி | உலகநாதர் |
| நீலகேசி | ஆசிரியர் தெரியவில்லை |
| திருவருட்பயன் | உமாபதிசிவாசாரியார் |
| பெரிய திருவந்தாதி | நம்மாழ்வார் |
| உதயணகுமார காவியம் | ஆசிரியர் தெரியவில்லை |
| நாலாயிர திவ்யபிரபந்தம் | தொகுத்தவர் நாதமுனிகள் |
| கந்தபுராணம் | கச்சியப்ப சிவாச்சாரியர் |
| குண்டல கேசி | நாதகுத்தனார் |
| திருவிளையாடற் புராணம் | பரஞ்சோதி முனிவர் |
| யாப்பருங்கலம் | அமிர்தசாகரர் |
| கூலப்ப நாயக்கன் காதல் | சுப்பரதீபக்கவிராயர் |
| வீரசோழியம் | புத்தமித்திரர் |
| சூளாமணி | தோலாமொழித்தேவர் |
| நம்பியகப்பொருள் | நாற்கவிராச நம்பி |
| வச்சணந்தி மாலை | குணவீர பண்டிதர் |
| திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவர் |
| நேமிநாதம் | நேமிநாதர் |
| சங்கற்ப நிராகரணம் | உமாபதிசிவாசாரியார் |
| அனுமார் பிள்ளைத்தமிழ் | சீர்காழி அருணாச்சலகவிராயர் |
| திருப்பள்ளி எழுச்சி | தொண்டரடிப் பொடியாழ்வார் |
| நாச்சியார் திருமொழி | ஆண்டாள் |
| அவிநயம் | அவிநயனார் |
| பெரிய புராணம் | சேக்கிழார் |
| தணிக்கைப்புராணம் | கச்சியப்பமுனிவர் |
| சூடாமணி | மண்டலபுருடர் |
| நரி விருத்தம் | திருத்தக்க தேவர் |
| கம்பராமாயணம் | கம்பர் |

| | |
|---|---|
| சிவஞானசித்தியார் | அருள்நந்தி சிவாசாரியார் |
| கொடிக்கவி | உமாபதிசிவாசாரியார் |
| உண்மை விளக்கம் | திருவதிகைமணவாசகங்கடந்தார் |
| இலக்கண விளக்கச் சூறாவளி | சிவஞான முனிவர் |
| திருக்களிற்றுப்பாடியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவர் |
| இராமநாடகம் | சீர்காழி அருணாசலக் கவிராயர் |
| சிவஞானபோதம் | மெய்கண்ட நாயனார் |
| முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| நன்னூல் | பவணந்தியார் |
| அற்புதத் திருவந்தாதி | காரைக்காலம்மையார் |
| திருத்தொண்டர் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி |
| இராமாவதாரம் | கம்பர் |
| நெஞ்சுவிடுதூது | உமாபதிசிவாசாரியார் |
| திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூடராசப்பக் கவிராயர் |
| தேவாரம் 7ம் திருமுறை | சுந்தரர் |
| இருபா இருப∴து | அருள்நந்தி சிவாசாரியார் |
| இராமகதை | கம்பர் |
| சிவப்பிரகாசம் | உமாபதிசிவாசாரியார் |
| கோயில் நான்மணிமாலை | பட்டினத்தடிகள் |
| திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் | காரைக்கால் அம்மையார் |
| பன்னிருதிருமுறைகள் | தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி |
| தேவாரம் 4,5,6 திருமுறைகள் | திருநாவுக்கரசர் |
| போற்றிப்ப∴றொடை | உமாபதிசிவாசாரியார் |
| திருப்பல்லாண்டு | பெரியாழ்வார் |
| திருவிரட்டை மணிமாலை | காரைக்காலம்மையார் |
| உண்மைநெறிவிளக்கம் | உமாபதிசிவாசாரியார் |
| மூன்றாவது திருவந்தாதி | பேயாழ்வார் |
| தேவாரம் 1,2,3 திருமுறைகள் | திருஞானசம்பந்தர் |
| சிறிய திருமடல் பெரிய திருமடல் | திருமங்கையாழ்வார் |
| பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| மச்ச புராணம் | வடமலையப்பர் |
| திருப்பாவை | ஆண்டாள் |
| திருவிருத்தம் | நம்மாழ்வார் |
| திருக்கயிலாய ஞான உலா | சேரமான் பெருமாள் நாயனார் |
| திருச்சந்த விருத்தம் | திருமழிசை ஆழ்வார் |
| விநாயக புராணம் | வீரகவிராயர் |
| இரண்டாவது திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| திருவாசிரியம் | நம்மாழ்வார் |
| திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| நைடதம் | அதிவீரராம பாண்டியர் |
| நளவெண்பா | புகழேந்தி |
| யாப்பருங்கலக்காரிகை | அமிதசாகர் |
| திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் | காரைக்கால் அம்மையார் |
| பன்னிருதிருமுறைகள் | தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி |
| தக்கயாகப்பரணி | ஒட்டக்கூத்தர் |
| கொக்கோம் | வரதுங்கராம பாண்டியன் |

| | |
|---|---|
| மீனாட்சியம்மை பிள்ளை தமிழ் | குமரகுருபர் |
| மாறன் அகப்பொருள் | திருக்குருகைப் பெருமாள் |
| புறப்பொருள் வெண்பாமாலை | ஐயன் ஆரிதனார் |
| மூவருலா | ஒட்டக்கூத்தர் |
| பிங்கலந்தை | பிங்கல முனிவர் |
| மோகவதைப் பரணி | தத்துவராயர் |
| திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | வரதுங்கராம பாண்டியன் |
| குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் | ஒட்டக்கூத்தர் |
| நந்திக்கலம்பகம் | ஆசிரியர் தெரியவில்லை |
| தமிழ்விடுதூது | ஆசிரியர் தெரியவில்லை |
| கலிங்கத்துப்பரணி | செயங்கொண்டார் |
| திருவானைக்கா உலா | காளமேகப்புலவர் |
| பெரிய திருவந்தாதி | நம்மாழ்வார் |
| தில்லைக் கலம்பகம் | இரட்டைப்புலவர் |

APPOLO STUDY CENTRE
No.25, Nandhi Loop Street,
West C.I.T. Nagar, Chennai – 600 035
Near T.Nagar Bus Stand,
Landmark: Nandhi Statue
Ph: 24339436, 42867555, 24340364, 9840226187
E-mail: enquiryatappolo@gmail.com
Website: www.appolosupport.com